469

# காவேரி

ஆகஸ்டு, 58',

50 காசு



4 - AUG 1958

469
3.58

# உங்கள் மேனியும்

## சினிமா நட்சத்திரங்களுக்கு ஈடாக அழகோங்க முடியும்!

தென்னாட்டின் அழகிய நாட்டிய நாட்சத்திரமான ராகினி, மேனியழகின் பராமரிப்புக்கான எளிய முறையொன்றைக் குறிப்பிடுகிறார்: "எனது சருமத்தை மழமழப்புடன் வைத்திருக்க, நான் அன்றாடம் லக்ஸ் டாய்லெட் சோப் உபயோகிக்கிறேன்." ராகினி உள்பட உங்கள் அபிமான சினிமா நட்சத்திரங்கள் அனைவரும் தூய, வெண்மையான இந்த சோப்பைத் தேர்ந்தெடுப்பதன் காரணம் வெளிப்படையே. லக்ஸ் டாய்லெட் சோப் அதி மென்மையானது, நறுமணமுள்ளது, இன்பமயமானது. நீங்களும் ஏன் இன்றுமுதல் அதை உபயோகித்து உங்கள் மேனியழகைப் பராமரிக்கக் கூடாது?



தூய, வெண்மையான

## லக்ஸ்

## டாய்லெட் சோப்




சினிமா நட்சத்திரங்களின்
அழகுசாதன சோப்

வீனஸ் பிக்சர்ஸ்
"உத்தம புத்திரன்"
படத்தில் தோன்றும்
அழகு நட்சத்திரம்
ராகினி

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.

LTS. 568-X52 TM

| 5,00,000 கதிர்கள் | பருத்தி நூல்கள் | நெ. 80 வரை நூல்கள் |
|---|---|---|

# மதுரை மில்ஸ் கம்பெனி
## லிமிடெட், மதுரை.

போன்: 250 (5 லைன்) தந்தி: "ஹார்வி"

மில்கள்:

**மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்**

★

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கான
சகலவிதமான நூல்கள்

★

விசேஷ ரகங்கள்.

கயிறுகள், விழுதுகள், கித்தான்கள், நாடாக்கள் முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள், தையல் நூல், முறுக்கேற்றிய திரித்த சரடுகள் முதலியன.

★

மானேஜர்கள்:

**ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,**

பாண்டியன் பில்டிங் :: மதுரை

போன்: 420 (4 லைன்) தந்தி; "ஹார்வி"

Be flower fresh, flower lovely




USE TATA'S

# HAMĀM

TOILET SOAP

The Tata Oil Mills Company Limited

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
சேல்ஸ் ஆபீஸ்:
இண்டியன் சேம்பர் பில்டிங்ஸ்,
எஸ்பிளனேடு — மதராஸ்-1

# காவேரி

## ✷ பொருளடக்கம் ✷

| விளம்பி-ஞூ மலர் 17 | ஆகஸ்டு-1958 | ஆடி இதழ் 12 |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| மத்திய கிழக்குப் படிப்பினை | ... | | 4 |
| டில்லித் தபால் | ... | கே. ஸ்ரீநிவாஸன் ... | 5 |
| டி. கே. பட்டம்மாள் | ... | கீதப்பிரியா ... | 7 |
| நேயர்கள் கருத்தரங்கம் | ... | | 11 |
| சிரித்த செந்தாமரை (தொடர் கதை) | ... | ஏ. சுப்பையா ... | 12 |
| தாலிக் கயிறு | ... | அல்லி ... | 23 |
| ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள் | ... | ஜனகம் ... | 29 |
| மந்திரம் | ... | D. ராஜன் ... | 33 |
| படுகளம் கண்ட அதிசயம் | ... | கு. ப. சேது அம்மாள் ... | 41 |
| ஸ்ரீமதி நிர்மலா | ... | உஷா ... | 51 |
| காதலா, கற்பனையா? | ... | பி. ஆர். ராஜாராம் ... | 55 |
| கேரள நாட்டுப் பிரயாணம்-1 | ... | கே. ஸ்ரீநிவாஸன் ... | 61 |
| குறுக்குவெட்டி | ... | பட்டாபி நாராயணன் ... | 66 |
| தொழில் துணுக்குகள் | ... | விசால்தேவ் ... | 73 |
| அழகர் கோயில் | ... | ஜனககுமாரி ... | 78 |
| தோற்றத்தைக் கண்டு... | ... | விஸ்வம் ... | 84 |
| விஞ்ஞானத் துணுக்குகள் | ... | நா. கி. நாகராசன் ... | 89 |
| சுடச்சுட! | ... | திருமால் ... | 93 |
| சினிமா | ... | நமது விசேஷ நிருபர் ... | 94 |

**குறிப்பு:** காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# காவேரி

விளம்பி-ஹூ
மலர் 17

"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

ஆடி
இதழ் 12


# மத்திய கிழக்குப் படிப்பினை

மத்திய கிழக்கு நாடுகளில் இன்று நிகழும் உள்நாட்டுக் கலவரங்களும் வெளிநாட்டுத் தலையீடும் இந்தியா போன்ற நாடுகளுக்கு ஒரு படிப்பினையை அளிக்க வேண்டும். இதன் உட்கருத்துகளை நாம் நன்குணர்ந்து உஷாராக இருத்தல்வேண்டும்.

அந் நாடுகளில் வெளிநாட்டு முதலீடும் மறை முகமான தலையீடும் சர்வசாதாரணமான விஷயம். அத்தேசங்கள் மூன்று கண்டங்கள் கூடும் சங்கமத்தில் உள்ளன. மேலும் மேற்கத்திய நாடுகளுக்கு உயிர்நாடி அங்கே காணக் கிடைக்கும் எண்ணெய்க் கிணறுகள். உலகில் காணப்பெறும் எண்ணெய் ஊற்றுக்களில் 70 சதம் அங்குள்ளது. ஐரோப்பாவின் 80 சத எண்ணெய்த் தேவையை அது பூர்த்தி செய்து வைக்கிறது. இதை ஒட்டித்தான் மேற்கு ஐரோப்பாவின் படைபலமும், தொழில்களும், மக்கள் வாழ்க்கைத் தரமும் இயங்குகின்றன.

இன்னுமொரு முக்கிய காரணம்.

அதுதான் ராணுவ கேந்திரஸ்தானம். விமானமூலம் ருஷ்யாவை எளிதில் தாக்க இங்குள்ள விமான நிலையங்கள், துறைமுகங்கள், நிலப்பரப்பு எல்லாம் மேற்கத்திய வல்லரசுகளுக்கு அத்யாவசியம். இங்கிருந்து மேற்கத்திய வல்லரசுகளை துரத்திவிட்டால் ருஷ்யாவுக்கு அபாயம் இல்லாததோடு ஐரோப்பாவின் எண்ணெய் சப்ளை தம் ஆதிக்கத்திற்குட்பட்டுவிடுகிறது என்று ருஷ்யா எண்ணுகிறது. எனவே இந் நாடுகளின் முக்யத்வம். ருஷ்யா எகிப்து நாஸரின் மூலம் அராபிய ஒற்றுமை என்ற போர்வையில் இந் நாடுகளை கம்யூனிஸத்தின் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர இயங்குகிறது. ஆங்கிலேயரும், அமெரிக்கர்களும் இங்கு படைபலத்தைக் கொண்டு அப்பிரதேசங்களை கண்காணித்து வருகிறார்கள். அவர்களை அராபிய தேசீய உணர்ச்சியின் எழுச்சியால் துரத்திவிட்டால் இப்பிராந்தியத்தில் ருஷ்யாவிற்கு நிகர் யாரும் இல்லை. பிறகு உலகில் அதற்கு நிகர் ஆசியாவிலேயே யாரும் இருக்க முடியாது. இப்பொழுது மக்களை எழுப்பி உள்நாட்டுக் கலவரங்கள் எழச் செய்து நவீன ஆயுதங்கள் அளித்து கிளர்ச்சி செய்து வருகிறது. ஆனால் நேரடியாக ஒன்றும் செய்யவில்லை. அராபிய ஒற்றுமை மந்திரம் அந்நாட்டு மக்களை ஆவேசமடையச் செய்கிறது. இதில் வெற்றி கொண்ட எகிப்திய சர்வாதிகாரி நாஸரும் ஸிரியாவும் ஒன்றுசேர்ந்து ஐக்கிய அராபிய ஜனநாயகம் என்ற பெயரில் இயங்கி மற்ற மத்திய கிழக்கு நாடுகளை கபளீகரம் செய்ய துரித ஏற்பாடு செய்து வருகின்றன. ஆங்காங்கேயுள்ள ராணுவப்படைகளை சில இடங்களில் ஏவி ராஜ்யத்தைக் கைப்பற்ற உதவுகிறது. ஈராக்கில் நடந்தது இம்முறைதான். லெபனானில் வேறு முறை. அங்கங்கேயுள்ள சூழ்நிலைக்கேற்ப சூழ்ச்சி முறைகள். எல்லாவற்றிக்கும் அடிப்படையில் ருஷ்யா.

அராபிய தேசீயம் என்ற பெயரில் கிளர்ச்சி. இதனை நம் பிரதமர் ஜனநாயக எழுச்சி என்று கருதி ஆதரிக்கிறார். மேற்கத்திய நாடுகளின் படைபலத் தலையீடு கண்டிக்கத்தக்கது என்பது அவருடைய கருத்து.

எந்த நாட்டிலும் ராணுவம் கிளர்ச்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றுவது சுலபம். அவர்களுக்கு எதிரிடையாக மக்கள் ஏகோபித்து கிளர்ச்சி செய்வது அசாத்தியம். கட்சிகளால் பிளவுண்ட மத்திய கிழக்குப் பிரதேசங்களில் இது சுலபமாகச் சாதிக்கப் படுகின்றது. அல்லது எதிர்கட்சிகளுக்கு ஆயுதங்கள் அளிக்கப்பட்டு கிளர்ச்சி நடத்துவதும் நவீன முறை.

இத்தகைய நிகழ்ச்சி நம்நாட்டில் ஏற்பட்டால் நாம் எப்படி அதனை கருதுவோம்? பான்-இஸ்லாமிஸம் என்ற கொள்கைப்படி பாகிஸ்தான்-ஈரான் தேசங்கள் நம் முஸ்லீம் சகோதரர்களை கிளர்ச்சி செய்யச் செய்து அவர்களுக்கு ஆயுதங்களும் ஏராளமாக வழங்கி கலகங்கள் விளைவித்தால் நாம் என்ன நிலையிலிருப்போம் என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். இன்று அராபிய தேசீயம்; நாளை முஸ்லீம் சகோதரத்வம். இது இயற்கைதானே என்று வாளாவிருந்துவிட முடியுமா? இதனை நம்மால் சமாளிக்க முடியாமற்போனால் அடிபணிவதா, ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ள வல்லரசுகளின் உதவியை அழைப்போமா, மாட்டோமா? இல்லை, நம் கொள்கைப்படி வெளிநாட்டுத் தலையீடு உள்நாட்டுக் கலவரங்களில் கூடாது என்று அடிபணிவதா?

பத்திரிகைகளில் பிரசாரமாகும் அராபிய தேசீய கூக்குரல்களுக்கு அடிமையாகாமல், அத்தேசீயத்திற்குப்பின் யாருடைய பலம் இயங்குகிறது என்பதை நாம் உணர்வோமாக.

நம் வெளிநாட்டுக் கொள்கையில் மக்கள் இன்னும் அதிகம் சிரத்தை காட்டி உண்மையான நடுநிலைமை வகிக்கவேண்டுமெனக் கருதுகிறோம்.

# டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

உலக யுத்தம் மீண்டும் மூளுமா? இந்தக் கேள்விக்குறியைக்கண்டு உலகநாட்டு மக்கள் கதிகலங்குகிறார்கள். ஏனென்றால் மூன்றாவது உலக யுத்தம் வருடக்கணக்கிலோ அல்லது மாதக்கணக்கிலோ நடக்காது. ஏன், நாட்கள் கணக்கில்கூட நடக்காது. இது அணு—ஹைட்ரஜன் சகாப்தம். அமெரிக்கஹைட்ரஜன் தாங்கிய விமானங்கள் உலகத்தை வட்டமிட்ட வண்ணம் இருக்கின்றன. ஏனென்றால் ருஷ்யா எந்த சமயத்தில் யுத்தத்தை ஆரம்பிக்கும் என்று தெரியாதாம், ஆதலால் எப்பொழுதுமே தயாராக இருக்கவேண்டுமாம்! பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள ரடார் திரையில் ருஷ்ய விமான நடமாட்டம் தெரிந்தவுடன் அமெரிக்க விமானங்கள் அணு—ஹைட்ரஜன் குண்டுகளைப் பொழிய ஆரம்பித்துவிடுமாம். இந்த ரடார் திரையை நம்புவது மிகவும் ஆபத்தான விஷயம் என்பதை சமீபத்தில் ருஜுப்படுத்தினார்கள். சாதாரணமாக ஏதாவது அதிர்ச்சியைக்கூட இந்தத் திரை தவறாக எடுத்துக்காட்டுவதில் தான் உலகத்தின் அபாயம் உள்ளது. மேலும் ஒரு 'ஸ்குரு' கழண்ட விமானி வினைக்கென்று ஒரு பித்தானை அமுக்கினாலும் போதும், உலக யுத்த விதை விதைக்கப்படும்.

இந்த உலக நாச ஹேதுக்களை அறிந்த அறிஞர்கள்தான் ஹைட்ரஜன் குண்டுகளை கடலில் வீழ்த்தி உலகத்தின் க்ஷேமத்தைக் கோருங்கள் என்கிறார்கள். இந்தக் கட்டத்தில் தான் லெபனான்—ஈராக் நெருக்கடி வந்து சேர்ந்தது. ஆப்பிரிக்காவில் மேற்குக் கோடியில் அல்ஜியர்ஸ் முதல் மேற்கு ஆசியாவில் ஈராக் வரை உள்ள நாடுகளான மொராக்கோ, டுனிசியா, எகிப்து, ஸிரியா, லெபனான், ஜார்டன், ஈராக் முதலியன அராபிய நாடுகள். அராபிய ஜாதி மக்கள், அராபிய பாஷை பேசுபவர்கள், இஸ்லாமைச் சேர்ந்தவர்கள். ஆகவே "அராபிய உலகம்" என்று கர்னல் நாஸர் கனுக்கண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

எகிப்தும், ஸிரியாவும் சேர்ந்து ஐக்கிய அராபியக் குடியரசு ஏற்படுத்தியது முதல் மற்ற அராபிய நாடுகளில் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. லெபனானில் உள்ள மக்கள் கொதிந்தெழுந்தார்கள். சென்ற சில வாரங்களாக உள்நாட்டு யுத்தம் நடைபெறுகிறது. இந்தநாட்டில் கிறிஸ்தவ ஜனாதிபதி, முஸ்லீம் பிரதமர். இந்த சிக்கல் காரணமாக கிறிஸ்தவ ஜனாதிபதியான சாமுன் ஆங்கில—அமெரிக்க உதவியைக் கோரினார். இடையே கொடுங்கோல்மன்னன் பெய்ஸலையும், அவன் பிரதமர் நூரியையும் கொன்று ஒரே நாளில் ஈராக்கில் முடியரசை ஒழித்துக்கட்டி குடியரசைப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள் ராணுவ இளைஞர்கள் குழுவினர். ஸ்ரீ சாமுன் உதவி கோரினார் என்று நொண்டிச்சாக்கு சொல்லி அமெரிக்கா தன் ராணுவத்தை லெபனானில் இறக்கியிருக்கிறது. அமெரிக்க அண்ணாவைப் பின்பற்றி ஆங்கிலேயத் தம்பியும் தன் துருப்புக்களை ஜார்டனில் இறக்கியிருக்கிறார். இதன் பலன் அனர்த்தம்தான்.

வந்த மச்சான் திரும்பித்தான் போக நேரிடும் என்பதில் ஐயமில்லை. அப்படி அத்து மீறி தலையிட்டால் அடுத்த கட்டம் உலக யுத்தம்தான்.

*   *

பிரதமர்நேரு ஓய்விலிருந்து திரும்பியபிறகு காங்கிரஸ் ஸ்தாபனத்தைத் திருத்துவதில் அக்கரை காட்டிவருகிறார். ஒவ்வொரு மாகாணத்திலும் இரு போட்டி குழுக்கள் இருப்பது காங்கிரஸை பலவீனப்படுத்துகின்றன என்பது தெரிந்த விஷயம். இம்மாதிரி குழுக்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, தகுந்த நடவடிக்கைகள் எடுக்க காங்கிரஸ் ஸ்தாபனம் ஆங்காங்கே விசாரணைக் கமிட்டிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அக் கமிட்டிகளும் சரி, காங்கிரஸ் மேலிடமும் சரி, இந்த ஒழுங்கீனத்தை சரிவர கட்டுப்படுத்துவதில் உண்மையில் சிரத்தைகொள்ளவில்லை என்பது டில்லியில் நடந்த சம்பவங்களிலிருந்து தெரிய வருகிறது.

டில்லியில் கார்ப்பொரேஷன் தேர்தல்கள் நடந்தபொழுது டில்லி மாஜி முக்கிய மந்திரி ஸ்ரீ பிரகம் பிரகாஷ் காங்கிரஸுக்கு எதிராக வேலை செய்து, காங்கிரஸுக்கு பெரும்பான்மை ஸ்தானங்கள் கிடைக்காமல் செய்தார். அவர் மேலும், அவர் சகாக்கள் மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. விசாரணை செய்தவர் ராஜஸ்தான் மாஜி

முக்கிய மந்திரி ஸ்ரீ ஜெயநாராயண வியாசர். இவர் இவ்விசாரணையை கடனெழவே என்று பெயரளவுக்கு நடத்தி யார்மேல் முக்கியமாகக் குற்றம் சாட்டப் பட்டதோ அவர்களை விட்டு விட்டார். காங்கிரஸ் மேலிடத்திற்குக்கூட ஸ்ரீ பிரகாஷ் ஸ்தாபனத்தை விட்டு வெளியேறினுல் காங்கிரஸ் செல்வாக்கு டில்லியில் குன்றி விடுமோ என்றுபயம். அதுவும் ஸ்ரீவியாசரின் விருந்தை பெரிதும் ரசித்தது.

இம்மாதிரி எண்ணத்துடன் நடத்தப்படும் எந்த ஒழுங்கீன நடவடிக்கை பயனளிக்கும்? அந்நாளில் காங்கிரஸைவிட எந்த நபரும் பெரியவர் அல்ல என்று கர்ஜித்தார் மகாத்மா காந்தி. அந்நாளில் ஒழுங்கை மீறிய ஸ்ரீ நரிமனையும், ஸ்ரீ கரேயையும் தாக்ஷண்யம் பார்க்காமல் கழுத்தை நெட்டி வெளியே தள்ளினர்கள். அதனுல்தான் காங்கிரஸ் ஓங்கி வளர்ந்தது. நேதாஜி சுபாஷ் போஸை விட பெரியவர் யார்? அவர் போனுல்கூட பரவாயில்லை என்று சொன்னர் மகாத்மா காந்தி.

அன்று இருந்த நிலைமையை இன்று ஒப்பிட்டால் ஒரு விஷயம் தெளிவாக விளங்குகிறது. அன்று காங்கிரஸுக்கு கொள்கை தான் முக்கியம். இன்று பதவியில் தான் குறி. ஆதலால் தான் நியாயம் பிறக்கும் என்று மேலிடத்தை நம்பும் காங்கிரஸ்காரர்கள் ஏமாந்து போகிருர்கள். தமிழ் நாட்டில் ஸ்ரீ நாடார் மேலோ அல்லது அவர் மந்திரி சபை மேலோ புகார் ஏற்பட்டால் காங்கிரஸ் மேலிடம் அவர்கள் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்காது என்று திண்ணமாக சொல்லலாம். அவர்கள் வெளியேறினுல் காங்கிரஸ் சர்க்கார் நடக்கமுடியாது என்ற பயம் தான் மேலோங்குகிறதே ஒழிய ஸ்தாபனத்துக்கு புத்துயிர் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லவே இல்லை. ஆதலால் காங்கிரஸ் ஸ்தாபன சீர்திருத்தம் என்பது இதுவரை வெறும் பேச்சாகவே இருக்கிறது.

* * *

ஒரு விஷயத்தில் மட்டும் காங்கிரஸ் விழித்திருக்கிறது என்பதற்கு அறிகுறிகள் இருக்கின்றன. கம்யூனிஸ சித்தாந்தத்தை எதிர்க்கவேண்டும், அவர்கள் வியாபிக்க இடம் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் கேரளத்தில் காங்கிரஸ்வேலை ஜரூராக நடக்கிறது. தொழிற்துறையில் தொழிலாளிகளின் ஆதரவை நாட அகில இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ் முழு மூச்சாக வேலை செய்கிறது. சென்ற வாரம் டில்லியில் பேசிய கேரள அ. இ. தே. தொ. உப தலைவர் ஸ்ரீ ஸ்டீபன் "அடுத்த தேர்தலில் நாங்கள் தான் ஜயிப்போம் என்பதில் சந்தேகம் இல்லை. கம்யூனிஸ்டுகள் ஒரு வருஷத்தில் ஜனங்களை ஒடுக்கி, ஆபீஸர்களை பயமுறுத்தி, நியாய இலாக்காவை கிலிகொள்ளச் செய்திருக்கிறது. ஜனங்களுக்கு போலீஸ் உதவி எங்குமே இல்லை. கம்யூனிஸ்ட்கள் வெற்றி வேந்தர்களைப்போல் குறுக்கும் நெடுக்கும் அலைகிருர்கள். இந்த சந்தர்ப்பத்தை நாங்கள் பயன்படுத்தமாட்டோமா?" என்று ஆணித்தரமாகக் கேட்டார் வயதில் குறைந்தவர். தைரியத்தில் மிகுந்தவர். இவரைப்போல காங்கிரஸுக்கு பல தலைவர்கள் கிடைத்தால் கேரளத்தில் காங்கிரஸ் மறுபடியும் எழுந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ ஸ்டீபன் பத்திரிகைநிருபர்கள் கூட்டத்தில் பேசும்பொழுது அங்கு கூடியிருந்த நிருபர்களில் முக்கால்வாசிப் பேர்வழிகள் கம்யூனிஸ்ட் அனுதாபிகள் என்று தெரிய வந்தது. ஏதோ ஸ்ரீ ஸ்டீபன் குற்றவாளியை ஒத்தவர் என்ற மனப்பான்மையுடன் அவர்கள் கம்யூனிஸ்ட்களுக்கு பரிந்து பேசியதைப் பார்த்தபொழுது நாட்டுநலனை உத்தேசித்து அவர்களை கூண்டுடன் கட்டி கேரளத்தை ஒட்டிய அரபிக்கடலில் அமிழ்த்திவிடக் கூடாதா என்று தோன்றிற்று.

* *

ஸ்ரீ ஈ. வெ. ரா. வும் ஸ்ரீ ஆதித்தனும் சேர்ந்து பேசிய கூட்டத்தில்தான் ஸ்ரீ ஜி. டி. நாயுடுவும் பேசியிருக்கிருர். ஆனுல் எவ்வளவு தெளிவாகத் தன் அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லியிருக்கிருர்? ஸ்ரீ ஈ. வெ. ரா. போன்றவர்களின் எரிப்புப் படல உரைகளை செய்தி ஏஜன்ஸி இங்கு அனுப்புகிருர்களே ஒழிய ஸ்ரீ நாயுடுவைப் போலவும் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளையைப் போலவும் பலர் இருக்கிருர்கள் என்று இங்கு தெரியவேண்டாமா?

பெரியார் திட்டங்களால் அவருக்காவது அல்லது அவர் சீடர்களுக்காவது பலன் உண்டோ இல்லையோ? அவர் பேச்சு பாகிஸ்தான் பத்திரிகைகளில் பிரமாத முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுபிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பெரியார் ஸ்ரீ நாடாருக்கு மிகவும் ஆப்தராக இருக்கலாம். நாட்டின் மதிப்பை உத்தேசித்து ஸ்ரீ நாடார் தன் குருவை வாயை மூடிக்கொண்டு இருக்கச் சொல்ல வேண்டும் என்பது இங்கு நிலவும் அபிப்பிராயம்.

கானசரஸ்வதி

# டி.கே.பட்டம்மாள்

கீதப்பிரியா



சங்கீத உலகில் ஒரு ஜகஜ்ஜோதியாய் பிரகாசிக்கிறார் கானசரஸ்வதி டி. கே. பட்டம்மாள்! அழுத்தமும், இனிமையும், குழைவும், கனிவும் ஒன்றாய் அமையப் பெற்ற அற்புத சாரீரம். அநாயாசமாய் பாடக்கூடிய அளவிற்கு அமைந்திருக்கும் சக்தி வாய்ந்த வித்வத். அபார கவர்ச்சியுள்ள பாணி. சிறந்த லய ஞானமும், ஸ்வர ஞானமும், நிதானமாயும், கமக பூர்வமாயும் ராகங்களை ஆலாபிக்கும் திறமை! பாவபூர்வமாயும், உணர்ச்சிப் பெருக்காயும் பாடல்களைப் பாடும் அழகு. அபார தன்னம்பிக்கை! பாடல்களை பாவபூர்வமாயும், சாகித்ய சுத்தமாயும், சந்தேகத்துக்கு இடமில்லாமல் அழுத்தம் திருத்தமாயும் பாடி நாம் கேட்க வேண்டுமானால் 'பட்டா' விடம்தான் கேட்க வேண்டும்!

## அவரே சொல்கிறார்!

"நம் தாய்நாட்டிலேயே பிரசித்திப்பெற்ற சில நகரங்களுள் ஒன்றாகிய காஞ்சிமா நகரத்தில் 1919ம் வருடத்திலே பிறந்தேன். என் தகப்பனாருக்கு நல்ல உயர்ந்த கர்நாடக சங்கீதத்தில் மிகவும் பிரேமை! நான் சிறுமியாயிருக்கும் போதே எனக்கு அவர் கிருஷ்ண கர்ணாமிர்தம், அஷ்டபதி முதலியவற்றிலிருந்து அநேக சுலோகங்களை ராகபாவத்துடன் கற்றுக்கொடுத்தார். எனக்கு அப்பொழுதிலிருந்தே சங்கீதத்தில் ஓர் ஆசை பிறந்தது. ஆனால் எனக்குச் சங்கீதம் கற்றுக் கொடுக்கக் கூடிய வசதிகள் அச்சமயத்தில் அவ்வூரில் இல்லாததால் நாங்கள் சென்னைக்கு வர நேர்ந்தது.

நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும்பொழுது எனக்குத் தெரிந்த சில கீர்த்தனைகளையும், சுலோகங்களையும் பாடுவேன். அவர்களும் என்னைப் பாராட்டி உற்சாகப்படுத்துவார்கள்.

## தங்கப் பதக்கம் பரிசு!

பள்ளிக்கூடத்து ஆண்டுவிழாவிலே ஒரு நாடகத்தில் நானும் ஒரு பாத்திரமாக நடித்தேன். அந்த நாடக முடிவில் என் பாட்டுக்காக எனக்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்பட்டது. இந்த விஷயம் 'ஹிந்து' பத்திரிகையிலே பிரசுரிக்கப் பட்டது. இதைக் கண்ட கொலம்பியா கிராமபோன் கம்பெனியார்கள் என் தகப்பனாரை அணுகி, என் பாட்டையும் இசைத் தட்டு மூலம் வெளியாக்கவேண்டும் என்று கேட்டார்கள். அவர் தமக்கு முக்கியமாக வேண்டிய ஒரு சில நண்பர்களுடன் ஆலோசனை செய்தார். அவர்கள் சம்மதிக்கவே இசைத் தட்டில் பாடினேன். அவைகள் வெளிவந்தன.

## முதல் கச்சேரி

இசைத் தட்டுக்கள் வெளிவந்ததும் அவைகளைக் கேட்ட அநேக பிரமுகர்கள் தங்கள் வீடுகளிலே கச்சேரி வைக்கவேண்டும் என்று கேட்கலானார்கள். நான் செய்த முதல் கச்சேரி எழும்பூர் மகிளா சமாஜத்தில்தான்! ஆண் — பெண்கள், ரசிகர்கள் அடங்கிய கூட்டத்திலே மூன்று மணி நேரம் கச்சேரி நடந்தது.

அங்கு பாடியதில் நான் நன்றாய்ப் பாடியதாகச் சொல்லி, மேலும் மேலும் கச்சேரிகளுக்குக் கூப்பிட ஆரம்பித்தார்கள். என் தகப்பனாரும் இந்தத் துறையில் கொஞ்சம் கொஞ்சமாகப் பழகிவிட்டதால் அநேகக் கச்சேரிகளை ஒப்புக்கொண்டார். நானும்

பல இடங்களில் கச்சேரி செய்ய ஆரம்பித்தேன்.

## எல்லாக் கச்சேரிகளிலும்!

நான் முதன் முதலில் கச்சேரி செய்ய ஆரம்பித்தபொழுது எனக்கு வெகுசில கீர்த்தனங்கள்தான் பாடம். ஆதலால் மேலும் மேலும் கச்சேரிகள் செய்வதற்கு வேண்டுமென்றே சில கீர்த்தனங்களைப் பெரிய வித்வான்களின் வழியில் பாடம் செய்தேன். சென்னையில் நடக்கும் பிரபல வித்வான்களின் கச்சேரி ஒன்றையாவது கேட்கத் தவறமாட்டேன். இப்படியாக மேலும் மேலும் கேட்கக் கேட்க என்னை அறியாமலேயே அநேக நுட்ப விஷயங்களை எல்லாம் கிரகித்துக்கொண்டேன். இன்று வரையில் அப்படித்தான் செய்து வருகிறேன். சங்கீத ஞானத்துக்கு முடிவே கிடையாதல்லவா!

## எது உயர்ந்த சங்கீதம்?

இப்பொழுது நாடு முழுவதும் சங்கீத மயமாகியிருக்கிறது. எது உயர்ந்த சங்கீதம் என்ற கேள்வியைப் பலரும் கேட்கிறோம் அல்லவா? சிறுமிகளுக்காக நடத்தும் சங்கீதப் போட்டியிலிருந்து பெரியவர்கள் பாடும் ரேடியோ, கிராமபோன், சபைவரை எங்கும் பாடுபவர்கள் 'தத்தரிநா' 'தநநந', என்று ராகமாக ஆரம்பித்து, ஆரம்பத்திலேயே மேல்ஸ்தாயியில் 'கிர்' என்று ஏறுகிறார்கள். அங்கேயே சஞ்சரிக்கிறார்கள். எட்டியும் எட்டாமலும் அங்கேயே வித்தைகள், குட்டிக்கரணங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. உயரப் பாடினால் உயர்ந்த பாட்டு என்று ஏறக்குறைய ஸ்தாபனமாகிவிட்டது. எவ்வளவுக்கு ஏவ்வளவு தாரஸ்தாயியில் ஏறுகிறார்களோ 'வீர்',என்று பாடுகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு உயர்ந்தது என்று ஜனங்களும் கைதட்டிப் பாராட்டிக் குதூகலிக்கிறார்கள்.

ஆனால் நிஜமான சாதகம் எங்கேயிருக்கிறது என்று ஆர அமர பொறுமையுடன் எடுத்துக் காட்டுவதற்குத் தற்காலத்தில் நான்கைந்து பெரியவர்கள்தான் இருக்கிறார்கள். (அரியக்குடி, செம்மங்குடி, முசிரி, மகாராஜபுரம், செம்பை, மதுரை மணி!)

ஆதாரஷட்ஜமம் என்னும் நடுஸ்தாயி ஆரம்ப 'ஸா'வையே நன்றாகச் சேர்த்து சுருதியில் அணைவதில்லை. பரபரப்பும், பொறுமையில்லாத்தனமும் எல்லா விஷயங்களிலும் இருப்பது போலவே சங்கீதத்திலும் பரபரப்பும் அவசரமும் அதிகப் படுகிறதை நாம் பார்க்கிறோம்.

ஆதார ஷட்ஜமத்திற்குக் கீழிருக்கும் ஸ்தாயிக்கு 'மந்த்ரஸ்தாயி' என்று பெயர். அந்த ஸ்தாயியில் இருக்கும் நாத சௌக்யம் அனுபவித்தவர்களே உணர்வார்கள். எவ்வளவு சொன்னாலும் பாலின் ருசி கலயத்திற்குத் தெரியுமா?

## அற்புத சம்பவம்!

மகாவித்வான் டைகர் வரதாச்சாரியார் அனுபவித்துக்கூறிய ஒரு சம்பவத்தை தருகிறேன். "பட்டணம் சுப்ரமண்ய ஐயர் நாதோபாசனத்தில் வெற்றிபெற்ற பெரியார். அவருடைய சாரீரம் மிக கனத்ததாகவும், உணர்ச்சியுள்ளதாயும் இருக்கும். அதிகாலையில் அவர் மந்த்ரஸ்தாயியில் சாதகம் செய்வாராம். ஆதாரஷட்ஜமத்தில் அவர் சாரீரத்தைக் கொண்டு வந்து இணைக்கும்பொழுது ஒரு யோக நிலையில் ஈடுபட்டவரைப்போல காணப் படுவாராம்.

"அன்று ஏகாம்பரேசுவரர் சன்னிதியில் பட்டணம் சுப்ரமண்ய அய்யரவர்களின் கச்சேரி. தம்பூராவின் நாதம் எங்கும் ஒரு வேலியைப் போட்டது. ச்ருதி என்ற உலகத்தைத் தவிர வேறு உணர்ச்சி எங்குமில்லை. அவரது சாரீரம் ஆதாரஷட்ஜமத்தில் கணிப்பாகச் சேர்ந்தது. "ஸா" என்று வாயால் வெறும் ஸ்வரத்தை உச்சரித்து, உள் சாரீரம் நாதத்துடன் கலக்காமல் ச்ருதி சேருவது ச்ருதி சேருவதாகாது. "ஸா" என்று வாயால் உச்சரித்துவிட்டால் காத்ரநாதம் தந்தி நாதத்துடன் கலக்க வேண்டாமா— அது கலப்பதுதான் நாத உபாசனையின் ஆரம்பம். அந்த ஆதாரத்திலிருந்து ஒவ்வொரு ஸ்வரமாகக் கீழே இறங்குகிறார் ஐயர். கீழ் பஞ்சமம் வரை போய் அந்த நாலு ஸ்வரங்களிலேயே சஞ்சாரம் 'அநந்தம்' என்ற முடிவில்லா நாத ப்ருமத்தின் நாமாவை திரும்பத் திரும்ப உச்சரித்து அநந்தமான நாதத்துடன் கலக்கினார். கேட்டோர் நாதவலையால் கட்டுண்டவர்களாக இருந்தார்கள்.

"பிறகு பஞ்சமத்திலிருந்து இன்னும் கீழே இறங்கலானார். 'பா'விலிருந்து 'ம' என்றதும் நாதம் கம்மென்று ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணியது. Vibrations என்று

# நேயர்கள் கருத்தரங்கம்

பில்லூர் சுந்தரராமன், திருப்பத்தூர்.

சிரித்த செந்தாமரை — ஜாம் ஜாம் என்று ஆரம் பமாயிப்பது கண்டு மகிழ்ந்தேன். துப்பறியும் நாவல்களாகவே எழுதித் தள்ளும் ஸ்ரீசுப்பையாவுக் கும் ஒரு மாற்றம். அவர் சிருஷ்டியில் என்றுமே எனக்கு ஒரு நம்பிக்கையுண்டு.

* * *

ஸ்ரீரங்கம் நரசிம்மன், ஸ்ரீரங்கம்.

சுப்பையா அவர்களின் 'சிரித்த செந்தாமரை' என் மனதைக் கவர்ந்து விட்டது. கதையில் புது மையும் ஜீவனும் ததும்பி நிற்கிறது. மற்றபடி எல்லா அம்சங்களிலும் 'காவேரி' ஒரு தனிச்சிறப்பு டன் விளங்குவதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடை கிறேன்.

* * *

கே. வைகுண்டராமன், பனையூர்.
ஆசிரியர், ஹிந்தி உயர் தொடக்கப்பள்ளி.

காவேரியின் பிரவாகத்தை அள்ளிக் குடிக்கும் ஆயிரமாயிரம் வாசகர்களில் நானும் ஒருவன். தற் பொழுது காவேரியின் கதைகள் யாவுமே சிறுகதை இலக்கியத்தில் புதுமை சிருஷ்டியாக இருக் கின்றன. ஹாஸ்யக்கட்டுரைகளும் துணுக்குகளும் இணைத்து வழங்கினால் நலமாயிருக்கும்.

* * *

மிஸ் C. சுலோசனா, கிழக்குத் தாம்பரம்

ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள். கவர்ச்சிக்கு அடிமையாகும் உலகம் இது. காவேரியின் கெட்- அப் இன்னும் சற்று நன்றாகவே இருக்கவேண்டும். காவேரி தற்சமயம் குடத்திலிட்ட விளக்காக இருக்கிறது. அது பிரகாசிக்க வேண்டுமானால் நான் கூறிய முறையில் அதற்கு உடை உடுத்துங் கள். அப்புறம் அவள் சோபிப்பதைப் பாருங்கள்.

ஜனகா சுப்பிரமணியம், சிந்திரி.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு
நமஸ்காரம்.

ஜூன் மாத "காவேரி" இதழைப் பிரித்ததுமே மனதிற்கொரு மகிழ்ச்சியோடு குளிர்ச்சியும் ஏற் பட்டது என்பதை என்னைப் போலுள்ள மற்ற வாசகர்களும் மனமார ஒப்புக் கொள்வார்கள் என நம்புகிறேன். ஏனெனில் கடந்த இரண்டு வாரங் களாக வட இந்தியா, தென் இந்தியா எங்குமே தகித்துவரும் உஷ்ணத்தை தணிக்க "காவேரிப் பிரவாகம்" எடுத்துவந்தால் யார்தான் வரவேற்க மாட்டார்கள்? பிரவாகத்தில் மிதந்துவரும் அறி வூட்டும் அம்சங்களை அள்ளிப்பருக ஆர்வமுடன் காத்திருக்கிறோம். அடுத்த இதழிலிருந்து ஆரம்ப மாகும் அரியபெரிய விஷயங்களைத் தாங்கிவரும் இதழை எதிர்கொண்டு அழைக்கிறோம்.

நிற்க, 'காவேரி" தொண்டாற்றத் தொடங்கி பதினேழு வருடங்கள் ஓடிவிட்டன, பதினெட் டாவது ஆண்டு துவக்கப்போகும் தருணத்தில் நான் ஒரு சிறிய யோசனையைத் தெரிவிக்க ஆர்வம் கொண்டுள்ளேன். அதை தாங்கள் பிரசுரிக்கு மாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். "காவேரி" எங்கெல்லாம் ஓடுகிறாளோ அங்கெல் லாம் பெண்மணிகள் குழந்தைகள் சகிதம் ஆடி மாதம் "பதினெட்டாம் பெருக்கு" சித்ரான்னம் பிசைந்து எடுத்துக் கொண்டுபோய் காவேரி அம் மனுக்கு நைவேத்யம் செய்து அவர்களும் புசிப்பது புராதன காலத்திலிருந்து வழங்கப்படும் வழக்கம். "காவேரி" தொண்டாற்றத் தொடங்கி பதினேழு ஆண்டுகள் பூர்த்தியாகி பதினெட்டாவது ஆண்டு துவக்கத்தில் அல்லது அவ்வாண்டு ஆடி மாத இதழுக்கோ "பதினெட்டுப் பெருக்கு" என்ற தலைப்பின்கீழ் எழுதப்படும் சிறந்த சிறுகதைக்கு தாங்கள் காவேரி அம்மனின் அனுக்ரஹத்துடன் ஒரு சிறிய பரிசு அளிக்கலாம். இப்படிச் செய்வ தால் பல இளம் எழுத்தாளர்களின் ஊக்கத்தை உயர்த்துவதுடன் காவேரியின் பதினெட்டாம் ஆண்டை "பதினெட்டாம் பெருக்கு" விழாவா கவே நடத்தி ஜமாய்த்துவிட வேண்டும்.

---

## பவுன் பரிசுத் திட்டம்

ஸ்ரீமதி ஜனகா சுப்பிரமணியம் கூறியுள்ள யோசனையை நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம். 'பதினெட்டாம் பெருக்கு' என்ற தலைப்பிற்குப் பதில் 'பதினெட் டாம் பருவம்' என்ற தலைப்புகொண்ட சிறுகதைகளை எழுத்தாளர்கள் எழுதி அனுப்பும் படி வேண்டுகிறோம். இப்போட்டியில் பெண்கள் மட்டும்தான் கலந்து கொள்ளலாம். பரிசு ஒரு பவுன். செப்டம்பர் மாதம் 15-ம் தேதிக்குள் கதைகள் அனைத்தும் காரியா லயம் வந்தடைய வேண்டும். அங்கீகரிக்கப்படாத பிரதிகள் திருப்பிப்பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்.

## முதல் அத்தியாயம்

காரைக்குறிச்சி என்ற சிறிய ரயில்வே ஸ்டேஷனில் ஒரு பூரண கர்ப்பிணி வந்து இறங்குகிறாள். பெட்டி படுக்கை பணம் ஒன்றுமில்லை. முந்தின ஸ்டேஷனுக்குத்தான் டிக்கட். பரிசோதகர் தொலைந்து போகட்டும் என்று விட்டுவிடுகிறார். தள்ளாடித் தள்ளாடிச் சென்ற அவ்விளங் கொடி துவண்டு உட்கார்ந்து விடுகிறாள். மலையப்பர் என்ற வயதான மிராசுதார் இதனைக் கண்ணுற்று இரக்கப்பட்டு அவள் பிரசவ வேதனைப் படுகிறாள் என்பதை உணர்ந்து அருகில் இருக்கும் போர்ட்டரின் குடிசையில் அவளுக்குப் புகலிடம் வாங்கித் தருகிறார். தம் இல்லத்திற்கு சென்று தம் நாட்டுப் பெண்ணையும் போர்ட்டர் மனைவியின் உதவிக்கு அழைத்து வருகிறார்.




பெண் குழந்தை பிறக்கிறது. தாயையும், குழந்தையையும் தம் இல்லத்திற்கு அழைத்துச் செல்கிறார் மிராசுதார். அபலை பெண்ணிற்கு கழுத்தில் ஒன்றுமில்லை. உற்றார் உறவினர் யாருமில்லை என்ற காரணத்தால் கிராமம் முழுதும் ஒரே குத்தலான பேச்சு. தம் மருமகள் சங்கரி ஊர் வதந்தியை எடுத்துரைத்து அவளை நாம் வைத்துக் கொள்வது தவறு என்று கூறுகிறாள். கர்ப்பவதிப் பெண் குணமடையும்வரை தம் வீட்டில் ஆதரவு கொடுத்து காப்பாற்றியே ஆகவேண்டும் என்று கூறி நாட்டுப் பெண்ணை அடக்கி விடுகிறார்.

சுகுணா—அபலையின் பெயர். ரூபலாவண்யத்தின் இருப்பிடம். ஒரு முறை அவளைப் பார்த்தவர்கள் என்றென்றும் அவளை மறக்க முடியாது. சுகுணா தம் பிஞ்சுக் குழந்தையுடன் தவியாய்த் தவிக்கிறாள், சங்கரியின் சுடுசொல் குத்தல் பேச்சு, கொடூர செயல்களினால் நிலைமை முற்றி சுகுணாவை எட்டி உதைக்கும் கட்டத்திற்கு வந்து விட்டது. மலையப்பர்

மூத்தமகன் சுகுணாவின் அழகில் மயங்கி, தம் தகப்பனார் அபயமளித்தது சரி என்ற கட்சியில் சேர்ந்து மனைவி சங்கரியை அடக்கி ஆள்கிறார்.

சுகுணா தம் மனதுள் நாற்பது நாட்கள் கழிந்தவுடன் எங்காவது வெளியேறிவிட வேண்டியது தான் என்ற முடிவுக்கு வருகிறாள். ஆனால் எங்கு செல்வது? குழம்பி கதிகலங்கி நிற்கிறாள்.

---

## 2. மகானும் மங்கையும்

நாற்பது நாட்களுக்கு இரண்டே இரவுகள்தான் பாக்கி. அதுவரையில் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு எப்படியோ நாட்களைக் கழித்துவிட்டாள் சுகுணா. அந்த இடத்தைவிட்டால் அவள் எங்கே செல்வாள்? அவள் நிலைமை என்னவாகும்? அவள் யார்? இத்தகைய கேள்விகளை, மலையப்பரிடமும், அவரது மகனிடமும் கொண்டுள்ள பயத்தினால் வேறு யாரும் கேட்கவில்லை. ஆனால், சுகுணா இரவும்-பகலும் அதே சிந்தனையாகத்தான் இருந்தாள்.

சுகுணா சம்பந்தப்பட்டவரையில் உலகம் ஒரு சூன்யம்! கோர மிருகங்கள் வாழும் வனம்! ஆனால் உயிர் வாழவேண்டும் என்ற ஆசை அவளுக்கு இருந்தது. எனவே, ஆபத்து அதிகமில்லாத அந்த இடத்திலேயே இருந்துகொண்டு தனது பலத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று அவள் எண்ணினாள். அதுதான் சுலபமாகவும் அவளுக்குத் தோன்றிற்று.

இரண்டாவதாக, அவளுடைய குழந்தையைப்பற்றிய விஷயம். அக்குழந்தையை யாரிடமாவது கொடுத்துவிட்டுத் தனது வாழ்க்கையைப் புதிய முறையில் ஆரம்பிக்கலாமா என்று சுகுணா நினைத்தாள். எட்டு வருட காலங்களாகத் தன்னந் தனியாக





வாழ்ந்து, சொல்ல முடியாத துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்த அவளது மனதில் எண்ணற்ற ஆசைகள் எழுந்தன. அந்த ஆசைகள் அவள் வாழ்விற்கு ஒரு பாதை வகுத்தன.

காரைக்குறிச்சியின் களங்கமற்ற காற்று அவளது சரீரத்தில் பட்டது. பக்ஷி ஜாலங்களின் கோலாகல சப்தம் அவள் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. சில சமயங்களில் அக்கம்பக்கத்திலிருந்து வரும் இனிமையான சங்கீதம் அவளுக்கு இன்பமளித்தது. இந்த ஆனந்தம் முழுவதையும் மீண்டும் ஒருமுறை அனுபவிக்க வேண்டும் என்று சுகுணா ஆவல் கொண்டாள். ஆனால். அந்த இடத்தில் அதிகநாள் தங்குவது நல்லதல்ல என்றும் அவள் எண்ணினாள்.

சுகுணா பலவாருகச் சிந்தனை செய்து கொண்டு தன் அறைவாசலில் அமர்ந்திருந்தாள். அப்பொழுது மலையப்பர் தற்செயலாக அவ்வழியாக வந்தார்.

சுகுணா எழுந்தாள். "இங்கே கொஞ்சம் வருகிறீர்களா? உங்களிடம் சில விஷயங்கள் பேசவேண்டும். அண்ணா இருந்தால் அவரையும் அழைத்து வாருங்கள்" என்றாள் பணிவோடு.

"ஏன், என்ன சமாச்சாரம்?" என்று கேட்டுக்கொண்டே அறைக்குள் நுழைந்தார் மலையப்பர். அடுத்த வினாடியில் சிவலிங்கமும் அங்கு வந்து சேர்ந்தான்.

"உட்காருங்கள்! உங்களிடம் நான் ஒரு விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது. உங்களுக்கு நான் மிகவும் சிரமம் கொடுத்துவிட்டேன். இங்கிருந்து போய்விடலாம் என்று நினைக்கிறேன்". பூமியைப் பார்த்துக்கொண்டே சொன்னாள் சுகுணா.

"இவ்வளவு சீக்கிரத்திலா! ஏன்?" என்றான் சிவலிங்கம்,

"நீங்கள் என்ன நினைத்துக்கொண்டிருந்தாலும் நான் போய்விடுவதுதான் நல்லதென்று எனக்குப் படுகிறது. நான் ஓர் அதிர்ஷ்டம் கெட்டவள். எரிந்து வெந்து கொண்டிருக்கும் என் உள்ளம் நொந்து போய்விட்டது. கிராமம் முழுவதும் என் பேச்சு அடிபடுகிறது என்பதும், என்னால் நீங்கள் எவ்வளவு வசைமொழிகளைக் கேட்க வேண்டியிருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும்."

"அம்மா! அவைகளைப் பற்றியெல்லாம் நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம். கிராமத்தவர்களா எங்களுக்குப் படியளக்கிறார்கள்?" மனமுருகப் பேசினார் மலையப்பர்.

சுகுணா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "அப்படிச் சொல்ல முடியுமா? கஷ்டப் படுவதற்கென்றே பிறந்தவள் நான் கஷ்டப்படுகிறேன்...... தாங்கள் எனக்கு ஒரு யோசனை சொல்லவேண்டும்" என்றாள். அவள் உதடுகள் துடித்தன.

"என்ன யோசனை?"

"முன்பின் தெரியாத எனக்கு இவ்வளவு உதவி செய்த தாங்கள் இனிமேல் நான் எங்கே இருந்தால் நல்லது என்றும் இதற்குள் சிந்தித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நான் ஒழுக்கங்கெட்டவளோ அல்லது வேசியோ அல்ல. எனது இத்தகைய நிலைமைக்கு யார்மீதும் நான் குறை கூறப் போவதில்லை. எதிர்காலத்தைப் பற்றித்தான் இப்பொழுது எனக்குக் கவலை."

"நீ எங்கே இருக்கவேண்டும் என்று நான் எப்படிச் சொல்லமுடியும்?" என்று கேட்டவாறு சுகுணாவின் முகத்தை ஏறிட்டு நோக்கினார் மலையப்பர். "உனக்கு யாரேனும் உறவினர்கள் அல்லது தாய் வீட்டையோ, மாமியார் வீட்டையோ சேர்ந்தவர்கள் — உன்னைக் காப்பாற்றக்கூடியவர்கள் இருக்கிறார்களா?"

"பிறந்த இடத்திலும், நான் சேர்ந்த இடத்திலும் எனக்கு யாருமேயில்லை. அந்தப் பேச்சை விடுங்கள்!"

"அப்படியானால் நீ எங்கே போவாய்?"

"அதைத்தான் உங்களிடம் கேட்கிறேன். எங்காவது சென்று என் வயிற்றை நான் பார்த்துக்கொள்ளமுடியும். நன்றாகப் படித்திருக்கிறேன், தையல் வேலையும் எனக்குத் தெரியும். அதனால் என்னைப்பற்றி நான் கவலைப்படவில்லை..."

"இதோ பார்! இங்கு பரமசிவம் என்று ஒரு பண்ணையார் இருக்கிறார். அவர் வீட்டில் சமையல் செய்வதற்கு ஒரு பெண் வேண்டும் என்று சொன்னார். அங்கே உன்னைச் சேர்த்துவிடட்டுமா?" ஆவலோடு வினவினார் மலையப்பர்.

சுகுணாவின் முகம் சுழித்தது. "சமையல் காரியாக இருப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. அடுத்தவர்களுக்கு அடிமையாக

இருந்து ஆயுள் முழுவதும் அவர்கள் தரும் உணவைத் தின்று நான் சாகவேண்டியது தான்!"

"பின் என்னதான் செய்யப் போகிருய்? உம் . பக்திமார்க்கம் உனக்குப் பிடிக்குமா? மகாயோகி மடத்தில் உன்னைச் சேர்த்துவிடு கிறேன்."

"மகாயோகி! அவர் யார்?"

"பெரிய சிவபக்தர். எத்தனையோ பேர் கள் அவருக்குப் பாத பூஜை செய்கின்ற னர். உன் போன்ற துக்கம் நிறைந்தவர் களுக்கு அங்கே நிச்சயம் மனச்சாந்தி கிடைக்கும்."

"எப்பொழுதோ ஒரு தடவை நானும் அவர் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தக் கிராமத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு நகரத்தில் அந்த மடம் இருக்கிறது, இல் லையா?"

"ஆம், அதேதான்! நீ அங்கு செல்வது மிகவும் உத்தமம்."

"அங்கும் என்னைக் கேலிசெய்து விரட்டி விட்டால்?"

"ஊ...ஹூம்! ஒருநாளும் அவர் அப்படிச் செய்யமாட்டார். அவர் பெரிய மகான். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக் கள் அவரிடம் உபதேசம் பெறுவதற்காகப் போகிருர்கள்."

"சரி!... என் குழந்தையை என்ன செய்வது?"

"உன் கூடவே எடுத்துச் செல்! அதில் தவறென்ன?"

"அதெப்படி முடியும்? அங்கு என்ன வெல்லாம் கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டி வருமோ யார் கண்டது? எங்கெல் லாம் அடியும்-உதையும் பட்டு வயிற்றை நிரப்ப வேண்டியிருக்குமோ? நீங்கள் இவ் வளவு நாளும் எங்களைக் காப்பாற்றினீர் கள். வேறு யாரும் தங்களைப்போல் செய் திருக்கமாட்டார்கள் என்பதையும் நான் உணருகிறேன். இதோ, குழந்தையைப் பாருங்கள்! இவளை நான் எங்கேனும் வீசி எறிந்தாலும் சாகமாட்டாள்!" இவ்வாறு கூறிக்கொண்டே குழந்தையை எடுத்து வந்து அவ்விருவர் முன்னிலையிலும் வைத் தாள் சுகுணா.

சிறிது நேரம்வரை யாருமே பேசவில்லை. மூவரும் குழந்தையையே பார்த்துக் கொண் டிருந்தனர்

பின்பு சுகுணா சொன்னாள்: "ஐயா! நான் எங்கு சென்றாலும் என் பாபமும் என்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். ஆனால் இந்தக் குழந்தை என்ன குற்றம் செய் திருக்கிறது? கடவுள் அளித்த கனிதானே? அதனால் களங்கமில்லாத சூழ்நிலையில் இக் குழந்தை வளரவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்."

"அதற்கு என்ன செய்யவேண்டும் என் கிருய்?" சிவலிங்கம் கேட்டான்.

"உங்கள் இருவருக்கும் சம்மதமானால் நான் உங்களிடமே குழந்தையை ஒப் படைத்துவிடுகிறேன். உங்கள் குழந்தை களோடு சேர்ந்து இவளும் வளரட்டும். எங்காவது எனக்கு நிரந்தரமான ஓர் இடம் கிடைத்ததும் நான் அழைத்துச் சென்று விடுகிறேன். இவளை விட்டுப் பிரிய வேண் டுமே என்று நினைக்கும்பொழுதே என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது இருந்தாலும் வேறு வழியில்லை." இதைச் சொல்லும்பொழுது சுகுணாவுக்குக் கண் ணீர் 'பொலபொல'வென்று வடிந்தது.

"எனக்கு ஆட்சேபணையில்லை; ஆனால் என் மருமகள் சங்கரிக்குப் பிடிக்காதே என்றுதான் பார்க்கிறேன்" என்றார் மலை யப்பர்.

சிவலிங்கம், "அப்பா! அவளை நான் கவ னித்துக்கொள்கிறேன். தாயின் பாவத்திற் காகக் குழந்தையும் கஷ்டப்படவேண்டுமா என்று சுகுணா கேட்பது எனக்கும் சரி யென்றுதான் படுகிறது" என்றான்.

"நீ மகாராஜனாக இருக்கவேண்டும், மகனே!" என்று சந்தோஷத்தோடு கூறி விட்டுத் தன் மருமகள் சங்கரியைக் கூப் பிட்டார் மலையப்பர்.

சங்கரி, முகத்தை வெட்டிச் சுழித்துக் கொண்டு அங்கு வந்தாள்.

மலையப்பர் சொன்னார்: 'சங்கரி! இவள் போகப் போகிருளாம். இவள் குழந்தையை நீ பார்த்துக்கொள்வாயா? பாவம், நம் வீட்டுக் குழந்தைகளோடு இதுவும் வளரட்டுமே?"

"அதெல்லாம் என்னால் முடியாது! என் குழந்தைகளைக் கவனிப்பதற்கே என்னால் முடியவில்லை." சங்கரி 'பட்'டென்று பதி லளித்தாள்.

"ஏன், உன் ஓர்ப்படிகளும் துணைக்கு இருக்கிறார்கள், இல்லையா?"

"இருந்தால்? சௌக்கியமாகச் சாப்பிட்டு விட்டுத் தூங்குவார்கள்!"

சிவலிங்கம் குறுக்கிட்டான். "அப்படி யானால் உனக்குத் துணையாக சுகுணாவை யும் இங்கேயே வைத்துக்கொள்வோமா?" ஆத்திரத்தோடு பேசினான் அவன். தந்தை யின் முன்னிலையில் அதைவிட அதிகமாக அவனால் பேசமுடியவில்லை மனைவியின் மீது அவனுக்கு ஏற்பட்ட வெறுப்பு, சுகுணாவின்மீது கருணையாக மாறிற்று.

குழந்தையை ஏற்றுக்கொள்ள மறுத் தால் தாயும் தன் தலையில் விழுந்துவிடு வாளோ என்று பயந்த சங்கரி, சிறிது புத்தி சாதுர்யமாக நடந்துகொண்டாள்.

"சுகுணா எங்கே போகிறாள்?" என்றாள் சங்கரி.

"மகாயோகி மடத்திற்குப் போகிறாளாம். வேறு எங்காவது தங்குவதற்கு நல்ல இடம் கிடைத்ததும் குழந்தையைக் கூட்டிச் சென்றுவிடுவாள்" என்றார் மலையப்பர்.

சங்கரி, "உங்கள் இஷ்டம்போல செய்யுங் கள்" என்று பட்டும் படாமலும் சொல்லி விட்டு உள்ளே சென்றாள்.

"அப்பா! அவள் உங்களிடம் வழிக்கு வர மாட்டாள். எல்லாம் நான் சரிப்படுத்திவிடு கிறேன்" என்றான் சிவலிங்கம்,

"சரி, அப்படியே செய்!" மகனிடம் கூறினார் மலையப்பர்,

"அப்படியானால் நாளை மறுதினம் நான் போகிறேன்" என்றாள் சுகுணா.

"அன்று நானும் அங்கு போகவேண்டி யிருக்கிறது; நம் வண்டியிலேயே போய் விடலாம்." மலையப்பர் மகிழ்வுடன் பகர்ந் தார்.

சுகுணா சந்தோஷ மிகுதியினால் ஒரு பெருமூச்சு விடுத்தாள். தன் குழந்தை கவலையில்லாமல் வளரும் என்ற நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. ஆதலால் வேறு எந்தவிதமான சஞ்சலமும் அவள் மனதில் இல்லை. பரந்த இவ்வுலகத்தில் ஏதேனும் ஒரு மூலையில் ஒதுங்கித் தன் வாழ்க்கையை ஓட்டிவிடமுடியும் என்று அவளுக்குத் தைரியம் பிறந்தது.

இரண்டு நாட்களும் தன் குழந்தையைப் பிரியாமல், கட்டியணைத்துக் கண்ணீர் உகுத்தாள் சுகுணா. குழந்தையையும் தன்னோடு எடுத்துச் சென்றுவிடலாம் என்று எத்தனையோ தடவைகள் அவள் உள்ளத் தில் ஆசை எழுந்தது. தீர்க்கமாக ஆலோ சனை செய்ததில் அது சரியென்று அவ ளுக்குத் தோன்றவில்லை. நிலையான ஒரு வாழ்க்கையைப் பெறும்வரையில் குழந்தை அங்கேயே இருக்கட்டும் என்று முடிவு செய்துவிட்டாள்.

புறப்படுவதற்கு ஒருநாள் முன்னதாக மலையப்பரைச் சந்தித்தாள் சுகுணா. தன் னிடமிருந்த ஒரு மோதிரத்தையும், ஒரு தங்கச் சங்கிலியையும் அவரிடம் கொடுத்து, குழந்தையை வளர்க்கும் பொறுப்பிற்காக அவைகளை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டி னாள். ஆனால் மலையப்பர் மறுத்துவிட்டார்.

குறித்த தினத்தன்று காலை ஐந்து மணிக்கே சுகுணா எழுந்துவிட்டாள். குழந் தையைக் கட்டியணைத்து, உச்சி மோந்து, கடைசி முத்தமும் கொடுத்தாள். சங்கரி யின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரி னாள். தன் குழந்தையிடம் கருணை காட் டும்படி வேண்டினாள். குழந்தையைக் கவ னித்துக்கொள்வதாகச் சங்கரியும் வாக் களித்தாள்,

அழுதழுது கண்களில் ரத்தம் சிந்திக் கொண்டிருந்த அபாக்கியவதி சுகுணா, குழந்தைக்காகத் தன் வீட்டையும் மறந்து-துறந்து அனாதையாகத் திரிந்த அவள் இன்று அக்குழந்தையையே இன்னொரு வரிடம் ஒப்படைத்துச் செல்லத் துணிந்து விட்டாள். என்னே விதியின் விபரீதம்!

வண்டி வாசலில் தயாராக நின்றது. அந்த கிராமத்துக் கர்ணம் கந்தசாமி பிள்ளை வண்டியில் உட்கார்ந்திருந்தார். மலையப்பரும் ஏறிக்கொண்டார். சுகுணா வண்டியில் ஏறுவதற்குமுன் சங்கரியின் கைகள் இரண்டையும் பிடித்துக்கொண்டு, "அக்கா! எனது கடைசி வேண்டுகோள்! ஒருவேளை நான் திரும்பி வராது போனால், பருவம் எய்துவதற்கு முன்பு என் மக ளுக்கு நீங்கள் மணம் செய்விக்கக் கூடாது" என்று கண்கலங்கக் கூறினாள்.

"அதைப்பற்றிக் கவலைப்படாதே, சுகுணா", என்றான் சிவலிங்கம்.

"லீலா என்று அவளுக்குப் பெயர் வையுங்கள்" என்றாள் சுகுணா.

சிவலிங்கமும், சங்கரியும் தலையசைத்தனர். சுகுணா வண்டியில் ஏறினாள். தாய்க்கும் மகளுக்கும் உள்ள இடைவெளி நீண்டுகொண்டிருந்தது.

* * *

சேரன்மாதேவி நகரத்திற்கு வெளிப்புறத்தில் ஒரு விசாலமான மாளிகையில் மகாயோகிமடம் அமைக்கப்பட்டிருந்தது. யோகியார் அந்த ஊருக்கு வந்து எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டிருந்தன. ஸ்தல சிஷ்யர்கள் தவிர, சென்னை மாகாணம் முழுவதிலும் அவருக்குப் பக்தகோடிகள் உண்டு. ஆயிரக்கணக்கான ரூபாய்கள் தினந்தோறும் அவருடைய பாதசேவையில் குவிந்துகொண்டிருந்தன. பலர் அவரிடம் உபதேசம்பெற்று பற்றற்ற வாழ்க்கை நடத்துவதற்கு முயன்றனர். அனேகர் அவர் கூடவே இருந்து அவருக்குப் பணிவிடைகள் புரிந்து அவருக்குச் செய்யும் சேவையே தங்களுக்குச் சொர்க்கலோக சுகமளிக்கும் என்று மனப்பூர்வமாக நம்பினர்.

மடாலயத்தின் வெளிப்பிரகாரத்தில் மகாயோகியின் உபன்யாசங்கள் நடைபெறுவது வழக்கம். நான்கு பக்கங்களில் இருந்த சுமார் இருபது ஜன்னல்கள் வழியாகவும் காற்று 'குளு குளு' வென்று வீசிக்கொண்டிருக்கும். மகான்களின் உருவப் படங்களும், கட்டிடத்தின் சிற்ப வேலைப்பாடுகளும் அந்த இடத்திற்குப் புனிதத்தன்மை அளித்தன. ஆலயத்தின் ஒரு மூலையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 'புலித்தோல் ஆசனம்' அம்மடத்தின் பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. நாள்தோறும் நானூறுக்கு மேற்பட்ட ஜனங்கள் கூடி உட்கார்ந்து உபதேசம் பெறும் இடம் அதுதான்.

மகாயோகியின் மகிமை எங்கும் பரவியதற்குக் காரணம் இல்லாமலில்லை. பாமரமக்களை தன் வசப்படுத்தக்கூடிய அங்க அமைப்பு அவரிடம் இருந்தது. பளபளவென்று தங்கம்போல் மின்னும் கட்டுமஸ்தான சரீரம். ஓர் எலும்புகூட வெளிப் படையாகத் தெரியாது. முகத்தில் ஒரு விதக் கவர்ச்சியும் இருந்தது. இந்தக் கவர்ச்சி, மேதாவித்தனத்தினால் ஏற்பட்டுள்ள தெளிவு என்று ஜனங்கள் கருதினர். கண்களில் சாந்தமும், அன்பின் ஒளியும் வீசிற்று.

பத்து வருடங்களுக்கு முன்பு மகாயோகியின் வயது நாற்பது தான்! ஸ்நானம் செய்து, சந்தனமும்—பன்னீரும் கலந்து சரீரத்தில் பூசி, விலையுயர்ந்த பளபளக்கும் பட்டாடையணிந்து, தங்கப்பவுன்கள் பதித்த பாதரட்சையில் ஏறி, கையில் புத்தகமும் பிடித்துக்கொண்டு, அவர் காலடியில் குழுமிக்கிடக்கும் பக்தகோடிகளின் மத்தியில் அவர் நிற்கும்பொழுது சாதாரண ஜனங்களின் மனதிலும் ஒரு சாந்தி ஏற்பட்டுவிடும்.

சிரத்தையோடு கூடியிருப்பவர்களுக்கு அவர் தேவாம்சமாகத் தென்படுவார். பக்தர்கள் தம் நிலை மறந்து அந்த வசீகரமூர்த்தியின் வசமாகி விடுவார்கள். முத்துப்போன்ற தனது பல்வரிசை தெரியும்படி அவர் எப்பொழுதாவது சிரித்தால், சர்வஜனங்களும் அப்படியே பிரம்மானந்தத்தில் சொக்கிப்போய்விடுவார்கள்.

வயோதிகர்களுக்கு மகாயோகியிடம் அபார மதிப்புண்டு. ஒன்றிரண்டு பண்டிதர்களும் பட்டதாரிகளும்கூட அவரிடம் தொடர்புகொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் யோகியாருக்குப் போதனை செய்கிறார்களா அல்லது யோகியாரிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்கிறார்களா என்பது யாருக்கும் தெரியாது. அவர்களது பேச்சிலிருந்து, கல்வியில் கரைகண்டவர்கள் என்று தான் யாவரும் நினைப்பார்கள்.

அத்தகைய மகிமை பொருந்திய மகாயோகியின் மடத்தில். ஒரு மூலையில் மலையப்பரும், கந்தசாமிப்பிள்ளையும் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் பக்கத்தில் தலைகுனிந்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள் சுகுணா.

ஏழரை மணி இன்னும் அடிக்கவில்லை. மகாயோகி, ஒவ்வொரு விநாடியும் தனது நியமானுசாரத்தின்படி நடப்பவர். கடிகாரத்தில் ஒரு நிமிஷம் முந்தினாலும் அல்லது பிந்தினாலும் சரி, அவர் தனது நியமத்தில் கொஞ்சமும் தவறுவதில்லை.

மணி ஏழரை அடித்ததும் ஒரு கதவு திறந்தது. மகாயோகி தரிசனம் அளித்தார்!

யோகியாரைப்பற்றி சுகுணா எவ்வளவோ விஷயங்கள் கேள்விப்பட்டிருந்தாள்; ஆனால் அவருடைய களைநிறைந்த முகத்தைக் கண்டதும் அந்த விஷயங்கள் யாவும் மறைந்துவிட்டன. இருள் அடைந்திருந்த அவள் உள்ளத்தில் ஒளி வீசிற்று, சாந்தி பிறந்தது. யோகியாரின் அனுக்கிரகத்தால் தனது துன்பங்களைத் துடைக்க முடியுமா என்று அவள் சிந்தனை செய்தாள்.

மகாயோகி ஆசனத்தில் அமர்ந்தார். தயாள குணமுள்ள ஒரு தனவந்தன், பிச்சைக்காரனுக்குக் காசை வீசி எறிவதுபோல பக்தகோடிகளின்மீது ஓர் இனிமையான பார்வையை வீசினார். பக்கத்தில் அமர்ந்திருந்தவர்கள் அவருக்குப் 'பங்கா' கொண்டு விசிறினர். இரண்டொரு

பக்தர்கள் எழுந்து சென்று அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டனர். சரியாக எட்டு மணிக்கு உபன்யாசம் ஆரம்பமாயிற்று.

சித்திரப் பதுமைபோல யோகியாரையே பார்த்துக்கொண்டிருந்தாள் சுகுணா. அவர் வாயிலிருந்து வெளிவந்த இனிமையான - சாந்தமும் சாதுர்யமும் நிறைந்த சொல்லருவி, கேட்போரின் மனதைப் பரவசத்தில் ஆழ்த்தியது. சுத்தமான – தெளிவான தமிழில் மிகவும் சாதாரணமாகத் தான் பேசினார். சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய சொற்களையும் இடையிடையே அவர் உபயோகித்தது மிகவும் ரசிக்கத் தக்கதாகஇருந்தது. சில சமயங்களில் ஹாஸ்யமாகவும் பேசினார். பக்த கோடிகள் விழுந்து விழுந்து சிரித்தனர். துக்ககரமான சம்பவங்களை அவர் வர்ணித்தபொழுது பலருடைய கண்கள் கலங்கின. அந்தச் சமயத்தில் அவரது குரல் சுகுணாவின் இதய எதிரொலி போல் தோன்றிற்று. அதனால் சுகுணாவின் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் அலைபோல் குமுறியெழுந்தன.



சரியாக ஒன்பது மணிக்கு, நதிப்பிரவாகம் செங்குத்தான மலையின் உச்சியிலிருந்து தடாலென்று பூமியில் விழுவதைப்போல, யோகியாரின் உபன்யாசம் முடிவடைந்தது. அனைவரையும் ஆசீர்வதிக்கு முறையில் தனது கைகளிரண்டையும் உயர்த்தி "சாந்தி! சாந்தி! சாந்தி!" என்றார் மகாயோகி.

பக்தர்கள் மூச்சுவிட மறந்து நின்றனர். சப்த ஜாலங்களும் அடங்கி, அவர்களுடைய உயிர்நாடிகள் உடைந்து விட்டார் போல் தோன்றிற்று அவர்களது நிலை. பின்பு பூமாலைகள் சூட்டி,

உபசரித்து முடிந்ததும் மகாயோகி எழுந்து மாளிகைக்குள் மறைந்தார்.

கூட்டம் ஒரு மாதிரியாகக் கலைய ஆரம்பித்தது. சிலர்மாத்திரம் அசையாமல் உட்கார்ந்திருந்தனர். காரணம். ஒன்பது மணியிலிருந்து பத்துமணி வரையில், விருப்பமுள்ளவர்கள் மகாயோகியை தனிமையாகச் சந்திக்கலாம்; தங்களுடைய சந்தேகங்களை அவரிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம் என்று ஒரு வழக்கம் ஏற்படுத்தப் பட்டிருந்தது. அதற்காக காத்திருந்தவர்களில் மலையப்பர், கந்தசாமிப்பிள்ளை, சுகுணா ஆகிய மூவரும் இருந்தனர். அதிர்ஷ்டவசமாக அதிக நபர்கள் அன்று காத்திருக்கவில்லை.



மாளிகையின்வாசலில் நின்று, ஒவ்வொருவராக உள்ளே போவதற்கு அனுமதியளித்துக்கொண்டிருந்த நம்பிசாமி, மலையப்பருக்கு நன்கு அறிமுகம் ஆனவர். எனவே சுகுணாவுக்கு விரைவில் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

நம்பிசாமி, மலையப்பரிடம் கண்ணைக் காண்பித்து சுகுணாவை உள்ளே அனுப்பும்படி சமிக்ஞை செய்தார். மலையப்பர், சுகுணாவைத் தள்ளினார்.

சுகுணா சற்றுத் தயங்கினாள். நம்பிசாமி கதவைத்திறந்தார். மலையப்பர், "உம்......! போ. சுகுணா" என்று தூண்டினார். பயந்துகொண்டே உள்ளே நுழைந்தாள் அவள்.

சுகுணா வாசலைத் தாண்டியதும் கதவு மூடப்பட்டது. வாசல் அருகிலேயே அவள் நின்றுவிட்டாள். அவளுக்கு நேர் எதிரே பத்மாசனத்தில் பரமானந்தமாக அமர்ந்திருந்தார் மகாயோகி. சுகுணாவை ஏறிட்டு நோக்கினார். தனது கவர்ச்சி மிக்க கண்களால், பக்கத்தில் வரும்படிக் கட்டளையிட்டார் அவர்.

யோகியாரின் கண்களில் தோன்றிய கம்பீரமான பார்வையும், தேஜசும், சக்தியும் ஒருவிதமான அற்புத அழகை அவருக்கு அளித்தன. ஆகாயத்தில் மினுமினுத்துக் கொண்டிருக்கும் இரண்டு ஒளி நட்சத்திரங்களிடம் தனது உயிர் பறந்து சென்று, அவைகளோடு ஐக்கியமாகி விட்டது போல சுகுணா அவரது கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். தான் யார், எதற்காக அங்கு வந்தாள் என்பதையே அவள் மறந்து போய் விட்டாள். யோகியாரின் பக்கமாக அவளது கால்கள் மெதுவாக நகர்ந்தன.

"உட்காரம்மா!" என்றார் யோகி.

சுகுணா கீழே உட்கார்ந்தாள்.

"உனக்கு ஏற்பட்டுள்ள துக்கம் என்ன? உன்னைப் போன்றவர்களுக்குக் கடவுள் துன்பம் அளிக்கமாட்டானே?" யோகியாரின் ஒவ்வொரு வார்த்தையிலும் இனிமை குழைந்திருந்தது.

துன்பங்களைப்பற்றி அவர் கேட்டதால், மங்கிக் கிடந்த நினைவுகள் யாவும் சுகுணுவின் மனத் திரையில் படர்ந்தன. மகானின் கண்களிலிருந்து வீசிய ஒளிப்பிரவாகத்தில் அவள் மூழ்கிவிட்டாள்.

"சுவாமி! எனது துக்கம் வாயால் சொல்லக் கூடியதல்ல."

"நீ சொல்லவேண்டிய அவசியமும் இல்லை. எனக்கு எல்லாம் தெரியும்" என்று சொல்லிய வாறு சுகுணுவின் கண்களுக்குள் தனது பார்வையைச் செலுத்தினர் அவர்.

"ஹா......!" சுகுணு ஆச்சரியமடைந்தாள்.

"பயப்படாதே! இந்த உலகத்தில் நடைபெறும் எதையும் என்னிடமிருந்து மறைக்க முடியாது. நீ பால்ய விதவைதானே?"

"ஆம்."

"உற்ருர்—உறவினர்களின் கொடுமைக்கு ஆளானுய். ஆண்களின் அக்கிரமச் செயல்களில் அகப்பட்டுத் தவித்தாய். இப்பொழுது ஆதரவற்ற நிலையில் நீ இங்கு அடைக்கலம் புக நினைக்கிருய்?

அந்தராத்மாவிலிருந்து ஒவ்வொரு வார்த்தையும் வெளிவருவது போலப் பேசினர் யோகி. வாயைத் திறந்தவாறு கேட்டுக்கொண்டிருந்தாள் சுகுணு.

"என்ன? நான் சொல்லியவை உண்மையா?"

"ஆம், சுவாமி. தாங்கள் சர்வமும் அறிந்தவர் என்பதை உணர்ந்துகொண்டேன்." பயபக்தியோடு பகர்ந்தாள் அவள்.

யோகியார் குறுநகை புரிந்தார்.

"சுவாமி! தங்களின் சர்வவல்லமையை நான் தெரிந்துகொண்டேன், அதனல் இனிமேல் தாங்கள் எதுவும் சொல்லவேண்டாம். எனது துன்பங்களுக்கு எப்பொழுதாவது ஒரு முடிவுகாலம் ஏற்படுமா அல்லது ஆயுள் முழுதும் நான் அல்லல்களுக்கும் - அவதிகளுக்கும் ஆளாகிச் சாக வேண்டியதுதானு?" என்று சுகுணு பரிதாபமாக வினவினுள்.

"உனது பாபம் நிவர்த்தியாகும் வரையில் துன்பம் உன்னைச்சூழ்ந்து நிற்கத்தான் செய்யும்!"

"பாபமா?...... சுவாமி! தாங்களுமா பாபம் என்கிறீர்கள்?"

"ஆம்! பாபம் செய்யாதவர்களுக்குத் துக்கம் ஏற்படுவதில்லை"

"நான் என்ன பாபம் செய்தேன்?"

இந்தக் கேள்வியை சுகுணு கேட்டபொழுது உலகில் நடைபெறும் அக்கிரமங்கள் யாவும் அவள் நினைவுக்கு வந்தன. மகாயோகியின் மீது ஏற்பட்டிருந்த மதிப்பு குறைய ஆரம்பித்தது. வெகு காலமாக அவள் மனதில் அடக்கி வைத்திருந்த கவலைகள் யாவும் வெடித்தன.

"நீ எப்பொழுது விதவையானுய்?"

"எட்டாவது வயதில் எனக்கு விவாகம் நடந்ததாம். விவாகமான மூன்றே மாதங்களில் நான் விதவையாகிவிட்டேனும். எங்கிருந்து எனக்கு வரன் வந்தான், எவன் என்னை மணந்தான் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. மணம் நடந்தது என் குற்றமா, சுவாமி? இந்த உலகமே பாபத்தின் சின்னம் என்று சொல்லப்படும்பொழுது தாங்கள் என் விஷயத்தில் ஏன் இவ்வாறு கூறினீர்கள்?"

மகாயோகி நகைத்தார். "விதவைத்தனம் துக்கம் நிறைந்தது என்று நீ எதற்காக நினைக்கிருய்?"

"எதற்காகவா?" ஆச்சரியத்துடன் வினவினுள் சுகுணு.

"ஆம்! மாங்கல்யத்வத்தைவிட வைதவ்யத்தில்தான் எவ்வளவோ பரிசுத்தம் நிறைந்திருக்கிறது."

"பரிசுத்தம்! அப்படியானுல் எல்லா சுமங்கிலிகளுமே அந்தப் பரிசுத்தத் தன்மையை அடைந்தால் மிகவும் நன்ருயிருக்குமே? சுவாமி! என்னை மன்னித்துவிடுங்கள். தாங்கள் சொல்வது ஒரு வேளை சரியாக இருக்கலாம். இருந்தாலும் அனுபவத்தின் மூலம்தான் அதை நான் உணர முடியும்."

"துன்பம்! இதுவே உலகத்தின் முதல் அடிச்சுவடு."

"சுவாமி! நான் அறிவில்லாதவள்; தாங்கள் அறிவுக்களஞ்சியம். எதற்காக நான் இந்தத் துன்பங்களைச் சகிக்கவேண்டும்?"

"துன்பத்தால் புனிதமடைந்து உலகத்தை ஆனந்தமயமாக்கும் பணியில் ஈடுபடுவதற்காக."

"எனக்குப் புனிதமும் வேண்டாம், புண்ணியார்த்தமும் வேண்டாம்! சுகம் வேண்டும். அது எப்படிக் கிடைக்கும், சொல்லுங்கள்? நான் பருவத்துடிப்பில் இருக்கும் பாவை. என் உடலும்—உள்ளமும் இன்பத்தை அடைய ஏங்குகின்றன. என் கணவன் இருந்திருந்தால் அவரோடு நான் சல்லாபமாகச் சுற்றுவேன், பேசுவேன், சிரிப்பேன், அவருடைய ஆவலையும் ஆர்வத்தையும் நான் நிறைவேற்றுவேன். என் வீட்டிற்கு நானே ராணியாக இருந்து சுகபோகங்களை அனுபவிப்பேன். என் மகன் வருவான்; அவனுக்கு உணவூட்டி, உச்சி முகந்து, அவனைச் சீராட்டி வளர்ப்பேன். இவையெல்லாவற்றையும் இழந்து நான் துன்பத்தை ஏன் அனுபவிக்கவேண்டும்? நான் என்ன குற்றம் செய்தேன்?"

"மணம் செய்துகெண்டாய்; அதுதான் குற்றம்!" புன்முறுவலோடு மொழிந்தார் மகாயோகி.

"என்னை மணந்தவனின் முகத்தைக்கூட நான் பார்த்ததில்லையே, சுவாமி. ஒரேயொரு நாள் அவன் கையை நான் பிடித்தேன். அதுதான் நான் செய்த குற்றம். அதற்காகவா இவ்வளவு கஷ்டங்களை நான் அனுபவிக்கவேண்டும்? அவ்வளவு சின்ன வயதில் என் கழுத்தைத் திருகி விட்ட எனது பெற்றோர்கள் நல்லகாலமாகச் செத்துவிட்டார்கள்."

"துன்பத்திற்கு முதல் காரணம் அதுதான். நடந்துபோன விஷயங்களைப்பற்றிக் கவலைப்படுவதில் பிரயோஜனமில்லை. அனாவசியமாக அவைகளை நினைத்து ஏன் வீணாக ஆத்திரப்படுகிறாய்?"

"ஆத்திரம் வராதிருக்குமா? முதலில் நான் ஒன்றும் அறியாதவளாகத்தான் இருந்தேன். விரதங்கள் அனுஷ்டித்தேன். சமுதாயம் விதித்திருந்த கட்டுப்பாடுகளுக்கும், ஒழுங்கு முறைகளுக்கும் கட்டுப்பட்டிருந்தேன்..."

"அப்புறம்?"

"எல்லாவற்றையும் விட்டுவிட்டேன். எதற்காகக் கட்டுப்பட்டிருக்கவேண்டும்? இன்பம் நுகரவேண்டும் என்ற ஆசை என் இதயத்தில் இருக்கிறது. பின் எதற்காக அவ்வளவு துன்பங்களையும் நான் சகித்துக்கொண்டிருக்கவேண்டும்? நானும் ஒரு பெண்தானே? இளமையின் ரத்தத் துடிப்பு என் சரீரத்திலும் ஓடிக்கொண்டிருக்கிறதே? நானும் மற்றவர்களைப்போல ஏன் கோலாகலமாக இருக்கக்கூடாது? ஆம், வேசியாக மாறிவிடக்கூடாதுதான்! ஆனால் விவாகம் ஏன் செய்துகொள்ளக்கூடாது?" உணர்ச்சி ததும்பப் பேசினாள் சுகுணா.

மகாயோகி அசைந்துகொடுக்கவில்லை. "அவ்வாறு எவனாவது உனக்குக் கிடைத்தானா?" என்றார் அவர்.

"அவனைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். ஒருவன் என்னை முகர்ந்து உதறிவிட்டான். அதைப்பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. பரந்த இந்த உலகம் இருக்கும்பொழுது நான் ஏன் கவலைப்படவேண்டும்? இன்னும் எவனாவது எனக்குக் கிடைப்பான், என் ஆவலையும் நிறைவேற்றுவான் என்ற எண்ணத்தில் நான் வீடு வாசலைத் துறந்து, ஊர் ஊராய்ச் சுற்றிக்கொண்டிருக்கிறேன். எனக்கு வேறொன்றும் வேண்டாம்; நேர்மையாக, சந்தோஷமாக என்னை வீட்டோடு வைத்துக் காலங்கழிக்கும் ஒருவன் கிடைத்தால் போதும்."

"பெண்ணே! இது வெறும் மன மயக்கம். அப்படிப்பட்டவன் ஒருவனும் இந்த உலகில் உனக்குக் கிடைக்கமாட்டான்."

"ஏன்"

"நம் சமுதாய அமைப்பிருக்கிறதே..., அது ஒரு விசித்திரமானது. சிறிது நேரம் நீ எனது வார்த்தையை ஒப்புக்கொள்வாயானால் உனது துன்பங்கள் யாவும் தூர விலகிப்போவதை நீயே பார்க்கலாம்."

"எப்படி"

"சுகம் – துக்கம் இவ்விரண்டிற்கும் மனம் தான் காரணம்"

"அதனால்?"

"மனதைக் கட்டுப்படுத்தவேண்டும்!"

"எப்படிக் கட்டுப்படுத்துவது."

"சத் காரியங்களில் மனதைச் செலுத்துவதன் மூலமும், சத் சங்கத்தில் சேருவதன் மூலமும் கட்டுப்படுத்தலாம்."

"கடந்த சில வருடங்களாக நானும் என்னவெல்லாமோ செய்து பார்த்துவிட்டேன். அதனால் ஒரு பயனும் கிடைக்கவில்லையே, சுவாமி"

"கிடைக்கும்! சம்சாரத்தில் இருக்கும் வரையில் மனிதன் துக்கமடைவது இயல்பு. சம்சார பந்தத்தை விட்டுவிட்டால் பின்பு அவன் அதை விரும்பவே மாட்டான்."

"எப்படி விடுவது?"

"வழியோடு அதை உனக்குச் சொன்னால்தான் புரியும்".

"சுவாமி! தாங்கள் மகான். என் மனமோ சம்சாரத்தில் உழன்றுகொண்டிருக்கிறது; ஆசைகளால் சூழப்பட்டிருக்கிறது. ஆகையால் தங்கள் உபதேசம் எனக்குப் பலன் தராது!"

யோகியார் 'கலகல'வென்று சிரித்தார்.

"குழந்தாய்! அவசரப்பட்டு முடிவுக்கு வந்துவிடாதே! நீ யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாய் என்பதையே மறந்துவிட்டாய். ஊரிலுள்ள எத்தனையோ மனிதர்கள் இங்கு வருகிறார்கள், எனது உபதேசங்களைக் கேட்கிறார்கள், போகிறார்கள். ஆனால் அவர்களுக்கு எனது சக்தியின் மகிமை தெரியாது. நீ விஷய சுகத்தை விரும்புகிறாய். ஆத்திரப்படுகிறாய், அதனால் துக்கத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறாய். நான் யோகி, ஆனந்தஸ்வரூபியாக இருக்கிறேன். இன்னும் சில தினங்களில் நீயும் சுகம் பெறுவாய், உனக்குச் சந்தோஷமும் உண்டாகும். உன்னிடம் புத்தியிருக்கிறது, தைரியமும் பெற்றிருக்கிறாய். உன்போன்ற பெண்கள் எப்பொழுதாவது ஒரு தடவைதான் தோன்றுகிறார்கள். முடியாத காரியங்களையும் உன்னால் சாதிக்கமுடியும்."

இவ்வாறு மகாயோகி கூறியபொழுது அவரது வார்த்தையின் வேகம் அதிகரித்தது. குரலிலும் தடிப்பு ஏற்பட்டது. கண்கள் ஆடாமல் அசையாமல் சுகுணாவின்மீது நிலைகுத்தி நின்றன.

சுகுணா, முன்போலவே ஒருவித குழப்பத்திற்கு ஆளானாள். அவளுடைய அறிவு மயங்கியது போலிருந்தது. தலைசுற்ற ஆரம்பித்தது. அவள் மனதில் மகாயோகியின் உருவம் ஆழமாகப் பதிந்தது. அகில உலகமும் அவருடைய கண்ணிற்குள் காட்சியளிப்பதுபோலத் தோன்றிற்று.

அவருடைய பார்வையின் அழுத்தத்தை அவளால் தாங்கமுடியவில்லை. கண்கள் இரண்டையும் இறுக மூடிக்கொண்டு சிறிதுநேரம் அவள் உணர்விழந்து அமர்ந்திருந்தாள். அவளுடைய காதுகளில் மகாயோகியின் சாந்தமான கேள்வி ஒலித்தது. அவள் உணர்விற்கு வந்தாள்.

"உன்னோடு யாரேனும் வந்திருக்கிறார்களா?" யோகியார் கேட்டார்.

சுகுணா கண்ணைத் திறந்து பார்த்தாள். யோகி, இருந்த இடத்தில் அப்படியே இருந்தார்.

"காரைக்குறிச்சி மலையப்பரும், கர்ணம் கந்தசாமி பிள்ளையும் வந்திருக்கிறார்கள்" என்றாள் சுகுணா.

"நம்பிசாமி!"

"சாமி!" என்று குரல் கொடுத்துவிட்டு, வாசலில் நின்றிருந்த நம்பிசாமி கதவைத் திறந்தான்.

"மலையப்பரையும் அவரது நண்பரையும் இங்கே அனுப்பு."

உடனே இருவரும் உள்ளே சென்று மகாயோகியாரைச் சாஷ்டாங்கமாக வணங்கினர்.

"மலையப்பா! இந்த அம்மணியின் சோகக் கதையை யாம் கேட்டோம். இவள் இங்கேயே இருக்கட்டும். விரைவில் இவளது துன்பங்கள் நீக்கப்படும். உம், நம்பிசாமி! இந்த அம்மாவைப் பக்கத்து அறைக்குக் கூட்டிச் சென்று உட்கார வை" என்றார் மகாயோகி.

எல்லோரும் குனிந்து அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டனர். யோகியார் ஆசீர்வதித்ததும் அவர்கள் வெளியே சென்றனர்.

"சுகுணா! நான் என்ன சொன்னேன்? மகான், மகான்தான்! உனக்கு ஏதாவது தேவைப்பட்டால் எனக்குச் சொல்லி அனுப்பு. இங்கு ஒரு குறைவும் உனக்கு ஏற்படாது. ஆனால்......" என்று நிறுத்தினார் மலையப்பர்.

அதற்குள் சுகுணா, "எனக்கு ஒன்றும் வேண்டாம். என் லீலாவை நீங்கள் நன்றாக வளர்க்க வேண்டும். இருபது வயதிற்கு முன்னால் அவளுக்கு விவாகம் செய்துவிடக்கூடாது. அவ்வளவுதான் நீங்கள் எனக்காகச் செய்யவேண்டியது" என்றாள்.

"சரியம்மா, உன் விருப்பப்படியே செய்கிறேன்."

கர்ணம் கந்தசாமிப் பிள்ளை, "ஒரு வேளை எதிர்பாராவிதமாக உனக்கு ஏதேனும் நேரிட்டால் என் வீட்டிற்கு வரலாம். என் வீடு இங்கு நடுத்தெருவில்தான் இருக்கிறது. 'கர்ணம் வீடு' என்று யாரைக் கேட்டாலும் சொல்வார்கள்" என்று கூறினர்.

"ரொம்பவும் நன்றி. அவசியப்பட்டால் தங்களைச் சந்திக்கிறேன். நான் தனியாகக் கிடந்து தவிக்கவேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கிறதே, என்ன செய்வது?" கண்ணீர் மல்கக் கூறினாள் சுகுணா.

"போய் வருகிறீர்களா?" மலையப்பரை அவசரப்படுத்தினார் நம்பிசாமி.

"சரி, போய் வாருங்கள்" என்று சொல்லி சுகுணா, அவர்களுக்கு வணக்கம் செலுத்திவிட்டு, பக்கத்திலிருந்த ஓர் அறைக்குச் சென்றாள்.

(தொடரும்)



# தாலிக் கயிறு

அல்லி

அன்று சனிக்கிழமை. ஸ்திரவார மாதலாலோ என்னவோ? அன்று தொடங்கின வேலையை தொடர்ந்தே செய்யும்படியாகி விட்டது. ஆபீஸ் போவதற்காக மூன்றாம் நம்பர் பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றான். அப்போது ஆபீஸ் நேரமில்லாததால், ஸ்டாண்டில் அதிக கூட்டமில்லை. அப்போது பஸ் ஸ்டாண்டை நோக்கி ஒரு பெண் வந்துகொண்டிருந்தாள். அவளுக்குச் சுமார் பதினேழு, பதினெட்டு வயதிருக்கும். ஐந்தடி உயரம். உயரத்திற்கேற்ற பருமன். தந்தத்தில் கடைந்தெடுத்தாற்போன்ற அழகிய அவயவங்கள். அவள் அழகிலேயே லயித்திருந்தான் பாஸ்கரன். அவனுக்குச் சற்று தள்ளி வந்து நின்றாள் அவள். பஸ் வந்ததறியாது அவளையே கவனித்துக்கொண்டிருந்ததால், ஒரு மூன்றாம் நம்பரைத் தவறவிட நேர்ந்தது. அடுத்த பஸ் ஏறி ஆபீஸ் சென்றான்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாதலால் அந்த பஸ் அழகியைப் பார்க்க முடியாதே என்ற ஏக்கமும் அவனுக்கு ஏற்பட்டது. திங்கட்கிழமை பதினொரு மணிக்குப் போகவேண்டிய ஆபீஸிற்குப் பத்து மணிக்கே பஸ் ஸ்டாண்டில் வந்து காத்திருந்தான். பத்தரை ஆயிற்று. நீலநிற ஜார்ஜட் புடவைக்கு ஏற்ற மஞ்சள் நிற சோளியணிந்து அதே அழகி அவனை நோக்கி அன்னநடை போல நடந்துவந்தாள், இன்று எப்படியும் அவள் ஏறும் பஸ்ஸிலேயே ஏறி அவள் எங்கு இறங்குகிறாள் என்று கவனிக்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான் பாஸ்கரன். அதன்படியே அவளுடனேயே பஸ்ஸில் ஏறி மௌண்ட்ரோடிலுள்ள தையல் வகுப்பில் அவள் இறங்குவதை கவனித்தான். மாலையில் வீடு திரும்பும்போது அதே தையல் பள்ளிக்கூடத்திலிருந்து அந்த அழகி வருகிறாளா என்று பாஸ்கரனின் கண்கள் துழாவின. பள்ளிக்கூடம் காலியாக இருந்தது.

பஸ் ஸ்நேகமும், ரயில் ஸ்நேகமும் நிரந்தரமல்ல என்று தோன்றினாலும், அவன் தினமும் அவளை எதிர்பார்த்து பஸ் ஸ்டாண்டில் காத்திருப்பது வழக்கமாகிவிட்டது. அவன் எதிர்பார்த்த நேரத்தில் அவளும், வண்ண வண்ண சேலை உடுத்திக் காட்சி தந்த அழகு அவனை கிறுகிறுக்கச் செய்தது. பாஸ்கரன் நன்றாக சித்திரமும் வரைவானாதலால், அங்கேயே அவளைப் பார்த்து வரைந்தான். புருவம் என்ற வில்லில் அவளது அழகிய பெரிய விழிகளான மாரன் அம்பால் அவன் மேல் எய்தால் அவன் அதற்கு இரையாவதில் என்ன ஆச்சரியம்?

நாளாக ஆக அவளுடன் பேச சந்தர்ப்பம் கிடைக்காதா என்றுகூட ஏங்கத் தொடங்கியது பாஸ்கரனின் உள்ளம். தானாகவும் வலிய பேசவும் முயற்சித்தான். ஒருநாள் அந்தப் பெண் பக்கத்திலிருந்த பெண்ணிடம் "மணி என்ன?" என்று கேட்டபோது, தன் கைகடிகாரத்தைப் பார்த்து "பத்தரை" என்றான் அவன். அவன்மீது தன் கயல் விழிகளை வீசினாள். அப்பா! அந்தப் பார்வைக்கே அப்படிப்பட்ட மின்சார சக்தியுண்டா? இப்படியே ஒரு மாதம் ஓடியது.

அன்று ஒருநாள் பத்தரை மணியாகிவிட்டதே இன்னும் அவள் வரவில்லையே என்று அவன் மனம் தவித்தது. பத்தேமுக்காலுக்கு அவள் வந்தாள். இன்று எப்படியாவது அவளுடன் ஒரு வார்த்தையாவது பேசிவிடுவது என்று தொண்டையைக் கனைத்தபோது பாஸ்கரனின் ஒரு பழய நண்பன் நந்திபோல் குறுக்கே வந்து அவனைக் குசலம் விசாரிக்க ஆரம்பித்தான். அவனுடனாவது ஏதாவது ஜாடையாகப் பேசி அவளுடைய கருத்தை உணரவேண்டும் என்பதற்காக "டேய் மணமகன் தேவை என்ற சினிமா பார்த்தாயா?" என்று கேட்டு வைத்தானே தவிர அதற்கு பதிலைப்பற்றி அவன் கேட்கத் தயாராக இல்லை. அதேபோல வார்த்தைகளை அவள் எதிர்பார்த்தவள்போல் பாஸ்கரனின் காதில் விழும்படி அவளும், "மனம்போல மாங்கல்யம் என்ற படத்தில் ஒரு பாட்டு வருகிறதே அது தெரியுமோ? உனக்கு?" என்று யாரோ ஒருத்தியை கேட்டுக்கொண்டிருந்தாள். அது பாஸ்கரனுக்காகவே சொல்லப்பட்ட வார்த்தை என்பதை அவனால் ஊகிக்க அதிக நேரமாகவில்லை. அந்தப் புளகாங்கிதத்தில், அவன் உடலும், உள்ளமும், எங்கோ பறப்பதுபோல் உணர்ந்தான்.

அந்த ஆனந்தத்திலேயே ஆபீஸிலும், எந்த வேலையிலும் மனம் ஈடுபடாமல், பொழுதை எப்படியோ கழித்தான். மாலை சரியாக ஐந்து மணிக்கு வீடு திரும்பிய பாஸ்கரன் தான் வரைந்த அவள் படத்தை எடுத்துப் பார்த்துவிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டான். வயதான அவன் தாயார் காப்பியை அவன் கையில் கொடுத்துவிட்டு "ஏண்டாப்பா, நீ இன்னும் எத்தனை நாளைக்கு பிரும்மச்சாரியாக இருக்கப்போவதாக உத்தேசம்? என்னால் சமையல் செய்து

போடக்கூட தள்ளவில்லே. நீ என்னடாவென்றால் கவனிக்கக்கூட மாட்டேன் என்கிறாய். மாமாவும் அந்த ஜாதகத்தைப் பற்றி எழுதச் சொன்னார். பெண் பிடித்ததானால் முடித்து வைக்கிறாராம்'' என்று ஒரே மூச்சில் பொறிந்து கொட்டினாள்.

"என்ன ஏம்மா தொந்தரவு படுத்துகிறே? கல்யாணம் பண்ணிக்கிணம்னு தோணித்துன்னா அவாளவாளே பண்ணிக்கிறா. மாமா என்ன பண்ணி வைக்கிறது?'' என்ற பாஸ்கரனின் பதிலே கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்த அவன் தங்கை தேவகுஞ்சரி "அப்படியானால் நீயே பார்த்து கல்யாணம் பண்ணிக்க உத்தே சித்திருக்கிறாயா? பெண் யார்? மன்னியை 'செலக்ட்' பண்ணுவதில் எனக்கும் ஒரு 'ஓட்' உண்டல்லவா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"எப்படியோ போங்கள்; உங்கள் கொனஷ்டையும் குதர்க்கமும் யாருக்குப் பிடிக்கிறது? அண்ணனும் தங்கையும் பார்த்து கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள். இந்தக் காலத்துப் பசங்களுக்கே பெரியவர்களேக் கேட்டுசெய்யணும் என்ற மரியாதையே கிடையாது'' என்று விரக்தியுடன் உள்ளே சென்றாள் அமிருதம்மாள்.

"அம்மா, உன்னே கேட்காமல் நாங்கள் ஒன்றும் செய்யமாட்டோம் அம்மா. அதைச் சொல்லத் தான் நான் வந்தேன். அதற்குள் கோபித்துக் கொள்கிறாயே" என்று சொன்ன மகளே நோக்கி வந்தாள் அம்மா.

"நான் தினம் டைப் இன்ஸ்டிடியூடிவிருந்து வரும்போது ஒரு பெண் என்னுடனேயே வருகிறாள் பெரிய குளம் வரை. ரொம்ப அழகாய் இருக்கிறாள், சாட்டை போன்ற தலே பின்னல். அவளே பார்த்தவுடன் இவள் எனக்கு மன்னியாக வாய்க்க மாட்டாளா என்றுதான் நினைத்துக் கொண்டேன்."

"எப்படியோ போங்கள். நீங்களே பெரியவர்கள் ஆகிவிட்டீர்கள். நாலு விஷயமும் நன்றாகத் தெரியும். எங்கேயாவது நன்றாக இருந்தால் நானா வேண்டாம் என்கிறேன்? எந்தப் பெண் கழுத்திலேயாவது மூணு முடிச்சைப் போட்டு இவள் தான் அம்மா உன் நாட்டுப் பெண் என்றால் என் பொறுப்புக்களே அவளிடம் விட்டுவிட்டு விச்ராந்தியாக இருப்பேன். அதுதான் நான் கேட்கிறது."

"மூன்று முடிச்சாவது முப்பது முடிச்சாவது சுத்த நான்சென்ஸ்" என்ற பாஸ்கரனே பார்த்து சிரித்த தேவகுஞ்சரி "மூன்று முடுச்சு என்று அம்மா தாலியைச் சொல்கிறாள்'' என்று விவரித்தாள்.

"தெரியும், நானும் அதைத்தான் சொல்கிறேன். நாய்க்குப் பட்டை கட்டி எஜமானர் கையில் பிடித்திருப்பது போல் கழுத்தில் என்ன கயிறு கட்டுவது? முன்காலத்தில் இங்கிலாந்தில் நீக்ரோக்களே அடிமைகளாக விற்று விடுவார்களாம். இங்கிலீஷ்காரர்கள் அவர்கள் கழுத்தில் ஒரு இரும்பு வளையத்தை மாட்டி அதில் ஒரு பட்டையில் இவன் இன்னாரின் அடிமை என்று குறிப்பும் தொங்கவிடுவார்களாம். அந்த அடிமைகளேப் பலவாறாக துன்புறுத்தி, போதிய ஆகாரமும் இல்லாமல் அடிப்பார்களாம். அவர்கள் கொடுமை தாங்காது அடிமைகள் ஓடிவிட்டால், அவர்களது கழுத்துப்பட்டையைப் பார்த்து உரியவர்களிடம் சேர்த்து விடுவார்களாம் மற்றவர்கள். அதே மாதிரி அடிமை போன்றதுதான் தற்கால கல்யாணம். இரும்பு பட்டைக்கு பதில் சிறிது தங்கத்தை வைத்து கட்டியிருக்கிறார்கள். இந்த கயிறு புனிதமானது என்று சாஸ்திரம் என்ற பெயரில் ஏமாற்றுவது; எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லே'' என்று பெரிய பிரசங்கம் செய்தான் பாஸ்கரன்.

"அப்படியானால் கல்யாணமே பண்ணிக் கொள்ளக்கூடாது என்கிறாயா அண்ணா?" என்றாள் குஞ்சரி.

"அப்படிச் சொல்லவில்லே நான். பெண்களுக்குக் கல்யாணம் இன்றியமையாதது என்று அவளே அடிமைப் படுத்தி மஞ்சள் கயிறால் பிணைக்கக் கூடாது என்றுதான் சொல்கிறேன். பரஸ்பரம் அன்பு கொண்ட ஆணும் பெண்ணும் மனம் ஒப்பி நாங்கள் கணவன் மனைவியாகி எங்கள் குடும்பத்தை தொடங்குகிறோம். யாரும் யாருக்கும் அடிமையல்ல.' என்று அறிவித்து அந்த அறிவிப்பிற்கு சாட்சியாக நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சாப்பாடு போடலாம். பொதுவாக கணவன் இல்லாவிட்டால் நாம் வாழவே முடியாது. அவன்தான் நமக்கு உணவும், உடையும் கொடுத்து நிழல் தருபவன் என்ற அடிமை மனப்பான்மை எந்தப் பெண்ணிற்கும் இருக்கக்கூடாது. அப்படியிருப்பதற்கு முதல்படியாக மஞ்சள் கயிறு கட்டும் வழக்கத்தை ஒழிக்கவேண்டும்'' என்றான்.

"சரி அண்ணா! உனக்குப் பிடித்த பெண்ணே எனக்குக் காட்டு. அவளிடம் நீ நேரில் பேசி சம்மதம் பெறும் வழக்கம் கதையளவில் தான் வந்திருக்கிறது. ஆதலால் நானே நேரில் அவளே சந்தித்து உன் எண்ணம், உன் கல்யாணமுறை எல்லாவற்றையும் விளக்கிச் சம்மதமா என்று கேட்கிறேன். அவளும் சம்மதித்துவிட்டால் நீ சொல்லுகிறமாதிரியே மஞ்சள் கயிறு இல்லாத கல்யாணம் செய்துகொள்ள நான் உதவுகிறேன்'' என்றாள் குஞ்சரி மனப்பூர்வமாக.

அவளேத் தனியாக அழைத்து பாஸ்கரன் "குஞ்சரி, நீ பார்த்த பெண் இருக்கட்டும். நான் ஒரு மாதமாக ஒரு பெண்ணே பஸ் ஸ்டாண்டில் சந்திக்கிறேன். அழகு என்ற சொல்லுக்கு அவளேப் பார்த்துத்தான் அர்த்தம் சொல்ல வேண்டும். ப்ரம்மா ஒவ்வொரு அங்கத்தைப் பார்த்துப் பார்த்து வெகு திறமையுடன் சிருஷ்டித்திருக்கிறான். இன்று அவளிடம் பேசி

சம்மதம் பெற்று விட்டேன்." என்று சொல்லி நிறுத்தினான்.

"ஏது அண்ணா? உன் காதல் அவ்வளவு தூரம் முன்னேறி விட்டதா? என்னிடம் சொல்லவேயில்லையே?" என்றாள் குறும்புக்காரி குஞ்சரி.

"முழுக்கக் கேளு. நான் அவளிடம் நேரில் பேசவில்லை. ஜாடையாக என் நண்பனுடன் பேசுவதுபோல் "மணமகன் தேவை பார்த்தாயா? என்றேன். அதற்கு பதிலாக அவளும் "மனம்போல மாங்கல்யம்என்று ஏதோ பதில் சொன்னாள். அப்படியானால் அதற்கு என்ன அர்த்தம் நீதான்சொல்லேன் குஞ்சரி" என்றான் உற்சாகத்துடன்.

"நீதான் மஞ்சள் கயிறு கட்டக்கூடாது என்கிறாயே. அவளுக்கு அதே பிடித்திருக்கும் போலிருக்கே. நான் அவளைப் பார்த்துப் பேசிப்பார்க்கிறேன்" என்றாள் சிரித்துக்கொண்டே.

"அதென்ன சொல்வாயோ குஞ்சரி. அவளிடம் என் மனம் வெகுவாக ஈடுபட்டுவிட்டது. அவள் இல்லாமல் நான் பிரம்மச்சாரியாகத்தான் வாழ நேரிடும். அவளை என் மனைவியாக்குவதில் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்" என்று தன் மனதை திறந்துகாண்பித்தான் பாஸ்கரன்.



மறுநாள் குஞ்சரி ஸ்வெட்டர் நூல் வாங்கும் சாக்கில் அண்ணனுடன் பஸ் ஸ்டாண்டிற்கு வந்தாள். பத்தரைமணிப் பெண் பதுமை போல் வந்தாள். பாஸ்கரன் அவளை சுட்டிக் காட்டினான் குஞ்சரிக்கு ஜாடையாக. அவளும் அண்ணனருகில் வந்து "நானும் இவளைத்தான் தினமும் பெரியகுளத்தருகில் பார்க்கிறேன். ஆனால்..." அவள் முடிக்கவில்லை. அதற்குள் அவளும், அவனும் ஏறியவுடன் பஸ்கிளம்பிவிட்டது.

குஞ்சரியின் மனம் குழம்பியது. இத்தனை நாள் அவளைக் கவனித்த அண்ணா இதை கவனிக்கவில்லையே; மாலையில் எப்படி பெண்; என்று கேட்டாள் அவள் என்ன பதில் சொல்லுவது. உண்மையைச் சொன்னால் அவன் மனம் எவ்வாறு புண்படும்? அவளில்லாமல் தான் பிரும்மச்சாரியாகத்தான் இருக்க நேரிடும் என்றானே? ஐயோ அண்ணா! மாமா சொன்ன பெண்ணையாவது கல்யாணம் செய்துகொள்வானா? அம்மாவும் பாவம் அண்ணா! கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்கிறானே என்று எவ்வளவு கவலைப்படுகிறாள். இந்த விஷயத்தை மட்டும் அண்ணாவிடமிருந்து மறைக்கமுடியாதே!

மாலையில் பாஸ்கரன் ஆபீஸிலிருந்து வந்தவுடன் 'குஞ்சரி' என்று அழைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான். "எப்படி இருக்கிறாள் உன் மன்னி?" என்றான் எடுத்த எடுப்பிலேயே உற்சாகத்துடன்.

"அண்ணா...வந்து...அவள்" அவளுக்கு எப்படி சொல்லுவதென்றே தெரியவில்லை,

"இந்த பெண்களுக்கு சில கெட்ட குணங்கள் ஒன்று, ஒரு விஷயத்தை சுற்றி வளைக்காமல் சொல்லத்தெரியாது. இரண்டாவது ஒரு பெண் அழகி என்று மற்றொரு பெண் வாயிலிருந்து வராது" என்று சொல்லி சிரித்தான்.

"அதில்லை அண்ணா. அவள் மணமானவள்" என்று சொல்லி ஏதோ ஒரு புத்தகம் புரட்டும் பாவனையில் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்' "மணமானவளா?" உடைகளைக் களையாத பூட்ஸ் கழற்றிய காலின் ஸாக்ஸுகளுடன் பின்னால் கைகளைக் கட்டிக்கொண்டு மேலும் கீழும் நடக்க ஆரம்பித்தான். பிறகு ஈஸிசேரில் சாய்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான். அந்தவார்த்தைகள் அவனை சிந்தனையில் ஆழ்த்தும்படி அவன் தன் மனத்தை அவளிடம் அவ்வளவுதூரம் பறிகொடுத்திருப்பான் என்று குஞ்சரி எதிர்பார்க்கவில்லை. அன்றிரவு அவன் சரியாகவும் சாப்பிடவில்லை. யாருடனும் சரியாகவும் பேசவுமில்லை.

அன்றிலிருந்து அவன் இயந்திரம்போல் இயங்கினான். பாவம்! அவன் மனம் பஸ் ஸ்டாண்டு சுந்தரியிடம் ஈடுபட்டுவிட்டது. அவள் மணமானவள் என்று அவனால் நம்பவும் முடியவில்லை. நம்பாமலிருப்பதற்கு குஞ்சரியும் பொய் சொல்லக்கூடியவள் இல்லையே! உண்மையாகவே அவள் மணமானவளா என்றறிய பாஸ்கரன் அவளிடம் பெயர், இருப்பிடம் எதுவும் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லையே, யாரிடம் போய் என்னவென்று கேட்பான். அவன் கட்டிய கோட்டை ஊமை கண்ட கனவாயிற்று!

அடுத்த மாதம் திடீரென்று பாஸ்கரன் "அம்மா நான் இன்று டெல்லிக்குப் போகப்போகிறேன். அங்கிருந்து வட இந்திய சுற்றுப்பிரயாணம் போகப்போகிறேன். எனக்குக் கடிதம் எழுத வேண்டுமானால், டெல்லி அட்ரஸுக்கு எழுதுங்கள்" என்றான்.

"ஏண்டாப்பா பாஸ்கரா, கல்யாணத்தைப் பண்ணிக்கொண்டுவிட்டாயானால் ஒரு வழியாக..." என்ற அம்மாவின் முடிக்கக்கூட விடாமல் "எனக்குக் கல்யாணம் வேண்டாமம்மா. நான் பிரும்மச்சாரியாகவே இருக்கப் போகிறேன்" என்று முடித்துவிட்டான் பாஸ்கரன். அவனுக்கு கல்யாணம் என்ற வார்த்தையைக் கேட்டாலே ஆத்திரம் வந்தது. அன்று அவன் அந்த சந்தர்ப்பத்தில் பொருத்தமாக 'மணம்போல மாங்கல்யம்' என்றாளே, அதற்கு வேறு என்ன அர்த்தம் இருக்கமுடியும்? மணமானவள் அப்படிப் பேசுவாளா? ஒருவேளை இரண்டு மூன்று நாட்கள் முன்தான் திருமணம் நடந்திருக்குமோ? அவனால் எந்த முடிவிற்கும் வரமுடியவில்லை. எந்த மஞ்சள் கயிறு கட்டும் சம்பிரதாயம் கூடாது என்று எதிர்த்தானோ, அதே மஞ்சள் கயிறு கட்டி, அந்த அழகியும் பாஸ்கரனை அழ வைத்துவிட்டாள்.

வட இந்தியாவில் தான் போகும் இடங்களிலெல்லாம் மஞ்சள் கயிறை எதிர்த்துப் பேசி, பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்பதற்கு தான் உழைப்பதாக நினைத்துத் தன்னைத் தன்னைத்தானே தட்டிக்கொடுத்துகொண்டான். அவனுக்கு நிறைய சொத்திருந்ததால் அவன் சம்பாதித்துதான் குடும்பம் நடக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. இரண்டுவருஷம் முன்பு இறந்துவிட்ட அவன் தந்தை, பிள்ளைக்கும், பெண்ணிற்கும் தனித்தனியாக சொத்தைப் பிரித்துக்கொடுத்ததால் பாஸ்கரனும் பணத்தை வாரியிறைத்து செலவு செய்தும், யாரும் அடக்குவாரின்றிருந்தான். பேருக்குத்தான் உத்தியோகம் பார்த்தான்; அதையும் கால் கடுதாசியில் விட்டுவிட்டான். அவன் மணம் செய்துகொண்டு தங்கைக்கு அவனே திருமணம் செய்துவைப்பான் என்று நம்பியிருந்த அவன் தாய்க்கு அவன் முதலுக்கே மோசம் செய்ததனால் அண்ணனிடம் அடைக்கலம் புகவேண்டியிருந்தது. இதையொன்றும் பொருட்படுத்தாத பாஸ்கரன் ஒவ்வொரு ஊரிலும் தன் பணத்தைக்கொண்டு தன் 'மஞ்சள் கயிறு கண்டன பிரசாரத்திற்கு ஆட்கள் சேகரித்துத் தாலி கட்டும் பழக்கத்தை ஒழிக்க பிரசங்கங்கள் செய்தான். ஊருக்கு ஊர் கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தினான். பணம் என்ற கயிற்றைக்கொண்டு ஆட்களை தன் இச்சைப்படி அவர்கள் தலையை ஆட்டுவித்தான். இரண்டொரு மஞ்சட் கயிறு இல்லாத கல்யாணமும் செய்துவித்தான். இந்த வேலை மும்முரத்தில் அந்த பஸ் ஸ்டாண்டு அழகியை சற்று மறந்தான் என்றும் சொல்லலாம். காலம் என்ற செடியில் வருஷம் என்ற நாலைந்து மலர்கள் உதிர்ந்தன.

பாஸ்கரனின் அம்மாவிடமிருந்து அவனை வரும்படி கடிதம் வந்திருந்தது. அதில் அவன் தானும் கல்யாணம் செய்துகொள்ளாததுடன் தங்கையைப்பற்றி கவனிக்காததாலும், தான் அந்தப் பொறுப்பைத் தன் அண்ணனிடமே விட்டு, அதன்படி அவர் மகனுக்கே தேவகுஞ்சரியை திருமணம் செய்ய உத்தேசித்திருப்பதாகவும், அதற்கு அவன் வராவிட்டால் நன்றாகயிருக்காததால் கட்டாயம் வருவான் என்று தான் நம்புவதாகவும்உருக்கமாக எழுதியிருந்தாள் அவனுக்கு அம்மாவிடமோ, தங்கையிடமோ கோபமில்லையாதலால், கல்யாணத்திற்கு முதல் தினம் மதராஸ் போவதென்று தீர்மானித்துக் கொண்டு, பதிலும் எழுதிப் போட்டுவிட்டான். கல்யாணத்திலும் தான் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளாமல், ஏதோ வீட்டு மனிதன் என்ற பெயருடன் ஒதுங்கியே இருந்தான்.

ஜானுவாசத்திற்காக எல்லோரும் கோவிலுக்குச் சென்றனர். அப்போது தேவகுஞ்சரியின் நாத்தனார் அதாவது அவள் மாமா பெண் சாந்தா ஒரு பெண்ணை இழுத்துவந்து "குஞ்சரி இவள்தான் என் சிநேகிதி நளினி. இவள் என்னுடன் பள்ளியில்

தையல் உபாத்தியாயினியாக இருக்கிறாள்" என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

அவளை தேவகுஞ்சரிக்கு எங்கோ பார்த்ததாக ஞாபகம் வந்தது. என்ன பேசுவது என்று தெரியாமல் "எத்தனை வருஷங்களாகத் தையல் வேலை செய்கிறீர்கள்? எந்தப் பள்ளிக்கூடத்தில் தையல் படித்தீர்கள்?" என்று ஏதோ கேட்டு வைத்தாள். அவளும், நாலைந்து வருஷங்களுக்கு முன் மௌண்ட் ரோடிலுள்ள உஷா' தையல் பள்ளியில் படித்துத் தேறினேன் என்றும் இன்னும் என்னென்னமோ சொல்லிக்கொண்டிருந்தாள். குஞ்சரிக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. அவள்தான் பஸ் ஸ்டாண்டு அழகி. அவளைக் கண்டதும் ஏனோ இப்போது குஞ்சரிக்குக் கோபம் வந்தது. "உங்காத்துக்காரருக்கு இங்கேதான் வேலையா?" என்று கேட்டு வைத்தாள். "இல்லை. இன்னும் எனக்குக் கல்யாணமாகவில்லை" என்றாள் நளினி அசட்டுச் சிரிப்புடன். பிறகு தொடர்ந்து "நானும் தையல் வகுப்பில் படிக்கும்போது உங்களை அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஒருநாள் நீங்கள்கூட ஒரு ஆடவருடன் பஸ் ஸ்டாண்டிற்கு வந்தீர்கள். நான்கூட உங்களை மணமானவர் என்று நினைத்தேன்" என்றாள் பட்டென்று.

எந்த ஆடவருடன் அவள் பஸ் ஸ்டாண்டிற்கு வந்தாள் என்று அவள் யோசித்தாள். நாலு வருஷத்திற்கு முன் இவளை பார்க்கத்தான் அண்ணா அழைத்துச் சென்றான். "ஆம்! அவர்தான் என் அண்ணா" என்ற குஞ்சரியை ஆச்சரியத்துடன் பார்த்த நளினி "அண்ணாவா? நான் ஏதோ தவறாக நினைத்து விட்டேன். மன்னித்து விடுங்கள்" என்று குழறிவிட்டு விடைபெற்றுச் சென்றாள்.

அடுத்த நாளில் நளினியும், குஞ்சரியும் வெகு அன்யோன்யமாகி விட்டனர். நளினியும் சாந்தாவும் சேர்ந்து குஞ்சரியை கேலி செய்து அமர்க்களப் படுத்தினர். குஞ்சரிக்கு நளினியை மிகவும் பிடித்துவிட்டது. அவளிடம் அந்த 'மஞ்சள் கயிறு' மர்மத்தை கேட்டறிய சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பாஸ்கரனும், முன் போலிருந்தால் கல்யாணத்தில் ஓடியாடி வேலைகளுக்கிடையில் நளினியைக் கண்டு தெரிந்து கொண்டிருக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனால் அவன்தான் கல்யாணத்திற்கு வந்தவனாக' தூரவிலகியிருந்து விட்டானே! அத்துடன் இல்லாமல் மறுபடியும் வடஇந்தியா திரும்புவதிலேயே கண்ணாயிருந்தான். அவனை இன்னும் ஒரு வாரம் இருந்து விட்டு போகும்படி கேட்டுக் கொண்டாள் தேவகுஞ்சரி. வேண்டா வெறுப்பாய் சம்மதித்தான் பாஸ்கரன்.


நீண்ட அடர்ந்த கூந்தலுக்கு

**ராம்தீர்த் பிராம்மி எண்ணெயை உபயோகியுங்கள்**

ஸ்பெஷல் நெ. 1 (ரிஜிஸ்டர்ட்) ஆயுர்வேத முறை

கேசத்திற்கும், புத்திக்கும் சிறந்த நிகரற்ற டானிக்

மயிர் விழுதலை தடுப்பதற்கும்
புஷ்டியுள்ள கேசம் வளரவும்
இயல்பான கருமை
பெறுவதற்கும் உதவுகிறது



பொடுகு, ஞாபக சக்தி,
நல்ல தூக்கம் யாவற்றுக்கும்
எல்லா பருவத்திலும்
எல்லோருக்கும் பயன்படும்

பெரிய பாட்டில் ரூ. 4—0—0 சிறிய பாட்டில் ரூ. 2—0—0

தபால் செலவு தனி. வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.

ஆரோக்கியமாகவும், திடமாகவும் வாழ்வதற்கு யோகாஸனங்களை விவரித்திருக்கும் எங்கள் ஆஸன படத்தை வாங்கிப்பாருங்கள். ரூ. 2—50 அனுப்பினால் தபால் செலவின்றி அனுப்பப்படும். இந்த ஆஸனப் பயிற்சியை வீட்டிலேயே சுலபமாகச் செய்யலாம்.

**ஸ்ரீ ராம்தீர்த் யோகாச்ரமம்**

தாதர் (மத்திய ரயில்வே) பம்பாய்-14

போன்: 62899 தந்தி: "பிராணயாமம்" தாதர், பம்பாய்

அந்த ஒரு வாரத்திற்குள் நளினியை தனியாக அழைத்து மஞ்சள் கயிறு மர்மத்தையும், தன் அண்ணனை இந்த அலங்கோல நிலைக்கு கொண்டு வந்தற்கு நீதான் காரணம் என்றும் அவளை ஒரு மூச்சு திட்ட திட்டமிட்டிருந்தாள். அதன் படியே அவளை தனியாக தன்னறைக்கு அழைத்து தன் சந்தேகத்தை தெரிவித்தாள். "நளினி, உன்னை நாலு வருஷத்திற்கு முன் பார்த்த என் அண்ணா உன்னையே மணம் செய்து கொள்ளப்போவதாக சொல்லி என்னையும் அழைத்து உன்னை காட்டினான். அதற்கு முன் நீயும் அவன் எண்ணப்படி உன் பேச்சிற் கிடையில் அவனை மணக்க விரும்புவதாக தெரிவித்தாயாம். உன்னை எனக்கு அண்ணா காட்டின போது உன் கழுத்தில் மஞ்சள் கயிறு இருந்தது. அதைப் பார்த்து நான் உனக்கு கல்யாணம் ஆகிவிட்டதென்று அண்ணாவிடமும் சொன்னேன். அதிலிருந்து அண்ணா மன முடைந்து வடஇந்தியாவில் நிம்மதியின்றி பயித்தியம் பிடித்தவன்போல் திரிந்துகொண்டிருக்கிறான். அதற்கு எல்லாம் நீதான் பொறுப்பாளி. நீ என்ன சொல்கிறாய்?" என்றாள் அவளைப் பார்த்து கொஞ்சமும் நாகரீகமற்ற முறையில்.

"அடடா, அப்போது என் கழுத்திலிருந்தது காரடையான் நோன்பு சரடு' அந்தச் சரடு இவ்வளவு தூரம் நம் வாழ்க்கையை குழப்பும் என்று நான் நினைக்கவில்லை. என்னை குற்றம் சாட்டும் நீயும் அதே சமயத்தில் அணிந்திருந்த காரடையான் நோன்புச் சரட்டினால் நானும் உன்னை தப்பாக நினைத்து என் வாழ்வை வேறு பாதையில் திருப்பிக்கொண்டேன் என்பது தெரிந்தால் நீ இப்படி என்னை குற்றம் சாட்டமாட்டாய்?" என்று அந்நாள் நிகழ்ச்சியை அவள் மனத்திரையிலிருந்து குஞ்சரியின் மனத்திரையில் காட்டினாள்.

நளினி தையல் வகுப்புக்குப் போகும்போது பாஸ்கரனை சந்திக்க நேர்ந்தது. தினமும் பார்க்க நேர்ந்ததாலோ என்னமோ அவனிடம் அவளுக்கு பற்றுதல் ஏற்பட்டு காணாத நாட்களில் ஏங்கவும் செய்தது, (அதுதான் காதலோ? யார் சொல்வது) பஸ் ஸ்டாண்டிற்கு அருகிலேயே அவள் வீடு இருப்பதால் அவர் வந்துவிட்டார் என்பதை தெரிந்துகொண்டுதான் பஸ் ஸ்டாண்டிற்கு வருவாள். அதனால் அவனுக்கு 'பஸ்காரர்' என்று மானஸீகமாக பெயருமிட்டிருந்தாள். அன்றுதான் காரடையான் நோன்பு. கழுத்தில் மஞ்சள் கயிற்றுடன் தையல் வகுப்பிற்குப் போனதும், மற்ற மாணவிகள் 'கல்யாணம் செய்துகொண்டு விட்டாயா? எங்களுக்குச் சொல்லாமல், அவர்பெயரென்ன? என்ன வேலை?' என்று கேலிசெய்ய ஆரம்பித்தனர். எதற்கும் சளைக்காத நளினி, "ஓ! எனக்கு கலியாணமாகி விட்டதே! அவர் பெயர் (பஸ்காரர் என்பதை சொல்வதற்கு வெட்கப்பட்டு சற்று மாற்றி) பாஸ்கரன்" என்றாள். பாவம்! அவள் மனம் அவனிடம் அப்படி லயித்திருக்கிறது.

இடையில் தன் அண்ணனின் பெயரும் பாஸ்கரன் என்பதை ஞாபகப் படுத்தினாள் தேவகுஞ்சரி.

அடுத்த நாள் பாஸ்கரனுடன் தேவகுஞ்சரியை மஞ்சள் கயிறுடன் பார்த்த உடன் நளினி வேறு என்ன முடிவிற்கு வருவாள்? உடனே தன் வாழ்க்கை வண்டியை எப்படி செலுத்துவது என்று ஒரு தீர்மானத்துடன் அப்பாவிடம் பிடிவாதம் பிடித்து பிரம்மச்சாரிணி விரதத்தைப் பெற்று பள்ளிக்கூடத்தில் வேலையிலும் அமர்ந்தாள்.

எல்லாவற்றையும் சொல்லி முடித்த நளினி "இப்போது சொல், குஞ்சரி, யார்மேல் குற்றம்?" என்றாள். தங்கையிடம் ஊருக்குச் செல்வதற்கு முன் விடைபெற்று செல்ல வந்த பாஸ்கரன் இந்த சம்பாஷணையை முழுக்கக் கேட்டான்.

"யார்பேரிலும் குற்றம் இல்லை. இந்த மஞ்சள் கயிற்றினால் வந்த வினைதான். அதைப் பார்த்து தானே குஞ்சரி, நீ நளினியை மணமானவள் என்றாய்?" என்று கேட்ட பாஸ்கரனிடம் "உன் நளினிகூடத்தான் என் கழுத்து நோம்பு சரடைப் பார்த்து நான் உன் மனைவி என்று நினைத்தாளாம். ஆனால் அண்ணா இப்போது புதிதாக என் கழுத்தில் ஏறிய இந்த மஞ்சள் கயிறுதான் உங்கள் இருவரையும் ஒன்றுசேர்த்தது" என்று தன் மாங்கல்யத்தை எடுத்து பார்த்துக் கொண்டாள்.

அங்குவந்த அமிர்தம்மாள் "பழய கதை இருக்கட்டும். இப்போதுதான் நீங்கள் இருவரும் பார்த்து பெண் கிடைத்துவிட்டாளே! மாமாவிடம் சொல்லி ஏற்பாடு செய்யட்டுமா? இப்போதாவது தாலி கட்டுவாயா, மாட்டாயா?" என்று தயங்கியபடி கேட்டாள்.

"இல்லை! அண்ணா ரிஜிஸ்டர்மணம்தான் செய்து கொள்ளப்போகிறான்" என்றாள் குஞ்சரி குறும்பாக.

"எனக்காக இல்லாவிட்டாலும், மற்றவர்கள் என்னைப்போல இவள் இனிமேல் மணமாகாதவள் என்று நினைக்காதிருக்க வேண்டுமல்லவா! அதற்காகவாவது மஞ்சள் கயிறு கட்டத்தான் போகிறேன்" என்றான் பாஸ்கரன்.

"நளினி பாவம்! இனி அண்ணா உன் அடிமை" என்று நளினியைக் கேலி செய்தாள் குஞ்சரி. நளினி பாஸ்கரனை நிமிர்ந்து பார்த்துவிட்டு தலை குனிந்துகொண்டாள் வெட்கத்துடன்,



ஸ்திரீ ரத்தினங்கள்

# ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள்

ஜனகம்

பாரத நாட்டிலே சேவையிலும், பராக்ரமத்திலும், தியாகத்திலும், கற்பிலும் தர்ம சிந்தனையிலும், புத்தி நுட்பத்திலும், கீர்த்திபெற்ற மாதர்குல திலகங்கள் பலருண்டு. ராணி துர்க்காவதியின் வீரம், ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாயின் துணிவு, தமிழ்நாட்டு ராணி மங்கம்மாளின் அரசு முதலியன உலகத்தாரால் நன்கு மதிக்கப்பட்டன. இம்மாதிரி மாதர்குலதிலகங்களின் கோஷ்டியில் தேச சமூக சேவையில் முக்கிய ஸ்தாபனம் வகிப்பவர் சகோதரி R. S. சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்களாகும். பாரதப் பூங்காவில், தமிழ் தடாகத்திலே பூத்த சுப்புலக்ஷ்மி என்னும் புஷ்பத்தின் நறுமணம் நம்நாடெங்கும் 'கமகம' வென்று வீசிக்கொண்டிருக்கிறது.

ஐம்புலன்களையும் அடக்கித் தவம் புரிந்து முக்தி பெறுவது மகான்களாகிய ரிஷிகளாலேயே முடியும். சாமானிய மக்களால் முடியாது. ஆனால் இப்பேர்ப்பட்ட ரிஷிகளிலும் கூடப் பலர் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண்டார்களே ஒழியப் பிறரைக் கைகொடுத்து முன்னேற்ற முன் வந்தவர்கள் மிகச் சிலரே. தனக்கு வரும் கஷ்டங்களிலிருந்து நீந்திக் கரையேறுவது கஷ்டமானாலும் ஒவ்வொருவனும் எப்படியாவது தன்னைத் தான் காப்பாற்றிக் கொண்டு கரையேற முயலுவான். வெற்றியும் பெறுவான்! ஆனால் தனக்கு வந்திருக்கும் சுகமோ, துக்கமோ பிறருக்கு வந்தால், அவர் கதி என்ன என்று யோசிப்பது மனிதப் பண்பிலே இல்லை. தன்னல

மற்ற சேவைசெய்து, சமூகத்திற்காக உயிர் வாழ்வது என்பது மகாத்மா காந்தியடிகள் நமக்கு எடுத்துரைத்த உபதேசம். பிறர் கஷ்டத்தைக் கண்டு மனங் கலங்கி இவர்களுக்கு நாம் ஏதாவது செய்யவேண்டும் என்ற உறுதியைக்கொண்டு தனித்து நின்று செயலாற்றியவர் நமது சகோதரி சுப்புலக்ஷ்மிஅம்மாள்! இந்தத் தன்மையைத் தான் வேதங்கள் கர்மயோகமென்று கோஷிக்கின்றன!

## 50 வருடங்களுக்கு முன்

ஐம்பது வருஷங்களுக்கு முன்பாக நம் நாட்டிலே பெண்களின் நிலைமை எப்படி இருந்தது? அதிலும் விதவைகள் எப்படி நடத்தப்பட்டார்கள்? விதவை என்றால் அதில் பிரிவினையே கிடையாது. பால்வடியும் சின்னஞ் சிறு குழந்தையாக இருந்தாலும் சரி, கணவன் என்ற பதத்திற்கு அர்த்தமே தெரியாத குழந்தை முதல் கணவன் முகத்தையே பாராத பெண்வரை எல்லோரும் சமமே! விதவையாகி விட்டால் அப்பெண்கள் இருந்தும் இறந்தவருக்குச் சமமே! மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தை வீட்டினில் பெண்களிடம் காட்டி வந்த காலம் அது! அப்பேர்ப்பட்ட கட்டுப்பாடுகள் நிறைந்த நாளிலே தான், சுப்புலக்ஷ்மி அம்மாள் தன் பன்னிரண்டாம் வயதிலே வைதவ்யத்தை அடைந்தார். அதிர்ஷ்டவசமாக இவர் தாய் தந்தையர் அக்காலத்திலேயுள்ள கட்டுத் திட்டங்களை மீறித் துணிவாக இவருக்குக் கல்வி புகட்டினர்!

## சேவை! சேவை!!

குடும்ப வாழ்க்கை தான் பெண்களுக்கு வாழ்க்கை! அது இல்லையேல் அவர்கள் வாழவே முடியாது. ஒரு பெண் தனித்து உலகத்தில் வாழ முடியாது. கணவனின் ஆதிக்கத்திலோ, தகப்பனாரின் பாதுகாப்பிலோ தான் இருக்க முடியும். இவ்விருவரும் இல்லையேல் உடன் பிறந்தவர்களிடமோ, பந்துக்களிடமோ அடைக்கலம் புகவேண்டும் என்ற மனப்பான்மை வேரூன்றி இருந்தது. சமூகத்தின் இக்கொடுமைகள் இவர் மனதை உருக்க ஆரம்பித்தன. அறிவாளிகளாகிய தாய் தந்தையரைப் படைத்த நம் கதியே இப்படியிருந்தால் நம்மைவிட அபாக்கியவதிகளான நம் கோடிக்கணக்கான சகோதரிகளின் கதி எப்படியிருக்கும் என்று சுப்புலக்ஷ்மி சிந்திக்கலானார். ஒரு வழியுமின்றி பெண்கள் கஷ்டப்படும் சமூகக் கட்டுப்பாட்டைச் சீர்திருத்த வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு வேரூன்றியது. ஆங்கிலப் படிப்பும், கல்வியின் அபிவிருத்தியும் இந்த எண்ணத்தைப் பலப்படுத்தின. மேல் நாட்டிலிருந்து வந்திருக்கும் கன்யாஸ்திரீகள் தங்களைச் சேவைக்கென்று அர்ப்பணம் செய்துகொண்டு ஆயுள் பரியந்தம் பிறருக்கும், தம் மதத்திற்கும் சேவைபுரியும் விதம் சுப்புலக்ஷ்மியின் மனதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. ஏன் நம் மதத்திலும் இப்பேர்ப்பட்ட ஸ்தாபனங்கள் இருக்கக்கூடாது என்று தோன்றவே ஏழைமையடைந்து கதியற்றுக் கிடக்கும் தம்சகோதரிகளுக்கும், தம் மதமாகிய இந்து மதத்திற்கும் சேவைபுரிய தம்வாழ்நாளையே அர்ப்பணம் செய்யத் துணிந்தார்.

## விதவா ஆசிரமம்!

விதவைப் பெண்கள் கல்விமூலம் தன்னை தான் காப்பாற்றி கொள்வதல்லாமல், சமூகத்திற்குச் சேவை செய்யும்படியான தொண்டர்களாக மாற்ற முடியாதா என்று சுப்புலக்ஷ்மி அம்மாள் எண்ணமிட்டு, விதவைகளின் நிலையையும் உயர்த்தித் தொண்டாற்றும் வலிமையையும் உயர்த்த முன் வந்தார்.

சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட விதவா ஆசிரமம், இந்தத் துறையில் இந்தியா முழுவதற்கும் தலை சிறந்த ஸ்தாபனமாகும். இதில் தமிழ் நாட்டிற்கே ஒரு தனிப் பெருமை.

சகோதரி சுப்புலக்ஷ்மி படித்துப் பி. ஏ. பட்டம் பெற்றதுமே இஷ்டப்பட்டிருந்தால் பல பெரிய உத்தியோகங்கள் கிடைத்திருக்கும். ஆனால் தம் சகோதரிகள்பால் இவருக்கு இருந்த அன்பினால் அவைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ளாமல் 1908-ம் வருஷத்தில், சென்னையில் இப்பொழுது "ஐஸ் ஹவுஸ்" என்று அழைக்கப்படும் கட்டிடத்தில் செழித்து நிற்கும் விதவா ஆசிரமத்தை ஆரம்பித்தார். முதன்முதலில் இதில் பத்துப் பேர்களே சேர்ந்தார்கள். கஷ்டங்களில் அடிபட்டுத் தன்னிடம் வரும் பெண்களுக்கு அன்பையும், கல்வியையும் அள்ளி வீசினார். எல்லோரும் இவரைத் தங்கள் உடன்பிறந்த சகோதரியாகவே

# கணிதக் கருவியும் கையுமாக வருங்காலத்தைக் கணிப்பவர்

சோதிடரல்லர் — எமது விற்பனைத் துறை ஆராய்ச்சி நிபுணர்தான் இவர். வருங்காலத்தில் உங்கள் தேவைகள் எப்படியிருக்கும் என்பதை இவரது ஆராய்ச்சிகளின்மூலம், உற்பத்தியாளர்களாகிய நாங்கள் அறிந்து கொள்கிறோம்.

காலம் செல்லச் செல்ல உங்கள் தேவைகள் பெருகி வருகின்றன. சில பண்டங்களை நீங்கள் விரும்புகிறீர்கள், வேறு சிலவற்றை நீங்கள் விரும்புவதில்லை. வாழ்க்கை முறைகள் மாற மாற, உங்கள் ரசனையும் மாறுதலடைந்து வருகிறது. அவ்வப்போது உங்கள் தேவைகளையும் அபிப்பிராயங்களையும் நாங்கள் உணர்ந்து கொண்டால்தானே, உங்கள் விருப்பத்திற்கேற்ற உயர்தர சரக்குக்களை எப்பொழுதும் எம்மால் வழங்கிவர இயலும். உங்களுடன் நேரடியான தொடர்பு கொண்டு, மேற்கூறிய விவரங்களைத் திரட்டி, ஆராய்ந்து மதிப்பிடுபவர் எமது விற்பனைத் துறை ஆராய்ச்சி நிபுணர். உதாரணமாக, கச்சாப் பொருள்களைப்பற்றி அவர்மூலம் தெரியவரும் விவரங்கள், எமது சரக்குக்களை உங்களுக்கு இடையருது கிடைக்கும்படி உதவுகின்றன.

இவ்வாறாக, ஹிந்துஸ்தான் லீவர் உங்களுக்குத் தேவையான உயர்தர சரக்குக்களை நயமான விலையில் வழங்கிவர முடிகிறது.



குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம் புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HLL. 14-X52 TM

பாவித்து வந்தார்கள். இங்கிருந்து படித்து வெளிவந்த பெண்கள் மூலமாகவே சமூகம் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கியது. எல்லோருக்கும் இவரிடத்திலே ஒரு தனி மதிப்பும் பக்தியும் பிறந்தன. துக்கத்தில் மூழ்கியவர்கள் இவர் தயவை நாட ஆரம்பித்தார்கள்.

இந்தமாதிரிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து, கணக்கிற்கு அடங்காமல் போயிற்று. பெண்களின் தொகை அதிகரிக்க, அதிகரிக்க இவரது பொறுப்பும் அதிகமாயிற்று. இந்தப் பெரிய வேலைக்குத் தனிப்பட்ட ஒருவரால் எல்லாவற்றையும் செய்யமுடியாது. இந்தக் காரியங்களுக்கு எல்லாம் சர்க்கார் உதவி முக்கியம் என்று எடுத்துக் காட்டி, சர்க்காரிடமிருந்து உதவிச் சம்பளங்கள் பெற ஆரம்பித்துப் பிறகு ஆச்ரமத்தையே சர்க்கார் நடத்தும் படிச் செய்து விட்டார். சென்னை கடற்கரை ஓரமாக நிற்கும் "ஐஸ் ஹவுஸ்" என்ற கட்டிடத்தில் சர்க்காரால் நடத்தப்பட்டு வரும் விதவாசிரமம்தான் இது!

## வித்யாலயம்!

விதவைகள் அல்லாதவர்களும், கணவர்களால் தள்ளப்பட்டவர்களும், அவர்களால் கவனிக்கப் படாதவர்களும், கண்ணீரும் கம்பலையுமாக சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாளிடம் புகலிடம் தேடி வந்து கொண்டே இருந்தார்கள். எவ்வளவு பேர் வந்தாலும் அவர்களை அன்போடு வரவேற்று அவர்களுக்குத் தக்க ஏற்பாடு செய்தார். இவர்களுக்கெல்லாம் ஒருவழி தேட வேண்டுமே என்ற எண்ணம் வேரூன்றித்தான் அது ஸ்ரீ சாரதா வித்யாலயமாகப் பரிணமித்தது!

சகோதரி சுப்புலக்ஷ்மி அவர்கள் எடுத்துக் கொண்ட இந்தக் காரியமானது விதவைகள் சம்ரக்ஷணையைவிடச் சிரமமானது. இந்தப் பெண்களைக் காப்பாற்றவோ, சுகமாக வைத்துக் கொள்ளவோ முன் வராத புருஷர்கள் இவர்களுக்கு ஒருவழி ஏற்பட்டு முன்னுக்கு வந்துவிடப் போகிறார்களே என்று பயந்து இவருக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டார்கள். இவர் நிர்க்கதியான பெண்களின் நலனையே கருதி கோர்ட்வரை சென்று, அந்தக் கொடிய புருஷர்களிடமிருந்து இவர்களை மீட்டுப் பாதுகாத்திருக்கிறார். இன்னமும் செய்து கொண்டே இருக்கிறார். இந்த ஸ்தாபனத்திற்குச் சர்க்கார் உதவியையே நாடாமல் தானே வீடுவீடாகப் புகுந்தும், ஊர் ஊராகச் சென்றும், கப்பலேறி வெளிநாடுகளுக்குச் சென்றும் பொருள் திரட்டியும் இதை ஒரு மாபெரும் ஸ்தாபனமாகச் செய்திருக்கிறார். ஹாஸ்டலை நிர்க்கதியான பெண்களுக்கென்று வைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்தைப் பொதுவாக வைத்திருக்கிறார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் மனைவியாகிய சாரதாமணி தேவியாரின் பெயரில் ஆரம்பிக்கப் பெற்ற இந்த ஆசிரமம் இப்பொழுது ராமகிருஷ்ண பாடசாலையுடன் சேர்க்கப்பட்டு இவர் மேல் பார்வையில் நடக்கிறது. இப்பொழுது பிராபல்யமடைந்து ஒரு மாபெரும் ஸ்தாபனமாக நடக்கிறது.

## பாராட்டு!

சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்களுடைய ஒப்பற்ற சேவையைப் பொது மக்கள் பாராட்டியதோடு, சர்க்காரும் பாராட்டிக் 'கேசரிஹிந்த்' பதக்கம் அளித்துக் கௌரவித்தார்கள்.

தமிழ் நாட்டிலே பெண் கல்வி அபிவிருத்திக்கு மூலகாரணம் சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள்தான் என்று சொன்னால் மிகையாகாது. நம் நாட்டில் பெண்கள் படித்து முன்னுக்கு வரலாம் என்ற எண்ணமே இவரால் ஏற்பட்டதுதான்! இவரிடம் படித்து இவர் உதவியைப் பெற்று முன்னுக்கு வந்த பெண்கள் ஆயிரக்கணக்கில் குமரியிலிருந்து இமாலயம் வரை உத்தியோகம் பார்க்கிறார்கள். இவர்கள் அன்பினால் சூட்டிய மாபெரும் பட்டம்தான் 'அக்கா' என்ற பெயர்! எல்லாப் பெண்களுக்கும் தமக்கை ஸ்தானம் வகிக்கிறார் அல்லவா?

மாலை நேரம். டாக்டர் சட்டா "கோல்ஃப்" விளையாட்டிற்குப் புறப்பட்டார். மோட்டார் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தது. சிலர் "டோலி"யுடன் வந்தார்கள். டோலிக்குப் பின்னால் ஒரு கிழவன் கழியை ஊன்றியவாறு வந்தான். 'டோலி' வைத்தியசாலைக்கு முன்னால் வந்து நின்றது. கிழவன் மெதுவாக வந்து வாசற்படியில் நின்றவாறு திரையை நீக்கிப் பார்த்தான். வீட்டுத் தரை மிகவும் சுத்தமாகக் காணப்பட்டது. தரையில் கால் வைக்கவும் பயமாகயிருந்தது. யாராவது வந்து அதட்டினாலும் அதட்டுவார்கள் என்ற அச்சம் கிழவனுக்கு ஏற்பட்டது. டாக்டர் ஸாகப், மேஜைக்கு முன்னால்தான் நின்றுகொண்டிருந்தார். அப்படியிருந்தும் அவரிடம் பேச கிழவனுக்குத் துணிச்சலேற்படவில்லை.

டாக்டர் திரைக்குப் பின்னாலிருந்து "யார்? என்ன வேண்டும்?" என்று கர்ஜித்தார்.

"ஐயா, நான் மிகவும் ஏழை. என்னுடைய மகன் பல நாட்களாக........" என்று கிழவன் கைகளைக் கூப்பியவாறு மன்றாடினான்.

டாக்டர் சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டே, "நாளைக்குக் காலையில் வா! இப்பொழுது நான் எந்த நோயாளியையும் பார்க்க மாட்டேன்" என்றார்.

கிழவன் மண்டியிட்டுத் தலையைத் தரையின் மேல் வைத்து, "ஐயா, உங்களுக்குக் கோடி புண்ணியம். ஐயா, குழந்தை செத்துப் போவான். நாலு நாட்களாகக் கண்ணைத் திறக்கவேயில்லை" என்று கெஞ்சினான். டாக்டர் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். இன்னும் 10 நிமிஷங்களிருந்தன. அவர் "கோல்ஃப்-ஸ்டிக்கை" எடுத்தவாறு "நாளைக்குக் காலையில் வா, காலையில்; இப்பொழுது விளையாடப் போகும் நேரம்" என்றார்.

கிழவன் தலைப்பாகையை எடுத்துத் தரையில் வைத்தான். "ஐயா, கொஞ்சம் கண் திறந்து பாருங்கள். பையன் கையைவிட்டுப் போய்விடுவான். ஏழுபிள்ளைகள் செத்துவிட்டார்கள். இவன்தான் ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு! இவனையும் இழந்துவிட்டால் என்ன செய்வேன? உங்களுக்குக் கோடி புண்ணியம். நீங்கதான் எனக்குத் தயவு காட்டணும்!" என்று கிழவன் அழுதான்.

இம்மாதிரியான நாட்டுப்புறத்தார்களைப் பற்றி டாக்டருக்குத் தெரியும். நாம் எத்தனை சொன்னாலும் சரி; இவர்கள் தாம் சொன்னதையே திருப்பித்திருப்பிச் சொல்வார்கள். டாக்டர் மெல்ல வெளியே வந்து காரில் அமர்ந்தார். கிழவனும் பின்னால் ஓடிவந்தான்: "ஐயா, பெரிய தர்மம்! பாபூஜி! நான் ரொம்ப ஏழை. கொஞ்சம் இரக்கங் காட்டுங்கள்" என்று தழு தழுக்கக் கூறினான்.

டாக்டர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. "நாளைக்கு வா!" என்றார். மோட்டார் போய் விட்டது! கிழவன் கற்சிலையைப்போல அசை



# மந்திரம்

மூலம்: பிரேம்சந்த் ......

தமிழாக்கம்: D. ராஜன்..

யாமல் நின்றான். உலகில் இத்தகையவர்களும் இருக்கிறார்கள்! அவர்களுக்குத் தம் சுகத்திலேயேதான் கண். பிறருடைய உயிரைப் பற்றிய கவலே கொஞ்சங்கூடக் கிடையாது. எப்படியாவது தம் காரியத்தைக் கவனிக்க வேண்டும். மற்றவர்கள் எக்கேடு கெட்டுப் போனால் அவர்களுக்கென்ன? ஒருவேளை இந்த மகத்தான உண்மை கிழவனுக்குத் தெரியாமலிருக்கலாம். நாகரிக உலகம் இவ்வளவு கொடூர மானதா? அதற்கு மற்றவர்கள் மீது துளிகூட இரக்கங்கிடையாதா? அவனிதைச் சற்றும் எண்ணவேயில்லை. இத்தகைய இதயத்தைப் பிளக்கும் அநுபவமும் அவனுக்கிதுவரையில் ஏற்பட்டதில்லை. அவன் பழங்காலத்து மனிதன். அந்தக்கால மனிதர்கள், வீட்டில் பற்றிய தீயை அணைக்கவும், யாராவது இறந்தால் தோள் கொடுத்துத் தூக்கவும், வீட்டுக்கூரை போட உதவவும், ஊர்ச்சண்டையைச் சமாதானப் படுத்தவும் தயாராக இருப்பார்கள்; ஆனால் இன்றோ?

கிழவன் "கார்" கண்ணுக்குத் தெரியும் வரையில் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டே நின்றான். ஒருவேளை இப்பொழுதுங்கூட டாக்டர் திரும்பி வருவார் என்று அவன் நம்பியிருப்பான். அவன் எங்கெல்லாமோ அலைந்துவிட்டு டாக்டரிடம் நம்பிக்கையுடன் வந்தான். ஒன்றும் பயனில்லை. வேறு டாக்டரிடம் போகத் துணிவுமில்லை. இவரோ புகழ்வாய்ந்த டாக்டர்! ஆனால்?

'டோலி'யும் புறப்பட்டது. அவன் நிராசையுடன் திரும்பினான். பாவம்! அவன் தன் விதியைத் தானே நொந்துகொள்ள வேண்டும். அன்றிரவே அவனுடைய ஏழுவயது மகன் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டு மறுஉலகம் போய்விட்டான். சிரித்துப்பேசிக் கொஞ்சி விளையாடிய மைந்தன் மறைந்துவிட்டான். அந்தக் கிழப் பெற்றோர்களின் இருண்ட வாழ்விற்கு ஒளிதந்த விளக்கு அணைந்துவிட்டது. எங்கும் ஒரே கரிய இருட்டு. பெற்றோர்களின் ஆசைகளனைத்தும் அந்தக் கரிய இருளிலே சென்று மறைந்தன.

(2)

பல வருஷங்கள் உருண்டோடின. டாக்டர் சட்டா புகழையும் பணத்தையும் சம்பாதித்து விட்டார். தன் உடல் நலத்தையும் நன்கு கவனித்துக்கொண்டார். ஐம்பது வயதிலுங்கூட இளமையின் உற்சாகத்துடனிருந்தார். அவருடைய சுறுசுறுப்பையும், உற்சாகத்தையுங் கண்டு இளைஞர்கள்கூட வெட்கமடைய வேண்டுமென்றால் கேட்பானேன்! அவர் குறித்த நேரத்தில்தான் குறிப்பிட்ட வேலைகளைச் செய்வார். காலத்திட்டத்திலிருந்து கடுகளவும் பிறழமாட்டார். மற்றவர்கள் நோய் வந்தபோதுதான் ஒழுங்காக நடப்பார்கள். டாக்டர் மிகவும் கட்டுப்பாடுடையவர். குழந்தைகள் விஷயத்தில் கூட அப்படித்தான். அவருக்கு ஒரு மகனும் மகளுந்தான். மூன்றாவது குழந்தை கிடையாது. இதனால்தான் ஸ்ரீமதி சட்டாவும் மிக இளமையுடன் காணப்பட்டார். மகளுக்குக் கலியாணமாகிவிட்டது. மகன் காலேஜில் படித்துக்கொண்டிருந்தான். அவன்தான் பெற்றோர்களுக்கு உயிர்நாடி. குணமும் பண்பும் மிக்கவன். நல்ல ரஸிகனுங்கூட. கல்லூரிக்குக் கௌரவமாகவும் இளைஞர்-சமுகத்திற்கு ஒரு எழிலாகவும் திகழ்ந்தான். அவன் ஒரு நல்ல அழகன். இன்றுதான் அவனுக்கு இருபதாவது ஆண்டு நிறைவு.

மனதைக் கவரும் மாலை நேரம். மலர்கள் மந்தகாசத்துடன் மலர்ந்து சிரித்தன. பச்சைப் புல்தரைமீது நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நகரப் பிரமுகர்களும் அதிகாரிகளும் வந்திருந்தனர். மறுபுறம் கல்லூரி மாணவர்கள் விருந்து உண்டார்கள். மின்சார விளக்குகள் எங்கும் ஒளிவீசின. உல்லாசக் கேளிக்கைகளுக்குக் குறைவில்லை. ஒரு சிறு நகைச்சுவை நாடகம் நடத்த ஏற்பாடாயிற்று. நாடகத்தை கைலாஸ்நாத் எழுதியிருந்தான். அவன்தான் நாடகத்தில் முக்கிய நடிகன். அவன் ஒரு பட்டுச் சட்டையணிந்துகொண்டு இங்குமங்கும் அலைந்து நண்பர்களை வரவேற்றுக்கொண்டிருந்தான். அவனுக்குக் கொஞ்சங்கூட ஓய்வில்லையெனலாம்.

அப்பொழுது அங்கே ஒரு பெண் வந்தாள். "கைலாஸ், உன் பாம்புகள் எங்கே? எனக்குக் கொஞ்சம் காண்பி!" என்று அவள் கேட்டாள்.

"மிருநாளினி! இப்பொழுது மன்னிக்கவும்; நாளைக்குக் காட்டுகிறேன்" என்று கைலாஸ் கையை ஆட்டிக்கொண்டே கூறினான். மிருநாளினி பிடிவாதம் பிடித்தாள். "ஊஹூம், இப்பொழுதுதான் காட்டணும். தினந்தோறும் நாளைக்கு நாளைக்கு என்கிறாயே!" என்றாள்.

மிருநாளினியும் அவனும் ஒன்றாகக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார்கள். இருவரின் இதயங்களிலும் காதல் வளர்ந்து வந்தது. கைலாஸிற்குப் பாம்புகளை வளர்ப்பதிலும், அவைகளை ஆட்டி வைப்பதிலும் உற்சாகமதிகம். அவனிடம் பலவிதமான பாம்புகளிருந்தன. அவன் அவைகளின் இயல்புகளை அறிந்து சோதனைகள் நடத்திவந்தான். சில நாட்களுக்கு முன்பு கல்லூரியில் "பாம்புகளின் இயல்புகளைப்" பற்றி ஓர் அரிய சொற்பொழிவும் நிகழ்த்தியிருந்தான். மேடையிலே பாம்புகளை ஆட்டியும் காண்பித்தான். உயிர் கலைப் பேராசிரியர்கள் கூட அவனுடைய பேச்சைக்கேட்டு வியப்புற்றனர். கைலாஸ் ஒரு கிழட்டுப் பாம்பாட்டியினிடம் இந்த வித்தையைக் கற்றான். பாம்புகளை வசப்படுத்தும் வேர்களையும் மூலிகைகளையும் சேர்த்து வைத்திருந்தான். யாரிடமாவது ஒரு மூலிகையோ வேரோ இருப்பதாக அறிந்தால், என்ன விலை கொடுத்தாவது வாங்கிவிடுவான். இந்தக் கலையைக் கற்க ஆயிரக்கணக்கில் ரூபாய்களைச் செலவழித்தான். மிருநாளினியும் எத்தனையோ தடவைகள் வந்திருக்கிறாள். பாம்புகளைப் பார்க்க இத்தனை ஆர்வம் காட்டியதில்லை. இன்று நிஜமாகவே பாம்புகளைப் பார்க்க உற்சாகம் ஏற்பட்டதா அல்லது அவ

னிடம் அவளுக்குள்ள அதிகாரத்தைக் காட்ட எண்ணினாளா என்று சொல்வது கடினம்.

மிருநாளினியின் பிடிவாதம் இப்பொழுது சற்றும் பொருந்தவில்லை. வீட்டில் ஏராளமான கூட்டம். கூட்டத்தைக்கண்டு பாம்புகள் திடுக்கிட்டுப் போகும். இரவு நேரத்தில் பாம்புகளை விடலாமா என்றெல்லாம் அவள் எண்ணிப் பார்க்கவில்லை.

"இப்பொழுது சரியாகப் பார்க்க முடியாது. உள்ளே எள்ளுப் போடக்கூட இடமிருக்காது. நாளைக்குக் கட்டாயம் பாம்புகளை ஆடவைப்பேன்!" என்று கைலாஸ் பதில் கூறினான்.

"இப்பொழுது ஏன் முடியாதாம்? ஒரு சிறிய விஷயத்தை இப்படி ஒத்திப்போட்டால் என்னவது? மிஸ் கோவிந்த், அவன் பேச்சைக் கேட்காதே! பாம்புகளைக் காட்டினால் என்ன வந்துவிடும்?" என்று ஒரு கனவான் கடிந்து கொண்டார்.

மற்றொரு கனவான் சற்று அதிகாரத்துடன் கூறினார். "மிஸ் கோவிந்த் ரொம்பச் சாது. இதனால்தான் இப்படிப் பேசுகிறாள். வேறு பெண்ணாக இருந்தால் மிகவும் கோபித்துக் கொண்டிருப்பாள்."

மூன்றாவது கனவானோ பரிகாசம் செய்தார். "இந்த அழகில் மிருநாளினிக்காக உயிரையும் பொருட்படுத்த மாட்டேன்! என்று வேறு ஜம்பமடிக்கிறானே!"

மிருநாளினி சற்றுக் கோபமடைந்தாள். "நீங்கள் ஒருவரும் எனக்கு 'வக்காலத்' செய்யவேண்டாம். நானே செய்து கொள்வேன். இப்பொழுது எனக்குப் பாம்புகளின் வேடிக்கைப் பார்க்க இஷ்டமில்லை. இந்தப் பேச்சை விட்டு விடுங்கள்" என்றாள்.

மற்ற நண்பர்கள் உரக்கச் சிரித்தார்கள். "இஷ்டமிருந்தாலும் அவன் எங்கே பாம்புகளைக் காட்டப் போகிறான்!" என்றார்கள். மிருநாளினியின் முகத்தைப் பார்த்தபோது, தான் மறுத்து விட்டதனால் கோபித்துக் கொண்டிருப்பாளென்று எண்ணினான் கைலாஸ்.

விருந்து முடிந்தது. பாட்டுக் கச்சேரியும் ஆரம்பித்தது. கைலாஸ் மிருநாளினியையும், மற்ற நண்பர்களையும் பாம்புகளை வைத்திருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்று "மகுடி" வாசிக்கத் தொடங்கினான். பெட்டிகளைத் திறந்து ஒவ்வொரு பாம்பாக வெளியில் எடுத்தான். பாம்புகள் அவனுடைய மனதைப் புரிந்துகொண்டதைப்போல இயங்கின. ஒரு பாம்பை கழுத்தில் போட்டுக்கொண்டான். மற்றொன்றை கையில் சுற்றிக்கொண்டான். மிருநாளினி பயத்தில் "பாம்பைக் கழுத்தில் போட்டுக்கொள்ளாதே! தூரத்திலிருந்தே வேடிக்கை காட்டு!" என்று தடுத்தாள்.



இரண்டு, மூன்று பாம்புகளை அவன் கழுத்தில் போட்டுக் கொண்டதைக் கண்ட மிருநாளினி அவன் பிடிவாதத்தைக்கண்டு வருந்தினாள். அவன் பாம்புகளை ஆட்டுவதையும் விடவில்லை. தவிரவும் தன் காதலியின் முன்பு 'ஸர்ப்ப-வித்தை' யைக் காட்டக் கிடைத்த வாய்ப்பை விட்டுவிடுவானா என்ன!

ஒரு நண்பன்: "இதெல்லாம் பல்லைப் பிடுங்கின பாம்புகள்!" என்று விமரிசனம் செய்தான்.

கைலாஸ் சிரித்துக்கொண்டே கூறினான். "அது பாம்பாட்டிகளின் வேலை! பாம்பின் பற்களைக் காட்டட்டுமா? ஒரு பாம்பின் பல்லைக்கூட பிடுங்கவில்லை! என்று கூறி ஒரு பெரிய கருநாகத்தைப் பிடித்து, "இதைவிடக் கொடிய பாம்பு கிடையாது. இதன் விஷத்திற்கு மனிதன் தப்ப முடியாது! இதன் பல்லுக்கு மந்திரமும் பலிக்காது. இதன் பல்லைக் காட்டட்டுமா?" என்று முழங்கினான்.

மிருநாளினி அவனுடைய கையைப் பிடித்து தடுத்தாள். "வேண்டாம் கைலாஸ்! நான் உன் காலில் விழுந்து மன்றாடுகிறேன். பாம்பின் பல்லைக் காட்டவேண்டாம்!"

மற்றொரு நண்பன்: "எனக்கு நம்பிக்கையில்லை. நீ சொன்னால் சரி" என்று கூறினான்.

கைலாஸ் பாம்பின் கழுத்தை இறுக்கிப் பிடித்து "வந்து பார்! பல்லைப் பிடுங்கிய பாம்பை வசப்படுத்திவிட்டேன் என்கிறாயா? பாம்பு அறிவுள்ள பிராணி; மனிதனால் தனக்குத் தொந்திரவு இல்லையென்று தெரிந்துகொண்டால் ஒருபொழுதும் கடிப்பது கிடையாது" என்று கர்ஜனை செய்தான்.

மிருநாளினிக்குக் குலைநடுக்கமேற்பட்டது!

அவள் வேடிக்கையை நிறுத்தவேண்டுமென்ற எண்ணத்தில் கூறினாள். "வாருங்கள் போகலாம், பாட்டு ஆரம்பித்துவிட்டது; நானும் பாடப்போகிறேன்" என்று கைலாஸின் தோளைப்பிடித்தவாறு நண்பர்களை வெளியே போகும்படி சைகை செய்துவிட்டு அறையிலிருந்து வெளியே வந்தாள்.

கைலாஸ் நண்பர்களின் சந்தேகத்தைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். அவன் பாம்பின் கழுத்தைப் பிடித்துப் பலமாக அழுத்தினான். அதனுடைய முகம் சிவந்துவிட்டது. உடம்பு நரம்புகள் புடைத்துக் கொண்டன. பாம்பிற்கு கைலாஸ் இத்தகைய அநுபவத்தை அளித்ததில்லை. அது திணறிவிட்டது. அவன் என்ன செய்யப் போகிறானோ என்று தெரியாமல் நிலைகுலைந்து விட்டது. ஒருவேளை நம்மைக் கொல்லத்தான் போகிறானோ வென்ற எண்ணத்தில் தற்காப்பிற்குத் தயாராகிவிட்டது.

கைலாஸ் அதன் கழுத்தை அழுத்தி வாயைத் திறந்து விஷப்பல்லை காட்டி, சந்தேகமிருப்பவர்கள் நன்றாகப் பாருங்கள். இன்னுமா சந்தேகம்?" என்று கூச்சலிட்டான். நண்பர்கள் அருகில் வந்து பார்த்து வியப்படைந்தார்கள். பிரத்யக்ஷயாகப் பார்த்த பின்புமா சந்தேகம்? கைலாஸ் "சந்தேக நிவர்த்தி"க்குப்பின் பாம்பின் கழுத்தைத்தளரவிட்டுக் கீழேவிட எண்ணினான். ஆனால் அந்தக் கரிய கோதுமைநிற நாகம் கோபவெறியில் கட்டுமீறிப் போயிற்று. உடனே படமெடுத்துச்சீறி அவன் கைவிரலை நன்றாகக் கடித்துவிட்டு ஓடிப்போயிற்று.

கைலாஸ் விரலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அறைக்குள் ஓடினான். அங்கு மேஜைக்குள் ஒரு வேர் இருந்தது. அதை அரைத்துப் பூசினால் கொடிய விஷங்கூட இறங்கிவிடும். ஆனால் வெளியே குழப்பமேற்பட்டது. செய்தியறிந்து டாக்டர் ஓடிவந்தார். கைலாஸின் விரலிலிருந்து இரத்தம் சொட்டியது. டாக்டர் விரலை இறுகக்கட்டிவிட்டு வேரை அரைத்தார். அவருக்கு வேர்-மூலிகைகளிலெல்லாம் நம்பிக்கையே கிடையாது. மகனுக்கோ அவைகளின் மேல் முழுநம்பிக்கை. டாக்டர் பாம்பு கடித்த இடத்தைக் கீறிவிட்டு மருந்தை செலுத்த எண்ணினார். "பியானோ" வாசித்துக்கொண்டிருந்த மிருநாளினி ஓடிவந்தாள். அவள் பரபரப்புடன் சேலைத் தலைப்பினால் கைலாஸின் விரலிலிருந்து சொட்டிய இரத்தத்தைத் துடைத்தாள். கைலாஸின் கண்கள் இலேசாக மூடின. உதடுகள் வெளிறிப் போய்விட்டன. அவனால் நிற்கவும் முடியவில்லை. தரையில் உட்கார்ந்துவிட்டான். விருந்தாளிகள் அனைவரும் அறையில் கூடிவிட்டனர். ஒவ்வொருவரும் தனக்குத் தோன்றியவாறு பேசிக்கொண்டிருந்தனர். இதற்குள் வேரும் அரைத்தாய் விட்டது. அதை மிருநாளினி அவனுடைய விரலில் தடவினாள். ஒரு நிமிஷமாயிற்று. கைலாஸின் கண்கள் முற்றிலும் மூடிவிட்டன. அவன் படுத்துக்கொண்டு விசிறும்படி சைகை செய்தான். தாய் வந்து அவனுடைய தலையை மடியில் வைத்துக்கொண்டு பக்கத்தில் "டேபிள் பேனை" வைக்கச் சொன்னாள்.

"கைலாஸ், உடம்பு எப்படியிருக்கிறது?" என்று டாக்டர் குனிந்துகொண்டே கேட்டார். கைலாஸ் மெதுவாகக் கையைத் தூக்கினான். ஆனால் வாய்திறந்து ஒன்றும் பேசமுடியவில்லை. மிருநாளினி பரிதாபம் நிறைந்த குரலில் "இந்த வேர் ஒன்றும் பயனில்லையா"? என்று கேட்டாள்.

டாக்டர் தலையைக் கைகளால் பிடித்துக்கொண்டு, "நான் என்ன சொல்லட்டும்? எல்லாம் இவன் பேச்சைக் கேட்டதால்தான் வந்த வினை! இப்பொழுது கத்தியால் கீறினாலும் பயனில்லை" என்றார்.

அரைமணி வரையில் கைலாஸ் இதே நிலையிலிருந்தான். அதற்குப் பிறகு ஒவ்வொரு கணமும் அவனுடைய நிலை மோசமாகிக்கொண்டு வந்தது. கண்களும் சொருகிவிட்டன! கைகால்கள் ஜில்விட்டுவிட்டன. முகம் சோர்ந்துவிட்டது. நாடி இயங்குவதாகவே தெரியவில்லை.

மரணத்தின் அறிகுறிகள் முகத்தில் நிழலாடின. வீடு முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டது. மிருநாளினி ஒருபக்கம் தலையைப்பிடித்துக்கொண்டிருந்தாள். மறுபக்கமோ தாய் மயக்கம்போட்டு விழுந்தாள். டாக்டர் சட்டாவை நண்பர்கள் பிடித்துக் கொண்டார்கள். இல்லாவிட்டால் கத்தியால் கழுத்தை அறுத்துக்கொண்டிருப்பார்!




"மந்திரிப்பவன் யாராவதிருந்தால் இப்பொழுதும் உயிர் பிழைக்க வழியுண்டு" என்றார் ஒருவர்.

ஒரு முஸ்லிம் நண்பர் அதை ஆமோதித்தார். "அரே ஸாஹப்! "கப்ரஸ்தானி"ல் உள்ள பிணங்களையுங்கூட எழுப்பும் மாந்திரிகர்கள் இங்கு இருக்கிறார்கள்!" என்றார்.

"என் மூளை மழுங்கிவிட்டது. இவன் பேச்சைக் கேட்டதால் வந்த வினை! கத்தியால் கீறியிருந்தால் இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காது. பாம்பை வளர்க்காதேடா என்று எத்தனையோ தடவைகள் முட்டிக்கொண்டேன். கேட்டால் தானே! யாரையாவது மாந்திரீகனைக் கூப்பிடுங்கள். என் "ஆஸ்தி" முழுவதையும் அவனுடைய காலடிகளில் கொட்டிவிடுகிறேன். அரை வேட்டியைக் கட்டிக்கொண்டு வெளியேறவும் தயார். என் ஆருயிர் கைலாஸ் பிழைத்தால் போதும். ஐயா! கடவுளின்பேரில் பாரத்தைப் போட்டுவிட்டு யாரையாவது கூப்பிடுங்களேன்" என்று கதறினார் டாக்டர். ஒரு கனவான் தனக்குத் தெரிந்த மாந்திரிகனை ஓடிப்போய் அழைத்துவந்தார். அவன் கைலாஸின் முகத்தைப் பார்த்தான். அவனுக்கு மந்திரிக்கத் துணிவில்லை. "ஐயா! இனிமேல் என்ன செய்யமுடியும்? நடப்பது நடந்துவிட்டது!" என்றான்.

"அட முட்டாளே, நடக்க முடியாதது நடந்துவிட்டதென்று ஏன் சொல்லவில்லை? என்ன நடந்துவிட்டது? பெற்றோர்கள் பிள்ளைக்கு ஆதரவை எங்கே கண்டார்கள்? மிருநாளினியின் "ஆசை-விருட்சம்" தளிர்களாலும், மலர்களாலும் பூத்துக் குலுங்கியதா? தங்கமயமான ஆசைக் கனவுகளையும் வாழ்வின் இன்ப ஊற்றையும் தன்னகத்தேகொண்ட மிருநாளினியின் மனம் நிறைவடைந்ததா? ஆர்ப்பரித்து அலைகளையெழுப்பும் ஆசைக் கடலிலே மிதந்த இன்பப் படகு மிருநாளினியைத் தவிக்கவிட்டு முழுகி விடுமா? ஆம், நடக்கக்கூடாத சம்பவம் நடந்துவிட்டது?

"அதோ! எதிரில் என்றும்போலக் காணப்படும் அதே பசுமையான புல்வெளி இப்பொழுதும் ஒரு மாறுதலுமின்றி காணப்படுகிறது. அதே பட்டொளி வீசிய நிலா இப்பொழுதும் "மவுன-சங்கீதத்தைப்" போன்றே இயற்கையை அலங்கரித்துக்கொண்டிருந்தது. அதே நண்பர்களின் குழாம் இப்பொழுதும் சூழ்ந்துகொண்டிருக்கிறது. மனதை மகிழ்ச்சிக் கடலிலே முழுகவைக்கும் அத்தனை சாமான்களுமங்கிருந்தன.

"ஆனால் ஒரே ஒரு குறை. சற்று நேரத்திற்கு முன்பு அதே இடத்தில் மகிழ்ச்சியின் ஆரவார அலைகள் கிளம்பின. இப்பொழுதோ எங்கும் பரிதாபகரமான அழுகை ஓசையும், கண்ணீர் வெள்ளமுந்தான் பெருக்கெடுத்தன."

[3]

நகரத்திலிருந்து பல மைல்களுக்கப்பால் ஒரு சிறிய வீட்டிலிருந்த ஒரு கிழவனும் கிழவியும் அடுப்பின் முன்னால் உட்கார்ந்து குளிர் காய்ந்துகொண்டிருந்தார்கள். இரவின் குளிரோ கூரிய அம்புகளைப்போன்றே உடலைத் துளைத்தன. கிழவன் இளநீரைக் குடித்துவிட்டு நடு நடுவே இருமிக்கொண்டிருந்தான். கிழவியோ இரு முழங்கால்களையும் கட்டிக்கொண்டு நெருப்பையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஒரு மண்ணெண்ணெய் திரிவிளக்கு மாடத்தில் எரிந்துகொண்டிருந்தது. வீட்டில் கட்டிலுமில்லை; படுக்கையுமில்லை. ஒரு ஓரத்தில் கொஞ்சம் வைக்கோலிருந்தது. இந்த அறையில் ஒரு அடுப்புமிருந்தது. கிழவி நாள் முழுவதும் விராட்டிகளையும், உலர்ந்த விறகுகளையும் சேகரிப்பாள். கிழவன் சணல் நாரைக் கயிருகத் திரித்து வெளியே சென்று விற்பான். இப்படித்தான் அவர்கள் பிழைத்துவந்தார்கள். அவர்கள் சிரிப்பதையோ அழுவதையோ எவருங் கண்டதில்லை. அவர்களுடைய கால முழுவதும் உயிர் வாழ்வதற்காகவே செலவழிந்து வந்தது. மரணம் வீட்டு வாசற்படியில் காத்துக்கொண்டிருந்தது. அழுவதற்கோ, சிரிப்பதற்கோ அவகாசமெங்கே?

"நாளைக்குச் சணல் கயிறு இல்லையே? என்ன வேலை செய்யப் போகிறாய்?" என்று கிழவி கேட்டாள்.

"ஜகடுஸாஹூவினிடம் போய் பத்து சேர் சணல் கடன் வாங்குவேன்."

"முன்னே வாங்கினதற்கே பணந்தரவில்லையே! கடன் எப்படித் தருவான்?"

"தராவிட்டால் போகட்டும்! புல் இருக்கவே இருக்கு. மத்தியானத்துக்குள் இரண்டணா புல் அறுக்கமாட்டேனா?"

இதற்குள் அங்கே ஒருவன் வந்து கூப்பிட்டான். "பகத்! பகத்! தூங்கிவிட்டியா? கொஞ்சம் கதவைத் திற!" என்றான்.

பகத் எழுந்து கதவைத் திறந்தான். "உனக்குத் தெரியுமா? டாக்டர் சட்டாவின் மகனைப் பாம்பு கடித்துவிட்டது" என்றான் உள்ளே வந்தவன்.

"சட்டா பாபுவின் மகனையா? அந்தப் பெரிய பங்களாவில் இருக்காரே! அந்த பாபுவின் மகனையா பாம்பு கடித்தது?" என்று கிழவன் பகத் திடுக்கிட்டுப்போய்க் கேட்டான்.

"ஆமாம், ஊர் முழுவதும் அல்லோலகல்லோலப்படுகிறது. நீ போகமுடிந்தால் போ. நீ ஒரு பெரிய மனிதனாகிவிடுவாய்."

கிழவன் கடுகடுப்புடன் தலையை ஆட்டிக்கொண்டே "நான் போகமாட்டேன். அவரை எனக்கு நன்றாகத் தெரியும்! தம்பியை அழைத்துக்கொண்டு அவரிடம் போயிருந்தேன். அப்பொழுது விளையாடப் போய்க்கொண்டிருந்தார். குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று காலில் விழுந்து கெஞ்சினேன். அவர் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. எல்லாவற்றையும் கடவுள் கவனித்துக்கொண்டுதானிருக்கிறார். இப்பொழுதாவது "புத்திர-சோகம்" என்னவென்று தெரிந்து கொள்ளட்டும். அவருக்கு எத்தனை பிள்ளைகள்?"

"இல்லை! ஒரே பிள்ளைதான். எல்லோரும்கையை விரித்துவிட்டார்களென்று கேள்விப்பட்டேன்."

"கடவுளுடைய சித்தமே அலாதி. அப்பொழுது கண்ணீர் விட்டுக் கதறினேன். அவருக்குத் துளிக்கூட இரக்கமே வரவில்லை."

"அப்ப நீ போகமாட்டியா? எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். அப்புறம் உன் இஷ்டம்."

"ரொம்ப சரி! என் மனசு குளிர்ந்தது! கண்ணும் குளிர்ந்தது - அவருடைய பிள்ளையும் குளிர்ந்து போயிருப்பான். நீ போய்யா, இன்னிக்கு அமைதியாத் தூங்குவேன். (கிழவியை நோக்கி) கொஞ்சம் புகையிலை இருந்தாக் கொடு, சுகமாகப் புகை பிடிக்கிறேன். எனக்கு என்ன நட்டம்? இப்ப தெரியும் ஐயாவுக்கு சேதி! கொட்டம் குலைஞ்சு போகும்! என்பிள்ளை செத்தால் ராஜ்யமா முழுகிப்போகும்? ஆறு பிள்ளை போன இடத்திற்கு ஏழாவது பிள்ளையும் போய்விட்டது. எல்லாருடைய கழுத்தையும் அழுத்தி பணமா சேர்த்தியே, எல்லாம் யாருக்கு? இப்ப என்ன செய்யப் போறே? இப்ப வேண்டாம். கொஞ்சநாள் கழித்து அவரை கேழ்ப்பேன்" என்று சரமாரியாகப் பொழிந்தான்.

வந்தவன் போய்விட்டான். கிழவன் கதவைச் சாத்திவிட்டுச் சுங்கானில் புகையிலையை வைத்து பற்றவைத்துப் புகை குடித்தான்.

"இந்த இரவிலே பனி கொட்டும் வேளையிலே யார் போவார்கள்?" என்று கேட்டாள் கிழவி.

"பகலாயிருந்தாலும் போகமாட்டேன். வாசல்லே சவாரி வந்து கூப்பிட்டாலும் அசையமாட்டேன். பன்னுவின் முகம் இன்னும் கண்ணெதிரே நிக்கிறது. நான் மறந்தாபோனேன்? கல்நெஞ்சன் குழந்தையைப் பார்த்தானா? அந்த டாக்டர் ஒண்ணும் உயிர் கொடுக்கும் கடவுளில்லை. இருந்தாலும் குழந்தையை ஒருதரமாவது பார்த்திருந்தால் என் மனசு நிம்மதியடைஞ்சிருக்கும். அதனால்தான் குழந்தையைக் கொண்டு ஓடினேன். சரி, என்னிக்காவது 'ஏனய்யா உலகமெப்படியிருக்குன்னு' அவரைக் கேட்காமலிருக்கமாட்டேன். யார் எது வேணும்னாலும் சொல்லட்டுமே. சின்ன மனுசங்களிடம் எத்தனையோ குறைவுகளிருக்கும். பெரிய மனுசங்கிட்டக் குறையாயிருக்கும்? அவுங்கதான் தேவர்களாச்சே! ஹூம்"

இதுவரையில் அந்தக் கிழவன் எவரையும் ஏமாற்றமடையச் செய்ததில்லை. எண்பது வருஷங்களாக எத்தனையோ பேர்களைக் காப்பாற்றியிருக்கிறான். மழை, வெயில், இருட்டு, சேறு, சகதி இவைகளையெல்லாம் சட்டை செய்யாமல் ஓடிப்போய் மந்திரித்திருக்கிறான். நிராசையடைந்தவர்களுக்கு உயிர் பிச்சை

கொடுத்திருக்கிறான். ஆனால் இன்றோ பாம்பு கடித்த செய்தியைக் கேட்டுங்கூட வீட்டைவிட்டு ஓர் அடிகூட எடுத்து வைக்கவில்லை. தூங்கப் போகிறான்!

கிழவி கூறினாள் "புகையிலை அடுப்பின் பக்கத்திலே வைச்சிருக்கேன். புகையிலைக் காரிக்கு இரண்டரையணுத் தரணும். அவ தரவே மாட்டேனென்றாள்." என்று கூறிவிட்டுப் படுத்துக் கொண்டாள். கிழவன் குப்பி விளக்கை அணைத்துவிட்டுச் சற்று நேரம் நின்றான். பிறகு உட்கார்ந்தான். கடைசியில் படுத்துக் கொண்டான். இச்செய்தி அவனுடைய நெஞ்சிலே பாராங்கல்லை வைத்த மாதிரி இருந்தது. ஏதோ ஒரு பொருள் காணமல் போய்விட்டதைப் போல் தோன்றியது. அவனுடைய துணிகள் வியர்வையில் நனைந்து விட்டன. யாரோ அவனை வீட்டை விட்டு வெளியே தள்ளுவதைப் போலப் புலப்பட்டது. கிழவியோ குறட்டைவிட ஆரம்பித்தாள். பொதுவாக வயதானவர்கள் தானே பேசிக் கொண்டே தூங்குவார்கள். கொஞ்சம் சப்தம் கேட்டாலும் போதும் விழித்துக் கொள்வார்கள். கிழவன் பகத் தடியை எடுத்துக் கதவைத்திறந்தான்.

"எங்கே போறே?" கிழவி விழித்துக் கொண்டு கேட்டாள்.

"எங்குமில்லே. ராப்பொழுது எப்படியிருக்குன்னுதான் பார்த்தேன்"

"பொழுது விடிய ரொம்ப நேரமிருக்கு. தூங்கு"

"தூக்கம் வரல்லே"

"தூக்கம் ஏன் வரும்? மனசு டாக்டர் வீட்டை வட்டமிடுது"

"நான் ஏன் போவேன்? என் காலில் வந்து விழுந்து கூப்பிட்டாலும் போகமாட்டேன்"

"இந்த எண்ணத்திலே எழுந்திருச்சே?"

"போடி, நான் ஒண்ணும் பைத்தியமில்லே. என் பாதையிலே முள்ளை வச்சவனுக்குப் பூவை அள்ளியா வைப்பேன்? இது நடக்காது!"

கிழவி மறுபடி தூங்க ஆரம்பித்தாள். கிழவன் கதவை மூடிவிட்டு வந்து உட்கார்ந்தான். உபதேசங் கேட்கவரும் பக்தர்களை "வாத்திய ஓசை" கவருகிறது. கண்கள் உபதேசிப்பவரின் மீதிருந்தாலும் காதுகள் வாத்திய ஓசையில்தான் லயிக்கும். இதே நிலைதான் இந்தக் கிழவனுக்குமேற்பட்டது. கிழவன் வாய் டாக்டரை வசை பாடியது. ஆனால் மனமோ அந்தப் பையனைப்பற்றி எண்ணியது. அவன் மறுபடியும் கதவைத் திறந்தான். கிழவிக்குக்கூடச் சப்தம் கேட்காமல் மெதுவாக வெளியே வந்தான். அப்பொழுது கிராமத்துக் காவற்காரன் "ரோந்து" சுற்றிக்கொண்டிருந்தான்.

"பகத் இந்தக் கடுங்குளிரில் எங்கே போகிறாய்?" என்று அவன் கேட்டான்.

"எங்கே போகப் போகிறேன்? ராத்திரி எவ்வளவு நேரமாயிருக்கும்னு பார்க்க வந்தேன். மணி எத்தனை?

"மணி ஒண்ணுக்குமேலிருக்காது. இப்பத்தான் சாவடியிலேயிருந்து வர்றேன். டாக்டர் சட்டாவின் பங்களாவிலே பெருங்கூட்டம். அவருடைய பையனுக்கேற்பட்ட கதி உனக்குத் தெரிஞ்சு போயிருக்குமே. பாவம்! பையன் செத்தாலும் செத்துவிடுவான். நீ ஒருவேளை பார்த்தால் பிழைக்கலாம். பத்தாயிரம் ரூபாய் கூடத் தரத் தயாராக இருக்கிறார்களாம்!"

"நான் போக மாட்டேன். பத்து லட்சம் கொடுத்தாலும் முடியாது. பணத்தை யாருக்கு வைக்கணும்? நாளைக்குக் கண்ணை மூடிவிட்டால் யார் இருக்கிறார்கள் பணத்தை அனுபவிக்க. ஹூம்! வீட்டில் ஒரு காலும் சுடுகாட்டில் ஒரு காலுமாக வைத்திருக்கிறேன்"

கிராமக் காவலாளி சென்றுவிட்டான். அவனை அறியாமலே கால்கள் நடந்துசென்றன. மயக்க நிலையில் மனிதன் எங்கோ செல்ல எண்ணுகிறான். கால்களோ வேறு இடத்தை நோக்கிச் செல்லுகின்றன. பழிவாங்குமெண்ணம் கிழவனுக்கு இருந்தாலும் கால்கள் பின்னோக்கிச்செல்ல நடுங்குகின்றன.

கிழவன் தடியை ஊன்றித் தள்ளாடிக் கொண்டே சென்றான். உணர்வு அவனைத் தடுத்தது. உள்ளுணர்வோ அவனுடைய எண்ணத்திற்கு விரோதமாக வேலை செய்தது.

பாதிவழி சென்றதும் கிழவன் திடீரென்று தயங்கினான். "இந்தக் கடும் பனியில் ஏனிப்படி நடக்கிறேன்? தூக்கம் வராவிட்டால் இரண்டொரு பக்திப் பாடலாவது பாடியிருக்கலாமே! டாக்டர் சட்டாவின் பிள்ளை பிழைத்தாலென்ன; செத்தாலென்ன? அவர் என்னிடம் எப்படி நடந்தார். உலகத்தில் ஆயிரம் பேர் சாகிறார்கள். இதனால் எனக்கென்ன லாபம்?" என்று கிழவன் யோசித்தான்.

இப்பொழுது உள்ளுணர்வு வேறு திசையில் திரும்பியது. டாக்டர் வீட்டில் என்ன நடக்கிறது. அவர் எத்தனை தடவை மூர்ச்சையடைகிறார். அங்குள்ளவர்கள் நிலையென்ன? என்றெல்லாம் உள்ளுணர்வு எண்ணியது.

அப்பொழுது இரண்டு மனிதர்கள் பேசிக் கொண்டு எதிரே வந்தார்கள்.

"சட்டாபாபுவின் வீடு பாழாப் போச்சு. ஒரே பிள்ளைதான். அவனும் ஆசையில் மண்ணை வாரிப் போட்டான்!"

கிழவன் அவர்களுடைய பேச்சைக் கவனித்தான். உடனே அவனுடைய கால்கள் இன்னும் வேகமாக நடந்தன. களைப்பு ஏற்பட்டது. தலை பாரமாகக் காணப்பட்டது. தடுமாறி விழுந்துவிடுவானோ என்ற அச்சமும் ஏற்பட்டது. இதே நிலையில் அவன் டாக்டரின் பங்களாவை நெருங்கிவிட்டான். மின்சார விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. எங்கும் சந்தடியின்றி

காணப்பட்டது. அழுகைக் குரலைக் கூடக் காணோம். கிழவனுடைய நெஞ்சு படபடத்தது. அவன் ஓடிவந்தான். வாழ்நாளிலே அவனிப்படி ஓடியது கிடையாது! மரணமே அவனைப் பின் தொடருவதுபோலத் தோன்றியது.

[4]

மணியும் இரண்டடித்தது. விருந்தாளிகளும் விடைபெற்றுக்கொண்டனர். அழுதழுது எல்லோரும் களைப்படைந்துவிட்டனர். இப்பொழுது அழுவதற்கு வானத்து நட்சத்திரங்கள்தான் எஞ்சியிருந்தன. பொழுது எப்பொழுது விடியும்? எப்பொழுது பிணத்தைக் "கங்கா-மாதா"வின் மடியில் ஒப்படைப்பது? என்ற எண்ணத்தில் எல்லோரும் வானத்து நட்சத்திரங்களை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று கிழவன் பகத் வீட்டிற்கு வந்து கூப்பிட்டான்.

டாக்டர் எவனாவது நோயாளிதான் வந்திருப்பானென்று நினைத்தார். வேறு நாளாக இருந்தால் இந்த வேளையில் வந்திருப்பவனை விரட்டியிருப்பார். ஆனால் இன்று வெளியில் வந்தார். எதிரே சற்றுக் கூனல் விழுந்த கிழவன் நின்றான். கிழவன் தடியை ஊன்றியவாறு நடுங்கிக்கொண்டிருந்தான். டாக்டர் மிகவும் பணிவுடன் கூறினார்:

"ஐயா! இன்று எங்களுக்கேற்பட்ட துன்பத்தைச் சொல்லவே முடியாது. இன்னொரு நாளைக்கு வாருங்கள். இன்னும் ஒரு மாதம் வரை எந்த நோயாளியையும் பார்க்கும் நிலையில் இல்லை."

"பாபு! எல்லாம் கேள்விப்பட்டேன். அதனால்தான் ஓடோடியும் வந்தேன். பையன் எங்கே? கொஞ்சம் காட்டுங்கள்! கடவுளுடைய செயலை எப்படி அறியமுடியும்? ஆண்டவன் அருளிருந்தால் செத்தவர்களும் பிழைக்கமுடியும்" என்றான் கிழவன்.

டாக்டர் வேதனையுடன் கூறினார். "வந்து பார்! மூன்று நான்கு மணி நேரத்திற்கு மேலாய் விட்டது. நடப்பது நடந்தேவிட்டது. எத்தனை மாந்திரீகர்கள் பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள். ஹூம்! விதியை யாரால் வெல்ல முடியும்?"

டாக்டருக்கு மகன் பிழைப்பானென்ற நம்பிக்கை போய்விட்டது. கிழவன்மீது இரக்கப்பட்டு அவனை உள்ளே அழைத்துப் போனார். கிழவன் கைலாஷின் உடலை சற்று நேரம் உற்றுப் பார்த்தான். சற்றுப் புன்னகையுடன் "பாபு! பயப்படாதீர்கள். நாராயணனின் கிருபை மட்டுமிருந்தால் பையன் அரை மணிக்குள் எழுந்துவிடுவான்; மனதை ஏன் வீணாக அலட்டிக் கொள்கிறீர்கள்? வேலையாட்களிடம் சொல்லி, பையன்மேல் தண்ணீரைக் கொட்டச் செய்யுங்கள்" என்றான்.

குழாய் தண்ணீர் நின்றுவிட்டது. வேலையாட்களுமதிகமில்லை. வந்திருந்தவர்கள் கிணற்றுத் தண்ணீரை இரைத்து ஆட்களிடம் கொடுத்தார்கள். மிருநாளினி குடத்தில் தண்ணீர் கொணர்ந்தாள். கிழவன் புன்சிரிப்புடன் மந்திர உச்சாடனம் செய்ய ஆரம்பித்தான். மந்திர உச்சாடனம் முடியும் ஒவ்வொரு தடவையும் கைலாஷின் மூக்கில் ஒவ்வொரு வேராக வைத்து ஊதினான். எத்தனையோ குடங்கள் தண்ணீர் கைலாஷின்மீது கொட்டியாயிற்று. கிழவனுக்கு வெற்றியில் நம்பிக்கையேற்பட்டது. பொழுதும் புலர்ந்துவிட்டது. கைலாஸ் தன் சிவந்துபோன கண்களைத் திறந்தான்! கணநேரத்தில் அவன் சோம்பல் முறித்துக்கொண்டு குடிக்கத் தண்ணீர் கேட்டான். டாக்டர் உடனே மனைவி நாராயணியைக் கட்டிக்கொண்டார். நாராயணி ஓடிவந்து கிழவனின் கால்களில் விழுந்தாள். மிருநாளினி கண்ணீர் நிறைந்த கண்களுடன் கைலாஷின் பக்கத்தில் வந்து உடம்பு எப்படியிருக்கிறது? என்று ஆவலுடன் கேட்டாள்.

இந்தச் செய்தி உடனே ஊர் முழுவதும் பரவிவிட்டது. நண்பர்கள் வாழ்த்துக்கூற வந்துவிட்டார்கள். டாக்டர் மிகவும் சிரத்தையுடன் கிழவன் பகத்தைப் புகழ்ந்துகொண்டிருந்தார். எல்லோரும் கிழவனைப் பார்க்க ஆவலுடன் உள்ளே வந்தார்கள். இந்தச் சந்தடியில் கிழவன் போன இடம் தெரியவே இல்லை! வேலைக்காரர்கள் கூறினார்கள். "கிழவர் இப்பொழுதுதான் இங்கே உட்கார்ந்து புகை குடித்தார். நாங்கள் புகையிலை கொடுத்ததை வாங்கவே இல்லை."

எல்லோரும் கிழவனைத் தேடினார்கள். கிழவனோ வெகு வேகமாக வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான். கிழவி விழித்துக் கொள்வதற்குள் வீடு போய்ச் சேரவேண்டாமா?

எல்லா விருந்தாளிகளும் போய்விட்டார்கள்.

"கிழவர் எங்கோ போய்விட்டாரே! கொஞ்சம் புகையிலைகூட வாங்கிக்கொள்ளவில்லையே!" என்று கவலையுடன் டாக்டர் மனைவியிடம் கூறினார்.

"நான் கிழவருக்கு நிறையப் பணம் கொடுக்க எண்ணினேன்!" என்றாள் டாக்டரின் மனைவி.

"இருட்டிலே எனக்கு விளங்கவில்லை. இப்பப் புரிந்துகொண்டேன்! நன்றாக நினைவிருக்கு. ஒரு தடவை ஒரு நோயாளியை அழைத்து வந்தார். விளையாடப் போனேன். வியாதிக்காரனைப் பார்க்கமுடியாதுன்னு கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். ஐயோ! அந்த நாளை இப்ப நினைக்கும்போது எனக்கு ஏற்படும் வேதனைக்கு அளவேயில்லை. எப்படியாவது கிழவரைத் தேடிப் பார்த்து அவருடைய கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்கிறேன். அவர் பணத்தையோ, வேறு பொருளையோ வாங்கமாட்டாரென்று எனக்குத் தெரியும்! எல்லோரும் புகழ்வதற்குத் தான் அவர் பிறந்திருக்கிறார். அவர்மீது "புகழ் மழை" பொழியட்டும்! அவர் என்னிடம் காட்டிய பெருந்தன்மையை ஆயுள் முழுவதும் மறக்கமாட்டேன்!" என்றார் டாக்டர்.

# படுகளம் கண்ட அதிசயம்

கு. ப. சேது அம்மாள்

வாசலில் டாக்ஸி வந்து நின்ற சத்தம் கேட்டதும், சமையலறை ஜன்னல் வழியாக வாசற்பக்கம் எட்டிப் பார்த்தாள் லோகநாயகி.

ஆமாம்! அகிலாண்டம்தான் டாக்ஸியிலிருந்து இறங்கி நின்றுகொண்டிருந்தாள்.

காலைமுதலாகவே அவளுடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு வாசலிலேயே பழியாகக் கிடந்த வேணுவும், மாலதியும், தமது அன்புக்குரிய 'சின்னம்மா' வந்துவிட்டதைக் கண்டதும் 'சின்னம்மா' என்ற சந்தோஷக் கூப்பாட்டுடன் ஓடிச்சென்று அவளது கால்களைக் கட்டிக்கொண்டார்கள்!

அகிலாண்டம் அதைத் துளிகூட சட்டை செய்யாமல், கார் டிரைவரிடம் "பெட்டியை அசைக்காமல் எடுத்துவா. உள்ளே எல்லாம் மருந்து பாட்டில்கள் என்று எச்சரித்து, தனது சாமான்களைக் கவனித்து இறக்குவதிலேயே கண்ணாக இருந்தாளே தவிர, காலைக் கட்டிக்கொண்ட குழந்தைகளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

சின்னம்மாவின் பராமுகம் குழந்தைகள் மனதை அலட்டிவிட்டன! முகத்தைச் சுண்ட வைத்துக்கொண்டு விலகிவிட்டார்கள் குழந்தைகள்.

இவையனைத்தையும் ஜன்னல் வழியாகவே பார்த்த லோகநாயகியின் உள்ளம் துணுக்குற்றது.

குழந்தைகள் மீது உயிராக இருந்த அகிலாண்டமா இவள்? ஓடி விளையாடும் குழந்தைகளை, இழுத்து வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவும் அகிலாண்டமா இப்படி அசட்டையாக நினைத்தாள் அவர்களை?

"சே! தங்கமார்ச்சே அவள் குணம்; உடம்பு சரியில்லையோ, ரயிலில் வந்த பிரயாண அலுப்பாகவேதானிருக்கவேண்டும் என்று தன்னைத்தான் திருத்திக்கொண்டு கூடத்திற்கு வந்து, "வா அகிலாண்டம்! அப்பாட! ஏது சாவகாசமாகப் போய் உட்கார்ந்துவிட்டாய்?" என்று கேட்டாள், எப்போதும் பேசிக்கொள்ளும் சகஜமான கேலி பாவனையில்.

"இப்ப கூடத்தான் அம்மாவுக்கு என்னை அனுப்ப இஷ்டமேயில்லை: ஓட்டலில் புருஷனைச் சாப்பிடச் சொல்லிவிட்டு பிறந்தவீட்டுக்கு வந்த பெண்கூட உன்னைப்போல இப்படி ஊருக்கு ஊருக்கு என்று பறக்கமாட்டாள்! சமையல் செய்து போடவோ அண்ணி இருக்கிறார்கள் அவருக்கு. என்ன அவசரம் இப்போது? நாலு மாதம்தான் இருந்துவிட்டுப்போயேன் – உடம்பு தேறியபிறகு..."

"உடம்பென்ன உனக்கு?" என்று கவலையுடன் இடைமறித்துக்கேட்டாள் லோகநாயகி.

"நரம்புத்தளர்ச்சியாம், உடம்பில் ரத்தமில்லையாம், ஓய்வாக இருந்து மருந்தும் புஷ்டியான ஆகாரமும் சாப்பிட வேண்டும் என்கிறார் டாக்டர்"

இப்போது எப்படியிருக்கிறது தேவலையா சற்று?"

"என்னத்தை தேவலை? போனமாசம் ஐம்பது ரூபாய்தான் அனுப்பியிருந்தார். அதில் நான் மருந்துவாங்குவதா, டாக்டர் 'பில்' கொடுப்பதா, புஷ்டியான ஆகாரம் சாப்பிடுவதா..."

"என்ன அகிலாண்டம், எனக்கு ஒரு வரி இன்ன சங்கதி என்று எழுதியிருந்தால் நான் தாராளமாக அனுப்பியிருக்கமாட்டேனா உனக்கு?"

"எப்படி அனுப்புவீர்கள்? பள்ளிக்கூடச் சம்பளம், வாடகை, பால், புரொவிஷன் என்று வரவுக்கும், செலவுக்கும் சரியாக இருக்கிறதே!" என்றாள் மனஸ்தாபமிகுதியால் வெடுக்கென்று!

சாட்டையடி வாங்கியதுபோல பொறி கலங்கி நின்றுவிட்டாள் லோகநாயகி. இந்த அஸ்திவாரமெல்லாம் எதற்கு என்பது அவளுக்கு பளிச்சென்று புலனாகிவிட்டது!

அவளும் அதே குரலில் "நன்றாக இருக்கிறதே அகிலாண்டம் உன் உடம்பு சுகம்தான் எனக்கு பிரதானமே ஒழிய அதெல்லாமன்று. சரி! நடந்ததுபற்றி இனியென்ன, சாயந்திரம் டாக்டரை வரவழைத்துப் பார்த்து, வேண்டியதைச் செய்வோம், போய் பல்துலக்கிவிட்டுவா, காபி கலக்

கிறேன்" என்று சொல்லிச் சமையலறைக்குச் சென்றாள் லோகநாயகி,

அகிலாண்டமோ, கொல்லைப்புறம் போனவள் பல்துலக்கிக்கொண்டு நேராக மாடிக்குப் போய் விட்டாள்! அங்கேயிருந்த 'ஹீட்டரி'ல் கூஜா விலிருந்த பாலைச் சுடவைத்து ஓவல் தயாரித்து அருந்திவிட்டு படுக்கையைப் பிரித்துப் படுத் தாள்.

நினைவுகள் சுழல ஆரம்பித்தன!

"அம்மா சொன்னது சரியாகத்தான்போய்விட் டது! விழுந்து விழுந்து உபசரிப்பதும், தாங்குவ தும் என் புருஷனுடைய சம்பாதனையைச் சுரண் டத்தான்! இந்தப் பாசாங்கை நிஜமென்று நம்பித்தான் நாலு வருஷமாக, பைத்தியம்போல, பணத்தையும் கொட்டிக் கொடுத்து, உடலா லும் உழைத்து, அடடா! என்னைப்போல இப்படி ஒரு ஜடம் உண்டா உலகில்? அம்மா இடித்துக் காட்டுகிறாள் என்றால், அது நியாயம்தானே! ஒரு காசா, இரண்டு காசா? மாதம் பிறந்தால் சுளையாக ஐந்நூறு ரூபாய் சம்பளம் வருகிறதே, பாங்கில் ஒரு நூறு ரூபாய் உண்டா? ஒரு அவ சரம், ஆபத்து என்றால் உபயோகப்படும்படி? வருவதற்கு முன், வாடகை, பால், புரொவி ஷன், பள்ளிக்கூடச் சம்பளம் என்று மொத்தம் மொத்தமாக எண்ணிக் கொடுத்தாகிவிடுகிறது! என்ன என்று கேட்டுவிட்டால், என்னை ஆளாக் கியது அண்ணன். அன்னமிட்டு ஆதரித்து வளர்த்தவள் அண்ணி. அவர்களுக்கில்லாமல் வேறு யாருக்கு நான் செய்யவேண்டும் என்று கேட்கிறார், ராஜாங்கமாக! வளர்த்து, படிக்க வைத்துவிட்டால், அதற்காகஆயுள் முழுவதும் கடமைப்பட்டு, பணத்தாலும்...,

"அகிலாண்டம், வெந்நீர் சுட்டிருக்குது, குளி, சாப்பிடலாம்—சமையல் ஆறிப்போகுமுன்னே" என்ற அழைப்புடன் அங்கே தோன்றினாள் லோகநாயகி.

"எனக்கு ஒரே தலைவலி, ஒண்ணும் வேண் டாம்"

"அடடா! ஏனப்படி? ராத்தூக்கமில்லை. காபி கொண்டுவரேன் சூடாக. ஒரு ஸாரிடோனோ, அநாசினோ போட்டுக்கொள்."

"என்னை சும்மா விட்டுவிட்டால் போதும் அக்கா, நான் என்ன சம்பந்தியா உபசாரம் பண் ணுவதற்கு? வேணுமென்றால் நானே கேட் கிறேன்; நீங்கள் போய்ச் சாப்பிடலாம். பசிக் கும்போது வந்து நான் சாப்பிட்டுக்கொள்ளு கிறேன்" என்றாள் அகிலாண்டம்.

அதற்குமேல் அங்கே நிற்கப் பிடிக்கவில்லை லோகநாயகிக்கு. அகிலாண்டத்தின் குத்தலான பேச்சும், வெடுவெடுப்பும் கண்டு முகம் விழுந்துவிட்டது அவளுக்கு.

"நான் இவளுக்கு என்ன தீங்கிழைத்தேன்— என்மீது இவ்வளவு ஆத்திரம் கொள்வதற்கு? வந்ததிலிருந்து 'கடுகடு'வென்றே இருக்கிறாளே! நான்கு வருஷங்களாக இல்லாத வேற்றுமை இன்று ஏற்பட என்ன காரணம்?

அப்புலிங்கம் சந்தேகித்ததுபோல அவளுடைய தாயார்...வைத்த வத்திதான் அவளை இப்படிப் பேசச் செய்கிறதோ?

அப்படியிருந்தால் இனி ஒருமித்த குடும்ப வாழ்வு என்பது சாத்தியமா?

பூனைக்குட்டி காலைச்சுற்றுகிறமாதிரி 'அக்கா அக்கா' என்று என்னைச் சுற்றிச் சுற்றி வருபவள் இன்று என்னை நிமிர்ந்து பார்த்துக்கூடப் பேச வில்லையே!" என்று நினைத்தபொழுது லோக நாயகிக்கு அழுகையே வந்துவிட்டது.

அவள் கலியாணமாகி புருஷன் வீட்டுக்கு வரும் போது அப்புலிங்கத்திற்குப் பத்து வயது. பிறக் கும் முன்பே தந்தையையும், பிறந்த ஓராண்டுக் குள் தாயையும் இழந்துவிட்டவன் அப்புலிங்கம்.

லோகநாயகியின் புருஷன் சிதம்பரம் தான் தாயாகவும், தந்தையாகவுமிருந்து அந்தத் தம்பியைப் பாடுபட்டு வளர்த்தான்! வீட்டில் வேறு யாருமில்லாமல் ஆடிட்டர் ஆபீசிலும் வேலை செய்து கொண்டு. கைக்குழந்தையையும் வைத்துக் கொண்டு அவன்பட்ட அவதியைத் தனியாக ஒரு அத்தியாயம் எழுதவேண்டும்!

அவனுக்குப் பத்து வயதாகும் சமயம்தான் சிதம்பரம் லோகநாயகியை மணந்து வீட்டுக் கழைத்து வந்தான்.

அவள் சம்சாரி வீட்டில் பிறந்த பெண்ணாகை தால், அப்புலிங்கத்தை அளவிலா அன்பைச் சொரிந்து வளர்த்து வந்தாள். வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி தனது புருஷன் கொண்டு வரும் நூறு ரூபாய் சம்பளத்தில் அப்புலிங்கத்தை பி.ஏ., வரையில் படிக்க வைத்தாள்!

கேட்பவர்களுக்கு 'எங்கள் அப்பு படிப்பு முடிந்து ஒரு வேலையானதும் நல்லபடியாக ஒரு பெண்ணைக் கலியாணம் பண்ணி வைத்து விட்டால் என் பொறுப்புத் தீரும்' என்பாள். படிப்பும் முடிந்தது. வேலையும் ஆயிற்று, நல்ல- அதாவது கண்ணுக்கு அழகான-பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்துவிட்டாள் லோகநாயகி.

அப்புலிங்கம் நேர்மையும், வாய்மையும் மிக்க வன். தாயினும் அருமையாகத் தன்னை வளர்த்த லோகநாயகியிடம் அபிமானமும், பணிவும் கொண்டு அவள் இட்ட கட்டளைப்படியே நடப் பவன்.

லோகநாயகிக்கு நாலைந்து குழந்தைகள். சிதம் பரத்தின் வருவாய் நூற்றிருபது ரூபாய்! மாதம் தோறும் எடுக்கும் ஜவுளிக்கடைக்கு அது சரி யாகப்போய்விடும்! எனவே, தனது வருவாயைக் கொண்டே குடும்பத்தை நடத்திவந்தான் அப்புலிங்கம்.

அப்புலிங்கமும், தன்னை ஆளாக்கிய அவர்க ளிருவரையும் தெய்வமாகக் கருதிப் போற்ற வேண்டும் என்று மனைவிக்கு தினசரி உபதேசம்



## அவன் 'ஸான்பொரைஸ்ட்' அடையாளமுள்ள துணி மட்டும் வாங்கியிருந்தால்...

உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கிப்போய் இறுகப் பிடிக்கும் உடைகள் அணிந்து நீங்கள் அவஸ்தைப்பட வேண்டியதில்லை! நீங்கள் பருத்தி துணியோ அல்லது ரெடி மேட் உடைகளோ வாங்கும்பொழுது, அவைகளில் 'ஸான்பொரைஸ்ட்' ('Sanforized') அடையாளமிருக்கிறதா வெனக் கவனிக்கத் தவறாதீர்கள். இந்த அடையாளமிடப் பட்ட துணிகளில் தைய்த்த உடைகள் அநேக சலவை களுக்குப் பிறகும் உடம்புக்கு பொருந்தாதபடி சுருங்காது!

லேபிலில் 'ஸான்பொரைஸ்ட' அடையாளம் இருந்தால் உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒரு பொழுதும் சுருங்காது!

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ.. இன்கார்ப்பரேட்டட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த கம்பெனியின், சுருங்காது என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப் படும் துணிகளில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விபரங்களுக்கு: 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ்,
95, மெரீன் டிரைவ், பம்பாய்-2



செய்வதோடு—லோகநாயகியின் அன்பு உள்ளத்திற்கு வசப்பட்டும், குடும்பத்திற்கு ஏற்ற பெண்ணாகத்தான் இருந்தாள் நேற்றுவரையில்!

ஆனால் இன்று?

இதெல்லாம் வரிசை வரிசையாக நினைவின்முன் எழுந்தது லோகநாயகிக்கு. அகிலாண்டத்தைப் பட்டினி வைத்துவிட்டு, தான் மட்டுமாகச் சாப்பிட அவளுக்கு மனம் வரவில்லை!

நெஞ்சை எண்ணங்களுக்கு இரை கொடுத்து படுத்திருந்தாள் கூடத்து ஊஞ்சலில்.

மணி பத்து, பதினொன்று, பனிரெண்டு என்று நகர்ந்துகொண்டே சென்று மூன்று மணி அடிக்கும் தருவாயில் வேலைக்காரி வந்து "பத்து போடலையாம்மா?" என்று கேட்ட பிறகுதான் சுய உணர்வுபெற்று எழுந்தாள் லோகநாயகி.

இன்னும் சாப்பாடு ஆகவில்லை—அது இது என்று அவளிடம் என்ன சுக, துக்கம் கூறி ஆற்றிக்கொள்வது?

மௌனமாக எழுந்துசென்று பாத்திரங்களை ஒழிக்கலானாள். அதற்குள் மாடியைப் பெருக்கி விட்டு வரலாம் என்று போனாள் வேலைக்காரி.

ஒழிந்த ஏனங்களைக் கொண்டுவந்து தேய்க்கப் போட்டாள் லோகநாயகி.

மாடி பெருக்கச் சென்ற வேலைக்காரி, எவர்சில்வர் 'டிபன் காரியரு'டன் இறங்கி வந்தாள்.

அவள் முகம் தாமரை மலராகத் தென்பட்டது. டிபன்காரியரிலிருந்த புளியஞ்சாதமும், தயிர்சாதமும் நிறமும், மணமும் கொண்டு சாப்பிடு சாப்பிடு என்று அழைத்தன.

வேலைக்காரி அவற்றை அள்ளித் தனது பாத்திரத்தில் அடக்கியவாறு 'எம்மாம் முந்திரிப் பருப்பு, நெய், எண்ணெய் யெல்லாம் சேத்து சோறு பெசெஞ்சிருக்காங்க!' என்று அதிசயித்தவாறு பாத்தரங்களை துலக்க முன்வந்தாள் அவள்.

சீயக்காய்ப்பொடி போடவந்த லோகநாயகியிடம் "ஏம்மா, ஏன் மாடியிலே கட்டுச்சோத்தை வச்சுகினு சாப்பிடுதே அம்மா..."

"இந்தா தேவானை, இதெல்லாம் என்ன சங்கதின்னு சொல்லவர்றே? உன்வேலையை ஒழுங்கா செய். மாடியிலே சாப்பிட்டாலென்ன, கூடாதா?

"அதுக்கில்லேம்மா, எப்பவும், சமையக்கட்டுலேதானே சாப்பிடும்; ஆபீசுருமுலே சாப்பிடுதேன்னு கேட்டேம்மா! நாராயணா, கடவுளே! எனக்கென்ன தாயீ!..."

"சரி, பேசாம வேலையைப்பாரு" என்று அவளை அடக்கிவிட்டு உள்ளே போய்விட்டாள் லோகநாயகி.

முழுசு முழுசாக சோற்றிலிருந்து எட்டிப் பார்த்த முந்திரிப் பருப்பும், தயிரும் வெண்ணெயும் கூட்டி தளதள வென்றிருந்த தயிர்சாதமும், எண்ணெய் கசியச் செய்திருந்த பக்குவமான புளியோதரையும் சாப்பிட வீட்டிலே குழந்தைகளில்லையா? வேலைக்காரிக்குக் கொடுக்கக் கூடாது என்பதல்ல; குழந்தைகளுக்கு கொடுத்துவிட்டு பிறகு மீந்ததை...சே! எனக்கேன் இந்த அற்பபுத்தி?

அன்று! லோகநாயகி தீர்மானித்தது பிசகு!

அவள் புத்தி அற்பபுத்தி யல்ல! நாள், கிழமையென்றாலும்சரி, வேலைக்காரி 'பசி' என்று கேட்டாலும் சரி. தனக்கென உள்ளதையும் கூட்டி தாராளமாகக்கொடுப்பவள்.

தன் குழந்தைகளுக்குக் கொடுப்பதைவிட, வேலைக்காரிக்குக் கொடுப்பதே சிறந்தது எனக் கருதினாளோ அகிலாண்டம் என்பதைத்தான் அப்படித் தவறாக நினைத்துவிட்டாள்!

மாலையில் பால் வந்ததும் அதைக் காய்ச்சி ஒரு பாத்திரத்தில் விட்டு கொண்டுபோய்க்கொடுத்து

விட்டு 'இரவுக்கு உனக்கு என்ன செய்ய அகிலாண்டம்?' என்று கேட்டாள் லோகநாயகி.

"இந்தப் பாலே போதும், வேறே ஒண்ணும் வேணும்.

"மிளகு ரசம் வைக்கிறேன், ஒருவாய் சாப்பிடேன்; மத்தியானம்கூடப் பட்டினியாச்சே?"

"என்ன செய்கிறது சோறு இறங்கினுல் தானே?"

"ஜவ்வரிசி..."

"வேணுமானுல் கேட்கிறேன். தலைவலி மண்டையைப் பிளக்கிறது...? என்று மட்டும் இழுத்தாப்போல கூறி அகிலாண்டம் நிறுத்தியதில் 'நீ கீழே இறங்கிப் போனுல் போதும்' என்ற அர்த்தம் தொக்கிநின்றது.

சரி, இரண்டாம்தடவையாகக் கிடைத்த மரியாதையா இது? என்றெண்ணிக்கொண்டே இறங்கி வந்தாள் லோகநாயகி.

துக்கத்தினுல் அவள் நெஞ்சம் வெடித்துவிடும் போலாகிவிட்டது! நம் புருஷனுக்குப் போதிய வருவாயிருந்து, நாம் தனியாக இருந்திருந்தால் இன்று இந்த 'சின்னத்தனத்'தை ஏற்கவேண்டி வராதே.

அப்புவோ நேற்று தான் காம்ப் போயிருக்கிறன், வர இரண்டு வாரமாகும். இருந்திருந்து இவ்வளவு வேலையில் இவனுக்கு இந்த எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் ஆபீசர் உத்தியோகமா கிடைக்க வேண்டும்? மாதத்திலே இருபது நாள் வெளியூர் வாசம் அவளோ வயதுப் பெண் அவள். மனதில் எந்தவிதக் குறையோ என்ன வேதனையோ யாருக்குத் தெரிகிறது; அவளும் வந்து நாலு வருஷமாகிவிட்டது, ஒரு குழந்தையென்று இன்னும் பிறக்கக் காணோம்...



எண்ணங்களுடே சுழன்றவாறு இராச் சமையல் செய்தாள். சிதம்பரம் ஆபீசிலிருந்து வந்தார்!

அவர் ஒரு மனித மெஷின்! குறித்த நேரத்தில் எழுந்து, குளித்து, உண்டு, தொழில் செய்யப் போவது. வேலை முடிந்தால், வந்து வீட்டு வேலை இருந்தால் செய்வது, சாப்பிட்டுவிட்டு உறங்கச் செல்வது!

கர்மயோகி என்பதன் உபமானமே சிதம்பரம்!

அவரிடம் போய் அகிலாண்டத்தின் மனமாற்றத்தைச் சொல்லி, அவரை அதிரச் செய்ய மனமில்லை லோகநாயகிக்கு. பொறுத்துப் பார்ப்போம் என்று இருந்தாள்!

மறுநாளும் அதே போல கழிந்தது பொழுது.

மூன்றும் நாள் பிற்பகலில் "ஏன் அக்கா, நான் ஊருக்குப்போன போது பூட்டி விட்டுச் சென்றேனே—என் பெட்டி ஒன்றை; —அது திறந்துகிடக்கிறதே..."

அரிவாள்மணையில் வெண்டைக்காய் நறுக்கிக் கொண்டிருந்த லோகநாயகி, திடுக்கிட்டவளாகத் தலைநிமிரும் சமயம், காய்க்கு பதிலாக விரலை நறுக்கவிருந்து 'சதக்'கென்று அறுபட்ட உணர்ச்சியில் விரலை விடுவித்துக்கொண்டு, "பெட்டி திறந்திருக்கிறதா! எந்தப்பெட்டி?"

"எந்தப் பெட்டியா! அப்படிக்கேட்டு விடுங்கள்—தீர்ந்தது பிரச்னை! என் சிகப்பு டிரங்க் இங்கே வைத்துவிட்டுப் போகவில்லை நான்..."

"ஆமாம்"

"இப்பவாவது நினைவு வந்து ஒப்புக்கொண்டீர்களே! அந்தப் பெட்டியை — ஊருக்குப்போகும் போது பூட்டிவிட்டுப்போனேன். இன்று பார்த்

தால் திறந்து கிடக்கிறது. அதற்குள்ளிருந்த வைரபுலாக்கைக் காணவில்லையே!" என்றாள் அகிலாண்டம் ஆக்கிரோஷத்துடன்.

'பகீரெ'ன்றது லோகநாயகிக்கு!

கேள்விக்கு என்ன பதில் சொல்லுவது என்று ஒரு விநாடி தத்தளித்தாள்! பிறகு தனது பதை பதைப்பைச் சமாளித்துக்கொண்டு "அவசரப் படாமல் நிதானமாகத் தேடிப்பார் அகிலாண்டம். பெட்டியை உடைத்துத் திருடக்கூடிய பேர் யாருமில்லை இங்கே."

"பெட்டியை தலைகுப்புறக் கவிழ்த்து, அவசரப் படாமல் நிதானமாகத் தேடிப் பார்த்துவிட் டேன்."

"அதிலில்லையானால் வேறு பெட்டியில் வைத் திருப்பாய்; தேடிப்பார்."

"வேறு பெட்டியில் நான் வைக்கவில்லை. இதில் தான் வைத்துவிட்டுப் போனேன். போகும் போது பூட்டி, இழுத்துப் பார்த்துவிட்டுப் போயிருக்கிறேன்; எனக்கு அசட்டுப் பட்டம் கட்டப்பார்க்கிறீர்களே!" என்று படபடத்தாள் அகிலாண்டம்.

இதுவரையில் தன்னை அடக்கிக்கொண்டிருந்த லோகநாயகிக்குத் தன்னையுமறியாது கோபம் வந்தது. அப்போதும் அதைக் கட்டுப்படுத்தி, "அகிலாண்டம், வார்த்தைகளைக் கொட்டாதே, அப்புறம் அள்ளமுடியாது! நீ ஊருக்குப் போன திலிருந்து வேலைக்காரி மாடி அறைப்பக்கமே போகவில்லை. நான்தான் பெருக்கிவந்தேன். ஆகையால் வைர புலாக்கு காணமல் போக வழியே இல்லை."

"போயிருக்கிறது என்கிறேன் 'போகவில்லை' என்கிறீர்கள்."

"எப்படிப் போகும்?"

"எனக்கென்ன தெரியும்?"

லோகநாயகி தன்னை மறந்தாள்! கண்களிரண் டிலும் அனல்தெறித்தது! 'சாதுமிரண்டால் காடு கொள்ளாது' என்பதுபோல, சாந்தசொரூபியும், அன்புள்ளம் படைத்தவளுமான லோகநாயகி காளியாக மாறி நின்றாள்!

"நீ சொல்வதைப் பார்த்தால் நான் அதை எடுத்திருப்பதாகத்தான் ஆகிறது! என்னைப் பார்த்தா திருடி என்கிறாய்?"

"பூட்டிச் சென்ற என் பெட்டி, திறந்து கிடப்பதை, திறந்து கிடக்கிறது என்று நான் சொல்லக் கூடாதா?" என்று லோகநாயகியைப் பார்த்து சொல்ல தைரியமின்றி, சுவரைப் பார்த்துக் கொண்டு சொன்னாள் அகிலாண்டம்.

"இந்தாடி! இங்கேபார்! தனிக்குடித்தனம் போகவேண்டும் என்பதற்காக என் மீது இவ் வளவு பெரிய பழியைச் சுமத்தி விட்டுப் போக வேண்டாம்!

"ஆமாம்; 'தனிக்குடித்தனம் வை' என்றால் என் புருஷன் உடனே வைத்துவிட மாட்டார்? வியாதிக்கு மருந்து வாங்கப் பணம் கேட்டால் 'இங்கே வா' என்று எழுதினரே—தனிக்குடித் தனம் வைக்கமாட்டார் பின்னே? அதெல்லாம் நான் பண்ணிய புண்ணிய பலன், உங்களைச் சொல்லி என்ன செய்ய? புருஷன் சம்பாதனைத் தான் நமக்குச் சொந்தமில்லை, இந்த புலாக்கை யாவது விற்று, வைத்தியம் பார்த்துக் கொள்ள லாம் என்று பார்த்தால்...

"அதையும் நான் திருடிக் கொண்டு விட்டேன்! இல்லையா?" என்று கண்களை உருட்டி விழித் தாள் லோகநாயகி.

"யார் திருடினர்கள் என்று நான் பார்த்தேன்; ஆகமொத்தம் வைத்த சாமான் இல்லை!"

லோகநாயகியின் படபடப்பு அதிகரித்தது. கோபாவேசத்தால் அவள் உடல் நடுங்கியது!

"வைரபுலாக்கைப் பெட்டியில் வைத்துப் பூட்டி இழுத்துப் பார்த்துவிட்டுப் போனாய், இப்ப வந்து பார்த்தால் பெட்டி திறந்திருக்கிறது வைரபுலாக்கு களவு போயிருக்கிறது! இல்லையா?"

"ரொம்ப மிரட்டாதீர்கள். அவரவர்கள் உடமை காணவிட்டால் கேட்கத்தான் கேட் பார்கள்!"

"நீயும் கேள்! அகிலாண்டம், அப்புவை என் பிள்ளையாக நினைத்து வளர்த்தேன்......"

"அதுக்குத்தான்......"

"அதுக்குத்தான், இதுவரை சம்பாதித்துக் கொடுத்தது போதும், அதுக்கும், நீ சொல்லுகிற பழிக்கும் சம்மந்தமில்லை. இதோபார்! நிலத்தில் ஊர்ந்து போகிற எறும்புக்குக்கூட இரக் கப்படுபவள் நான்! எனக்கு நாலு பெண்ணுக்கு நடுவில் ஒரு பிள்ளையிருக்கிறது! நாளைக்கு மறு நாள் முத்தாலம்மனுக்குப் 'படுகளம்' போடுகிற விழா. என் மகனைப் படுகளத்தில் போடுகிறேன். கொளுத்திய கற்பூரம் அணைக்குமுன்னே பிள்ளை யைத் தூக்கினல் பிள்ளை நம்முடையது. தூக்க வில்லை – பிள்ளை ஆத்தா, முத்தாலம்மானுக்கு.

தூக்காமல் என்பிள்ளையை படுகளத்தில் கிடத் துகிறேன். உன் வைரபுலாக்கை எடுக்காதிருந் தால், அந்த மகாசக்தி எனக்கு பிள்ளையைக் கொடுக்கட்டும். எடுத்திருந்தால் என் பிள்ளை ஆத்தாள் படுகளத்திற்குப் பலியாகட்டும். இது என் தாலிப்பிடிச்சு நான் வைக்கிற ஆணை. ஏ, முத்தாலம்மா! நான் பத்தினி என்றால் இதைச் செய்து முடிப்பேன். தாயே, அவனேடு நான் பட்டபாட்டுக்கு இதுவா வெகுமதி, தாயே! உனக்கு இது சம்மதமா?" என்று ஆவேசம் வந்தவள்போலப் பொழிந்தாள் லோகநாயகி.

மூன்று நாட்களாக மனதில் பொங்கிய துக்கம் விம்மி, வெடித்து, விசித்துக்கொண்டு கண்ணீர் பிரவாகத்தோடு வெளிவந்தது.

ஆபீசிலிருந்து வந்த சிதம்பரம் யாவற்றையும் பார்த்து மரமாக நின்றுவிட்டு, கடைசியில்

மனைவியின் அருகில் வந்து, "லோகா, என்ன உனக்கு இவ்வளவு ஆத்திரம்? உண்மையில் நீ திருடவில்லை என்பது உன் மனசுக்கும், அவள் மனசுக்கும் கூடத் தெரியும்! உன் சண்ணிலே யிருந்து தண்ணீர் உதிரக்கூடாது, உள்ளே போ. அப்பு வந்தால் அது சம்மதிக்காது. அதனாலே அது வரும் முன்னே நாம் வேறே இடத்துக்கு ஜாகை மாற்றிவிடலாம். ஊர் சிரிக்கவேண் டாம்" என்றார் ரத்தனச்சுருக்கமாக!

"ஜாகை மாற்றுங்கள், சாமான் மாற்றுங்கள் உங்கள் இஷ்டம். நாளையன்று முத்தாலம்மன் 'படுகள' விழா. அதில் என்மீது சார்ந்த பழி இரண்டில் ஒன்று முடிவாகும்.

"லோகா! ஆத்திரத்தில் அறிவு மழுங்கிவிட் டதா உனக்கு? படுகளத்தில் நம் இனத்தார் பிள்ளைகளைப் போடும் வழக்கமில்லை!"

"சத்தியத்துக்கு, இனம், பாஷை இதெல்லாம் கிடையாது! சர்வ சக்தி படைத்த அந்த கலியுக வரப்பிரசாதியின் சன்னிதியில் என் மெய்ம்மை வெளிப்படவேண்டும்" என்று அடித்தொண்டை யில் கத்தினாள் லோகநாயகி!

வீடே கிடுகிடுத்தது அந்தக் கத்தலில்!

புனைந்துரை செய்த அகிலாண்டம் ஆடிப் போனாள் ஒரு கணம். இவ்வளவு நேரமாக முயற்சித்து, ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "என் உடமை போயிற்று, நகை போயிற்று என்று சொன்னேன். பிள்ளைகுட்டி யிருந்தால் இப்படியெல்லாம் ஆகாத்தியம் செய்ய வேண்டுமா என்ன? பொருள் போனால் பீடை விட்டது என்று இருக்கலாம். பிள்ளையைப் படுகளத்தில் போட்டு, பலிகொடுத்து,' என்னை வாழாவெட்டியாகத் துரத்த நினைப்பாக்கும்,— பழித் தீர்த்துக்கொள்ளுங்களேன்"

"அடி அகங்காரி! நீ பேசவில்லை! நீ பெற்ற உபதேசம் அப்படி பேசச் சொல்லுகிறது! உன்னை வாழாவெட்டியாக்காமல் வாழவைக்கும் பொறுப்பு என்னுடையது! பயப்படாமல் இரு." என்று உரக்கச் சொன்னாள் லோகநாயகி.

2

மறுதினம் யந்திரம் போல நடமாடினாள் லோக நாயகி. அவள் சுபாவமே அவளிட மில்லை! பச்சைத் தண்ணீர்கூட பல்லிலேவிடாத சுத்தப்பட்டினி.

முத்தாலம்மன் ஒரு கிராமதேவதை. வருஷத் திற் கொருமுறை அதற்குத் திருவிழா நடக்கும். திருவிழா முடிவன்றுதான் 'படுகளம்' நடக்கும் பெருநாள்.' விவசாயிகள் தங்கள் மக்களுக்கு மீளாப்பிணியுற்ற காலத்தில் வியாதி குணம டைந்தால் 'படுகளம்' போடுவதாக நேர்ந்து கொள்வார்கள்.

உண்மையிலேயே 'படுகளம்' ஒரு பயங்கரமான விழாதான்; படுகளத்தில் கிடத்தவேண்டிய பிள்ளைகளை பகல் பன்னிரண்டு மணி வேளைக்கு முத்தாலம்மன் சன்னிதிக்கு அழைத்து வருவார் கள். நாலு மூலைக்கு நாலு பிள்ளைகள் தான்போட வேண்டும். குழந்தைகளின் தாயோ, தகப்பனோ நின்று கொண்டதும், அவர்களின் கால்மீது குழந்தைகளின் தலையை வைத்துப் படுக்க வைப்பார்கள். கைகால்களை நீட்டிக் கொண்டு மல்லார்ந்தபடி பிள்ளைகள் சன்னிதியின் நாலு மூலைகளில் கிடத்துவார்கள்! வாழைப்பழத்தை உரித்து, குறுக்குவாட்டில் குழந்தையின் வாயில் கவ்வக் கொடுத்துவிட்டு, முத்தாலம்மனுக்குப் பூசை நடக்கும். பூசை ஆகும் வரையில் பிள்ளை களுக்கு சுயநினைவு இராது! காலிலே பிள்ளை களைக் கிடத்திக்கொண்டிருக்கும் தாயோ, தகப் பனோ நெஞ்சு பதைக்க கற்பூர தீபாராதனை எடுக்கப்போகும் வினாடியை எதிர்பார்த்து பிள் ளைகளைத் தூக்கக் கைகளைத் தயாராக வைத்துக் கொண்டு நிற்பார்கள். பூசாரியின் கற்பூர மேந்திய கை உயரும் சமயம் சடக்கென்று கிடத் தியிருக்கும் குழந்தைகளைத் தூக்கி உலுக்கி நிறுத்திவிடுவார்கள். கற்பூர தீபாராதனைத் தொடக்கத்திலே தடுமாறியோ, வேறு இடை யூறினாலோ பிள்ளைகளை எடுக்கத் தவறினால்அவை படுகளத்திற்கு பலியாகிவிடும். இது இன்றும் நடைபெறும் உண்மை சம்பவம்.

இந்தமுத்தாலம்மன் விழா படுகளத்தில் கற்பூர தீபாராதனை தாண்டி, வழக்கத்திற்கு மாறாக தனதுபிள்ளை உயிரோடு மீண்டால்தான் தன்மீது சார்ந்த பழி பொய்யாகும் என்ற சூளுரை அகிலாண்டத்தைச் செயலறச் செய்துவிட்டது. பயம், கவலை, அபகீர்த்தி எல்லாவித உணர்ச்சி களாலும் பாதிக்கப்பட்டு பிசாசுபிடித்தவளைப் போல கதிகலங்கி உட்கார்ந்துவிட்டாள்.

"கற்பூர தீபாராதனை சமயம் பிள்ளையை எடுக் காவிடில்? ஐயையோ, வமிசத்திற்கு ஒரு பிள்ளை! தன் கணவனுக்குத் தகவல் தெரிந்தால் தனது கதி என்னவாகும்? கடவுளே, பெண்ணுக்குக் கேடு பிறந்தகத்தார் என்பதுபோல, பாழும் அம்மாவின் போதனையால் இப்படி ஒரு இக்கட்டு நேர்ந்துவிட்டதே! யார் எந்த அவதூறு பேசி னாலும் 'சொன்னால் சொல்லிவிட்டுப் போகிறார் கள்' என்று தள்ளிவிடுபவள் இன்று பத்திர காளியாக மாறி இப்படிப்பட்ட கோரமான சபதமா பண்ணுவாள்? ஐயோ, என்விதியே! நான் என்ன செய்வேன்? வெட்கம் கெட்டா லும் சரி என்று அவள் காலில் விழுந்து 'குழந் தையைப் படுகளத்தில் போடாதே' என்று கெஞ்சினாலும் இனி அவள் கேட்பாளா?

"தாயே முத்தாலம்மா! பச்சைக்குழந்தை ஆறு வயது பாலகனை அநியாயமாக......" அதற்குமேல் அவளால் சிந்திக்கவே முடியவில்லை,

கிருஷ்ணவதாரமாகத் துலங்கும் குழந்தை! வேணுகோபாலன்.

"என் தங்கமே," என்று துடிதுடித்தது அவள் உள்ளம்.

கொஞ்ச விளையாட்டா? குவளைக் கண்களில் குறும்பு கொப்பளிக்க அவன் சர்க்கரைத் திருடித் தின்னவரும் ஜாலம்! அள்ளிக்கொண்டு ஓடும் விசை! இதெல்லாம் நினைத்து, பொங்கிப் பொங்கி அழுதாள் அகிலாண்டம்.

"தாயே, முத்தாலம்மா, என்னவோ நினைத்து ஏதோ செய்யப்போய், இப்படி குழந்தையின் தலையில் வந்து விடிந்ததே விதி!

இல்லை! கூடாது! நானும் உன் சன்னிதிக்கு வருகிறேன். பொய் சொன்ன என் நாவைப் பொசுக்கி புழுக்கச்செய்! என் உயிரை எடுத்துக்கொள்; ஏதாகிலும் செய்; அந்தக் குழந்தையை, நான், நீராட்டி, மை இட்டு, அன்னமூட்டி, தாலாட்டி வளர்த்த செல்வத்தைக் காப்பாற்று; உயிர்ப்பிச்சைக் கொடு.

என் தாயைவிட அருமையாக என்னை வைத்துக்கொண்டிருந்த உத்தமிமீது சொன்ன பழிக்குக் கைமீது பலன் கிடைத்துவிட்டது.

ஐயோ, இதற்கெல்லாம் பிறகுகூட என்னை அவர் வீட்டில் வைத்திருப்பாரா?"

"கடவுளே!" என்று துக்கமிகுதியால் உணர்வற்றுப் படுக்கையில் சாய்ந்தாள் அகிலாண்டம்.

3

ஏமவாதனையாக மறுநாள் பொழுதும் கழிந்து மூன்றும்நாள் பொழுது புலந்துவிட்டது.

எந்த வேகத்தில், கோபத்தில் சபதம் செய்தாளோ, அதே வேகமும், கோபமும், துளிகூடத் தணியாமல் எப்பொழுது படுகளம் போடும் நேரம் வரும், என் குல மதலையை சத்தியத்துக்கு முன்பு பணயம் வைத்து நான் வெற்றி பெறுவேன் என்று துடிதுடித்தவளாக உணவும் ஊனும் மறந்தவளாக ஆவேசத்தோடுகூடவே இருந்தாள் லோகநாயகி!

மனைவியை என்றுமே இந் நிலையில் காணாத சிதம்பரம் எதுவுமே பேசத் தோன்றாமல், 'ஆண்டவன் சித்தம் போலும்!' என்று மெல்ல, ஆனால் பெருமுயற்சியுடன் பிள்ளைப் பாசத்தையும் மனதிலிருந்து அகற்ற முயன்றுகொண்டிருந்தார்!

முடிகிற காரியமா அது! 'அப்பா' என்று ஓடி வரும் செல்வனைக் கண்டு அவர் உள்ளம் பதறும்! அதுசமயம் தமது மனைவி பெண்ணல்ல, ஒரு பேய்! என்ற எண்ணம் எழுந்து அவரை சித்திரவதை செய்யும்!

இதெல்லாம் நடந்தது, நல்லதோ, கெட்டதோ நேருமுன்பு தமது தம்பி வந்துவிடக்கூடாதே! என்று பயந்தார் சிதம்பரம்!

அன்று காலையில் பத்துமணி சுமாருக்கு, பரட்டைத்தலையும், பம்பைவேஷமுமாக பதறிப் பாய்ந்துகொண்டு டாக்ஸியிலிருந்து இறங்கி ஓடிவந்த அப்புலிங்கம்..." அண்ணி! இதெல்லாம் என்ன? நான் சாகவேண்டுமென்று இருந்தால் 'அப்பு நீ செத்துப் போய்விடு', என்றால் போய் விடமாட்டேனா? என் அருமைக் குழந்தையைப் படுகளத்தில் போட்டு—நான் பார்ப்பதா? நான் என்ன தவறு செய்தேன் உனக்கு?" என்று அலறியபடி லோகநாயகியின் கால்களில் தடாலென்று விழுந்தான்.

லோகநாயகி சிலையாகச் சமைந்துவிட்டாள்!

சிதம்பரம் முன் வந்து தம்பியைத் தூக்கியெடுத்து, "அப்பு இதெல்லாம் நாமாகச் செய்வதல்ல! ஊழ்வினையின் பயன்! சும்மாயிரு. வருவதை ஏற்றே தீரவேண்டும்".

"ஏன் ஏற்கவேண்டும். இவ்வளவுக்கும் காரணமான அந்த ராட்சசி எங்கே? படுகளத்தில் அவளையல்லவா போடவேண்டும்—என் தாயின்மேல் சொன்ன பழிக்கு?" என்று கோபாவேசத்தோடு எழுந்து மாடிக்கு ஓடினான் அப்புலிங்கம்!

"டேய் அப்பு" என்று கூவினாள் இதுகாறும் கற்சிலையாக இருந்த லோகநாயகி.

திரும்பிநின்றான் அவன்.

"வா இங்கே. ஆணை, நீ மாடியேறக்கூடாது, முத்தாலம்மன் அருள் என்ன என்பது தெரிந்த பிறகு எல்லாம் செய்வோம். நீ என்னைத் தாயாக மதித்து நடப்பது உண்மையானால் என் கட்டளைக்குக் கட்டுப்படு!" என்றாள் லோகநாயகி!

அப்புவின் உள்ளம் பதைத்தது! உடம்பு அவன் வசமற்றுத் தள்ளாடியது! மறுவார்த்தை பேசாமல் கேணியருகில் சென்று தலைமுழுகிவிட்டு பன்னிரண்டு மணி படுகள விழாவுக்குப் பத்தரை மணிக்கே அங்கே ஆஜராகி முத்தாலம்மன் முன் நின்றான் அப்பு!

அரூபியாக அண்டமெல்லாம் திரியும் மகா சக்தி, திருவிழாவுக்கு என்று குயவன் செய்த உருவாரத்தில் உயிர்கொண்டு கோயிலில் நின்றிருந்தாள். அத்தேவியின் முன் கைகுவித்து "தாயே! உன் தரும நியாயத்தை இன்றுதான் பார்க்கப்போகிறேன். பத்தினி என்றால்–உத்தமப் பத்தினி என் அண்ணியார்! ஜீவராசிக்குத் துன்பமேற்படுவதைக் கண்டு சகியாத மகோபகாரி! அவளுடைய ஒரே குலமதலையை இன்று உன் சன்னிதியில் படுகளம் போடுகிறாள்!

"போடுவதோடு கற்பூரம் அணைந்தபிறகுதான் பிள்ளையை எடுப்பாளாம்! அப்போது நீ பிள்ளைக்கு உயிர் கொடுத்தால் அவள் சத்தியவதி; நீயும் ஒரு கிராம தேவதையாக இருக்கத் தகைமையுடையவள்.

"இல்லை, வழக்கப்படி, தீபாராதனைக்குச் சரியாகத் தூக்கி நிறுத்தாத பிள்ளைகள் கதிக்கு என் அண்ணியின் குழந்தையும் ஆளானால் அநியாயமாக உன்கோயில்பாழடைந்து போகும், என் அண்ணியின் வயிற்றெரிச்சலால்!

"ஆமாம் சொல்லிவிட்டேன்! பார்த்து செய்! உன்சம்பிரதாயச் செயலுக்காக—

"கிராமதேவதையே சாவகாசமாக யோசி! என் வேணுக்கண்ணுவைக் காப்பாற்றிவிடு. அடுத்த வருஷம் கோலாகலமாக, அமோகமாக உனக்கு விழா நடத்துகிறேன்!"

இப்படி உள்ளம் உருக மனதால் அந்த தேவதையிடம் மன்றாடிக் கொண்டு மெய் மறந்து நின்றான் அப்புலிங்கம்!

* * *

மணி பன்னிரண்டு.

சரியாக உச்சிவேளைக்கு தாரை, தப்பட்டைகளும், கொம்புகளும் செய்த முழக்கத்தால் திசைகள் அதிர்ந்தன!

பூமாலைகளாலும், புத்தாடைகளாலும் அலங்கரிக்கப்பட்ட கிராம தேவதை முத்தாலம்மன் சன்னிதியின் 'படுகள'த்தில் குழந்தைகளைப் போடும் உச்சிவேளை சமீபித்தது!

தெய்வசன்னிதியில் சாம்பிராணி, ஊதுபத்திகளின் மணமும் புகையும் சூழ்ந்துகொண்டு 'படுகள' விழாவின் ஆரம்ப அறிகுறியைத் தோற்றுவித்தன!

பூசாரி பெருமாள்தேவன் நீராடி, திருநீறும், குங்குமமும் நெற்றி நிறையப் பூசிக்கொண்டு "ஓங்காரி, பைரவி, வடபத்திரகாளி, வல்லபியே வாடியம்மா! எங்கள் குல தெய்வமே, ஈசுவரி முத்தாலம்மை சக்தியுமை! வாடியம்மா!"

"சக்தி உமை! ஊம்! அப்படியா" என்று குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் பூசாரி பெருமாள்தேவன்!

ஈரத்துகிலும் ஈரக்கூந்தலும் உடுத்து, நெற்றிக் குங்குமம் பளிச்சென்று பிரகாசிக்க, சன்னிதியிலே நின்றுகொண்டிருந்தாள் லோகநாயகி!

ரத்தச் சிவப்பேறிய கண்களில் உக்கிரம் தாண்டவமாட பட்டுடுத்தி, நீறுபூசி, கழுத்தில் பூமாலையணிவித்து வலது கையில் பிடித்திருந்த வேணுவை நோக்கி "வேணு! அம்மையை நன்றாகப் பார்!" என்றாள்!

வேணு சிரித்தான்! "ஓ! பார்த்துட்டேனே!" என்றான் களிப்புடன். பூசாரி பெருமாளுக்கு விஷயம் அரைகுறையாகத் தெரிந்திருந்தது!

ஆதலால் குழந்தையை நேரில் கண்டதும் உள்ளம் பதறியது அவனுக்கு! சட்டென்று முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டு, கணகணவென்று மணியை ஆட்டிப் பூசையைத் தொடங்கினான்!

மனதைக் கருங்கல்லாக ஆக்கிக்கொண்டு இடது கையில் வைத்திருந்த பழத்தை உரித்தாள்; குழந்தையின் வாயைத் திறக்கச் செய்து குறுக்கு வாட்டில் பழத்தைவைத்து தனது கால்களின் மீது குழந்தையின் தலையை வைத்துப் படுக்க வைத்துவிட்டு நிமிரும் சமயம் அவள் உடல் வெடவென்று உதறத் தொடங்கியது!

எதிர்பக்கத்தில் உயிர்துடிக்க நின்றுகொண்டிருந்தான் அப்புலிங்கம்!

எண்ணத்தையெல்லாம் இறைவியிடம் அர்ப்பணித்துவிட்டு நின்றார் சிதம்பரம்!

அகிலாண்டமோ, தலைவிரிகோலமாக ஓடிவந்து சன்னிதியின் கோடியில் நின்று "அம்மே, பாவியான என்னை எடுத்துக்கொண்டு குழந்தையை விட்டுவிடு தாயே!" என்று பரிதாபக் குரலில் வேண்டி நின்றாள்!

பூசை நடக்கும் வரை தன்னைமறந்து நின்றாள் லோகநாயகி! கற்பூர தீபாராதனை யெடுக்கும் சமயம் நெருங்கியதும் மெல்ல அப்பு முன் வந்து குழந்தையின் சமீபம் நின்றான்!

நாலு மூலைக்கும் நாலு பிள்ளைகளைக் கிடத்தியிருந்த தாய்மார்கள் உள்ளம் நடுங்க, கற்பூர தீபம் ஏற்றுவதைக் கவனித்தவாறு நின்றார்கள்!

லோகநாயகிக்கு அந்த பறப்பேயில்லை!

தன் பக்கலில் வந்துநின்ற அப்புவை சினம் பொங்கும் விழிகளால் ஏறிட்டுப் பார்த்து, "நகரு அப்பால்!—பிள்ளையைத்தொட்டாயானால் கொலை விழும் பத்திரம்!" என்றாள் உரத்த குரலில்!

ஏ அப்பா! பெண்ணின் குரலா அது?

கூடியிருந்த கூட்டத்தில் சலசலப்புண்டாயிற்று!

அதோ! அதோ! கற்பூர தீபாராதனை!

"முத்தாலம்மா! நீ இருக்கிறாயா? இருந்தாயானால், என் பிள்ளையும் இருக்குமடீ!"

மற்ற மூன்று பிள்ளைகளையும் தூக்கி உலுப்பி நிறுத்தி வாயிலிருந்த பழத்தை எடுத்தார்கள் தாய்மார்கள்!

கற்பூரத் தட்டோடு வெளியே வந்தான் பூசாரி பெருமாள் தேவன்!

லோகநாயகி முத்தாலம்மை மீது பதித்த பார்வையுடன் உடம்பு மயிர்க்கூச்செரிய நின்றாள்! குழந்தை அசைவற்றிருந்ததைக் கண்டு "ஐயோ" என்று அலறிக்கொண்டு கீழே சாய்ந்தான் அப்புலிங்கம்!

பெருமாள்தேவன் இக்காட்சியைக் கண்டு கற்பூரத் தட்டை கைநழுவ விட்டுவிட்டு,

"சக்தி வடிவான முத்தாலம்மா, இதென்ன பாவமடீ!" என்று அருகில் வந்து நின்று குழந்தையை எடுக்கக் குனிந்தான். கூட்டம் நெருக்கியடித்துக்கொண்டு முன்வந்தது.

"பெருமாள்! இரு! பொறு கொஞ்சம்! தூக்காதே! முத்தாலம்மாளின் நேர்மையைச்சோதிக்க வேணும் நான்! இரு, இரு. பிள்ளை பெரிதல்ல!

மானம் பெரிது! சத்தியம் பெரிது!" என்று இடிக் குரலில் முழக்கினுள் லோகநாயகி.

கூட்டத்தில் சலசலப்பு அடங்கி அமைதி நிலவியது.

பிறகும் பத்து நிமிஷம் பொறுத்து தானுகவே பிள்ளையைத் தூக்கக் குனிந்தாள் அந்தத் தாய்!

"அடி பாவி! வைராக்கியம் வச்சு பிள்ளையைப் பலிகொடுத்திட்டாயே" என்ற அனுதாபக் குரல்கள் எழுந்தன!

பெருமாள் தேவன் சட்டென வாயிலிருந்த பழத்தை யெடுத்துவிட்டு முகத்தில் தண்ணீரை வாரி அடித்தான்! அசைத்துப் பார்த்தான்.

குழந்தை போட்ட கையும், போட்ட காலு மாகக் கிடந்தது!

உள்ளம் நெகிழ குழந்தையைக் கொண்டுபோய் அம்மனுடைய பாதத்தில் கிடத்தி "தாயே, இதுவா உன் கருணை?" என்று வீரிட்டான்!

பெற்ற மனம் துடித்தது!

தன்னை மறந்தவளாக "தேவி" என்று அலறினுள் லோகநாயகி. மெல்ல எழுந்தான் வேணு! சுற்றுமுற்றும் பார்த்து பிரளுவதைக் கண்ட லோகநாயகி ஓட்டமாக ஓடிவந்து அம்பிகையின் அடிகளில் விழுந்து பரவச வெறியால் உரை தடுமாற "என் தாயே, எனக்காக உனது வழிபாட்டுக்கு விரோதமாக கற்பூர தீபாராதனை முடிந்த பிறகும் பிள்ளைக்கு உயிர் கொடுத்தாய்! என் வயிற்றில் பாலே வார்த்த கருணைக்கடலே! உன்னை என்ன சொல்லி துதிப்பதென்றே தெரியவில்லையே" என்று இரு கண்களும் மாரியாக நீர் பொழிய நின்றுள். பிழைத்தெழுந்த பிள்ளையைக்கூடக் கண்ணெடுத்தும் பாராமல்!

எங்கோ ஒரு மூலையில் நின்றிருந்த அகிலாண்டம் குழந்தை பிழைத்துவிட்டதென்ற செய்தி கேட்டதும் கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஓடி வந்து வேணுவை அணைத்து "என் தங்கமே, நீ இருக்கிருயா?" என்று வீரிட்டாள்!

"ஏன் அழுகிறே சின்னம்மா?" என்று அவள் கண்ணீரைத் துடைத்தான் வேணு தனது சின்னஞ்சிறு கரங்களால்!

வேணுவின் குரலொலி கேட்டதும் சுய உணர்வு பெற்றுத் திரும்பிப் பார்த்தாள் லோகநாயகி.

"அக்கா," என்ற ஒரே வாக்கியத்தில் தனது மனத்துயரை யெல்லாம் கூட்டிக் கூவிக் கதறிய லோகநாயகியின் அடிகளில் விழுந்தாள் அகிலாண்டம்.

அது வரையில் ஸ்தம்பித்து நின்றிருந்த அப்புலிங்கம் மனைவியை அங்கு கண்டதும் ரௌத்திராகாரமான கோபத்தோடு வந்து "ஏ பேயே, இங்கேயும் வந்துவிட்டாயா? போ வெளியில்," என்று அவளை நோக்கிப் பாயச் சென்றவனைத் தடுத்து, "அப்பு, என்ன இதெல்லாம்? லோகமாதாவான முத்தாலம்மை நம் அனைவரையுமே காப்பாற்றிவிட்டாள்!"

"அப்பா, பெருமாள்! பிரசாதம் கொடு உன் கையால், நல்லபடியாக வீடுபோய்ச் சேரலாம்" என்றுள் லோகநாயகி அமரிக்கையாக!

வியப்பிலிருந்து இன்னமும் மீளாத பெருமாள் தேவன் திருநீறுப் பிரசாதமளித்துவிட்டு, "அம்மா, அம்பது வருசமாக நானும் இந்தப் 'படுகள'விழா நடத்தறேன், என் தலைமையிலே! இந்த அதிசயம் இன்னிக்குத்தான் பார்த்தேன் தாயே!" என்றுன் மெய்சிலிர்க்க!

"எல்லாம் அவள் அருள்! அகிலாண்டம் குழந்தையை எடுத்துக்கொள்" என்றுள் லோகநாயகி!

---



## காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள்நாடு | | மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு | |
|---|---|---|---|---|
| | ரூ. | நயா பைசா | ரூ. | நயா பைசா |
| ஒரு வருஷம் | 6 | 00 | 7 | 50 |
| அரை வருஷம் | 3 | 00 | 3 | 75 |
| தனிப் பிரதி | 0 | 50 | 0 | 62 |

### நாட்டிய கலா பூஷணம்

# ஸ்ரீமதி நிர்மலா

உஷா



மென்மையான உள்ளம், பகட்டில்லாத அமைதியான தோற்றம், இளமையின் குதூகலம் நிறைந்த பேச்சு, கனிவும், அறிவும் சுடர்விடும் கண்கள், சற்றே அகன்ற முகம், எடுப்பான மூக்கு, கூரிய மோவாய், மெல்லிய உதடுகள், மலர்ந்த புன்முறுவல், வசீகரமான தோற்றம்,... இதுதான் குமாரி நிர்மலா விசுவநாதன்...இல்லை; இனி ஸ்ரீமதி நிர்மலா ராமச்சந்திரன்.

இந்திய பெண்மைக்குரிய அடக்கம், எளிய உடை, ஆனல் கலை உணர்வுடன் இசைந்த வர்ணச் சேர்க்கையை உடைகளில் காணலாம். பழகும் முறை, பேசும் விதம், யாவற்றிலும் எளிமையும், ஆடம்பரமற்ற தன்மையும் வெளிப்படும். செயல்களிலோ, எண்ணத்திலோ உறுதி. கயல் விழிகளிலே லட்சியக் கனவுகளின் சாயல்; எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும், எதையும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் திறனும், நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

கலையும், பண்பும், நிர்மலாவின் அழகிற்கு ஒருவித காம்பீர்யத்தை அளிக்கிறது எனக் கூறலாம். காளிதாசனின் மிகச் சிறந்த உவமையான "வண்டு மொய்க்காத புது மலர்" என நிர்மலாவின் கலையைக் கூறலாம். மேற்கத்திய காற்ருே, 'ஓரியண்டல்' எனும் கதம்ப அவியலின் சாயலோ அக்கலையில் இன்றும் வீசாமலிருப்பதுதான் என்னை இவ்விதம் கூறச் செய்கிறது. திறமை பெற்ற ஓவியனின் தூரிகை அங்கு மிங்கும் இழுக்கும் கோடுகள் அற்புத ஓவியமாக உயிர்பெற்று எழுவதுபோல ஆடல் அபிநயங்களில், ரஸபாவங்கள் பூர்ண பொலிவுடன், உயிர்த் துடிப்புடன் வெளிப்படுகின்றன.

மென்மையும், லலிதமும், குழைவும், ஒய்யாரமும், சௌந்தர்யமும்தான் நடனக் கலைக்கு மெருகேற்றுகின்றன எனலாம். பரதம் ஆடுபவர், பதங்களுக்கு அபிநயம் பிடிக்கையில், மிக மிக நுட்பமான, மதுரமான அசைவுகள், சைகைகள்மூலம் பாடலின் பாவத்தை வெளிப்படுத்துகின்றனர். பரதக்கலைக்கே இணையற்றவராய் விளங்கும் ஸ்ரீமதி பால சரஸ்வதி அவர்கள் அபிநயத்திற்கே சிறந்ததொரு எடுத்துக் காட்டாக விளங்கி வருகிருர். அபிநயத்தில் பாவங்களை மிக நுட்பமான கலைஅழகுடன் வெளியிடுபவர்களில் அவருக்கு பின் ஸ்ரீமதி நிர்மலாவைக்



கூறலாம். பரதநாட்டியத்தை சாஸ்திரீய முறையில் பயின்று, அபிநயப் பகுதியில் மிக்க கவனம் செலுத்தி, நாளுக்குநாள் தம் கலைக்கு மெருகேற்றி வருகிருர் ஸ்ரீமதி நிர்மலா. அரங்கமேடை அலங்காரம், உடை அலங்காரம், ஆடை அணிகள் யாவும் பாரதப் பண்புக்கேற்ற முறையில் அமைத்துக் கொண்டிருக்கிருர்.

"வருகலாமோ ஐயா–நின்னருகில் நின்று ஆடவும், பாடவும்" என்று மெல்லிய குரலில் பாடிக் கொண்டே அரங்கத்துள் நுழையும் போது, புனிதமான ஆலயத்துள் நுழைவது போன்ற உணர்ச்சி ஏற்படு கிறது. ஸ்ரீமதி நிர்மலாவை நாம் காண்ப தில்லை. கணத்திற்கு கணம் மின்னல் போல் பாவங்கள் தோன்றி மறைய, நெஞ் சுருகி, கரைந்து, கண்ணீர் மல்கி நிற்கும் பக்தன் நந்தனைத்தாம் நாம் காண்கிரேம்.

ஆடல், அபிநயங்கள், இனக்கவர்ச்சியை ஊட்டாது, நம் உள்ளத்தை நவரசங்களில் ஆழ்த்தி மெய்சிலிர்க்க வைக்கிறது. பாரதீய பண்பாட்டிலும், நாகரீகத்திலும் ஊறிய நிர்மலாவின் நடனத்தில் நாம் காளிதாச னின் சிருங்காரத்தை, பவபூதியின் மாதுர் யத்தை, பாணபட்டனின் அற்புத கற்பனை வர்ணஜாலத்தை, ஜயதேவரின் லலிதமான பதச்சேர்க்கையை ஒருங்கே காண்கிரேம்.

சொற்கட்டுடன் பேசும் பாதங்களும், அபிநய பாவத்தை உணர்த்தும் அங்க அசைவுகளும், லாகவமாக முத்திரைகளை விளக்கும் கரங்களும் மட்டும் அபிநய பாவத்தை வெளியிட போதுமானவை அல்ல. இசையின் நுட்பத்தை உணர்ந்து, பாட்டின் பொருளை மட்டுமல்லாது அதன் உட்கருத்தையும் உணர்ந்து. இதயத்தில் குமிழிடும் பாவங்களை உணர்ச்சிப் பெருக்குடன், அளவோடு முக பாவத்தின் மூலமும், கண்கள் மூலமும் வெளியிடும் திறனும் அமைந்தால்தான், அபிநயம் காண்பவரின்; ரசிகர்களின் உள் ளத்தை தொட்டெழுப்ப முடியும். இம் முறையில் ஸ்ரீமதி நிர்மலாவின் அபிநயக் கலை இணையற்றது.

கலைக்கே இருப்பிடமானது தஞ்சை. நீடா மங்கலத்தைச் சேர்ந்தவள் நிர்மலா. தாய் வழிப்பாட்டனர், தந்தை வழிப்பாட்டனர் இருவரும் சமஸ்கிருதத்தில் நல்ல ஞான மும், சங்கீதத்தில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர்கள். 1936-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஸ்ரீவிசுவநாதன் தம்பதிகளுக்கு மக ளாகப் பிறந்தார் நிர்மலா. தாய், தந்தை இருவரும் சங்கீதத்திலும், நடனத்திலும் மற்றும் லலித கலைகளிலும், ஆர்வமும் தேர்ச்சியும், ரசனையும் கொண்டவர்களாக யிருப்பதால் நல்லதொரு சூழ்நிலையில் நிர்மலாவின் கலை வளர ஏதுவாயிற்று என்றே எனக்குத் தோன்றியது.

ஓர் இல்லத்தில் நுழைந்ததுமே, அவ் வீட்டுத் தலைவி, அல்லது தலைவனின் ருசிகள், ரசனை, பண்பாடு தெரிந்துவிடும் என்று கூறுவதுண்டு. நிர்மலாவின் தந்தை யின் இல்லம் இதற்கொரு எடுத்துக்காட்டு. எதிலும் புதிய புதிய முயற்சிகளில் ஆர்வ மும், உழைப்பும் காட்டுபவர் அவர் தந்தை என்பது, நூதன முறையில் கலை ருசியுடன் மேற்கத்திய, பாரதீய பாணிகளை இணைத்து அவர் உருவாக்கியிருக்கும் மரச்சாமான் கள் (Furniture) எடுத்துக் காட்டின.

ஒவ்வொரு பொருளும் கலை ருசியுடன் சிறந்ததொரு கலைப்பொருளாக சேகரித்து வைக்கப்பட்டிருப்பது கண்களுக்கு ஒரு விருந்தாகயிருக்கிறது.

சிறுவயதிலிருந்தே நடனத்தில் விருப்ப மிருந்ததால், மைலாப்பூர் கௌரிஅம்மா ளிடம் சிறிதுகாலம் பரத நாட்டியம் பயின் ருர். பள்ளி மேடைகளிலும், விழாக்களி லும் ஆடி, 8-வயதிலேயே பல மெடல் களும் பரிசுகளும் பெற்ருர். பேபி நிர்மலா என்ருல் பள்ளியில் வெகு பிரசித்தம். குழந்தையின் ஆசையைக் கண்ட பெற் ரோர் இண்டியன் இன்ஸ்டியூட் ஆப் பைனர்ட்ஸில் அச்சமயம் பரத நாட்டிய வகுப்பு நடத்திக் கொண்டிருந்த பந்தணை நல்லூர் சொக்கலிங்கம் பிள்ளையின் மேற் பார்வையில் பரதகலையை பயில்வித்தனர். சொக்கலிங்கம் பிள்ளையின் அபார உழைப் பின் பயனுகவும், சிஷ்யையின் திறமை பெற்ற ஆர்வத்தினுலும் சுமார் 1½ அல்லது 2 வருடங்களுக்குப்பின் நிர்மலாவின் அரங்



கேற்றம் 1947ல் நடந்தது. பள்ளிப் படிப்பின் ஊடே, பரத நாட்டியப் பயிற்சி யிலும் கவனம் செலுத்தி வந்த நிர்மலா, பலமுறை சபைகளில் ஆடிவந்தார். மியூசியம் தியேட்டரில் பாலசரஸ்வதி நடத்திய சரபேந்திர பூபாலக் குறவஞ்சி யில் பங்கெடுத்துக்கொண்டார். அந் நிகழ்ச்சிதான் தன் வாழ்வில் மிக முக்கிய மானதென கூறுகிறார் நிர்மலா. ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் பாணியும், சாஸ்திரீய முறையும் அவரைக் கவர்ந்துவிடவே, ஒரு சில பதங்கள் பாலசரஸ்வதியிடமும், பின் மைலாப்பூர் கௌரி அம்மாளிடமும் முறை யாக பதங்கள் பாடம் கேட்டார். 1954-ல் இந்தியாவிற்கு வந்த சீன கலாசார தூது கோஷ்டி, உஸ்பெக் தூது கோஷ்டியினரை வரவேற்று கௌரவிக்கும் முறையில் நடந்த நிகழ்ச்சிகளில் நிர்மலா பங்கு கொண்டார். அலாரிப்பு, வர்ணம், ஹஸ்த முத்திரைகளை சாஸ்திரீய முறையில் ஆடிக் காண்பித்து விளக்கினார். Madame Tai-ai Lien என்ற சீனப் பெண்மணி, பீகிங் நட னக் கல்லூரியின் தலைமை ஆசிரியைக்கு பரத நாட்டிய முறைகளை கற்றுக்கொடுத் தார். 1955-ல் இந்திய சர்க்கார், கலைஞர் களுக்கு அவர்களின் கலையை வளர்த்திக் கொள்ள ஏற்படுத்தியுள்ள உபகாரச் சம்ப ளம் பெற்ற, தமிழ்நாட்டு நடன மணி நிர்மலாவும் ஒருவள். பரதநாட்டியம் மட்டு மல்லாது இவ்விரண்டு வருடங்களில் நட்டு வாங்கமும் செய்யப் போதிய பயிற்சி பெற் றுள்ளார்.

பீ. ஏ. முடித்துள்ள இவர் சம்ஸ்கிருதத்தி லும், ஹிந்தியிலும் தேர்ச்சிபெற்றவர், முறைப்படி சங்கீதமும் பயின்று ரேடியோ விலும் பாடுகிறார். தற்சமயம் எம். லிட்-க்கு பேராசிரியர் சாம்பமூர்த்தியின் தலைமை யின்கீழ் Musical form's used in Bharatanatya from ancient times" என்பது பற்றி ஆராய்ச்சி நடத்திவருகிறார்.

நான் ஸ்ரீமதி நிர்மலாவைச் சந்தித்ததும் மிக அன்புடன் என் கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

பளிச்சென்று நெற்றியில் குங்குமம் துலங்க,சாதாரணமாக வாரித் தூக்கிமுடித்த கூந்தலுடன் காட்சி அளித்தார். எவ்வித செயற்கை சாதனங்கள் கொண்ட மேக் கப்போ, படாடோபமின்றி, சகஜமாக நடந்துகொண்டது வியப்பை அளித்தது. மேலைநாட்டை பின்பற்றும் உடை அலங் காரமில்லை. Contrasting colours-ல் விருப்பம் உடையவர்போல் தோன்றியது. சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு நான் கேட்டேன் ... பந்தணைநல்லூர் பாணி என்கிறீர்களே அது என்ன?

பதில்:–பந்தணைநல்லூர் பாணியில் ஏனைய கலப்புகள் இல்லாமல் சாஸ்திரீய முறைப் படி வகுத்த பாணிதான் அதன் விசேஷம். பொன்னையா, சின்னையா, சிவாநந்தம் போன்றவர்கள் தஞ்சை தர்பாரில் இருந்தபோது, சிதறிக்கிடந்த இவ்வரும் பெரும் கலையைத் திரட்டிச் சேர்த்து ஓர் உருவகப்படுத்தினார்கள். அலாரிப்பு, ஜதிநடை, ஸ்வரம் என்ற முறை வகுத்து, கச்சேரி பாணியை ஏற்படுத்தியவர்கள் அவர்கள்தான். என் குருநாதர் திரு வாளபுத்தூர் சுவாமிநாத பிள்ளை,

பந்தணை நல்லூர் மீனாட்சிசுந்திரம் பிள்ளையின் நேர் சிஷ்யர்.

கேள்வி:—பந்தணைநல்லூர் பாணியின் விசேஷம் என்ன?

பதில்: தாளம் கச்சிதமாக,கால் அழுத்தமாக, சொற்கட்டுடன் பேசுவதுதான் இதன் விசேஷம். Foot works எனப்படும். கால்மெட்டு, தீர்மானங்கள், ஜதிக் கோர்வையிலும் உள்ள அழுத்தம்தான் இதன் சிறப்பு.

கேள்வி:—ஓரியண்டல் நடனங்களில் தங்களுக்கு விருப்பமில்லையா?

பதில்:—சுத்த சாஸ்திரீய பரதத்தில் எனக்கு அதிக விருப்பம். எதிலும் கலப்படம் செய்வது எனக்கு பிடிப்பதில்லை. Folk Dance மற்றவகை நடனம் யாவும் எனக்கு விருப்பமானவைதான்.

கேள்வி:—தங்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க சம்பவம், தங்கள் வாழ்வின் போக்கை, எண்ணங்களை மாற்றிவிடக் கூடியதாக ஏற்பட்டதுண்டா?

பதில்:—அப்படி ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் நடனத்தைப் பொறுத்தவரையில், ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் முதற் சந்திப்பு என் நடனத்திற்குப் புதியதொரு திருப்பத்தைத் தோற்றுவித்தது என்பதை என்னால் என்றும் மறக்க முடியாது. என் ஆதர்ஸ குரு அவர்தான். ஆடல் அபிநயங்களிலும் சாஸ்திரீயமாக பரதமாடும் முறையிலும் அவரைப் பின்பற்றிச் செல்வதுதான் எனக்கு விருப்பமானது. தற்சமயம் என் வளர்ச்சிக்கு, ஓரளவு அவர் காரணம் என்றும் கூறலாம். அவரது பாணிதான் என் வழி. நான் மிகமிக குதூகலமாகயிருந்த நாள், ரஸிக ரஞ்சனி சபாவில் மியூசிக் அகாடமியின் ஆதரவில் நடந்த என் நடன நிகழ்ச்சியன்றுதான். 9½யிலிருந்து 12 வரை நடந்த அன்றைய நிகழ்ச்சியில் ரசிகர்கள் முன் ஆடியபோது, என் மகிழ்ச்சி அளவிட முடியாமலிருந்தது. அது ஒரு நன்னாள்.

கேள்வி:—அபிநயங்களுக்கு எவ்வகைபாடல்கள் சிறந்தவை?

பதில்:—தமிழிலும், தெலுங்கிலும் எத்தனையோ பாடல்களும், பதங்களுமிருக்கின்றன. முக்கியமாக க்ஷேத்திரக்ஞர் பதங்கள் சிறந்தவை. பதங்களின் உள்ளர்த்தத்தை புரிந்து கொண்டு அபிநயம் புரிதல் அவசியம். அபிநயம் என்பது நடிப்பல்ல. அது ஓர் சிறந்த நுட்பமான கலை. Suggestive art. இம்முறையில் பாலசரஸ்வதியின் பாணி பின்பற்றத் தகுந்தது.

கேள்வி:—கலை, கலைக்காக என்பது தங்கள் எண்ணமா? அல்லது கலை, மக்களுக்காக என்பதா?

பதில்:—கலை கலைக்காக என்பது என் லட்சியம்.

கேள்வி:—பரதநாட்டியப் பயிற்சி பெண்களுக்குத் தேவையா?

பதில்:—தேவை, தேவையில்லை என்பது பற்றி கூறமுடியாது. ஆனால், உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, கலைப் பண்பு வளர இது உதவியாக இருக்கும்.

கேள்வி:—தங்களுக்கு எவ்வித வர்ணங்கள் பிடித்தமானவை?

பதில்:—ஆழ்ந்த நிறங்கள் யாவும் எனக்குப் பிடிக்கும். ஆழ்ந்த நிறத்தில் இந்திய கலைப்படி சித்திர வேலைப்பாடுகள் அமைந்தவைகள் எனக்குப் பிடித்தமானவை. நகைகளும் எனக்கு விருப்பமானவை. அதிலும் பண்டைகாலத்து நகைகளின் அமைப்பும், வேலைப்பாடும் என் மனதைப் பெரிதும் கவர்ந்துவிடும்.

கேள்வி:—தற்காலத்தைப் பரதநாட்டிய மறுமலர்ச்சி யுகம் என்கிறார்களே அதுபற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:—எங்கு பார்த்தாலும் அரங்கேற்றமும், கலை நிகழ்ச்சிகளும் நடந்து கொண்டிருப்பதை மட்டும் வைத்துக் கொண்டு, மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதாக கூறிவிட முடியாது. மறுமலர்ச்சி எவ்வகையில் ஏற்பட்டிருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். பொதுமக்களுக்கு பரதநாட்டியத்தைப் பற்றிய சாஸ்திர ஞானமோ, அதை அளவிடும் திறனோ ஏற்பட்டிருப்பதாகக் கூறிவிடமுடியாது. ஆனாலும் பரதநாட்டியம் என்ற பெயரில் பொது மக்கள்மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழிக்க நாட்டியம் பார்க்கிறார்கள். மக்களுக்கு நல்லதொரு நாட்டியத்தில் விருப்பம் அதிகரித்து வருகிறது. நல்லதொரு சூழ்நிலையில்தான் பரதநாட்டியம் வளரமுடியும். நான் இதை ஒரு passing phase என்றே நினைக்கிறேன். காலம்தான் எதையும் நிர்ணயிக்க முடியும்.

கேள்வி:—தங்கள் எதிர்காலம் பற்றிய திட்டமென்ன?

பதில்:—பொன்னான எதிர் காலத்தை நோக்கி நம்பிக்கையுடன் அடிஎடுத்து வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆசைகளும், கனவுகளும் என்னை எதிர்கொண்டழைக்கின்றன. வேறு என்ன சொல்ல?



# காதலா, கற்பனையா?

பி.ஆர்.ராஜாராம்

"படபட"வென்று 'நளினி இன்ஸ்டிடியூட்டில்' 'டைப்' கற்றுக் கொள்ளும் மாணவர்கள் அடித்த ஓசை எழும்பி நாலாபுறமும் பரவிக் கொண்டிருந்தது. அப்பொழுது காலை எட்டு மணி இருக்கும்.

அந்த இன்ஸ்டிடியூட்டின் பிரின்ஸிபாலான கிருஷ்ணசாமி முன்போய் நின்றான் வைத்தியநாதன்.

"என்னப்பா? என்னவேணும்?" என்று கேட்டார் பிரின்ஸிபால்.

"ஒண்ணுமில்லை ஸார்! நாளை முதல் நானும் "டைப்பிரைடிங்", சுருக்கெழுத்துகற்றுக்கொள்ள வரலாம் என்றிருக்கிறேன். அதற்கான 'பீஸு' எவ்வளவு என்று கேட்டுவிட்டுப் போகவே வந்தேன்".

"அப்படியா? சந்தோஷம். நீ முதன் முதலில் புதிதாக இப்பொழுதுதான் கற்றுக்கொள்ளப் போகிறாயா, இல்லை முன்னமேயே ஏதேனும் பரீட்சை பாஸ் செய்திருக்கிறாயா?"

"நான் இதற்கு முன் சென்னையில்" டைப் பிரைடிங் "லோயர்" பாஸ் செய்திருக்கிறேன். சுருக்கெழுத்து எழுபது எண்பது வார்த்தைகளுக்கு எழுதுவேன்" என்றான் வைத்தியநாதன் பெருமையாக. ஏனெனில் அங்கு 'டிக்டேஷன்' எழுதிக்கொண்டிருந்த மாணவர்கள் எல்லோரும் அவனையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

"அப்போ ஹையருக்கு போகணும்" என்று சொல்லு. சரி, தட்டெழுத்திற்கு மாதத்திற்கு மூன்று ரூபாயும், சுருக்கெழுத்திற்கு இரண்டரை ரூபாயும் கட்டணும். நீ புதிதாக நம் 'இன்ஸ்டிடியூட்டில்' சேருவதால் 'அட்மிஷன் பீஸ்' ஒரு ரூபாய். நாளை முதல் வருகிறாயா! ஆமாம் உனக்கு எப்பொழுது டயம் வேண்டும்?"

"எனக்கு மத்தியானம் இரண்டு மணியிலிருந்து மூன்றுமணி வரை 'டைம்' கொடுத்தால் சௌகரியமாக இருக்கும் ஸார்"

"சரி சரி... உன் இஷ்டப்படியே வரலாம். ஆனால் சுருக்கெழுத்து காலை ஏழு மணிக்கு ஒரு வகுப்பு இருக்கிறது. அந்த வகுப்பில் நீயும் சேர்ந்து எழுதுகிறாயா?"

"சரி ஸார்! நான் வருகிறேன்" என்று வைத்தியநாதன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

* * *

திருக்காட்டுப்பள்ளியில், "நளினி இன்ஸ்டிடியூட்" கடந்த ஆறேழு வருஷங்களாக மிகவும் சிறப்பாக மாணவர் சமூகத்திற்குத் தொண்

டாற்றிவருகிறது. அதன் சொந்தக்காரரான கிருஷ்ணசாமி ஐயங்கார், இதற்கு முன் சென்னையில் ஒரு பெரிய ஆங்கிலக் கம்பெனியில் "ஸ்டனேகிராப்பராக" இருந்தார். அவரது பூர்வீகம் திருக்காட்டுப்பள்ளிதான், அங்கே அவருக்கு நில புலம் இருந்தது. ஒரு மாடி வீடும் சொந்தத்தில் இருந்தது. ஐம்பது வயதைத் தாண்டினதும் இனிமேல் எதற்கு வேலை, ஹாய்யாக ஊரில் தன் கடைசி நாட்களைக் கழிக்கலாம் என்று வேலையை விட்டு வந்தவர். சும்மா உட்காருவானேன் என்று, தான் சம்பாதித்ததில் சேர்த்து வைத்திருந்த பணத்தைப் போட்டு ஏழெட்டு 'டைப்ரைடிங் மிஷன்கள்' வாங்கிப் போட்டார். தன் மாடியையே 'இன்ஸ்டிடியூட்'டாக மாற்றினர். கீழே அவர் வசித்தார். அப் பள்ளியில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, 'புக்-கீப்பிங்' முதலிய பாடங்களைச் சொல்லிக்கொடுத்தார். அவ்வூரில் இவருடயதைத்தவிர வேறு தட்டெழுத்துச் சொல்லிக் கொடுக்கும் பள்ளி இல்லாததால் இவருக்கு நல்ல வருவாய், உட்கார்ந்த இடத்தில் வந்தது.

கிருஷ்ணசாமி ஐயங்கார் தன் இரண்டு மகளையும், ஒரு பையனையும் சென்னையில் படிக்கவிட்டு வைத்தார். மூத்தவளுக்குக் கல்யாணமாகி சென்னையிலேயே வசிக்கலானாள். இரண்டாமவளுக்கு படிப்பில் அவ்வளவு சூட்டிகை இல்லாததால், அவளைத்திருக்காட்டுப்பள்ளியிலேயே தன்னுடன் வைத்துக்கொண்டார். அவருடைய தாயாரும், வயதான பாட்டியும் இருந்தார்கள் சமைத்துப்போட. பையன் கண்ணன் சென்னையில் தன் சிற்றப்பா வீட்டில் படித்து வந்தான். இன்னும் என்ன குறை? தன் காலத்தை நல்ல வழியில் செலவழித்துக்கொண்டு, காலத்தைத் தள்ளிக்கொண்டிருந்தார் அவர்.

நாட்கள் நகர்ந்தன. வைத்தியநாதன் அந்த 'இன்ஸ்டிடியூட்'டில் சேர்ந்து பத்து நாட்கள் ஆகிவிட்டன.

ஒரு நாள், வைத்தியநாதன் காலை சுருக்கெழுத்து வகுப்பிற்குக் கொஞ்சம் 'லேட்'டாகப் போனான். 'கிளாஸ்' ஆரம்பித்துவிட்டிருந்தது. எல்லோரும் மளமளவென்று எழுதிக்கொண்டிருந்தனர். உட்கார இடமில்லை. இடத்தைத் தேடும்பொழுது அங்கொரு அதிசயம் அவன் கண்களுக்குத் தென்பட்டது. ஒரு மூலையில் தனியாக 'அதிரூப அமராவதி' ஒருத்தியும் 'டிக்டேஷன்' எழுதிக்கொண்டிருந்தாள். அவளையே கூர்ந்து கவனித்த வைத்தியநாதன் அப்படியே அசந்துவிட்டான். மாதுளம்பழக் கன்னங்கள், இரட்டைப் பின்னல் சுந்தரியான அவளுக்கு ஒடிந்து விழுந்துவிடும் காம்பு போன்ற இடுப்பு, அவள் அழகைக் கூட்டுவித்தது. உடலெங்கும் பருவப் பூரிப்பின் வனப்பு கொப்பளித்துக் கொண்டிருந்தது. அவளுக்கு வயது பத்தொன்பது, இருபது இருக்கலாம். அவள் பாட்டிற்கு எழுதிக்கொண்டிருந்தாள்.

"என்ன வைத்தியநாதன், இன்னிக்கு லேட்டா?" என்று கேட்டார் கிருஷ்ணசாமி தன் 'டிக்டேஷன்' உரையை முடித்துவிட்டு.

"ஆமாம் ஸார்! வீட்டில் கொஞ்சம்..."

"வேறென்ன? அதிகமாகத் தூங்கி இருப்பே! அவ்வளவுதான்! சற்று இரு! இந்த 'செட்' ஆனவுடன் அடுத்த செட்டிற்கு நீ, குமார், ராஜா, கலா எல்லோரும் எழுதுங்கள். அப்படி உள்ளே போய் உட்கார்!" என்றார், மறுபடி 'டிக்டேஷனை' ஆரம்பித்தபடி.

"கலா......யாரிவள்......இவ்வளவு நாட்களாக நானும் தான் இங்கு வருகிறேன். இவள் புதுசாக இருக்கிறாளே! எங்கே இருக்கிறாளோ, யார் வீட்டுப் பெண்ணோ?" என்று நினைத்தவாறே உள்ளே சென்று உட்கார்ந்தான்.

சிறிது நேரங்கழித்து நால்வரையும் கூப்பிட்டார் பிரின்ஸிபால். எல்லோரும் வந்து தத்தம் சீட்டுகளில் உட்கார்ந்தார்கள். அவள், அது தான்—கலா வைத்தியநாதன் எதிரே வந்து உட்கார்ந்தாள். அவள் சற்று நேர முன்பு மிக அவசரமாக எழுதிக்கொண்டிருந்தது 'டிக்டேஷன்' அல்ல என்பதை அவள் கையில் வைத்துக்கொண்டிருந்த பேபரைப் பார்த்ததும் தெரிந்தது. அதில் ஒரு கட்டிளங் காளையின் படம் வரைந்திருந்தாள். சற்றே தூரத்தில் பார்ப்பதற்கு அசல் வைத்தியநாதனைப்போல இருந்தது. கலாவின் சித்திரம் வரையும் திறமையைக்கண்டு வைத்தியநாதன் மகிழ்ச்சி கொண்டான்.

"என்னம்மா அது கையிலே?"

"ஒண்ணுமில்லே பெரியப்பா! சும்மா ஒரு பொம்மை போட்டேன்?" அவள் அதை மறைக்கப் பார்த்தாள். அவ்வகையில் சட்டென அச்சித்திரத்தை எழுதின பேபரை நாலாக மடித்து மேஜையின் அடியில் சொருகப்போனாள். இதைக் கண்ட வைத்தியநாதன், துணிந்து தன் இடது கையை மேஜையின் அடியில் நீட்டி, அக்காகிதத்தை தன் கையில் 'சரக்' கென்று பிடுங்கிக்கொண்டான். இதை எதிர்பாராத கலா சட்டென தலை நிமிர்ந்தாள். அதற்குள் வைத்தியநாதன் அச்சித்திரத்தை தன்னுடைய பைஜாமாவுக்குள் நுழைத்துவிட்டான்.

சுருக்கெழுத்து 'ஸ்பீட்' எழுத எழுத அவள் அவனையே முறைத்து முறைத்துப் பார்த்தாள். வைத்தி இதைக்கண்டு அலக்ஷியத்துடன் சிரித்துக்கொண்டே எழுதிக் கொண்டிருந்தான். 'டிக்டேஷன்' முடிந்தது.

"எங்கே எழுதினதைப் படி!" என்றார் கிருஷ்ணசாமி.

தினமும் ஒழுங்காகச் சரியாக எழுதும் வைத்தியநாதன் இன்று தட்டுத் தடுமாறிக்கொண்டே படித்தான்.

"என்னப்பா இவ்வளவு தடுமாற்றம்? வீட்டில் 'பிராக்டீஸ்' பண்றதில்லையா? தினமும் சரியாக எழுதுவாயே? இன்று என்ன..."

"ஒண்ணுமில்லே ஸார்...வந்து...வந்து"

"சரி, சரி... நீ படிம்மா... கலா..."

"அ...அ...நான்... சரியாக எழுதவில்லை பெரியப்பா...!

"ஏம்மா... ஏன் பட்டணத்திலே நூறு வார்த்தைக்குமேலே எழுதவருளாச்சே, இந்த எண்பது வார்த்தை 'ஸ்பீடா' எழுதமுடியவில்லை? ஏன் நான் சொல்லுவது புரியவில்லையா?..."

"புரியறது புரியறது... நான்தான் எங்கோ கவனத்தில்..." என்று சொல்லிக்கொண்டே கடைக்கண்ணுல் பார்த்தாள் வைத்தியை. அவன் தலையை நிமிர்ந்தால்தானே?

"சரி சரி! மறுபடி சொல்றேன் எழுதுங்கள்!" என்று கோபத்துடன் கூறிவிட்டு அவர் மேலே தொடர்ந்தார்.

* * *

"இப்படித்தான் நீங்கள் காட்டுமிராண்டித் தனமாக நடந்துகொள்வதா?"

"பின்னே என்ன? என் படத்தை நீங்கள் எப்படி வரையலாம்?"

"வரையாமல் என்ன செய்வார்களாம்? காலையில் என்னை அப்படியே விழுங்கிவிடுபவர்போல பார்த்தீர்களே! நானும் உங்களைப் பழிக்குப் பழி வாங்கணும் என்றுதான் உங்கள் படத்தைப் போட்டேன்."

"ஐய! உங்கள் சித்திரத்தை நீங்கள்தான் மெச்சிக்கொள்ளவேண்டும்! நான் என்ன இப்படிக் குரங்காகவா இருக்கிறேன்?"

"குரங்கிலிருந்து பிறந்தவன்தானே மனிதன்?" என்று கலகலவென்று நகைத்துக்கொண்டே கேட்டாள் கலா. அவளை அப்படியே அந்த ஏரிக்கரையில் தள்ளிவிடலாமா என்று நினைத்தான் வைத்தி. அவனுக்கு அவ்வளவு கோபம் வந்துவிட்டது. கையில் இருந்த சித்திரத்தை வீசி எறிந்தான். அவள் அதைப்போய் எடுத்துக்கொண்டு சிரித்துக்கொண்டே சென்றுவிட்டாள்.

கோபத்துடன் ஏரிக்கரையில் மண்ணைக் கீறிக்கொண்டே உட்கார்ந்துவிட்டான் வைத்தி. வைத்தியநாதன் அவ்வூர் பிரபல மிராசுதார் இராமநாதனின் ஒரே பிள்ளை. சென்னையில் பி. ஏ. படித்துவிட்டு, வேலை கிடைக்காததால் பொழுதுபோக்காகத் தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் படித்தான். தன் தகப்பனரின் உடல்நிலை கெடவே, அவன் சென்னையில் வசிப்பதை விட்டுவிட்டு, தன் சொந்த ஊரிலேயே இருக்க புறப்பட்டு வந்தான். வந்த இடத்தில் ஒரு 'இன்ஸ்டிடியூட்' இருப்பதை அறிந்து, அதில் சேர்ந்து மீண்டும் படிக்கலானுன். கூடவே தன் தகப்பனரின் நில சம்பந்தமான வேலைகளையும் பார்த்துக் கொண்டிருந்தான். மாலை வேளையில் சற்றே நடைபோட்ட வண்ணம் வந்த வைத்தியநாதன் தன்னை அறியாமலேயே ஏரிக்கரைக்கு வந்துவிட்டதை அறிந்தான்.

அவன் அங்கு நிற்பதைக் கண்டுதான் கலா, வந்தாள். கலா - சென்னையில் 'இண்டர்' பாஸ் செய்துவிட்டு, வீட்டில் 'சும்மா' உட்காருவானேன் என்று சுருக்கெழுத்து, தட்டெழுத்து படித்துவந்தாள். தன் பெரியப்பாவின் இரண்டாவது பெண்ணுன மாலாவுடன் சிறிது நாள் கழிக்கலாமே என்று திருக்காட்டுப்பள்ளிக்கு வந்திருந்தாள். வந்த முதல்நாளே வைத்தியநாதனின் அழகிய முகம் அவளுடைய மனதை ஈர்த்தது. அவன் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பதைக் கண்டுதான், அவளும் அவனுடைய அழகிய முகத்தை வரைந்தாள். அவள் சுமாராகப் படம் போடுவாள். ஆனல் அன்று வேண்டுமென்றே படத்தைக் கொஞ்சம் கிறுக்கி வைத்திருந்தாள்.

கிருஷ்ணசாமி ஆங்கிலேயக் கம்பெனியில் வேலை பார்த்ததாலும், சென்னையிலேயே தன் பாதி ஆயுளைச் செலவழித்ததாலும், அவர் முற்காலத்திய கட்டுப்பாடுகளுடன் வாழவில்லை. அவர், வீட்டில் எல்லோருக்கும் உயர்தரக் கல்வி கற்க ஏற்பாடுசெய்தார். தன் சொந்தத் தம்பியை எம். ஏ. வரைக்கும் படிக்க வைத்தார். தன் பையனையும், பெண்ணையும் நவநாகரீகமாக வளர்த்தார். காலத்திற்கேற்ற வகையில் நம் கோட்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் மாற்றிக்கொண்டு போகவேண்டும் என்கிற எண்ணம் கொண்டவர். எனவே கலா 'ஸ்டைலாக' புடவைகள் உடுத்துவதைப்பற்றியோ, ஆண்களுடன் சேர்ந்து பழகுவதைப்பற்றியோ அவர் தப்பாக எடுத்துக்கொள்ளவில்லை. அந்த முறையில்தான், வைத்தியநாதன் அவளையே உற்றுக் கவனிப்பதை காலையில் பார்த்தும் பேசாமல் விட்டுவிட்டார், இதெல்லாம் இக்காலத்தில் 'சகஜம்' என்று!

தன் சித்திரத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டவன் யார், அவன் வீடு எங்கே இருக்கிறது என்பதை அறிய ஆவலாக இருந்தது கலாவிற்கு. ஆனல் யாரைப்போய் கேட்பது? எப்படி கேட்பது?

எனவே மாலையில் அவள் ஒவ்வொரு தெருவாக நோட்டம் விட்டுக்கொண்டே வந்தாள் மாலாவுடன். ஏரிக்கரைப்பக்கம் வைத்தியநாதன் நின்றுகொண்டு இருப்பதைப் பார்த்ததும் மாலாவை 'நைஸாக' வீட்டிற்கு அனுப்பிவிட்டு



அவள் மட்டும் வந்தாள். வைத்தியுடன் பேசினாள். அவன் மனதை அள்ளிக் கொண்டும் போய்விட்டாள்.

* * *

அன்று அவசரமாக டபடபவென்று ஏதோ ஒரு 'ஸ்டேட்மெண்டை' அடித்துக் கொண்டிருந்தான் வைத்தியநாதன். திடீரென்று தன்னருகில் மல்லிகைப்பூவின்வாசனை வருவதைக் கண்டு திரும்பிப் பார்த்தால்—

அங்கே அப்ஸரஸ் போல கலா நின்றுகொண்டிருந்தாள்.

"மிஸ்டர்! என்னை இவ்வளவு நாழி பார்த்தது போதுமா? முதலில் இடத்தைக்காலிசெய்யுங்கள். இது என் மிஷின்"! என்றாள்.

"ஆ... என்னது? சர்வ சுதந்திரமாக இது என் மிஷின் என்கிறாளே! கோபமும், ஆத்திரமும் மாறி மாறி வர, அவன் வேணுமென்றே நிறுத்தாமல் மறுபடியும் டடடபவென்று அடித்தான்.

"என்ன மிஸ்டர்! சொல்வது உங்களுக்குத் தான். காது செவிடா?"

"அம்மணி! அதிகமாக பேசவேண்டாம். இது என் 'இடம்'! நான் ஒரு மாதமாக இதில் 'டைப்' அடிக்கிறேன். இப்பொழுது திடீரென்று..."

"நேற்று முதல் பெரியப்பா என்னை இந்த புது மிஷினில் அடிக்கச் சொன்னார்"

"அவர் உங்களிடம்தானே சொன்னார்! என்னிடம் சொல்லவில்லையே?"—என்று கூறி மறுபடி அவன் அடிக்கத் தொடங்கினான்.

"அப்படியா? சரி சரி! பெரியப்பாவைக் கூப்பிடுகிறேன். பெரியப்பா!" என்று மாடியிலிருந்து கத்தினாள் கலா. இதைக் கேட்டு வைத்தியநாதனுக்கு உடப்பு வியர்த்துவிட்டது. அவன் உடனே,

"அடாடா! இதற்கெல்லாம் போய் பெரியப்பா சித்தப்பாவென்று...! சரி சரி! நான் வேறு மிஷினில் அடிக்கிறேன். நீங்கள் இந்த மிஷினில் அடித்துத் தொலையுங்கள்!"

அவன் வேறொரு மிஷினில் போய் உட்கார்ந்து அடித்தான். அவள் அதைக்கண்டு ஆஹா...ஹ் ஹா!" என்று சிரித்துக்கொண்டே அவனிடம் மறுபடி வந்தாள்.

"சரியாக ஏமாற்றிவிட்டேன் உங்களை! அன்று என்னிடமிருந்து பேபர் பிடுங்கி அழவைத்தீர்களல்லவா! இன்று உங்களை அழவைத்து



விட்டேன். பெரியப்பா வீட்டில் இல்லை. சற்று நேரமுன்புதான் தன் சிநேகிதர் வீட்டிற்கு சீட்டாடப் போயிருக்கிறார். நான் வருகிறேன்!" என்று அவள் படிக்கட்டில் இறங்கி சிட்டாகப் பறந்து போனாள். அவளை இனிமேல் தன்னருகில் கண்டால் மென்னியைத் திருகிவிடலாம் என்ற தீர்மானத்திற்கு வந்தான் வைத்தியநாதன்!

* *

அன்று மாலை அவன் எங்கும் சுற்றப் போகவில்லை. வீட்டிலேயே தன்னறையில் உட்கார்ந்து பாரதிப் பாடல்களை ஸ்வரம் போட்டுப் பாடிக் கொண்டிருந்தான்.

"உயிரைக் காக்கும், உயிரினைச் சேர்த்திடும்;
உயிரினுக் குயிராய் இன்ப மாகிடும்;
உயிரினு மிந்தப் பெண்மை இனிதடா!"

என்ற அடிகள் அவனுக்கு மிகவும் பிடித்திருந்ததால் தன்னை மறந்து அவன் உற்சாகமாகப் பாடிக்கொண்டிருந்தான்.

"அப்போ நான் வர்றேன் மாமி...படிக்கிறதுக்கு ஏதேனும் புத்தகம் இருந்தால்..." என்ற குயிலுமினிமையான குரலைக் கேட்டு அவன் அயர்ந்தான. அவள் வேறு யாருமில்லை. சாட்சாத் கலாதான். இவள் எப்பொழுது என் வீட்டிற்கு வந்தாள்? எதற்காக வந்தாள்? சரி எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டுமென்று,

'உயிரினு மிந்தப் பெண்மை கொடிதடா! கொடிதடா! எல்லாம் நரகமடா!" என்று கத்திப் பாடினான்:

"மிஸ்டர் ஏன் இப்படி பாரதிப் பாடல்களைக் கொலை பண்ணுகிறீர்கள்?" என்று அவன் அறைக்குப் பாய்ந்து வந்த கலா, அங்கு பாட்டுக் 'கொலைஞனாக' வைத்தியநாதன் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள்.

"வந்து...வந்து... நீங்கள் தானா. இப்படி... பாட்டைக் கொலை......"

"டேய்! ஏண்டா இப்படி அபஸ்வரமாப் பாடறே? நிறுத்துடா! இவளுக்கு ஏதோ கதைப் புத்தகம் வேணுமாம், இருந்தால் கொடுடா...இவ... நம்ம கிருஷ்ணசாமியோட...."

"எல்லாம் எனக்குத் தெரியும். புத்தகம் ஒண்ணுமில்லே"

"ஏண்டா! ஊருக்கு வந்தபோது ஒரு பெட்டி நிறைய கொண்டுவந்தயேடா...!

"ஐயோ அம்மா! அதெல்லாம் இங்கிலீஷ் புத்தகம், ஒண்ணுகூட தமிழ் இல்லை.

"பரவாயில்லே... அதையே கொடுக்கச் சொல்லுங்கோ மாமி..."

"அதெல்லாம் கொடுக்கமுடியாது அம்மா! சும்மா சும்மா கண்டவர்களுக்கெல்லாம் புத்தகம் கொடுத்தால் அது திரும்பி வராது!"

"சரி நான் வர்றேன் மாமி!" அவள் 'சரே'லென வெளியில் பாய்ந்து சென்றுவிட்டாள். இன்று அவள் முகத்தில் சரியாக 'கரியை' பூசிவிட்டோம் என்று நினைத்து உள்ளூர மகிழ்ந்தான் வைத்தியநாதன்.

* * *

"ஸார்... ஸார்... வாத்தியார் இல்லையா?"

"இல்லை...ஓ...நீங்களா... என்ன வேண்டும்? என்று கேட்டாள் மதுரமொழியாள் கலா.

"ரிப்பன் வேணும்..!"

"ரிப்பனா? மிஸ்டர்...ஏது...ஏது... நாளாக ஆக வார்த்தை நீண்டு கொண்டுப் போகிறதே! கொஞ்சம் மட்டுமரியாதையுடன் பேசுங்கள். என்னுடைய ரிப்பன் உங்களுக்கு எதற்கு?





"ஆஹா...ஹ்...ஹா!"

"ஏன் சிரிக்கிறீர்கள்"

"பின்னே சிரிக்காமல் என்ன செய்வார்களாம்? உங்களுடைய ரிப்பனை யா நான் கேட்டேன். 'டைப்பிரைடிங்' மிஷினில் ரிப்பன் மிகவும் பழசாகிவிட்டது. அதனால் புது ரிப்பன் கேட்டால்... ஹ...ஹ்...ஹா!"

"ஓ... அப்படியா...?" — அவள் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. மூக்கைச் சரியாக உடைத்தோம் என்ற சந்தோஷத்துடன் ரிப்பனைவாங்கிக் கொண்டு மேலே சென்றான். அவன் பின்னாலேயே கலா வந்ததை அவன் அறியவில்லை.

"நான்...நாளைக்கு ஊருக்குப் போகிறேன். இனிமேல் ஒருவர் முகத்தில் ஒருவரை கரிப்பூசும் விளையாட்டு இருக்காது" என்கிற குரலைக் கேட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தான் மிஷினில் ரிப்பன் போட்டுக்கொண்டிருந்த வைத்தியநாதன். அழகான வார்ப்படச் சிலைபோல நின்றுகொண்டிருந்த கலாவின் வதனம் துக்கத்தினால் வாடிப் போயிருந்தது.

"நீங்கள் ஊருக்குப் போகிறீர்களா...பேஷாகப் போங்களேன். அதை... என்னிடம் சொல்ல வருவானேன்..."

"என்ன இருந்தாலும் ஆண்கள் இரும்பு மனம் படைத்தவர்கள். பெண்களை அழ விடுவதே அவர்களுக்கு ஒரு விளையாட்டு!"

"உங்களை நானா இப்பொழுது அழவைத்தேன். நீங்களாகத்தானே..."

"இன்னுமா உங்கள் விளையாட்டுப் புத்திப் போகவில்லை. முதன் முதலில் ஏரிக்கரையில் சந்தித்தீர்கள் என்னைத் தனியாக. பிறகு வீட்டில் சந்தித்தீர்கள் உங்கள் தாயாருடன். பிறகு நாளடைவில் புத்தகம் வாங்கிக் கொள்ளும் முறையில் நான் உங்களைப் பலமுறை சந்தித்தேன். நான் ஏன் சந்தித்தேன்? இன்னுமா உங்களுக்குப் புரியவில்லை?"

"வெறும்......புத்தக......இரவலுக்காக வந்து சந்தித்தீர்கள்...அவ்வளவு தானே! அதை எப்படி நான்...?"

"வைத்தியநாதன்...... இன்னுமா என்னைப் புரிந்துகொள்ளவில்லை......நான......நான்... உங்களைக்..."—அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் உகுந்தது. அது துக்கத்தினாலோ அல்லது ஆனந்தத்தினாலோ என்று வைத்தியநாதனுக்குத் தெரியாது.

"மனதில் ஒருவித கவலையுமில்லாமல்... நிஷ்களங்கமான மனதுடன் இங்கு வந்தேன். இப்பொழுது இவ்விடத்தைவிட்டுப் போகும் போது ஒரு பெரிய மனப்பாரத்துடன், புயலிடையே அகப்பட்ட கப்பல்போல தத்தளித்துக் கொண்டு போகிறேன். அனைத்திற்கும்... நீங்கள்தான் காரணம்."

அவன் பாட்டிற்கு பேசாமல் ரிப்பன் போட்டு முடித்து, கையைத் துணியில் துடைத்துக் கொண்டிருந்தான். அவன் மேஜையிடம் வந்து, அவன் முகத்தின் அருகில் பார்வையை செலுத்தி,

"இங்கு இப்பொழுது யாருமில்லாததால் சொல்லுகிறேன். என் அப்பா எனக்கு வரனைப் பார்த்துவிட்டாராம். கல்யாணம் நிச்சயமானதற்காகத்தான் என்னை உடனே புறப்பட்டு வரும்படி எழுதியிருக்கிறார்...

"ஏன் இப்படி வாய்திறக்காமல் இருக்கிறீர்கள். உண்மையில் சொல்லுங்கள்... என்னைக் கண்டால் உங்களுக்கு பிடிக்கவில்லையா?" அவள் மூச்சை சப்பிடித்துக்கொண்டே ஒரு வழியாகக் கேட்டுவிட்டாள்.

"பிடிக்கிறது பிடிக்கிறது... ஆனால்..."

"ஆனால்... என்ன ஆனால்..."

"எனக்கு வேறொரு இடத்தில் பெண்ணைப் பார்த்து நிச்சயமாகிவிட்டது!"

"அப்படியா? நீங்கள் அவளைச் செய்துக் கொள்ள சம்மதித்துவிட்டீர்களா?"

"அப்பா சொல்லும்போது எப்படி சம்மதிக்காமல் இருப்பது? மேலும்... அப்பெண்ணை... எனக்கு மிகவும்... பிடித்தது..."

"அப்படியா...அப்பொழுது நம்...சரி என்னை மன்னியுங்கள்...நான் வருகிறேன்..." அவள் கண்களைத் துடைத்துக்கொண்டே 'சரே'லெனத் திரும்பினாள் படிக்கட்டை நோக்கி.

"கலா...கலா..."

"என்னைக் கூப்பிடாதீர்கள்..."!

".பெண் யாரென்றுக் கேட்கவில்லையே? பெண்ணின் தகப்பனார் சென்னையில் தான் இருக்கிறார். பெயர்...ராமஸ்வாமியாம்..."

சட்டென்று முறைத்துப் பார்த்தாள் கலா.

"அவர் சென்னையில் எங்கே இருக்கிறார்?"

"தியாகராய நகரில் பஸுலுல்லா ரோடில்...

ஆ...அப்படியானால் பெண் பெயர்...?"

"கலாவதியாம்!"

"போங்கள்! ஆனாலும் நீங்கள் ரொம்பவும் குறும்புக்காரர். இப்படித் தான் என்னை அழ விடுவதா?" என்றாள் வைத்தியின் கையுடன் தன் கையை இணைத்திருந்த கலா.

"இதை முதலிலேயே சொல்வதற்கென்ன? ஆமாம்......என் அப்பா எப்படி இதற்குச் சம்மதித்தார்?"

"எல்லாம் உன் பெரியப்பா செய்த வேலைதான். அவர்தான் என்னைவிட பலே குறும்புக்காரர். நம் காதலை அவர் 'நைஸாக' யாருக்கும் தெரியாமல் அறிந்துகொண்டு, என் அப்பாவிடம் நேரில் வந்து பேசியும், உன் அப்பாவை போன வாரம் சந்தித்துவிட்டுப் பேசியும் வந்து விட்டார். உன் பெரியப்பாதான் முற்போக்குக் கொள்கை கடைபிடிப்பவராச்சே! எல்லாம் அவரால் தான் இந்த விவகாரம் முடிந்தது.

"காதல் இன்றி உலகில்லை — இதைக்

கண்டுக்கொள்ள ஏன் தொல்லை..." என்கிற நாமக்கல் கவிஞரின் பாட்டைப் மெய்ப்பித்து விட்டார் உன் பெரியப்பா! வாழ்க உன் பெரியப்பா!' என்றான் வைத்தியநாதன். ●



பெரியாறு அணைத் திட்டமும் அதன் சுற்றுப்புறக் காட்சியும்

# கேரள நாட்டுப் பிரயாணம்-1

கே. ஸ்ரீநிவாஸன்

"யாமேறிய நீராவித் தொடர்ப்பண்டி நான்மாடக்கூடலை நண்பகலில் நண்ணிற்று." இதற்கு அர்த்தம் சொல்லும் என்று சில வருஷங்களுக்கு முன் ஒரு தனித்தமிழ் அபிமானி கேட்டபொழுது "எனக்கு துளு பாஷை பரிச்சயமில்லை என்று சொன்னதாக ஞாபகம். பண்டித மணி கதிரேசன் செட்டியாருடைய ஆவி, உலகை பவனி வந்துகொண்டிருந்தால், அவர் விவரித்த நான்மாடக்கூடலில் நான் சென்ற மே மாதம் 14-ம் தேதி ஊர் சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்து, "என்ன நிரூபர் அவர்களே' யாம் மொழிந்த நான் மாடக்கூடல் இஃதே" என்று சொல்லி நகைத்திருக்கும்.

மதுரை என்றதுமே எவ்வளவு விதம் விதமான எண்ணங்கள் மனதில் தோன்றுகின்றன? கற்புக்கரசி கண்ணகி கணவனை இழந்து கதறித் தன் கற்பின் மகிமையால் சுட்டெரித்த மதுரை! சங்கப் புலவர்கள் இடைவிடாது உழைத்துத் தமிழைப் பாதுகாத்த மதுரை! 'மாடுகட்டிப் போரடித்தால் மாளாது என்று சொல்லி, ஆனைகட்டிப் போரடித்த அழகான தென்மதுரை'. இந்த மதுரையில்தான் நான் மே மாதம் முகாம் போட்டேன்.

மதுரையில் என்ன திடீர் முகாம்? இது நியாயமான கேள்வி. காங்கிரஸ்காரர்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதைக் கவனித்த சிலர்கூட மதுரையில் என்ன விசேஷம் என்று வியந்தார்கள். மதுரையில் நடக்கும் வருஷாந்தர கண்காட்சிக்குப் பல்லாயிரம் மக்கள் வெளியூரிலிருந்து வருகிறார்கள் என்பது வாஸ்தவம். அங்கு நடிக்கப்பட்ட கணேசபொம்மன்—மன்னிக்கவும்—கட்டபொம்மன் நாடகத்துக்கு திருநெல்வேலியிலிருந்தும், ராமநாதபுரம் ஜில்லாவிலிருந்தும்; கம்பத்திலிருந்தும் ஜனங்கள் வந்து சாய்ந்துகொண்டிருந்தார்கள் என்பதும் வாஸ்தவம். ஆனால் காங்கிரஸ்காரர்கள் ஏராளமாக அங்கு கூடியிருந்ததற்குக் காரணம் பக்கத்தில் நடந்த தேவி

குளம் தேர்தலே. முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ நாடார் முதல், மாகாண காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராஜாராம் நாயுடு வரை அங்கு வந்து கூடி, அங்கிருந்து பற்பல தேர்தல் ஸ்தலங்களுக்குப் பிரசாரம் செய்யச் சென்றுர்கள்.

இந்த உபதேர்தலில் அவ்வளவு என்ன விசேஷம் என்பது அடுத்த கேள்வி. தேவிகுளம் தொகுதி பெரும்பாலும் தமிழ் மக்கள் உள்ள தேயிலே, ஏலக்காய் தோட்டங்கள் உள்ள தொகுதி. கொஞ்சம் நியாயம் பிறந்திருந்தால் அது தமிழ்நாட்டைச் சேர்ந்திருக்கும். இன்று அது கேரளத்தைச் சேர்ந்தது.

கேரளத்தை ஆளும் கம்யூனிஸ்ட் சர்க்கார் இரண்டே வோட்டு பெரும்பான்மையுடன் ஆள்கிருர்கள். அதில் ஒரு ஸ்தானத்துக்கு ஆபத்து என்ருல் பிறகு சர்க்கார் கதி அப்படியோ, இப்படியோ, எப்படியோ? (நடிகர் தங்கவேலு, மன்னிப்பாராக!) அதுவும் 60 சதம் தமிழர்கள் என்றதால் தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் முனேந்து வேலே செய்தார்கள். ராஜுு பாரதி போன்றவர்கள் பல அருமையான கேள்விகளேக் கேட்டார்கள். "ஸ்ரீ பொன்னூஸ் என்ன விதமான கம்யூனிஸ்ட்? பல லக்ஷம் ரூபாய்களுக்கு அதிபதியான இவரா கம்யூனிஸ்ட்?"

"ஸ்ரீ கிருஷ்ணய்யர் நில சம்பந்தமான சட்டம் இயற்றுவதற்குமுன் ஏன் தன் சொத்துக்களே டிரஸ்டாக்கினுர்?" "ஸ்ரீ நம்பூதிரிபாத்துக்கு ஐவேஜி, கம்யூனிஸ்ட்கள் சொல்லும் வரைக்குள் ஏன் இல்லே?"

கம்யூனிஸ்ட்களும் கொஞ்சமும் சளேக்கவில்லே. "உங்கள் ஓட்டைக் கோரும் இந்த காங்கிரஸ்காரர்கள் யார் தெரியுமா? மதிப்பிற்குரிய நம் பிரதமர் நேருவின்மேல் செருப்பு வீசியவர்களுடைய அனுதாபிகள்" "ஸ்ரீ பட்டம் தாணுப்பிள்ளே யார்? உங்கள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யச் சொன்னவர்". இந்த ரகளேக்கு நடுவே கேரள காங்கிரஸ்காரர்கள் எவ்வித உற்சாகமும் காட்டவில்லே. அவர்கள் மாகாணத்தில் கம்யூனிஸ்ட் சர்க்கார் ஏற்பட்டது முதல் இவர்கள் மனேதிடத்தை இழந்தார்கள். இன்றுவரை அவர்கள் தைரியத்தை கைப்பிடிக்கவில்லே. தமிழ்நாட்டு காங்கிரஸார் நமக்காக உழைக்கும் பொழுது, நாம் வேறு அலட்டிக் கொள்வானேன் என்றும் இருந்திருக்கலாம். ஒருக்கால் அபேக்ஷகர் தமிழராக இருந்திருந்தால்கூட காங்கிரஸ் வெற்றி சுலபமாக இருந்திருக்கலாம். ஸ்ரீ நாயர் அவ்வளவு பிரபல பேர்வழியும் இல்லே, அவருக்கு வோட்டு அவசியம் போடவேண்டும் என்று தோட்ட வேலேக்காரர்களுக்கு தோன்றவும் இல்லே. ஆகவே 60,000 வோட்டுகளுக்கு மேல் அவருக்குக் கிடைத்தது என்ருல் அதுவே ஆச்சரியத்துக்குரிய விஷயம். காங்கிரஸ்காரர் ஏன் தோற்ருர் என்பதற்கு மற்றும் பல காரணங்கள் இருந்தன. அவைகளேப் பின்னுல் குறிப்பிடுகிறேன்.

தேர்தல் முடிந்த பின்னர் காங்கிரஸ்காரர்கள் திரும்பவும் மதுரை மார்க்கமாக தத்தம் ஊர் திரும்பினர். எல்லோரும் தாது புஷ்டியாக காங்கிரஸ் ஜெயிக்கும் என்று சொன்னுர்களே ஒழிய யாருக்கும் உண்மையில் காங்கிரஸ் வெற்றியில் முழுநம்பிக்கை இருந்ததாகத் தெரியவில்லே. இந்த உண்மையை மறைமுகமாகவாவது சொன்னவர் ஸ்ரீ கக்கன் ஒருவர்தான். "கடவுள் காப்பாற்றுவார் என்று நம்புகிறேன்" என்று அவர் மதுரையில் உள்ள சர்க்கார் அதிதிகள் விடுதியில் சொன்னதற்கு பல அர்த்தங்கள் பின்னர்தான் தெளிவாயின.

நான் கேரள நாட்டைச் சுற்றிப் பார்ப்பதாக திட்டமிட்டிருந்ததைத் தெரிவித்ததும் ஸ்ரீ கக்கன், "நீங்கள் கம்பம் சென்று, அங்கிருந்து தேக்கடிக்குப் போய், நம் பெரியாறு அணேக்கட்டைப் பார்த்துவிட்டு அங்கிருந்து கோட்டையத்துக்குப் போங்கள்" என்ருர். தேக்கடி என்றதும் எனக்கு யானேகள் ஞாபகம் வந்தது. சரி, இந்த வாய்ப்பை விடவேண்டாம் என்று ஒப்புக்கொண்டேன்.

மதுரையில் விசேஷம் மீனுக்ஷிஅம்மன் கோவில் மாத்திரம்தான் என்று நினேக்காதீர்கள். பெரியார் ராமசாமியின் கழகத்தார் பிள்ளேயாரை (மண் பிள்ளேயாரைத் தான்) உடைக்க ஆரம்பித்தாலும் ஆரம்பித்தார்கள், இப்பொழுது முக்குருணிப் பிள்ளேயார் சன்னிதியில் ஏராளக் கூட்டம் கூடுகிறது. தஞ்சாவூரில் கொத்தமல்லி சட்டினியும், கத்தரிக்காய் கொத்ஸுும் இட்லி தோசைக்கு உபசாதகம் என்ருல் மதுரையில் வெண்ணெய் உபசாதகம். (மதுரையில் எப்படி வெண்ணெய் அபரிமிதமாகக் கிடைக்கிறது என்று யாராவது எனக்கு சொல்வார்களா?) எங்கு போலீ

ஸார் எண்ணிக்கைஅதிகமோ அங்குநாடார் வியாபாரிகள் அதிகம் என்று அர்த்தம். பாதிராத்திரிக்குப் பால் விற்கும் கடைகளில்கூட கூட்டம் அதிகம். பாலுடன் மலைவாழைப்பழத்தை சாப்பிடுவது மதுரை நாகரிகம். "டில்லிவாலா" என்று சொல்லப்படும் கடையில் நடுநிசியில் சப்பாத்தி சாப்பிடக் கூட்டம். இதையெல்லாம் பார்த்த தஞ்சை நண்பருக்குக் கோபம் கோபமாக வந்தது. "என்ன ஊர் சார் இது? இரவு பகலாகவும், பகல் இரவாகவும் இருக்கும் ஊரில் ஏன் சார் குத்து, வெட்டு, கொலைகள் அதிகமாக இருக்காது" என்றார்.

நல்லவேளை, மதுரையில் நடுநிசி நடமாட்டம் இருந்தது எனக்கு ஒருவிதத்தில் நல்லதாயிற்று. தேக்கடியிலிருந்து வந்த ஜீப்பில் உள்ளவர்கள் தேக்கடிக்கு எப்படி சுலபமாகச் செல்வது என்று எனக்கு தெரியப்படுத்தினார்கள் நானும் மறு நாள் டி, வி. எஸ். பஸ்ஸில் பிரயாணமானேன்.

டி. வி. எஸ். மார்க்கத்தைப்பற்றி தெரியாதவர்கள் ஒருவரும் இல்லை என்பது வாஸ்தவம். டி. வி. எஸ். என்ற ஆங்கில எழுத்துக்களுக்கு "தள்ள வேண்டாம் சார்" என்று ஒரு ஹாஸ்யப்பிரியர் கரிவண்டி நாள்களில் அர்த்தம்சொன்னது ஞாபகமிருக்கிறது. ஆனால் வழியில் நிற்கும் இடங்களில்கூட காய்தா பண்ணி வண்டிகளைச் சரியாக டயத்திற்குக் கொண்டு சேர்க்கும் சாமர்த்தியம் டி. வி. எஸ். டிரைவர் கண்டக்டர்களிடமே உள்ளது. இதனால் தான் வழியில் சாப்பிடலாம் என்று திட்டமிட்டு சென்ற எனக்கு ஏகாதசி விரதம் அனுஷ்டிக்கவேண்டி வந்தது. வழிநெடுகே பஸ் நின்றதுதான் தாமதம், பலடஜன் கைகள் வெள்ளரிப்பிஞ்சு சகிதம் ஜன்னலுக்கு வெளியே தோன்றும். ஓரணாவுக்கு ஆறு பிஞ்சுகள், அருமையான இளம் பிஞ்சுகள். கேட்கவா வேண்டும்? பஸ் நிற்குமிடமெல்லாம் ஓரணாவுக்குப் பிஞ்சு வாங்கி உள்ளே தள்ளிக்கொண்டே போனேன். தேனியை (இது ஒரு முக்கிய சமூக திட்டம் அமல் நடக்கும் ஸ்தலம்) அடையுமுன் வெள்ளரிப் பிஞ்சின் உபயத்தினால் தொண்டை பாறையாகக் கட்டிவிட்டது. கொஞ்சம் காப்பியைச் சாப்பிட்டாவது தொண்டையை சரிப்படுத்தலாம் என்றால் எந்த போர்டிலும் "மிலிடேரி

குழந்தைகளின் வயிற்றுவலிகளை துரிதமாக சமனம் செய்வது



க்ரைப்பானில்

(க்ரைப் மிக்ஸர்)

ஒரு 'டஸ்ஸனுல்' காரர்களின் தயாரிப்பு

TA.

ஓட்டல்" என்று எழுதப்பட்டிருந்தது. சாந்திப் பிரியனை எனக்கு மிலிடேரி என்ருல் பயம். ஆனல் கம்பத்தை அடைந்த வுடன் பசி வயிற்றைக்கிள்ள ஆரம்பித்து விட்டது. சரி, டபரா டம்ளர் சப்தம் கேட்கும் கட்டிடத்துக்குள் மேலே தொங் கும் போர்டைப் பார்க்காமல் உள்ளே நுழைந்துவிடுவது என்று தீர்மானம் செய்து ஒரு கடைக்குள் நுழைந்தேன். சாப்பிட என்ன இருக்கிறது என்றதும், முதலாளி குருமா, பிரியாணி என்று அடுக் கிக்கொண்டே போனர். "ஓய், ஓய், நிறுத் தும். இட்டலி, தோசை என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா?" என்றதும்; அவர் கதவு அவ்வளவு பெரிய தோசையைக் கொண்டுவந்து படைத்தார். அது அன்று மாத்திரம் அல்ல. மறுநாள்கூட பசி யெடுக்காமல் செய்தது. காப்பியை ஒரு சிறிய அண்டாவில் கொடுத்தார் கள். நம்முடைய யாப்பிலக்கணத்துக் குள் அது வரவில்லை என்ருலும் தொண்டை சரியானதுமன்றி தாராளமாக மலஜலம் கழிக்கவும் உதவியது. வெளியே வரும்பொழுதுதான் போர்டை நிமிர்ந்து பார்த்தேன். "சக்தி மிலிடேரி ஓட்டல், முதலாளி தங்கைய நாடார்" என்று எழுதி இருந்தது. (ஜாதி ஒழிப்பு கழகங்கள் கவனித்துக் கொள்ளவும்.)

கம்பம் ஒரு விவசாயிகள் மார்க்கெட். ஒரு பெரிய கடைத்தெருவில் பெட்ரோல் முதல் பெருச்சாளிக் கூடுவரை எல்லாம் கிடைக்கும். (பெரிய இரும்புக் கூட்டை பெருச்சாளிக்கூடு என்றுதானே சொல்ல முடியும்) இந்த மார்க்கெட்டில்தான் கம்யூனிஸ்ட்கள் எப்படி இரவுக்கு இரவாக ஏலக்காய் தோட்டத் தொழிலாளிகளை தேர்தல் ஸ்தலங்களுக்கு கொண்டு சென் ருர்கள் என்று தெரிந்து கொண்டேன். ஏலக்காய் தோட்டங்களில் வேலை வருஷத் தில் சிலமாதங்களுக்கே உண்டு. ஆகவே தேர்தலுக்கு முன் இவர்கள் வேலை முடிந்து ஊர் திரும்பி விட்டார்கள். அவர் கள் எண்ணிக்கை 10,000 க்கு மேல் உண்டு. ஆகையால் அவர்களில் ஒரு பகுதியையாவது பிடிப்பது கம்யூனிஸ்ட் களுக்கு அவசியமாகி விட்டது.

கம்பத்திலிருந்து குமிளி செல்லும் பஸ் சாயந்தரம் நாலுமணிக்குக் கிளம்பியது. கடைத்தெரு வழியே செல்லும் பொழுது டிரைவர் தொங்கிக் கொண்டிருந்த செங் கொடியை நன்ருக பறக்க விடும்படி சொல் லிக் கொண்டே ஓட்டினர். எனக்கு இரு விதத்தில் ஆச்சரியம். ஒன்று டி. வி. எஸ். டிரைவர் தன் கம்யூனிஸ அனுதாபத்தை அவ்வளவு பகிரங்கமாகத் தெரிவித்தது. மற்ருென்று, கம்யூனிஸ்ட்கள்தான் ஜயிப் பார்கள் என்று அவர்கள் அனுதாபிகள் அவ்வளவு நிச்சயமாக நம்பியது.

வழிநெடுக தொழிலாளிகள் குமிளியி லிருந்தும் தேக்கடியிலிருந்தும் சாரி சாரி யாகத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். பஸ்ஸை ஓட்டியவர் அவ்வளவு சாமர்த்திய சாலி இல்லை என்று தோன்றிற்று. நாலு மைல் தூரத்தில் மலைச்சாரலில் இருமுறை பின்னல் ஓட்டித் திருப்பவேண்டி வந்தது. ஆனல் குமிளியிலிருந்து கோட்டயம் சுமார் 60 மைலுக்குமேல் இருக்கும். அங்கு வளைவுகளும் பயங்கர திருப்பங்களும் அனந்தம். அந்த மலையாளி டிரைவர் மலைவிழுங்கி. ஓர் இடத்திலாவது தவறு செய்யவேண்டுமே, கிடையாது.

குமளியை அடையுமுன்னரே நாங்கள் கம்யூனிஸ்ட்கள் ஆளும் நாட்டையடைந்து விட்டோம் என்று அறிவுறுத்துவது போன்று சுவர்களில் "மாஸ்கோ பீடிகள்" விளம்பரங்கள் கண்ணில் பட்டன. பஸ் ஒரு சிங்கார வளைவுக்கு முன்னல் நின்றது. வளைவுக்கு அப்புறம் கேரளப் பிரதேசம். முதல் முதலில் உள்ள கட்டிடம் போலீஸ் ஸ்டேஷன். நன்ருக இருட்டிவிட்டதால் தேக்கடிக்குப் போகவும் வழிகாட்டவும் பெட்டியைத் தூக்கி வரவும் நம்பகமான கூலியை அமர்த்தப் போலீஸ் உதவியைக் கோரினேன். பாதி மலையாளத்திலும் பாதி தமிழிலும் பேசிய ஓர் இளைஞன் யார் யாரையோ அழைத்துப் பிரயோஜனம் இல் லாமல் போகவே தானே பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடக்கலானன்

அடுத்த ஒரு மைலுக்குள் இரவைப் பக லாக்கும் மின்சாரம் ஒளி வீசிற்று என்ரு லும், வழியில் ஒரு லாந்தல் கம்பம்கூடத் தென்படவில்லை. சிற்சில சமயங்களில் பழையநாள் ஒய். பி. எஞ்ஜின்கள் பல சேர்ந்தாற்போல் கத்துவது போன்ற சப் தத்தைப் பல தடவைகள் கேட்டேன். பையனை "என்ன சப்தம் அது" என்று கேட் டேன். "அது சும்மா ஸார்" என்ருன் பையன். தேக்கடியை அடைந்த பிறகு அங்குள்ள என்ஜினியர்கள், சப்தங்கள் யானைக் கூட்டங்களின்சப்தம் - என்ருர்கள், எனக்கு மூச்சே நின்றுவிடும்போல் இருந் தது.



அணைக்கட்டிலிருந்து வரும் கால்வாயை ஆழப்படுத்தி தண்ணீர் கஷ்டத்தை நீக்க சென்னை அரசாங்கம் முனைந்துள்ளது

தேக்கடியிலிருந்துதான் பெரியாறு ஏரியின் தண்ணீர் மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களின் பாசனத்துக்கு உதவுகிறது. தண்ணீர் செல்லும் வாய்க்காலை ஆழப்படுத்தும் வேலை ஜரூராக நடந்துகொண்டிருந்தது. எனக்கு அறிமுகம் செய்யப்பட்ட இளைஞர் பெயர் ஸ்ரீ குருவில்லா பல வாரங்களாக க்ஷவரம் செய்யப்படாத தாடியுடனும், களைப்பு மேலிட்ட முகத்துடனும் காட்சியளித்தார் அவர். அவருக்கு என்னைப்பற்றி முன்கூட்டியே தகவல் கிடைக்கவில்லை. ஆதலால் என்னை எங்கே தங்கச் செய்வது என்பது அவருக்குப் பிரச்னை ஆகிவிட்டது. கேரள சர்க்காரைச் சேர்ந்த ஆரண்ய நிவாஸில் இடம் இல்லை. சர்க்கார் தங்கும் விடுதியிலும் இடம் இல்லை ஸ்ரீ குருவில்லா சளைக்கவில்லை. தன் உயர்ந்த ஆபீஸரான ஸ்ரீபால் அவர்களிடம் சென்று நானும் அவர் அறையில் தங்க அனுமதி கேட்டார். ஸ்ரீபாலுக்கு உடம்பு சரியில்லை. முழு அறையிலும் அவரே இருந்தால் தேவலை என்று அவருக்கு மனதில் தோன்றியிருக்கலாம். ஆனால், நான் அவருடன் தங்க உடனே இணங்கினார்.

சாப்பிட ஆரண்ய நிவாஸ் திரும்பினோம். என்னுடன் சுமார் இரண்டு மணிகளுக்கு மேல் செலவழித்த ஸ்ரீ குருவில்லாவுக்கு, நடுநிசிக்குத்தான், தன் பிள்ளையின் பிறந்த நாள் ஞாபகம் வந்தது. என்னையும், ஸ்ரீபாலையும் அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்குச் சென்றார்.

இங்கெல்லாம் அதாவது வடக்கே ஒரு திட்டம் என்று சொல்லுவதற்குமுன் ஊழியர்களுக்கு விடுதி, பூங்கா, கிளப் முதலியவைகளைக் கட்டுகிறார்கள். பணம் தாம் தூம் என்று செலவு செய்யப்படுகிறது. ஸ்ரீ குருவில்லாவின் வீட்டைப் பார்த்ததும் எனக்கு அழுகையே வந்தது. மூங்கில் தட்டிகளாலான சுவர்கள், ஈரம் காத்த தரை, மின்சாரம் ஒன்றுதான் சௌகரியம். ஸ்ரீமதி குருவில்லா முகம் சுணங்காமல் பாதி ராத்திரியில் எங்களுக்கு கேக் கொடுத்து உபசரித்தார். ஸ்ரீ குருவில்லா போன்றவர்கள் நம் நாட்டுக்கு மிகவும் தேவை. எப்படி என்று அடுத்த கட்டுரையில் விளக்குகிறேன்.

(தொடரும்)

ஜூன் '58 வெளியீட்டில் பிரசுரமாகியிருந்த 'மாயாவி' அவர்களுடைய 'மன அழுக்கு' என்ற சிறு கதையைத் தூண்டலாகக் (Stimules) கொண்டெழுந்த பிரதிவினை (Response) கற்பனைதான் இச்சிறுகதை. இக்கதையின் முதற்பகுதியைச் சென்ற இதழில் நேயர்களுக்குச் சமர்ப்பித்திருந்தோம்.

—ஆசிரியர்.



# குறுக்கு வெட்டு

பட்டாபி நாராயணன்




சென்ற இதழில்:— இடம் குற்றாலம். சுதர்சன்–புவனா தம்பதிகள் 'சீசனை' அனுபவிக்க வந்துள்ளனர். புவனா வடநாட்டுப் பெண். சுதர்சன் எழுத்தாளர். இருவரும் காதலித்தனர். புவனாவின் பெற்றோர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் இருவரும் மணந்து களிக்கின்றனர். கணவரின் இலக்கியப் பற்றுக்கேற்ப, ஒரு கதை எழுதி கணவரைப் படிக்கச் செய்கிறாள்.

பவுனா என்ற அழகுக் கொடி ஸ்ரீதர் என்ற காலேஜ் ஆசிரியரைக் காதலித்து டியூஷன் ஆசிரியராக அமைத்துக் கொள்கிறாள், பெற்றோர்களின் சம்மதத்தின் பேரில். பாடம் ஆரம்பமாயிற்று—காதல் உரையாடலும் கூடவே தொடங்கிற்று; கைகள் உறவாடின. அத்தருணம் பெண்ணின் தகப்பனார் சேட்ஜீ உள்ளே வருகிறார்.



எதிர்பாராத வேளையில் காட்சி தந்த அப்பாவைக் கண்டவுடன் என்னுடைய அங்கமெல்லாம் பதறியது. அறைக்குள் நுழைந்த அவர் வேறொன்றையும் கவனிக்கவில்லை. என்னைப் பார்த்தார். அடுத்து அவர் (ஸ்ரீதர்) மீது அப்பாவின் பார்வை திரும்பியது. பின்பு அந்த விளக்கின் மீது! தொடர்ந்து அவருடைய முகத்தில் ஒருவித மாற்றம்! அந்த மாற்றம் எப்படிப்பட்டது? நன்மையைப் பயக்கப் போவதா; இல்லை பயங்கரமான முடிவு ஒன்றை உறுதிப் படுத்தப் போவதா என்று அந்த நிலையில் என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. என்னுடைய ஆசிரியரை நிமிர்ந்து பார்த்தேன். அவருடைய முகத்தில் எந்த விதமான கலவரமும் வெளிப்படையாகத் தெரியவில்லை. "அவர் மிகவும் நெஞ்சழுத்தக்காரர்! சாமர்த்தியசாலி!" என்றெல்லாம் புகழுரைகளை வழங்கியது என் அந்தரங்கம்.

அவ்வளவு தான்!... அதற்குமேல் என்னால் எதையுமே பார்க்கமுடியவில்லை.

பயம் என்பது ஒரு கறுப்புத்திரையைப் போன்று உருமாறி என்பார்வையை மறைத்தது. கணப்பொழுதில் எங்கும் இருள் கவிந்ததைப் போன்ற ஒரு பிரமை! தந்தை தொடர்ந்து பேசினார்.

பெண்ணின் காதல் ஈடுபாட்டில் குறுக்கிட்டு அது முற்றுப் பெறாதபடி, முட்டுக்கட்டை போடும் அப்பாக்களுக்கெல்லாம் ஒரு விதி விலக்குத்தான் என் தந்தை என்பதை நிரூபித்து விட்டது அவருடைய பேச்சு.

"நான் வெளிப்புறமிருந்து முழுவதையும் கவனித்துக் கொண்டுதானிருந்தேன். மிஸ்டர் ஸ்ரீதர். உண்மையிலே மனதை விட்டு அகலாதபடி இருக்கிறது உங்கள் போதனை!"

"மன்னிக்க வேண்டும் சேட்ஜீ. இப்படித்தான் இலக்கியத்துடன் ஒன்றிவிடும்போது நான் என்ன செய்கிறேன் என்பது எனக்கே தெரிவதில்லை!"

"மன்னிப்பதா? உங்களுடைய திறமையை எப்படிப் புகழ்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன் சார்! எனக்குக் கூடத் தங்களிடம் இலக்கியம் கற்றுக் கொள்ளலாம் போலத் தோன்றுகிறது. டியூஷன் எடுத்துக் கொள்வீர்களோ"

இருவரும் கலகலவென்று மனம் விட்டுச் சிரித்தனர். அந்தச் சிரிப்பு என் குழப்பத்தைப் போக்கியது. நானும் சிரித்தேன். எங்கள் இருவருடைய இல்வாழ்வும் அதுபோன்றே ஆனந்தமயமாகிவிடும் என்று முடிவு செய்துவிட்டேன்!

ஆனால்!... அந்த முடிவு?...

ஆம்! அது நிறைவுபெறாத முடிவாகவே போய்விட்டது. வெறும் பகற்கனவாயிற்று. பொய்மையின் உருவகமான கானல் நீராயிற்று. மீளமுடியாத நெடுந்துயரக் கடலில் என்னை ஆழ்த்திவிட்டது.

ஸ்ரீதர் என்னை அன்பு மனைவியாக ஏற்றுக் கொள்ளத் தயாராகத்தானிருந்தார். என்னையும் என் உடைமையையும் அவருக்கே அர்ப்பணித்து விட்ட நான் அவருக்குத் தொண்டு செய்யத் தொடங்கப்போகும் அப்புனித நாளை எதிர்நோக்கியிருந்தேன். எங்கள் இருவரையும் கணவன்-மனைவியாக்கி அந்தக்காட்சியைக் கண்டு மனங்குளிர வேண்டுமென்று காத்திருந்தனர் என் பெற்றோர். இப்படிப்பட்ட இன்பச் சூழ்நிலை எந்தப்பெண்ணுக்குத்தான் கிட்டும்? மகிழ்ச்சியின் பூரிப்பு எனக்கு ஒரு தனிப்பட்டக் கவர்ச்சியை அளித்தது.

ஆனால் கணப்பொழுதில் தோன்றி மறையும் மின்னலையொத்ததுதான் எனக்கு அளிக்கப் பட்டிருந்த அந்த இன்பச் சூழ்நிலை என்பதை என்னால் அப்போது உணரமுடிந்ததா? தெய்வம் அப்படியும் பழிவாங்க வேண்டுமா? நண்பர் ஒருவருடைய திருமணம் ஏன் குறுக்கிட்டது? அவர் அதற்குப் போகாமலே இருந்திருந்தால்?

இதென்ன அசட்டுத்தனமான கேள்வி! கேள்விமட்டுமா அசட்டுத்தனமானது. கேள்வியைப்போடும் நானே ஓர் அசடுதானே? கொடுத்து வைக்காதவள்தானே. கைக்கெட்டிய அந்த விலை மதிக்க முடியாத பொக்கிஷத்தை—என் ஸ்ரீதரை இமைக்கும் பொழுதில் பறிகொடுத்த அபாக்கியவதி தானே நான்!

எங்கள் திருமண ஏற்பாடெல்லாம் வேகமாக நடந்து கொண்டிருந்தது. ஒரு மாத காலம்தான்

எங்கள் முன் இருந்தது. நொடிப் பொழுதில் ஓடிப் போய்விடும் அந்தக் குறுகிய காலம் என்றுமே முடிவு பெறமுடியாத பயங்கரயுகமாகி விட்டது, விரிந்த தொடு வானத்தைப் போன்று.

அன்பர் ஒருவருடைய கல்யாணத்திற்காக அவர் திருநெல்வேலிக்குச் சென்றார். சென்றவர் என்னையும், என் குடும்பத்தையும், ஏன்? இந்த உலகையுமே மறந்து விட்டார். திருமணத்தைக் காணச் சென்ற அவருக்குத் திருமணக் கோலமே கிட்டாதபடி செய்துவிட்டாள் தாமிரபரணி. நண்பருடைய கல்யாணத்தைக்கூட அவரால் பார்க்க முடியாமற் போய்விட்டது.

அதற்கு முதல்நாள் தாமிரபரணி ஆற்றுக்குக் குளிக்கச் சென்ற வாலிபர்கள் குழுவில் இவரை மட்டும் விழுங்கித் தன் பசியைத் தீர்த்துக் கொண்டது அந்த ஆறு. மறுநாளே பத்திரிகையில் இவருடைய புகைப்படம் பிரசுரிக்கப் பட்டது.

அந்தக் கொடூரமான செய்தியைப் படித்தவுடன் என் உள்ளத்தினுள் காலமெல்லாம் அரும்பாடுபட்டு உருவாக்கி வைத்திருந்த அந்த அன்பு உருவம்—அழகுச்சிலை—சுக்கு நூறாக ஒடிந்தது. அந்தப் பேரதிர்ச்சியை என் இதயத்தால் தாங்க முடியவில்லை. ஒரே நெஞ்சுவலி! உடல் முழுவதும் வியர்வைப் பெருக்கு. இருகண்களிலும் துயரப் பெருக்கு. அந்தப் பத்திரிகை நனைந்தது! அதுவரைக்கும் நடந்ததுதான் எனக்குத் தெரிந்தது. அதற்குப் பிறகு ஒரே குழப்பம்! இருள்! சூன்யம் தான்! இன்று வரை என்ன நடந்தது என்று எனக்கே தெரியாது. எதைப் பார்த்தாலும் அவர் உருவம், எதைக்கேட்டாலும் அவருடைய குரல்! எதைச் சிந்தித்தாலும் அவர் நினைவு. எல்லாம் ஒரு கணப் பொழுதிற்குத்தான். பிறகு ஒரே இருள்! என்னவென்றே புரியாத ஒருவித பயங்கரம். சற்றுநேரத்திற்கு முன்புதான் என் தந்தை கூறினார். என்னை மனோ வியாதி பீடித்திருந்ததாம். நான் சுய நினைவுடன் இருந்ததே கிடையாதாம். எனக்கு 'ஹிஸ்டீரியா' என்றும், மனம் மாற்றமடையும் பொருட்டுத்தான் குற்றாலத்திற்கு வந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

என் மனம் எப்படி மாறியது? இன்று மட்டும் எனக்கு எப்படி எல்லாமே தெரிகிறது? புரிகிறது? கடந்த நிகழ்ச்சிகள் யாவும் எப்படி என் நினைவுக்கு வருகிறது?

இதோ! அவர்! என் ஸ்ரீதர்! எப்படி மீண்டும் உயிர்பெற்றார்? என்னைச் சந்திக்க மீண்டும் இங்கு எப்போது வந்தார்? நான் எங்கு இருக்கிறேன்? இந்தக் குன்று எந்த ஊரைச் சேர்ந்தது? காற்று எவ்வளவு நேர்த்தியாக வீசுகிறது. அதோ பஸ் ஸ்டாண்டு! குற்றாலம் என்று எழுதப்பட்டிருக்கிறதே!

சிறிது நேரத்திற்கு முன்புவரை எங்கு இருக்கிறேன், என்ன செய்கிறேன், யாரைப் பார்க்கிறேன், என்ன பேசுகிறேன் என்று ஒன்றுமே தெளிவுபடாமல் இருந்ததே! இப்போதுமட்டும் இந்த திடீர் மாற்றம் எவ்வாறு எனக்கு ஏற்பட்டது? இதோ! என் முன்னே மிகவும் அருகாமையில் அவரே நிற்கிறாரே! 'ஸ்ரீதர்... ஸ்ரீதர்...' என்று என் நெஞ்சம் முணுமுணுக்கிறதே! அவரும் என்னையே ஏன் பார்க்கிறார். அப்படியே விழுங்கிவிடுவதைப் போலல்லவா பார்க்கிறார். அவரால் என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையா?

"ஸ்ரீதர்!... நான்தான் தங்கள் பவுனு!" என்று கதறவேண்டும்போல் தோன்றுகிறதே!

மீண்டும் பழைய அதிர்ச்சி! மயக்கம்! என் நெஞ்சை ஏதோ அழுத்தியது. கண்கள் இருண்டு சுழன்றன. என்னை யாரோ தாங்கிப் பிடித்தார். நெற்றியில் வியர்வைமுத்துக் கோர்த்த மயங்கிச் சொருகிய கண்களை நிமிர்த்திப் பார்த்தேன். என் தந்தை தான். என்னை அணைத்துச் சமாதானப் படுத்தினார்.

என் வாழ்வுதான் இருண்ட குகையாக என்றோ மாறிவிட்டதே! அவர் என்னைப் பிரிந்த அந்த விநாடியிலிருந்து என் மனநோக்கு ஒரேதிசையில், ஒரே போக்காகச் செல்லத் தொடங்கிவிட்டதே! அதன் பிறகு நான் எண்ணியதெல்லாம் இது தானே. அவரை இழந்த எனக்கு வாழ்வே கிடையாது. என் சிந்தனை, மனப்போக்கு இவையெல்லாம் சென்று கொண்டிருந்தது சாவை நோக்கித்தானே! விரக்தி என்ற ஒரே நேர் கோட்டில் தானே என் உள்ளப் போக்கு சென்று கொண்டிருந்தது. இந்த வேளையில் இந்த மனோ நிலையில் அவர்—ஸ்ரீதர்—ஏன் எனக்கு மீண்டும் காட்சி தந்தார்?...

நான் மீண்டும் கண் விழித்துப் பார்த்தபோது எங்கள் விடுதியில் முன்புறமிருந்த அழகான 'போர்டிகோவில்' சோபாவில் சாய்ந்திருந்தேன். எனக்கு முன்புறம் சில மருந்துக்குப்பிகள், பால், பழரசம் எல்லாம் ஒரு நாற்காலியில் வைக்கப் பட்டிருந்தன. ஒரு புறம் என்னுடைய தந்தையும், மறுபுறம் என் தலையை வருடியவாறு தாயும் அமர்ந்திருந்தனர்.

எதிரே! அந்த சோபாவில்...!

அவர் தாம்! என் ஸ்ரீதர்! கல்லூரிக்குச் செல்லும் அதே வழக்கமான—கவர்ச்சிகரமான—தோற்றத்துடன் அமர்ந்திருந்தார். என்னைப் பார்த்துப் புன்முறுவலித்தார். 'பவுனு!'... என்றும் அன்புடன் அழைத்தார்.

நான் என் பெற்றோர்களை நிமிர்ந்துபார்த்தேன்.

"பவுனு! சற்று ஓய்வெடுத்துக்கொள் அம்மா!" என்றார் என் தந்தை.

"அப்பா! அவர்!..."

"ஆமாம்! அவரேதானம்மா! உன்னைக் காண வந்துவிட்டாரம்மா, பிறகு எல்லாம் சொல்கிறேன், சற்று தூங்கு!"

நான் சோர்வுற்றுச் சாய்ந்தேன்.

**சுதர்சன்:**

நான் அவராம்! அவர்... அவர்... அந்த ஸ்ரீதர் தான் என்று என்னை அழைத்துவந்து சித்ரவதை செய்கிறார்களே! நான் இந்தப் பெண்ணைக் காணவா குற்றாலத்திற்கு வந்தேன். அதிலும் அந்தக் குன்றுக்குத்தான் என் மீது என்ன கோபமோ, தீராத வெறுப்போ, இப்படிப்பட்ட தொரு சோதனைக்குள்ளாக்கி என் வேதனையை மீண்டும் குத்திக்கிளப்பிவிட்டதே. வேதனை! ஆம்! சகித்துக்கொள்ள முடியாத வேதனை! என் உள்ளத்தில் விளக்கேற்றி ஒளிர்விக்கவென்றே பிறந்து முல்லைக்கொடி போன்று செழிப்பாக வளர்ந்த என் யமுனாவை அரை நொடியில் பறி கொடுத்த வேதனை.

எனக்காகத்தான் அவளும், அவளுக்காகத்தான் நானும் பிறந்திருப்பதாக எங்கள் இருவருடைய பெற்றோர்களும் எண்ணி இறுமாந்திருந் தார்களே! குடும்பத்தில் நிலவி வரும் வேற்றுமை உணர்ச்சிகள், துவேஷம் காதலர்கள் வாழ்விற்குச் சத்ருவாக அமைவதுதான் வழக்கம். அம்மாதிரி யான தடைகள் எதுவுமேயின்றி களங்கமில்லாத நீலவானில் பவனிவரும் முழுமதி போன்றுதானே எங்கள் இருவருடைய அன்பின் வளர்ச்சியும் போய்க்கொண்டிருந்தது. அப்படி இருந்தும் இன்று ஏன் புழுவாகத் துடிக்கிறேன்? துடிக்காமல் வேறு என்ன என்னால் செய்யமுடியும்? துடிக்கவைத்துவிட்டு அணைந்து விட்டதே என் இதய தீபம்—யமுனா. என்னை ஒரு கணம் பிரிவதென்றாலும், தீராத வேதனையுறும் யமுனாவைத் தெய்வம் என்னிடமிருந்து நிரந்தரமாகப் பிரித்துவிட்டதே!

அவளுடைய பெற்றோர்களுக்குத் திடீரென்று ஏன் அந்த விபரீத யோசனை தோன்றவேண்டும். அவர்கள் கண்டார்களா? யமுனா அவர்களுடைய கண்களில் மண்ணை அள்ளிப் போடப் போகிறாள் என்று.

யமுனாவைக் கிராமத்திலிருந்த அவளுடைய பாட்டி பார்க்க விரும்பியதற்காக அங்கு அனுப்பி வைத்தார்கள் அவளுடைய பெற்றோர்கள். அங்குதான் காலன் வைசூரியின் உருவில் என் அன்புத் தெய்வத்தைப் பிடித்துக்கொண்டான். அவளுடைய தாத்தாவும் பாட்டியும் ஏதோ பய பக்தியுடன் அம்மனின் விளையாட்டிற்குச் சிகிச்சை செய்தார்கள். காலனின் வெறியுண்ட விளையாட்டிற்கு முன் அம்மனின் விளையாட்டு எம்மாத்திரம்? என்னைக்கதறவிட்டு விட்டு அவள் விடை பெற்றுவிட்டாள். இனி எனக்கு வாழ்வு ஏது? என்னுடைய இன்ப வாழ்வு என்னும் கோட்டை என்றோ இடியுண்டு நொறுங்கி விட்டதே! உயிரற்ற உடலைப் போன்று தானே ஒருவிதக் குறிக்கோளும் இன்றி அலைந்து கொண்டிருக்கிறேன். எனக்கு ஏன் இந்தப் பரீட்சை? இக்குன்று என் வேதனையைத் தூண்டிக்கிளப்பி விட்டாலும், அந்த வேதனையிலும் ஒரு வித இன்பம் காண்கிறேனே!

இனி எனக்குப் புகலிடம் சாவு தான் என்ற, விரக்தி என்ற ஒரு நேர் கோட்டுப்பாதையில் சென்று கொண்டிருந்த என் மன நோக்கை இந்த எதிர்பாராத நிகழ்ச்சி—பவானாவின் சந்திப்பு—வேறுதிசையில் திருப்பி விட்டதே! நான் என்ன செய்வேன்? பவானாவை ஏன் சந்தித்தேன்? சந்தித்ததில் தான் என்ன தவறு இருக்கிறது? எத்தனையோ பெண்களை இதற்குமுன் நான் சந்தித்ததில்லையா! அவர்கள் என் மன நோக்கில் எந்த விதமான மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லையே! பவானா மட்டும் ஏன் என்னுடைய சித்தத்தைக் கலக்குகிறாள்?

யமுனாவின் அதே எழில் உருவத்தை – அதே சாயலை – முதற் பார்வையில் கண்டுவிட்டேனே! ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பட்ட இரு தங்கச் சிலைகள்தான் யமுனாவும், பவானாவும். சந்தேகமேயில்லை! இப்படியும் உலகில் நடக்குமா? நடக்கத்தானே செய்தது! புனர் ஜன்மம் பெற்ற என் யமுனாவையேதான் நான் அந்தக் குன்றில் கண்டது.

எல்லாவற்றைக் காட்டிலும் உள்ளத்தை உலுக்கும்படி இருக்கிறதே அந்த அபலை பவானாவின் சோகக் கதை. யாரோ ஸ்ரீதராம்! பேராசிரியராம்! அவளிடம் அன்புகொண்டவராம். ஆனால் என் யமுனாவிற்குற்ற கதியே அவருக்கும் நேர்ந்துவிட்டதாம்!

என்னைக் குன்றில் சந்தித்தவுடன் அந்தப் பெண் மயக்கமுற்றாள். நான் திடுக்கிட்டேன். அவளைத் தாங்கிய அவருடைய தந்தையும் என்னை விழுங்கிவிடுவதைப் போன்று பார்த்தார். ஓடி வந்துகொண்டிருந்த அவருடைய மனைவியும் என்னைக் கண்டவுடன் வாயைப் பொத்தியவாறு நின்றுவிட்டார்கள். ஒரு கணம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்தப் பெண்ணைப் போலவே அவர்களும் மயக்கமுற்று விடுவார்களோ என்ற பயத்தில் நானே மயங்கி விழுந்துவிடுவேன் போலாகிவிட்டது.

சேட்ஜீ தாம் முதலில் பேச்சைத் தொடங்கினார். அவருடைய பேச்சில் கண்ணியமும் அத்துடன் பதட்டமும் இழைந்தவாறு வெளிப்பட்டது.

"ஐயா! கொஞ்சம் நீங்கள்தாம் தயவு செய்ய வேண்டும். வித்தியாசமாக எண்ணிக்கொள்ளக் கூடாது. எங்கள் பவானாவுக்கு நீங்கள்தாம் வாழ்வளிக்கவேண்டும். அவளுடைய மன இருளைப் போக்கி ஒளிபெறச் செய்யவேண்டும்" என்றார். ஒன்றுமே புரியாமல் நான் திகைத்தேன்.

"போ! ஓடிப்போய் உன் யமுனாவைக் காப்பாற்று. யமுனா மயக்கமுற்றுத் தவிக்கும்போது

பார்த்துக் கொண்டிருக்கிறாயே!" என்று இடித் துரைத்தது ஒருமனம்.

"யமுனாவா?... சேட்ஜீ அந்தப் பெண்ணை பவுனா என்று அழைத்தாரே! அவள் யாரோ? எவளோ? - முன்பின் தெரியாதவள். அவளை நீ காப்பாற்றுவதா? அவர் சொல்வதைக் கேட்டால் நீயேதான் அவளை மணக்கவேண்டும் போலிருக்கிறதே! யமுனா இருந்த இடத்தில் வேறொருவளா?" என்றது மற்றொரு மனம்.

"பவுனாவை நான் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? ஒருவேளை இடிந்துபோன என்வாழ்வை மீண்டும் உருவாக்க என் யமுனாவேதான் இந்த பவுனாவை என்முன் தோன்றச் செய்திருப்பாளோ! அவளைக் கண்டவுடன் என்மனம் பேதலிக்கிறதே! எப்போது அவளை என் உடைமையாக்கிக் கொள்வோமென்று தவிக்கிறதே என் அந்தரங்கம். அதே சமயத்தில் விந்தையான நிர்ப்பந்தமும் எனக்கு ஏற்பட்டிருக்கிறதே! அவளுடைய வாழ்வை ஒளிவீசச் செய்யும்படி கெஞ்சுகிறாரே சேட்ஜீ! எப்படியிருந்தாலும் பவுனாவுக்குற்ற துயரைக் களைவதுதான் என் கடமை."

"என்ன? மிகவும் தீவிரமாக யோசனை செய்கிறீர்கள்?" என்றார் சேட்ஜீ

துயில் நீங்கி எழுவதைப் போன்று சுயநினைவிற்கு வந்த நான் தோளில் தொங்கிக் கொண்டிருந்த தண்ணீர் பையை பரபரவென்று திறந்தேன். அதனுள் அடைத்து வைத்திருந்த அருவி நீரை பவுனாவின் முகத்தில் அள்ளித் தெளித்தேன். அப்போதே என் மனத்தினுள் அடைத்து வைத்திருந்த சோகச்சுமைக்கும் யமுனாவைத் தவிர வேறு யாருக்கும் என் உள்ளத்தில் இடமில்லை என்ற பிடிவாதத்திற்கும் பூரண விடுதலை அளித்துவிட்டேன்.

தெளிக்கப்பட்ட நீர் பவுனாவின் முகத்தில் முத்து முத்தாகத் திரண்டு நின்றது. அன்று காலையில் நான் குளத்திலிருந்து பறித்துவந்த அந்தத் தாமரை மலரும், அதில் ஒட்டிக் கொண்டிருந்த நீர் முத்துக்களும் என் நினைவுக்கு வந்தன.

பவுனா ஒருமுறை அசைந்துகொடுத்தாள். அவளுக்கு மயக்கம் முற்றும் கலையவில்லை. தள்ளாடித் தள்ளாடி நடக்கமட்டும் அவளால் முடிந்தது.

"பரவாயில்லை! கொஞ்சம் உதவிபுரியுங்கள்!" என்றார் சேட்ஜீ. முதலில் தயங்கினேன். பிறகு நானும் அவருமாகச் சேர்ந்து பவுனாவைக் கைத்தாங்கலாகப் பூங்காவின் வாசலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அவருடைய காருக்குக் கொண்டு சென்று பின் ஆசனத்தில் படுக்கவைத்தோம். அவளுடைய தாயார் பிளாஸ்கிலிருந்த சூடான பாலை பவுனாவுக்குக் கொடுத்தாள். சற்று ஆசுவாசப்படுத்திய பின்பு அவள் மயக்கம் தெளிந்து அயர்ந்த நித்திரைக்குள்ளானாள். முன் ஆசனத்தில் நானும் சேட்ஜீயும் அமர்ந்தோம். வண்டி கிளம்பியது.

சேட்ஜீ அப்போது அந்தக் காரைமட்டும் ஓட்டவில்லை. என் மனக் குழப்பத்தையும் சேர்த்து ஓட்டிவிட்டார்.

"சார்! உங்கள் பெயரை நான் அறியலாமோ?.."

"என் பெயர் சுதர்சன்!"

"எந்த ஊரோ?"

"இந்த ஊர் என்று குறிப்பிட்டுச் சொல்லும்படி எனக்கு ஒன்றுமே கிடையாது சார். போகிற ஊர், பார்க்கிற ஊர், இருக்கிற ஊர் எல்லாமே என் ஊர்தான். நான் ஒரு நாடோடி!"

"ஏன் இப்படி விரக்தியுடன் பேசுகிறீர்கள்? உங்களுடைய பேச்சைக் கேட்கும்போது நீங்களும் எங்களைப்போலவே துயரப் புயலில் சிக்குண்டு தவிப்பவர்தாம் போலிருக்கிறதே!"

"அதை மீண்டும் நினைவு படுத்தாதீர்கள். உயிருக்குயிரான என் யமுனாவைப் பறிகொடுத்துவிட்டு......' நான் தடுமாறினேன்.

"மன்னியுங்கள்! உங்கள் துயரப் புண்ணைக் கோல்கொண்டு குத்திவிட்டேன். எங்களுடைய பவுனாவும் அப்படியேதான்! உயிருக்குயிராக நேசித்த ஒருவரைப் பறிகொடுத்துவிட்டு..."

எனக்குப் புல்லரிப்பெடுத்தது. நிலை குத்திட்ட பார்வையுடன் சேட்ஜீயை நோக்கினேன். குற்றாலத்தின் ஊர்க்கடைசியில் ஓர் ஆலமரத்தடியில் காரும் ஸ்தம்பித்து நின்றது. ஸ்டியரிங்கிலிருந்த கைகளை எடுத்து என் இருகரங்களையும் இறுகப் பற்றினார் சேட்ஜீ.

"சார்! நீங்கள் ஒரு பேருதவி செய்யவேண்டும். உங்களைத் தெய்வம்தான் எங்களிடம் சேர்ப்பித்திருக்கிறது. பிறவிக் குருடனுக்குத் திடீரென்று பார்வைக் கிட்டியதைப் போன்று நீங்கள் கிடைத்திருக்கிறீர்கள். தயவுசெய்து மறுக்காமல் இந்த உதவியை...... நாங்களும், எங்கள் குடும்பமும் என்றென்றும் தங்களுக்குக் கடமைப் பட்டவர்களாவோம்."

"என்ன உதவி?... நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லாமலே அதிகப்படியாக எனக்கு மரியாதை செலுத்துகிறீர்களே!"

"எங்கள் பவுனாவைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு."

"கட்டளையிடுங்கள்! என் யமுனாவைக் காப்பாற்ற இவ்வளவு நிர்ப்பந்தமும், கெஞ்சுதலுமா எனக்குத் தேவை?"

"என்ன சொல்கிறீர்கள் சார்?..."

"என் யமுனாவைப் பார்த்தால் தங்கள் பவுனாவைப்பார்க்க வேண்டாம் சேட்ஜீ! அதே அச்சு

அதே சாயல்! அதே மோகனச்சிரிப்பு! அதே பார்வை!...”

“ஆஹா! நாங்கள் கொஞ்சம் புண்ணியமும் செய்திருக்கிறோம் சார்! பவூனுவை நிராதரவாக விட்டுச்சென்ற எங்கள் ஸ்ரீதர் தங்கள் வடிவில் மீண்டும் உயிர்பெற்று வந்திருக்கிறார் சார்!”

“என்ன சொல்லுகிறீர்களென்றே எனக்கு விளங்கவில்லையே!...”

“பவூனு தன் உள்ளத்தை பேராசிரியர் ஒருவருக்கு அர்ப்பணித்திருந்தாள்; அவர்தாம் ஸ்ரீதர்! ஆனால் அவரோ தம் உயிரை யமனுக்கே அர்ப்பணித்துவிட்டார் சார்!” சேட்ஜீயின் குரல் தளதளத்தது.

“என்ன, ஸ்ரீதர் இறந்துவிட்டாரா?...”

“தாமிரபரணி ஆற்றில்...” சேட்ஜீயின் கண்கள் சிற்றருவியாகியது.

“அடப் பாவமே!...” என் கண்களும் கலக்கமுற்றன.

“நீங்கள் தாம் காப்பாற்றவேண்டும் சார்! ஸ்ரீதரின் மரணத்தைக் கேட்டதிலிருந்து எங்கள் பவூனுவுக்கு அதிர்ச்சி தாங்கமாட்டாது நரம்புத் தளர்ச்சி உண்டாகிவிட்டது. திடீரென்று விசும்பி விசும்பி அழுவது, மயங்கி விழுவது, உடலைப் பயங்கரமாக குலுக்குவது... இவையெல்லாம் வந்துவிட்டன. “ஹிஸ்டீரியா”வுக்கு என்ன வைத்தியமெல்லாம் உண்டோ ஒன்றுவிடாமல் பரீட்சித்துவிட்டோம். குணம்தான் ஏற்படவில்லை. குற்றாலத்திற்கு வந்தாலாவது அவள் குணமடைவாளாவென்று எதிர்பார்த்தோம். தங்களைச் சற்றுமுன்பு சந்திக்கும்வரை எங்களுக்கு அந்த நம்பிக்கையும் ஏற்படவில்லை. நீங்கள் தாம்.”

“என்னை என்ன செய்யவேண்டுமென்கிறீர்கள்?”

“மனோதத்வ சிகிச்சையை (சைக்கலாஜிகள் டிரீட்மெண்ட்) நீங்கள்தாம் அவளுக்கு அளிக்க வேண்டும். அது ஒன்றுதான் எனக்கு நம்பிக்கையூட்டும் மருந்தாகப்படுகிறது.”

“அதாவது?......”

“தோற்றத்தில் ஸ்ரீதரையே முழுவதும் ஒத்திருக்கும் நீங்கள் ஸ்ரீதராகவே மாறிவிடவேண்டும். நடிக்க வேண்டும். எங்கள் பவூனுவின் மனதைத் தேற்ற வேண்டும். ஸ்ரீதரே நேரில் வந்து விட்டார். மீண்டும் தனக்குக் கிடைத்துவிட்டார் என்ற நினைப்பே - நம்பிக்கையே அவளுடைய வியாதியைக் குணப்படுத்திவிடும். தயவு செய்ய மாட்டீர்களா?...”

“இவ்வளவு மரியாதைக்கு நான் அருகதையற்றவன் சேட்ஜீ! பவூனுவுக்கு மீண்டும் வாழ்வளிப்பது என் கடமை! போதுமா?”




தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

**பெப்ஸ்** வில்லைகளை
உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.




பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.
எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-55-TAM.

சோல் ஏஜண்டுகள்:-
தாதா அண்டு கம்பெனி,
86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3.

எங்கள் உள்ளத்தைப் போன்றே அந்த வண்டியும் நிம்மதியாக அவர்கள் தங்கியிருந்த விடுதியை நோக்கி விரைந்தது. சேட்ஜிக்குக் கொடுத்த வாக்கை நான் வெற்றியுடன் நிறைவேற்றிக் கொடுத்துவிட்டேன். பங்களாவை அடைந்ததும் அவர் எனக்கு அளித்த அந்த மேனாட்டுப்பாணி உடையைத் தரித்தேன். பேராசிரியர் ஸ்ரீதராகவே மாறிவிட்டேன்.

போர்டிகோவில் பலூனாவுக்கு எதிரே அமர்ந்தேன். பலூனா கண்ணைத் திறந்தாள்.

"பலூனா...!" என்று பரிவுடன் அழைத்தேன்.

"ஸ்ரீதர்...!" என்று அவளுடைய நெஞ்சிலிருந்து ஒரு கதறல் வெளிப்பட்டது.

என் யமுனாவைப் பலூனாவிடம் காண்கிறேன் என்ற சாந்தி எனக்கு. ஸ்ரீதரையே மீண்டும் (என்னிடம்) காண்கிறோமே என்ற மன அமைதி அவளுக்கு. அவள் படிப்படியாகக் குணம் அடைந்து வந்தாள். குற்றால சீசனைப் போன்றே பத்து தினங்கள் கலக்கமும் இன்பமும் மாறிமாறி வரக்கழிந்தன. இடையே ஓரிரு தடவைகள் பலூனாவுக்கு மயக்கமும் வந்தது. வந்த மாதிரியே மறைந்தும் விட்டது. பலூனா பூரண குணம் அடைந்துவிட்டாள். மனோவியாதியின் சுவடே அவளிடம் காணப்படவில்லை.

குற்றாலநாதர் சன்னிதியிலேயே அடுத்த ஒரு வாரத்திற்கெல்லாம் ஸ்ரீதர் என்ற போர்வைக்குள்ளிருந்த நான் பலூனா என்ற போர்வைக்குள்ளிருந்த என் யமுனாவை மணந்தேன். இருவருடைய வாழ்வும் மீண்டும் ஒளிபெற்றது.

காதல் ஈடுபாட்டில் எடுத்த எடுப்பிலேயே தோல்வியின் அதிர்ச்சியால் பீடிக்கப்பட்ட பலூனாவின் மனநோக்கும் என் உள்ளப் போக்கும் ஒரே திசையை நோக்கிச் செல்லும் ஒன்றையொன்று தொடமுடியாத சமாந்தரக் கோடுகளைப் போன்றே இருந்தன. குற்றால நிகழ்ச்சி எதிர்பாராதவிதமாக எங்கிருந்தோ வந்து குறுக்கிட்டது. சமாந்தரக் கோடுகளை வெட்டும் குறுக்குவெட்டியைப் போன்று எங்களை அன்புத் தம்பதிகளாக்கிவிட்டது. அந்த குறுக்குவெட்டி நிகழ்ச்சி.

* * *

குறுக்குவெட்டியுடன் ஈடுபட்டுப் போயிருந்த சுதர்சன் தம்மையறியாமல் 'பலூனா!' என்று அலறிவிட்டார்.

"ஏன் இவ்வளவு பலமாக என்னை அழைக்கிறீர்கள்? நான் உங்களுக்கு மிக அருகில்தானே இருக்கிறேன். அதிலும் 'பலூனா' என்று கூப்பிடுகிறீர்களே! தங்கள் நலத்திற்காக ஒரு முறைதான் என் பெயரை 'புவனா' என்று மாற்றினீர்கள். அந்த வார்த்தையில் அதிக உட்பொருள் இருக்கிறதென்றீர்கள். இப்போது மறுபடியும் என்னுடைய பழைய பெயரின் மீது மோகம் வந்துவிட்டதா?"

உன்மீது மோகம் இனிமேலா எனக்கு ஏற்படவேண்டும்? உன் பெயரை நான் தான் முதலில் புவனா என்று மாற்றினேன். நானே தான் மீண்டும் பலூனாவாக மாற்றுகிறேன். ஏன் கூடாதா? நீ மட்டும் ஒன்றுந்தெரியாதவளாகவா இருக்கிறாய். உன் கதையில் என் பெயரை ஸ்ரீதர் என்று மாற்றமட்டுமா செய்திருக்கிறாய்? தாமிரபரணியில் அழுத்திக் (உயிரோடு சந்தோஷமாக இருக்கும் என்னை) கொன்றும்விட்டாயே! கடைசியில் கதையின் பிற்பகுதியில் என்னையே புகுத்தியிருக்கிறாய்? ஒரு பற்றற்ற நாடோடியாக.

"இதெல்லாம் எதற்கு? உன்னை பீ. ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறவைத்ததற்குப் பரிசா? இல்லை; பாடம் சொல்லிக் கொடுக்க என்று வந்துவிட்டு இப்போது தினந்தோறும் உன்னிடம் பாடம் கற்று வருகிறேனே — நீ ஆட்டுவிக்கிறதற்கெல்லாம் அடிமையாக ஆடுகிறேனே — அதற்கு வெகுமதியா?"

"வெகுமதியுமில்லை! பாராட்டு விழாவுமில்லை. சமாந்தரக் கோடுகளுக்கு வரைந்துள்ள குறுக்குவெட்டிக்கு நான் அளிக்கும் விளக்கம்! அவ்வளவுதான்!..."

மாணவியாக இருந்த பலூனா, அன்பு மனைவி புவனாவாக மாறிவிட்டபோதுகூட சுதர்சன் அவ்வளவு ஆனந்தப்படவில்லை! இப்போது அதே மனைவி தம் எழுத்துத் தொழிலிலும் சம அந்தஸ்து பெற்றுவிட்டாளே என்ற ஆனந்தம் அவரை எங்கோ கொண்டு சென்றது!...

[முற்றும்]



# தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

### மண் சுவர் கரையாதிருக்க

கரி நுண் அணுக்கள் உள்ள இடங்களில் அவற்றிற்குப்பதில் சிலிகான் நுண் அணுக்கள் உள்ள சிலவகைப் பொருள்களை ரசாயன சாஸ்திரிகள் தயாரித்துள்ளனர். இவ்வித விசேஷமான பொருள்களுக்குச் சிலிகோன் எனப் பெயர். நீரால் இச் சிலிகோன் பாதிக்கப்படுவதில்லை. ரூர்க்கியில் உள்ள மத்திய கட்டட ஆராய்ச்சி நிலையத்தில் (Central Building Research Institute, Roorkee) மண் சுவர்கள் கரையாதிருக்க இச் சிலிகோன் பயன்படுமா எனச் சமீபத்தில் சோதனைகள் செய்யப்பட்டன. அதிலிருந்து சிலிகோன் பூசப்பட்ட மண் சுவர் சுண்ணும்பு, செமெண்ட் போன்றவை பூசப்பட்ட மண்சுவர்களைப்போல் பழுதடைவதில்லை எனத் தெரியவந்துள்ளது. இது மட்டுமல்ல. மண் சுவர்களில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய துவாரங்கள் உண்டு. அவற்றின் வழியாக வெளிக்காற்று உள்ளேயும் உள் காற்று வெளியேயும் போய் வந்துகொண்டிருக்கும். சுண்ணும்போ, செமெண்டோ மண் சுவற்றின்மேல் பூசிவிட்டால் இத்துவாரங்கள் அடைபட்டுப் போகும். காற்று போக்குவரத்தும் நின்று போய்விடும். இது வீட்டில் வசிப்பவர்களின் உடல்நலனைப் பாதிக்கக்கூடும். சிலிகோன் பூசினுல் இத்துவாரங்கள் அடைபடுவதில்லை. காற்று போய் வந்து கொண்டிருக்கும். வீட்டில் வசிப்பவர்கள் உடல்நலமும் கெடாதிருக்கும்,

### பித்தளையிலிருந்து குப்ரியஸ் ஆக்சைடு

குப்ரியஸ் ஆக்சைடு (Cupreous Oxide) என்பது கண்ணுடி, பீங்கான் பாத்திரங்களுக்கு செந்நிறம் கொடுக்கவும் மின்சார முலாம் (Electro-plating), ஏ, ஸி. மின்சாரத்தை டி. ஸி. மின்சாரமாக மாற்றும் உபகரணங்கள் முதலியவற்றிற்கும் பயன்படும் ஒரு ரசாயனப் பொருளாகும். பழைய பித்தளைத் தகடுகளிலிருந்து இவ் ஆக்சைடைச் சுலபமாகத் தயாரிக்கும் முறை சமீபத்தில் காரைக்குடி அருகே உள்ள மத்திய மின்சார ரசாயன ஆராய்ச்சி நிலையம் (Central Electro Chemical Research Institute, 10/24 Venkatachalam Chettiar Street, Kottaiyur, Ramnad Dist.) கண்டுபிடித்து அம்முறையை பதிவும் செய்துள்ளது. இதன் பேடன்ட் நம்பர் 58352/7-9-56 ஆகும். பித்தளை செம்பும் துத்தநாகமும் (Zinc) கலந்த ஒரு கலப்பு உலோகமாகும், குப்ரியஸ் ஆக்சைடென்பது செம்பு ஆக்சைடாகும். பித்தளையிலிருந்து குப்ரியஸ் ஆக்சைடு தயாரிக்கும்போது ஒருவகை ஆரஞ்சு நிற வர்ணமும், துத்தநாகப் பவுடரும் உபபொருளாகக் கிடைக்கிறதாம் இதைப் பற்றி அதிக விவரம் வேண்டுவோர் மேலே கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

### செங்கல் சூளை மாமரத்துக்காகாது

மாந்தோப்புகளருகே செங்கல் சூளைப் போட்டால் அத்தோப்புகளில் காய்க்கும் பழங்களில் கரும்புள்ளி விழுகிறது. பழங்களும் அதிகமாக அழுகிப்போகின்றன. மாந்தோப்புக்குத் தென்மேற்கு திசையில் சூளையிருந்தால் இவ்விதம் ஏற்படும் சேதம் அதிக பயங்கரமாக இருக்கிறது, சூளைகளருகே இளம் கன்றுகளோ மரங்களோ இருப்பதால் அவற்றிற்கு ஒருவித தீமையும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. வயது வந்து காய்ப்பெடுக்கும் மரங்களையே காளவாய்கள் இவ்விதம் பாதிக்கின்றன. ஆகையால் இதுவிஷயத்தில் நம்மவர்கள் கவனமாக இருத்தல் அவசியம்.

### லிஸாஸார்ப்

மத்திய எரிபொருள் ஆராய்ச்சி நிலையத்தில் (Central Fuel Research Institute,

Digwadih, Jealgora P. O. Manbhum, Bihar) லிஸாஸார்ப் தயாரிக்கும் முறை ஒன்றைக் கண்டறிந்திருக்கிருர்கள். இது கரியமிலவாயுவை உறிஞ்சும் இயல்புடைய ஒரு பொருளாகும். அமெரிக்காவில் உள்ள கம்பெனி ஒன்று இந்த லிஸாஸார்ப்பை உபயோகித்துப் பார்த்துவிட்டுதான் இது வரை உபயோகித்து வந்த கரியமிலவாயு உறிஞ்சிகளுள் லிஸாஸார்ப்பே சிறந்த தெனக் கூறியுள்ளது. காற்றில் உள்ள கரியமிலவாயுவின் அளவு 0·4% ஆகக் குறைக்கப்பட வேண்டுமானுல் அதற்கு லிஸாஸார்ப்பைப்போல் பயனுள்ள பொருள் வேறெதுவுமில்லே என அக்கம் பெனி கூறுகிறது. அமெரிக்காவிலும் மற்ற மேல்நாடுகளிலும் இதனுல் இதற்குக் கிராக்கி அதிகரித்து வருகிறது. விஷவாயு முகமூடிகள் செய்யவும் இது மிகமிக உப யோகமானதாகும். இதனுல் இப்பொழுது இதை உற்பத்தி செய்வதற்கென நியூ மேக் இண்டஸ்ட்ரீஸ் (New Make Industries) அஹமதாபாத்தில் பெரிய தொழிற்சாலே ஒன்று நிறுவிவருகிறது.

### சோளமடிக்கும் இயந்திரம்

சோளக்கதிர்களிலிருந்து தானிய மணி களே வேருகப் பிரிக்கும் இயந்திரங்கள் இரண்டு யூகஸ்லேவியாவிலிருந்து இப் பொழுது நம் நாட்டுக்கு வந்துள்ளன. இதில் ஒன்று கையால் இயங்குவது. மற் றது கால், கை எதைவேண்டுமானுலும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். கையால் இயங்கும் இயந்திரத்தில் ஒரு மனிதன் கதிர்களேக் கொட்டிக்கொண்டே இருந்தால் மணிக்கு 552 ராத்தலும், இரண்டு மனிதர் கள் கொட்டிக்கொண்டே இருந்தால் 822 ராத்தலும் தானியம் பிரிக்கலாம். கால், கையால் இயங்கும் இயந்திரத்தின் உதவி யால் கையால் இயக்கினுல் அதேமாதிரி ஒன்றிரண்டு ஆட்களுக்கு முறையே 464, 732 காலால் இயக்கினுல் முறையே 492, 750 ராத்தல் தானியம் தனியே பிரிக்கலாம். இவ் வியந்திரங்களே உள்ளூர்களிலேயே 80—90 ரூபாய் செலவில் சுலபமாக நம் குடி யானவர்கள் தயாரித்துக்கொள்ளலாம். ஒரு இயந்திரத்தின் உதவியால் 8 மணி நேரத் தில் 10—15 ஏக்கர் நிலத்தில் விளே ந்த கதிர் களிலிருந்து தானியமணிகளேச் சுலபமாகப் பிரித்தெடுத்துவிடலாம். இதுபற்றி அதிக விவரம் வேண்டுவோர் Indian Council of Agricultural Research, New Delhi என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

### செம்மறியாட்டு உரோமம் கெடாதிருக்க

செம்மறியாடுகளிலிருந்து இன்னும் அதிகமாகவும் நயமாகவும் உரோமம் (Sheep wool) பெற திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இதற்கென ஒன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 1961 மார்ச் இறுதிக்குள் எல்லா ராஜ்யங்களிலுமாகச் சேர்த்து மொத்தம் 396 அரசாங்க செம்மறி யாட்டுப் பண்ணேகள் திறக்கப்பட்டுவிடும்.

உலகில் இப்பொழுது உள்ள செம்மறி ஆடுகள் மொத்தம் சுமார் 60 கோடி. இதில் சுமார் 4 கோடியே நம் நாட்டில் உள்ளது. நம் நாட்டு ஆடுகளிலிருந்து வருடம் சுமார் 6 கோடி ராத்தல் உரோமமே உற்பத்தி யாகிறது. இதில் சுமார் பாதி அதாவது 9 கோடி பெருமதியுள்ள உரோமம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இப்படி ஏற்றுமதி செய்யுமுன் உரோமங்களே நாம் சுத்தம் செய்தல் வேண்டியிருக்கிறது. ஆடு கள் மேயும்போதும் படுத்திருக்கும்போதும் அவற்றின் உரோமங்களில் பலவிதப் பொருள்கள் சிக்கிக்கொள்ளும். இப்படி சிக்கிய பொருள்களில் சில என்னதான் சுத்தம் செய்தாலும் உரோமத்தை விட்டு அகலவே அகலாது. ஆகையால் அப்படிப் பட்ட பொருட்களே விலக்க இப்பொழுது நம் நாட்டில் ஒருமுறை கையாளப்பட்டு வருகிறது. இதன்படி கந்தகத் திராவகம் கலந்த நீரில் உரோமங்களே முக்கி எடுப்பார்கள். இப்படிச் செய்வதால் அப் பொருள்கள் எல்லாம் எரிந்து கரியோ சாம்பலோ ஆகிவிடும். அப்பொழுது அவற் றைப் பிரிப்பது சுலபமாகிவிடும். ஆனுல் கந்தகத்திராவகத்தால் உரோமத்திற்கும் தீங்கு விளேகிறது. இத்தீங்கு விளேயா திருக்க ஆஸ்திரேலியாவில் இப்பொழுது ஒரு முறையைக் கண்டறிந்திருக்கிருர்கள். அது இதுதான்—

கந்தகத் திராவகம் கலந்த நீர் நிறைந்த ஹோஸ் (Hose) களில் அதோடு லிஸா போல் என். எக்ஸ். (Lisapol N.X.) 0·03% கலந்துவிட வேண்டும். இப்படிச் செய்தால்

கந்தகத் திராவகத்தால் உரோமத்திற்குத் தீங்கு விளைவதில்லை. இவ்விஸாபோல் என். எக்ஸ். ஒரு ராத்தல் 200 ராத்தல் உரோமத்தை இவ்விதம் சுத்தம் செய்யப் போதுமானது. ஆஸ்திரேலியாவில் உள்ள National Council of Scientific and Industrial Research என்ற ஸ்தாபனம் இதைக் கண்டுபிடித்துள்ளது. இம்முறையைக் கையாண்டால் நம் உரோமம் இன்னும் உயர்வானதாக இருக்கும். வெளிநாடுகளில் அதிக விலைக்குப் போகும். நமக்கும் கூடுதலான வருவாய் கிடைக்கும்.

## இந்திய நைல்

கிழக்குப் பஞ்சாபில் உள்ள சத்லஜ் நதி நம்நாட்டு நைலாக ஆக இருக்கிறது. இந் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஹரிகா அணைக்கட்டிலிருந்து ராஜஸ்தானில் ஜோத்பூர் டிவிஷனைச் சேர்ந்த ராம்கர் (Ramgarh) வரை 425 மைல் நீளமுள்ள பாசனக் கால்வாய் ஒன்று வெட்டும் வேலை இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு நீள பாசனக் கால்வாய் உலகில் வேறெங்குமில்லை. இந்த 425 மைலில் முதல் 110 மைல் நீள கால்வாய் பஞ்சாப் மாகாணத்திலிருக்கும். பிறகு அங்கிருந்து ராஜபுதன பாலை நிலங்களில் பாய்ந்து அவற்றை வளம்மிகுந்த பொன்விளையும் பூமியாக மாற்றும். இக் கால்வாய் ராஜஸ்தானில் ஹனுமான்கர் (Hanumangarh, Bikaner) சூரத்கர் (Suratgarh Bikaner), அனூப்கர் (Anupgarh) ராய்சிங்நகர் (Raisingh-nagar), பிகானீர் (Bikaner), நாச்னா (Nachna) ஜெய்சல்மேர் (Jaisalmer) வழியாக ராம்கர்வரை செல்லும்.

இக்கால்வாய்க்கு 500 மைல் நீளமுள்ள கிளைக் கால்வாய்கள் வேறு உண்டு. இக் கிளைக் கால்வாய்களிலிருந்து பிரிந்து செல்லும் பாசன வாய்க்கால்களின் நீளம் 25000 மைல். இக்கால்வாய்கள் பாயுமிடம் பெரும்பாலும் பாலைவனமாகையால் பிரதான கால்வாய், கிளைக் கால்வாய், பாசன வாய்க்கால் முதலியவைகளில் ஓடும் நீர் அனுவசியமாக பூமியில் சுவர்ந்து வீணாகாதபடி அவை எல்லாம் செங்கல் செமெண்டால் கட்டப்படும். இக்கால்வாய்களில் சரக்கேற்றிச் செல்லும் படகுகள் போய்வரவும் ஏற்பாடு செய்யப்படும்

இக்கால்வாய் திட்டத்தால் ராஜஸ்தானில் 2 லட்சம் குடும்பங்களுக்கு விவசாயத்துக்கு ஏற்ற பாசன வசதி உள்ள நிலம் புதிதாகக் கிடைக்கும். 35 லட்சம் ஏக்கர் பாலை நிலம் பாசனவசதியுள்ள நிலமாக மாறும். 75 கோடி ரூபாய் பெருமதியுள்ள தானியம் புதிதாக விளையும். இத்திட்டம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படும். முதல் கட்டத்தில் 10 லட்சம் ஏக்கருக்கே பாசனவசதி கிடைக்கும். இரண்டாவது கட்டத்தில் 25 லட்சம் ஏக்கருக்கு அதிகப்படியாக பாசனவசதி கிடைக்கும். ராவி, பியாஸ் நதிகளிலும் நீர் தேக்கங்கள் கட்டப்பட்டு திட்டம் பூர்த்தியாகும். ராவி, பியாஸ் நதிகளின் நீரும் இக்கால்வாய்க்குக் கிடைக்கச்செய்வதே இதன் நோக்கம். சூரத் நகர் அருகே கால்வாய் நீரிலிருந்து 4000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இம்மின்சாரம் அப்பகுதியில் புதிதாகத் தொழில் அபிவிருத்திக்கும் பருத்தி ஆலைகள், எண்ணெய் மில்கள் முதலியவற்றை இயக்கவும் உதவும். இவ்விதம் நம் நாட்டில் புதியதொரு எகிப்து இப்பொழுது உருவாகிவருகிறது.





## செல்லம் அழுதது ஏன் ?



பிற்பகல் வேளை ; பித்தான்கள் உடைந்து காலரிலும் கைகளிலும் கிழிந்திருந்த என் கணவரின் சட்டைகளை நான் தைத்துக்கொண்டிருந்தேன். அதே சமயம் பக்கத்து வீட்டுப் பப்பியுடன் விளையாடிக் கொண்டிருந்த என் குழந்தை செல்லம் திடீரென வீரிட்டு அழுதாள் ; அந்த அதிர்ச்சியில் தையல் ஊசியே என் கையில் ஏறிவிட்டது. கோபத்துடன் திண்ணைக்கு ஓடி வந்தேன். அதே சமயம், பப்பியின் தாயார் கண்ணம்மாவும் அங்கு ஓடி வந்து செல்லத்தை வாரியெடுத்து சமாதானம் செய்ய முயன்றாள் : "ஆரு அடிச்சாம்மா என் செல்லக் குழந்தையை ?"

"மாமி, ப...ப...பப்பி என் பொம்மயோட கவுனை அழுக்காக்கிட்டா, மாமி!" என்று விசித்து விசித்துக் கூறினாள் செல்லம்.

"அவ்வளவுதானே. பப்பியை நாம்ப நல்லா அடிச்சுட்டு உன் பொம்மைக்குப் புதுசா ஒரு கவுன் வாங்கிப் போட்டுடலாம். வா!" என்று தேற்றிவிட்டு, இரு குழந்தைகளையும் தன்னோடு அழைத்துச் சென்றாள் கண்ணம்மா. கண்ணம்மாவிடம் காணப்படும் தங்கமான குணங்களில் ஒன்று, தன் குழந்தைகளைப் போலவே பிறர் குழந்தைகளையும் அரவணைத்துக்கொள்ளும் தன்மை. தன் தந்தை பணக்காரர் என்ற கர்வம் எள்ளளவும் அவளிடம் கிடையாது.-இவ்வாறாக எண்ணமிட்ட

S. 256A-X52 TM



வண்ணம் அப்படியே கண்ணயர்ந்துவிட்டேன். அப்புறம் செல்லம் வந்து என்னை எழுப்பினள். கண்விழித்துப் பார்த்ததும், செல்லத்தின் கையி லிருந்த பொம்மைக்குப் புதுக் கவுன் போட்டிருந்தது தென்பட்டது— முன்பிருந்ததைப் போலவே இருந்தது இந்தக் கவுனும். இந்த ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை. இதை ஆட்சேபிக்கக் கண்ணம்மாவின் வீட்டுக்கே சென்றேன்.



கண்ணம்மாவோ, "புதிதாகக் கவுன் ஏதும் வாங்கவில்லையே. சில துணிகளை நான் துவைக்க வேண்டி யிருந்து, கையோடு கையாக அந்தக் கவுனையும் அலசினேன்" என்ருள். அழகாயிருக்கிறதே பேச்சு! வீட்டில் துணிகளைத் துவைத்துக்கொள்ளும் வழக்கம் எங்களுக்கே கிடையாது; சலவை செய்ய வெளியே அனுப்புகிறோம். அப்படியிருக்க, மோதிரக் கையினுல் துணி துவைப்பதாகக் கூறினுல், நம்புகிறவள் நானு? "அதெப்படியம்மா துவைத் தீர்கள், அடித்துத் துவைக்கும் சத்தங்கூடக் கேட்காமல்?" என்றேன். "என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் இதோ இந்தத் துணிகளைப் பாருங்கள், இப்போதுதான் இஸ்திரி போட்டு முடித்தேன். ஆனுல், அடித்துத் துவைக்கும் சத்தம் கேட்காத காரணம்........."



ஆனுல் என் கவனமோ அவள் பேச்சில் லயிக்கவில்லை. வெகு பளிச்சென்று சுத்த மாக விளங்கிய அந்தத் துணிகள் மீது என் பார்வையைப் பறி கொடுத்துவிட்டேன். எனினும், அதே சமயம் என் மனதை உறுத்திய விஷயம் வேருென்று. தன் செய்கையைப்பற்றி நாலு பேர் என்ன நினைப்பார்கள் என்பதை யோசித்துப் பார்த்தாளா இவள்? இதையே நான் இவளிடம் கேட்டதும், அவள் சிரித்துவிட்டு, "நல்ல கேள்வி கேட்டாய். என் வேலையை செய்வதற்கு நான் ஏன் கூச்சப்படவேண்டும்? தாம் தூம் விவகாரமே எனக்குப் பிடிப்பதில்லை. என் கையாலேயே நான் துணிகளைத் துவைத்துக்கொள்வதில் எவ்வளவோ சிக்கனமிருக்கிறது. அன்ருடம் உடுத்திக்கொள்ள சுத்தமான துணிகள் கிடைப்பதோடு அவை நீடித்து நிற்கவும் செய்கின்றன" என்ருள்.

"நீடித்து உழைக்கிறதாவது; அதென்னமாக? எங்கள் வீட்டுத் துணிகள் விறுவிறுவென்று கிழிந்துவிடுவதும் வாங்கின சுருக் கோடு விட்டுப்போய் விடுவதும் சர்வசாதாரணமாகிவிட்டன. வருஷத்துக்குப் பல தடவை புதுத்துணிகள் வாங்கி மாளவில்லை!"

"அடித்துத் துவைப்பதால்தான் அவை கிழிந்துவிடுகின்றன. ஆனுல் நாங்களோ அடித்துத் துவைக்காமல் ஸன்லைட் சோப்பினுல் சலவை செய்கிருேம்."

பரிசுத்தமுள்ள சிறந்த சோப்பான ஸன்லைட் ஏராளமான நுரை கொழிக்கிறது என்றும், கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலுமுள்ள எல்லா அழுக்குகளையும் நொடிப்பொழுதில் அகற்றிவிடும் நுரை அதனுடையதுதான் என்றும் விளக்கிக் கூறினுள் கண்ணம்மா.

இப்போதெல்லாம் நாலுபேர் நினைப்பதைப்பற்றி நானும் அக்கரைப்படுவதில்லை. துணிகளை வீட்டிலேயே ஸன்லைட் சோப்பினுல் சலவை செய்துவிடுகிறேன். அது சிக்கனமான சோப் என்றும், சிறிதும் பெரிதுமாக சுமார் நாற்பதைம்பது உருப்படிகளைச் சுத்தமாகவும் பளிச்சென்றும் வெளுப்பதற்கு ஒரே ஒரு வில்லை ஸன்லைட்டே போதுமானது என்றும் கண்டு கொண்டேன். இப்போதெல்லாம் தினசரி உடுத்துவதற்குத் தூய்மையான துணிகள் எங்களெல்லோருக்கும் கிடைத்துவருகின்றன. கிழிசல்கள் தைக்கப்பட்ட ஆடைகளை அணிந்துகொள்ளும் நிலைமையும், காலர்களையும் கைகளையும் கோட்டுக்குள் மறைத்துக்கொள்ளும் அவசியமும் இனி என் கணவருக்குக் கிடையாது. சிக்கனம் என்ருல் எல்லா விதத்திலும் சிக்கனம். ஒரு குடும்பப் பெண்மணிக்கு இதை விட வேறென்ன வேண்டும்?




S. 258B-X52 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்



கோயிலும் அதன் முன்னுள்ள மண்டபமும் மலை (அடிவாரம்)

# அழகர் கோயில்

ஜனககுமாரி

பாண்டியநாட்டு திருப்பதிகளுள் மிகவும் பிரசித்திப்பெற்றது திருமாலிருஞ்சோலைமலை என்று சொல்லப்படும் அழகர் கோயில்! 'தேசமெலாம் வணங்கும் திருமாலிருஞ்சோலை' என்றும், 'வளர் இளம்பொழில் சூழ் மாலிருஞ்சோலை' என்றும், "தென்னுங்கு சோலை திருவேங்கடமென்றும், வானுங்கு சோலைமலை" என்றும் ஆழ்வார்கள் ஐவராலும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாலும் பாடிப் புகழப்பெற்ற தலம் அழகர்கோயில்!

'ஆற்றைக் கண்டாயோ? அழகரைச் சேவித்தாயோ?' 'ஆற்றைக் காணுத கண்களும், அழகரை வணங்காத கைகளும் இருந்தும் பயனில்லாதவையே' என்ற பழமொழிகளை யாவரும் அறிவோம். அழகர்பிரானுக்கும் ஆற்றுக்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்பு உண்டு. ஆற்றைக் காண்பதிலும், அழகரைச் சேவிப்பதிலும் தமிழ்ப் பெருமக்கள் தணியா ஆர்வங் கொண்டிருந்தனர் என்பதற்கு இப்பழமொழிகளே சான்றுகும்.

## இயற்கை அழகு

மதுரைக்கு வடகிழக்கே ஏறக்குறைய பதினைந்து மைல் தூரத்தில் அமைந்திருக்கின்றது அழகர்கோயில். மதுரையிலிருந்து அங்கு செல்லும் சாலையின் இரண்டு பக்கங்களிலும் மரங்கள். முல்லையாற்றுக் கால்வாய் நீரால் தலை நிமிர்ந்து நிற்கும் நெற்பயிர்களின் பசுமை கண்ணுக்கு விருந்தாக அமைகின்றது. மதுரையிலிருந்து பஸ்ஸில் போகலாம். அழகர்கோயிலுக்கு நேரில் கோபுரவாசலிலேயே இறங்கலாம். மதுரை மாவட்டத்திற்கே அழகுதரும் மலைத்தொடர்கள் அந்த ஒருமணி நேரமும் நம்முடன் போட்டியிட்டு ஓடுவதுபோல நம்முடன் கூடவே வரும். பசும் வயல்களையும், அழகிய மரங்களடர்ந்த சாலைகளையும் தாண்டி ஊரை நெருங்கும் முன்பே கோட்டை மதில்கள் தெரிகின்றன.

வானை அளாவி நிமிர்ந்து நிற்கும் அழகிய பெரிய கோபுரம், செங்குத்தாயும் சரிவாயும் உயர்ந்து நிற்கும் சோலைமலையின் இயற்கை அழகைப் பின்னணியாகக்கொண்டு சித்திரம் போல காட்சி தருகின்றது. இது கோயிலின் முன்கோபுரம். இதற்கு நேர் எதிரே சற்றே தாழ்ந்து ஒரு சிறு கோபுரம். இந்த கோபுரத்தை அடுத்த முற்றத்தில்தான் பதினெட்டாம்படிக் கருப்பன் என்ற காவல் தெய்வம் கோயில்கொண்டிருக்கிறது.

## சோலைநின்ற சுந்தரர் கோயில்!

கோயிலின் அமைப்பு காண்பதற்கு இனிதாக அமைந்திருக்கிறது. கோயிலின் மேலே சென்று "சோமசுந்தர விமானம்" என்று கூறப்படும் வட்ட வடிவமான தங்க விமானத்தை இமைகொட்டாமல் பார்த்துப் பரவசப்படலாம். தங்கக் கொடி மரமும் பிரதான வாசலின் கோபுரமும், பின்புறம் பச்சைப்பசேலெனக் காட்சி தரும் சோலை மலைத் தொடருமாக ஒருசேரத் தோன்றும் இன்பக்காட்சி, என்றும் மனதை விட்டு நீங்காத அருமைக் காட்சியாகும். சமீபத்தில் புதுப்பிக்கப்பட்ட தங்க விமானம் தகதகவென்று ஒளிவிட்டுக் கருத்தைக் கவர்ந்து நிற்கிறது. அதை ஒட்டி அமைந்திருக்கும் இரண்டு பெரிய மணிகள் பிரமிக்கத்தக்க அமைப்பை உடையன. கீழே கோயிலுக்குள்ளிருந்து கயிறிட்டு இவற்றை ஒலிக்கச் செய்கின்றனர். இங்கிருந்து பார்த்தால் பத்துப் பதினைந்துமைல் பரப்பளவு நன்றாகத் தெரிகிறது.

மூலஸ்தானத்தில் இருக்கும் இறைவனுக்கு பரம சுவாமி என்றும், உற்சவ மூர்த்திக்கு சுந்தரராஜன் என்றும், தயாருக்குக் கல்யாண சுந்தரவல்லி என்றும் பெயர்.

## அழகரின் அழகு!

'நின்றதெல்லாம் பெருமாளென்று' ஆழ்வார்கள் குறித்தது பெருமாளைப் பார்த்துத்தானே என்று தோன்றும்படி அழகே ஒருருவமாக நிற்கிறார். கன்னங்கரிய அந்தக் திருமேனியின் அழகுதான் என்னே! கண்ணழகர்! வாயழகர்! தோளழகர்! தாளழகர்! எதையோ ஆழ்ந்து சிந்தித்தபடியே நிற்பது போன்ற அற்புதநிலை! ஸ்ரீ தேவி, பூதேவி சமேத திவ்யாலங்கார சேவை.

அரும் பெருஞ் சோதியாய் நின்றருளும் அழகரைக் கண் களிப்பக் கண்டார் நம்மாழ்வார்! அவர் திருமேனியின் எழுதரிய அழகினைக் கண்ணால் முகந்து பருகினார். உள்ளம் உருகினார்.

"முடிச்சோதியாய் உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீ நின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ
படிச்சோதி ஆடையோடும்
பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ
திருமாலே கட்டுரையே"



தலைவாசல் கோபுரம்
(உட்புறத்திலிருந்து தோற்றம்)

என்று ஆராத அன்பினால் அகங்குழைந்து பாடினார்!

சன்னிதியை அடுத்து கர்ப்பக்கிரகத்தில் சிறு இடைசழி போன்றதொரு நாற்கால் மண்டபம், அதன் நடுவேயுள்ள சிறுமேடையில் சுந்தரராஜர் வீற்றிருக்கிறார். பத்தரை மாற்று பசும்பொன்னாலாகிய அவரின் அற்புத ஒளி அந்த மண்டபம் முழுவதும் நிலவுபோல வீசுகின்றது. அழகிய தூங்காமணி விளக்குகள் எரிந்துகொண்டே இருக்கின்றன. சுந்தரத்தோளன், சௌந்திரராஜன் என்று புகழப்பட்ட பெருமாளின் வடிவழகை வர்ணிக்க வார்த்தைகள் போதாது. நேரில் தரிசித்து அழகை அனுபவிக்கவேண்டும்.

அடியாரது உள்ளம் கவர்ந்து ஆட்கொள்ளும் சுந்தரராஜரை "வஞ்சக் கள்வன்; மாமாயன்" என்று புகழ்ந்து போற்றியிருக்கிறார் நம்மாழ்வார்! "நெஞ்சும் உயிரும் அழகையுண்டு தானே ஆகி நிறைந்தானே' என்று பாராட்டியிருக்கிறார்.

## சுந்தரவல்லி!

கோயிலின் தென் பிரகாரத்தில் தாயார் சன்னிதி இருக்கிறது. 'சௌந்தர்ய லதா' என்று வடமொழியிலும் 'சுந்தரவல்லி' என்று தமிழி



கோட்டை வாசலிலுள்ள அற்புத சித்திரம்!

லும் அழைக்கப்படுகிறார். தாமரையின் மீது வீற்றிருக்கும் திருக்கோலம். சுந்தரவல்லி என்னும் பெயருக்கேற்ப தேவி அதிக சௌந்தர்யத்துடன் சொலிக்கிறார். பக்தர்களுக்கு மஞ்சள் பிரசாதமாகக் கொடுக்கப்படுகிறது.

## கோதைநாயகி!

வடக்குப் பிரகாரத்தில் கோதைநாயகியாம் ஆண்டாள் சன்னிதி இருக்கிறது. உட்கார்ந்த பாவனையிலே காட்சி தருகிறார். இது எங்கும் இல்லாத ஓர் அபூர்வ சேவை' தனது திருக் கல்யாண தினத்தன்று (பங்குனி மாதத்தில்) ஸ்ரீ சுந்தரராஜர், ஸ்ரீதேவி, பூதேவி, சுந்தரவல்லி, ஆண்டாள் ஆகிய நான்கு தேவிமார்களுடன் இங்கு தரிசனம் தந்தருளுகிறார். இந்த திவ்ய தரிசனம் இந்தத் தலத்தில் மட்டும்தான் கிடைக்கும். வேறெங்கும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஸ்ரீசுதர்சனர்!

மேற்குப் பிரகாரத்திலே ஸ்ரீசுதர்சனரையும், யோகநரசிம்மரையும் பக்தர்கள் மிகவும் கொண்டாடுகிறார்கள். சுதர்சனமூர்த்திக்குப் பதினாறு கைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு ஆயுதம் இருக்கிறது. இவருடைய ரௌத்ர ரூபமும், மூன்று கண்களும், பார்க்கப் பயங்கரமானவை. இவர் ஷட் கோண யந்திரத்தின்மேல் இருக்கிறார். இங்கே எழுதியிருக்கும் மந்திரங்கள், யந்திரங்கள் மிகவும் சக்தியுள்ளவை.

## யோக நரசிம்மர்!

யோக நரசிம்மர் அதிக கோபமாகவும், கம்பீரமாகவும் சேவை சாதிக்கிறார். இவருடைய தலையிலிருந்து கோபாக்னி மேலே கிளம்பிச்செல்வதற்காக தலைக்கு நேரே ஒரு பெரிய துவாரம் இருக்கிறது. இந்தக் கோபாக்னியைத் தணிப்பதற்காக தினமும் எண்ணெய், பால் தயிர், முதலியவற்றாலும், நூபுரகங்கை நீராலும் அபிஷேகங்கள் நடைபெறுகின்றது. இதற்காக பச்சையப்ப முதலியார் ஏற்படுத்திய கட்டளை இன்றும் தவறாமல் நடந்துவருகிறது.

## பைரவமூர்த்தி!

சிவன்கோயிலில்தான் பைரவமூர்த்திக்கு முக்கியத்துவம் உண்டு. தென் திருப்பதி என்னும் இந்தப் பெரிய வைஷ்ணவ தலமாகிய அழகர் கோயிலில் சிவனுடைய அம்சமாகிய பைரவர் சன்னிதி இருப்பது ஆச்சர்யமானதாகும். சிவபெருமான் விஷ்ணுவைக் குறித்துத் தவம் செய்து க்ஷேத்ரபாலகராக இக்கோயிலில் இடம் பெற்றார் என்று மகாத்மியம் கூறுகிறது.

## மிகப் பழமையான கோயில்!

ஸ்ரீகள்ளழகர் கோயில் மிகவும் பழமையானது. இது எப்பொழுது தோன்றியது என்று சொல்ல முடியாத பழமையுடையது. மிகவும் பழைய தமிழ் நூல்களிலும், சமஸ்கிருத புராணங்களிலும்கூட இதன் பெருமை பேசப்பட்டிருக்கிறது. எல்லாக் கோயில்களுக்கும் தனியாக தல புராணங்கள் இருப்பதுபோல இதற்கு இல்லை. இதன் பழமை ஸ்தல புராண காலத்திற்கும் முந்தியது என்று தெரிய வருகின்றது. இங்கேயுள்ள தீர்த்தம், தலம், மூர்த்தி ஆகியவைகள் பற்றி வராக புராணம், வாமன புராணம், ஆக்னேய புராணம் முதலியவற்றிலே மிகவும் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தர்மதேவன் சகல தலங்களையும் தரிசித்துக் கொண்டு வரும்போது சோலைமலையை அடைந்து அதன் அழகில் ஈடுபட்டு, ஸ்ரீமந் நாராயணனைக் குறித்து தவம் புரிந்தான். பெருமாள் பிரசன்னமாகி அனுக்ரகித்தார். தர்மதேவன் வேண்டுகோளின்மீது ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளினார். இன்றும் பக்தர்களுடைய குறைகளைப் போக்கி அனுக்ரகம் செய்து வருகிறார்.

## இலக்கியத்திலே!

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட மிகப் பெருமை வாய்ந்த பரிபாடல் என்ற சங்ககால இலக்கியத்தில் திருமாலிருஞ்சோலைமலையை மக்கள் திருமாலின் திருமேனியாகவே கருதித் தொழுது வந்தனர் என்று கூறப்படு

கிறது. இந்த வழக்கம் இப்போதும் இருந்து வருகிறது:

ஆயிரத்துஐநூறு ஆண்டுகளுக்கு முந்தியவர்களாகிய ஆழ்வார்கள் பனிரண்டு பேர்களும் இத்தலத்தைப் பற்றி மங்களாசாசனம் செய்திருக்கிறார்கள். சோலைமலையைப் பற்றியும் அழகரைப் பற்றியும் 123 பாசுரங்கள் பாடியிருக்கிறார்கள். அவையெல்லாம் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலே இருக்கின்றன. அவை படிக்கப் படிக்க பக்தியும் இன்பமும் ஊட்டுவனவாய் இருக்கின்றன. இவைகளிலிருந்து இத்தலத்தின் பழமை மிகவும் அதிகமாகிறது.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் தம் திருப்புகழில் டல இடங்களில் இத்தலத்தைப் பழமுதிர்ச்சோலை, சோலைமலை கோலநிலை என்று அழைக்கிறார். முருகப்பெருமானும் கோயில் கொண்ட இடமாகவும் அவர் வர்ணித்திருக்கிறார்.

அழகர் அந்தாதி பாடிய பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் (அழகியமணவாளதாசர்) அழகரைப் பற்றி அழகாகக் கூறியிருக்கிறார்.

பாண்டியர்களும், விஜயநகர அரசர்களும், நாயக்க மன்னர்களும் அழகர்கோயிலைப் புதுப்பித்து பல திருப்பணிகளை செய்திருக்கிறார்கள். முக்கியமாக (1623—1659) திருமலைநாயக்கர் செய்த திருப்பணிகளும், நிபந்தங்களும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சோலைமலை மேலே நூபுர கங்கை!

சோலைமலை மேலே நூபுர கங்கை என்ற அற்புதத் தீர்த்தம் இருக்கிறது. கோயிலின் வடக்குப் பக்கத்தில் உள்ள கோட்டை வாசலைக் கடந்து இரண்டு மைல் தூரம் நடந்தால் நூபுரக் கங்கை என்னும் சிலம்பாற்றை அடையலாம். பாதையின் இரு பக்கங்களிலும் உள்ள மலைப்பாறைகளிலே தீட்டப்பெற்ற நாம அடையாளங்கள் மலையேறுவோர்க்கு வழிகாட்டிகளாக இருந்து பேருதவி புரிகின்றன.

பாதையிலே ஏற்றம் உண்டு; இறக்கம் உண்டு; வளைவு உண்டு: சுழிவும் உண்டு. பாதையின் இருபுறமும் உள்ள மலைகளின் நிலை, காடுகளின் செறிவு, பொழில்களின் நிறை, பசுஞ்செடிகளின் ஈட்டம், கொழுங்கொடிகளின் பின்னல், நீர் நிலைகளின் பரவல் இவையனைத்தும் அழகு செய்கின்றன.

வானத்தையும் முட்டி மோதி நிற்குமளவிற்கு நீண்டு உயர்ந்த மரங்கள், மணங்கமழும் சந்தனம், சண்பகம், நீள்தெங்கு, உயர்பலா, அடர்தாழை, மனங்கவர் மா முதலிய பலவகைப்பட்ட மரக் கூட்டங்கள், தங்கமனைய மூலிகைகள், தாயனைய கீரை வகைகள், இவையனைத்தையும் ஒருங்கே பெற்றுத் திகழ்கின்றது சோலைமலை. இலக்கியத்தில் பயிலும் மலைவளம் அனைத்தையும் நேரில் கண்டு துய்க்க அழகர்மலை ஏற்ற இடமாகும்.


மலைமேலேயுள்ள நூபுர கங்கை ஸ்நான கட்டம்

கவின்மிகு இயற்கைக் காட்சிகளையெல்லாம் கண்டுகளிக்கும்போது "ஆயிரமாறுகளும், சுனைகள் பலவாயிரமும், ஆயிரம் பொழிலும் முடைமாலிருஞ் சோலையதே," "பாண்டகுவண்டினங்கள் பண்கள் பாடி மதுப்பருக தோண்டலுடைய மலை தொல்லைமாலிருஞ் சோலையதே" என்ற திவ்யப் பிரபந்தப் பாக்கள் நினைவில் தோன்றி நிதரிசனமாக அவற்றை உண்மையாக்கிக் கொண்டிருக்கும்.

## தீர்த்த விசேடம்!

இரும்புக் கம்பிகளால் பாதுகாக்கப்பட்ட மண்டபத்தினுள் நூபுர கங்கையைக் காணலாம். மேலே பசுமை நிறைந்த மலைக் கூட்டத்திற்கு அழகிய மணிமுடி வைத்ததுபோல திகழுகின்றது. மண்டபத்தினுள்ளே சென்றால் தீர்த்தத் தொட்டியைக் காணலாம். மலையின் பல இடங்களிலிருந்து சிதறிவிழும் நீரைத் தொட்டியில் ஒருமுகப்படுத்தி கோமுகத்தின் வழியாக விழச் செய்திருக்கின்றனர். இதிலேதான் அனைவரும் நீராட வேண்டும். ஐப்பசி மாதம் சுக்லபட்ச துவாதசியில் நீராடி அழகரை தரிசிக்க ஆயிரக் கணக்கான பக்தர்கள் வருகிறார்கள்.

ஸ்ரீ அழகருக்கு அபிஷேகம் செய்ய நூபுர கங்கை தீர்த்தம்தான் தினசரி கொண்டுவரப் படுகிறது. வேறு நீரால் அபிஷேகம் செய்தால் கருப்பாக மாறிவிடுகிறார். இந்தியாவிலேயே 'அபரஞ்சி' என்னும் உயர்ந்த தங்கத்தினால் செய்யப்பட்ட மூர்த்திகள் இரண்டுதான்! ஒன்று அழகர் கோயிலிலுள்ள ஸ்ரீசுந்தரராஜர்! மற்றொன்று திருவனந்தபுரத்திலுள்ள அனந்த பத்மநாபர் உற்சவமூர்த்தி! இந்த இரண்டு இடங்களைத்தவிர வேறெங்கும் அபரஞ்சியினால் செய்யப்பட்ட மூர்த்திகள் இல்லை.

## கருப்பண்ணசாமி!

இரட்டைக் கடம்ப மரங்களுக்கு நடுவே பதினெட்டாம்படிக் கருப்பண்ணசாமி இருக்கிறார்.

காவல் தெய்வமான இவரிடம் ஒருவரும் பொய் சொல்ல மாட்டார்கள். கோயில் பொக்கிஷத்தின் சாவியை தினந்தோறும் இரவில் கருப்பண்ணரின் முன் வைக்கிறார்கள் பட்டரைத் தவிர ஒருவரும் இந்தச் சாவியை மறுநாள் காலைவரை தொடுவதில்லை. பெரிய வழக்குகளில் உண்மையறிய கோர்ட்டார் கடைசி நேரத்தில் கருப்பண்ணசாமி சன்னிதியில் பிரமாணம் செய்யச் சொல்லி உண்மையைக் கண்டுபிடிக்கிறார்கள். இன்றும் இது சாதாரணமாக நடக்கிறது.

## திருவிழாச் சிறப்பு!

நித்தியோத்சவப் பெருமாளாகிய அழகர் ஆற்றில் வருவது சிறப்பான திருவிழாவாகும். மதுரையில் மீனாட்சி கோயிலில் திருக்கல்யாண உற்சவம். கள்ளழகர் ஆயிரம்பொன் தன் உடன் பிறப்பான பாண்டிய ராஜகுமாரிக்கு சீதனம் எடுத்துவருகிறார். இந்தப் பொன் வைக்கப்பட்டிருக்கும் சிறுதேருக்கு ஆயிரம்பொன் சப்பரம் என்று பெயர். அழகர் கள்ளவேஷத்துடன் பல்லக்கேறி மதுரைநோக்கி வருகிறார். பல்லக்கை ஒட்டியே தகுந்த காவலுடன் ஆயிரம்பொன் சப்பரமும் வருகிறது. ஆற்றில் இறங்குமுன் கூடல் அழகர் கோயிலிலிருந்து விவாகம் முடிந்துவிட்டது என்ற செய்திவருகிறது. அழகர் உடனே குதிரை வாகனத்தில் ஏறி திரும்பிவிடுகிறார் கோபத்துடன்! இந்த எதிர்சேவைக்காக வரும் பக்தர் கூட்டம் கணக்கிலடங்காது. பக்தகோடிகள் ஆற்றங்கரை மணல் முழுவதும் நிறைந்திருக்கிறார்கள். மறக்குல, கள்ளர் குல மக்கள் அறையிற் சல்லடம், கழுத்தில் பூமாலைகள் குலுங்க, உடல் முழுவதும் சந்தனம் பூசியவர்களாக பெரிய துருத்திகளில் தண்ணீரை நிரப்பி வந்திருப்பவர்கள்மேல் பீச்சாங்குழலால் பீச்சுவார்கள். அவரவர்கள் மண்கலயங்களிலே சர்க்கரையைவைத்து, தாங்கள் நிற்கும் இடத்திலேயே பானையோடு தூக்கி கற்பூர ஆராத்தி செய்கிறார்கள். இப்படி வைகை ஆற்றின் பரந்த மணல்வெளி முழுவதும் ஒரே கோஷமயமாயிருக்கிறது.

இதன் கரையோரமாகவே சென்று ஒவ்வொரு மண்டபப் படியிலும் இறங்கி அவர்கள் புரியும் வந்தனை வழிபாடுகளை ஏற்றவராய் ராமராயர் மண்டபத்தை அடைகிறார். அங்கே இரவு முழுவதும் தசாவதாரக்கோலங்களிலே முறைப்படி காட்சி தருகிறார். விடியற் காலையில் மண்டூக மாமுனிவருக்கு முக்தி கொடுக்கும் ஐதீக காட்சியும் நடைபெறுகிறது. தன்னைக் காண விரும்பிய தவளைக்கும் காட்சிதருகிறார் அழகர்! பிறகு பூச்சப்பரத்திலேறி சோலைமலைக்கு திரும்புகிறார், இந்தத் திருவிழாவிற்கு லக்ஷக்கணக்கிலே பக்தர்கள் கூடுகிறார்கள்.

அழகரின் வடிவழகைக் கண்டு ஆழ்வார்கள் அழகர் குறவஞ்சி, அழகர் அந்தாதி முதலியவைகளை (பிற்கால கவிஞர்களுக்கு) பாடிக் குவித்திருக்கிறார்கள். இருந்தாலும் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளின் ஏக்கம் நிறைந்த பாடலின் கருத்துத்தான் நம் முன்னே வந்து நிற்கும் அதன் கருத்து இதுதான்! "இந்தச் சோலைமலையிலே ஏராளமான கொன்றை பூத்துச் சொரிகிறது. ஆனால் சிவனுக்கே உரிய அந்த மலர் உனக்கு உதவாது. அதுபோல நானும் இருக்கிறேனே!"

## உயிர் பெய்த கலை!

கோயிலுக்கு நேர் எதிரே இருக்கும் நாயக்கர் மண்டபம் சிற்பங்கள் நிறைந்தது. திருமாலின் திருவிக்கிரமாவதாரக் கோலமும், ரதி மன்மதன் தோற்றமும், பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத கலையழகு நிரம்பியவையாகும். இன்னும் இங்குள்ள யாளி, நரசிம்மாவதாரம் போன்ற சிற்பங்கள் அனைத்தும் பார்த்துப் பரவசப்பட வேண்டியவையாகும்!

"திருமாலிருஞ்சோலை
யென்றேன் என்னத்
திருமால் வந்து
என்னெஞ்சு நிறையப் புகுந்தான்"

— நம்மாழ்வார்.



இந்தியாவின்
முதல் பரிசுத்த கரணி,
நம் நாட்டின்
பழக்க வழக்கமான
சுத்தம்செய்யும்
முறைகளைப்
புரட்சிகரமாக மாற்ற




டெட் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு பரிசுத்த கரணி சோப் பவுடர் அல்ல, சோப்பை ஆதாரமாகக் கொண்டும் தயாரிக்கப் பட்ட தல்ல. சோப்பைக் காட்டி லும் வெகு சீக்கிரத்தில் சுத்தம் செய்கிறது. அழுக்கு களையும், எண்ணெய்ப் பசைகளையும் துப்புரவாகப் போக்குகிறது. ஆயினும் டெட்டில் காரமான ரசாயனப் பொருள்கள் இல்லை. கைகளில் பட்டால் இதமாக இருக்கிறது. அது உயர்தர சலவைச் சோப்புகளைக் காட்டிலும், பரிசுத்தமான உடைகளுக்கும், அவைகளின் நீடித்த உழைப்புக்கும் உத்திரவாதம் அளிக்கிறது.

டெட் பரிசுத்த கரணி யாதலால் தரை, பாத்திரங்கள், சுவர்கள் முதலிய எல்லா வற்றையும் சுத்தம் செய்கிறது. அது தரையையும், துணி மணிகளையும் வித்தியாசமில்லா மல் ஒரே மாதிரியாக சிறந்த முறையில் சுத்தம் செய்கிறது.






**தி ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்**

# தோற்றத்தைக் கண்டு...

விஸ்வம்

உமாவும் சீதாவும் சேஷாத்திரி ஐயரின் பெண்கள் — ஏன்? கண்கள் என்றுகூடச் சொல்லலாம். இருவரும் அழகுப் பதுமைகள். மணமிகு மலர்கள். இருந்தாலும் ரோஜாவுக்கும் மல்லிகைக்கும் வித்தியாசமில்லையா? சீதாவை விட உமா கவர்ச்சி மிகுந்தவள்தான்.

தேடியலையாமலேயே இருவருக்கும் வரன்கள் பிடித்துவிட்டார் சேஷாத்திரி. ஒரே பந்தலில் இருவர் கழுத்துகளிலும் தாலிகள் ஏறின. கெட்டி மேளம் முழங்க மணமக்கள் பந்தலில் கூடியிருந்த பெரியோர்களுக்கு நமஸ்காரம் செய்துகொண்டே வந்தார்கள்.

காமுப்பாட்டி தொண்டுகிழவி; சேஷாத்திரிக்கு சின்னப்பாட்டி முறையாகவேண்டும். சேஷாத்திரியின் குடும்ப நலனில் மிகவும் அக்கரை கொண்டவள். உமாவிடமும் சீதாவிடமும் அன்பு நிறைந்தவள்.

காமுப்பாட்டிக்கு நமஸ்காரம் செய்தார்கள் மணமக்கள். "மகராஜிகளாக பத்தும் பெத்துப் பெருவாழ்வு வாழணும்" என்று மனப்பூர்வமாக ஆசீர்வதித்தாள் பாட்டி. மணமக்கள் அடுத்து நகர்ந்தனர்.

உள்ளதை உள்ளபடியே சொல்லிப் பழக்கப் பட்டுப்போன காமுப் பாட்டியின் வாய் சும்மாயிருக்கவில்லை. "சேஷாத்திரி ரெண்டு பொங்களுக்கும் எல்லாம் நன்னுத்தான் ஜோடி ஜோடியா சேசிருக்கான். ரெண்டு மாப்பிள்ளேளும் ரொம்ப நல்ல எடந்தான். இருந்தாலும் உமாவுக்கு இந்த துரோகம் சேசிருக்க வேண்டாம்......"

யாருக்கோ நமஸ்காரம் செய்யக் குனிந்த உமா, குனிந்த தலையை நிமிர்த்தி நின்று கவனித்தாள்.

"உமாவின் அழகு எங்கே! காந்தன் எங்கே! சீதாவுக்கு அழகான ரகுபதியை ஏற்பாடு பண்ணினவனுக்கு உமாவுக்குத் தகுந்த ஒரு மன்மதனை மாப்பிள்ளை தேடப் பொறுமையில்லாமே போயிடுத்து."

உமா ஒரு விக்கல் விக்கினாள். ஒரே ஓட்டத்தில் மாடிக்கு ஓடிப்போனாள். தன்னுடைய படுக்கையில் படுத்துக்கொண்டு விக்கி விக்கி அழுதாள். காமுப்பாட்டி சாதாரணமாகச் சொன்ன வார்த்தைகள் உமாவின் மனதில் ஒரு பூகம்பத்தையே உண்டாக்கிவிட்டன. காமுப் பாட்டி சொன்னதை வேறு எவரும் காதில் வாங்கிக்கொள்ளவில்லையாகையால் உமாவின் அழுகைக்குக் காரணம் எவருக்கும் தெரியவில்லை. யார் யாரோ என்னென்ன சமாதானம் சொல்லியும் உமாவின் அழுகை நிற்கவில்லை. கல்யாணத்தில் மற்றப் பகுதிகள் எல்லாம் உமாவின் கண் கலக்கத்தோடேயே நடந்தன.

"பாவம்! செல்லப்பெண்கள் எல்லாமே இப்படித்தான் கல்யாண சமயத்தில் அழுங்கள். பெற்றோர்களைப் பிரிய நேரிட்டதே என்ற துக்கந்தான்" என்றார்கள் எல்லாரும்.

கல்யாணம் முடிந்து சம்பந்திகள் தம்தம் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டனர். சீதா 'துறுதுறு' வென்று ஓடியாட உமா மட்டும் களையிழந்து, சுறுசுறுப்பிழந்து சதா முகத்தைத் தொங்கபோட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

உமாவின் கணவன் லக்ஷ்மீகாந்தன் சேஷாத்திரியின் ஒன்றுவிட்ட தமக்கையின் மகன். அதி விவேகி. அயல்நாடுகள் சென்று படித்துப் பட்டம் பெற்றவன். பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியர்; அறிவுச்சுடர்; அன்புக்களஞ்சியம். ஆனால்...?

நிறம் கருப்பு, ஒட்டிய கன்னம்; ஒல்லியான உடல்; சீவியும் படியாத கோரைத் தலைமயிர். அவனிடம் அழகை எதிர்பார்ப்பவர்கள் அதை விட்டு வேம்பின் சுவையை எதிர்பார்க்கலாம்.

சேஷாத்திரி கேட்டபொழுது உமா மறுத்துச் சொல்லவில்லை. ஏன்? காந்தனின் கல்வியழகு உமாவைக் கவர்ந்திருந்தது. ஆனால் இப்போது காமுப்பாட்டியின் வார்த்தைகள் அவளுடைய மனதில் எண்ணக்கூடாத எண்ணங்களையெல்லாம் எழுப்பிவிட்டன. தகப்பனார் தனக்கு வேண்டுமென்றே இந்தத் துரோகம் செய்துவிட்டதாகத் தீர்மானித்துவிட்டாள்.

சீதாவின் கணவன் ரகுபதி சேஷாத்திரியின் மைத்துனன் மகன். ஆள் ஆஜானுபாகு; அழகன்.

தன் புருஷன் நிகரற்ற அழகன் என்பதில் சீதாவுக்குக் கர்வமும், தன் புருஷன் அவலட்சண அவதாரம் என்பதில் உமாவுக்குச் சீதாவிடத்தில் பொறாமையும் ஏற்பட்டதில் என்ன ஆச்சரியம்?

அடுத்து ஆடிப்பண்டிகை வந்தது. பொழுது விடிந்தால் பண்டிகை. சேஷாத்திரியின் வீட்டில் மாப்பிள்ளைகளை எதிர்பார்த்து எல்லா ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருந்தன. உமா தலைவாரிப்

பின்னிக் கொள்ளாமல், சாதாரண புடவை யொன்றைக் சுட்டிக்கொண்டு மாடியறையில் 'உம்மணாமூஞ்சி'யாய் உட்கார்ந்திருந்தாள். சீதாவுக்கு நிலைகொள்ளவில்லை. தெருவில் வண்டிச் சத்தம் கேட்கும்போதெல்லாம் ரகுதான் வந்துவிட்டான் என்ற ஆவலில் வாசலுக்கே ஓடிவிடுவாள். உமா இப்படி சுவாரசியமில்லாமல் இருந்தது சீதாவுக்குப் பிடிக்கவில்லை.

"என்னக்கா என்னமோ மாதிரி இருக்கே. நீயும் என்னைப் போலேயே நீல கிரேப் சில்க் கட்டிக்கோ. ஜிமிக்கியை எடுத்துக் காதிலே போட்டுக்கோ. தலையை வாரிப்பின்னிப் பூ வைச்சுக்கோ" என்று சொல்லிக்கொண்டே உமாவின் கையைப்பிடித்துத் தூக்கினாள். உமாவுக்கு அழுகை கலந்த ஆத்திரம் வந்தது.

"நீபோடி உன் வேலையை பாத்துண்டு. உன்னுடைய படாடோபமெல்லாம் எனக்கு வேண்டாம்" என்று சீறி விழுந்தாள். சீதாவுக்கு ரோசம் வந்துவிட்டது. ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் உமா குறுக்கிட்டு "என்னைத் தொந்தரவு பண்ணாமே போகமாட்டே நீ" என்று சொல்லிக் குப்புறப் படுத்துக் கொண்டாள். இந்த சமயம் வாசலில் வண்டிவந்து நின்றது. ரகுதான் வந்துவிட்டான் என்ற ஆசை எண்ணத்தில் சீதா கீழேயிறங்கி ஓடினாள். தாயார்



குஞ்சு உமாவைக் கூப்பிட்டாள். வேண்டா வெறுப்பாக உமா கீழேயிறங்கிப் போனாள்.

வண்டியிலிருந்து இறங்கினான் லக்ஷ்மீகாந்தன். ரகுபதி வரவில்லை. தன் புருஷன் வந்துவிட்டானே என்ற எரிச்சல் உமாவுக்கு; தன் புருஷன் வரவில்லையே என்ற ஏக்கம் சீதாவுக்கு. இருவரும் நெஞ்சுடைந்து வேறுபக்கம் போயினர்

"வா காந்தம் வா. நீ ரகுவைப் பாக்கலையா?" கேட்டுக்கொண்டே வந்தார் சேஷாத்திரி.

"இல்லையே, வந்திருப்பான்னு நெனச்சு விழுப்புறம் ஜங்ஷன்லேயே தேடிப் பார்த்தேன். காணும்" என்றான் காந்தன்.

"சீதா! வா இப்படி. அத்திம்பேருக்கு ஆரத்தி எடு, வா" என்று ஆக்ஞாபித்தாள் குஞ்சு.

"எனக்குத்தலையை வலிக்கிறது, நீயே எடு" என்று சொல்லிக்கொண்டே மறைந்துவிட்டாள் சீதா.

பண்டிகை பிரமாதமாக நடந்தது. எல்லோருடனும் வெகு கலகலப்பாக பேசிமகிழ்ந்தான் லக்ஷ்மீகாந்தன். உமா அவன் எதிரில்கூட வரவில்லை.

அன்று மாலை எல்லோரும் கோவிலுக்குப் போனார்கள். குஞ்சுவும் சேஷாத்திரியும் கொஞ்சம் முன்னே போய்க்கொண்டிருந்தார்கள். உமாவும் காந்தனும் நடுவிலேயும் பின்னால் தனியாக சீதாவும் போனார்கள். காந்தன் உமாவோடு பேசத் தொடங்கினான்.

"என்ன உமா, என்னோடு ஒரு வார்த்தை கூடப் பேசல்லையே" என்றான்.

"பேச என்ன இருக்கு இப்போ?" என்று இழுத்தாள் உமா.

"இன்னிக்கி நம்ப ரெண்டுபேருக்கும் ஒரு முக்கியமான நாளில்லையா!"

"நமக்கு மட்டுந்தானா? எல்லாருக்குந்தான்" வெறிச்சென்று பதில் சொல்லிவிட்டு வேகமாக நடந்து அம்மாவோடு சேர்ந்துகொண்டு விட்டாள். காந்தன் பாவம் பேசாமல் செல்ல வேண்டியிருந்தது.

மறுநாள் அலுவலகத்தில் இருக்கவேண்டியிருந்ததால் அன்றிரவே சென்னைக்குப் புறப்பட்டு விட்டான் காந்தன்.

கூடிய சீக்கிரமே சுப முகூர்த்தத்தில் உமாவையும் சீதாவையும் புருஷன் வீடு அனுப்பிவைத்தார் சேஷாத்திரி.

காந்தனை நெருங்கிப் பார்க்கப்பார்க்க உமாவின் உள்ளம் புகைந்தது. அடிக்கடி கண்ணாடியின் முன் நின்று தன் அழகைப் பார்த்துக் கொள்ளுவாள், காந்தனின் அவலட்சணத்தோடு தன் அழகை ஒப்பிடுவாள். உள்ளுக்குள்ளே குமுறிக் குமுறி வெந்துகொண்டிருந்தாள்.

காந்தன் உமாவை அன்பு மலர்களால் அர்ச்சித்தான். ஆனால் அவன் அன்பு மொழிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீராயின. எடுத்த எடுப்பிலேயே அவனுடைய அன்பு வார்த்தைகளை உதாசீனம் செய்துவிட்டாள் உமா. பண்பில் பிறந்து பண்பில் வளர்ந்த காந்தனுக்கு உமாவின் உதாசீனம் புரியவில்லை முதலில். ஆசை ஆசையாக அவளுக்குப் புடவைகளும் நகைகளும் வாங்கிவருவான். கொஞ்சும் மொழி பேசிப் பேசி அவைகளை அவளுக்குக் கொடுப்பான். அவள் மரக்கட்டைபோல் அவைகளை வாங்கி ஒரு புறம் வைத்துவிடுவாள். எப்பொழுது பார்த்தாலும் பழைய புடவை யொன்றைக் கட்டிக் கொண்டு அவன் முன் காட்சியளிப்பாள்.

கொஞ்சங் கொஞ்சமாக உமா தன்னை அலட்சியம் செய்வதாகப் புரிந்துகொண்டான் காந்தன். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டல்லவா? சாது மிரண்டால்......?

ஒரு நாள் காந்தனுக்கும் உமாவுக்கும் வார்த்தைகள் தடித்துவிட்டன. உமா ரொம்பவும் பேசிவிட்டாள். வெளிப்படையாக அவன் அவலட்சணத்தைப்பற்றி விமரிசனம் செய்துவிட்டாள். வெகுண்டெழுந்தான் காந்தன். உமாவின் கழுத்தில் கையைப் போட்டான். அவளை நெட்டித்தள்ளினான் வாசலில்.

"அழகுப்பேயே! போய்விடு என்னை விட்டுவிட்டு."

அவ்வளவுதான் அவன் சொன்னான். வாசல் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே சென்றுவிட்டான். உமா மட்டும் சளைத்தவளா?

"போகாமல் யாரிருக்கப்போறா இங்கே?" என்று சொல்லி நடையைக்கட்டினாள்.

எப்படியோ ரயிலேறி பிறந்தகம் வந்துவிட்டாள். அவள் வந்த சமயம் அப்பா ஊரில் இல்லை. அவளைப் பார்ப்பதற்காகவே சென்னை சென்றிருந்தார்,

சென்னையில் லக்ஷ்மீகாந்தன் சேஷாத்திரியை இன்னதுதான் என்றில்லாமல் பேசிவிட்டான்.

"...இவ்வளவு அகம்பாவம் பிடிச்ச பெண்ணை என் தலையிலே கட்டி என் மன அமைதியைக் குலைத்து என் வாழ்க்கையையே குட்டிச்சுவராக்கி விட்டீர். அவளுக்குத் தகுந்த, அவளினும் அழகான புருஷனைப்பார்த்து மறுபடியும் கல்யாணம் செய்துகொடும்" என்று சொல்லிவிட்டான்.

சேஷாத்திரி ஒன்றுமே பேசவில்லை. கடைசியில் "அவள் இப்போ எங்கே?" என்றார்

"தெரியாது."

இரவே சேஷாத்திரி ஊர் திரும்பினார். காலை வீட்டுக்குள் நுழைந்ததும் உமாதான் எதிர்ப்பட்டாள். சேஷாத்திரியின் கோபம் எரிமலைக் குமுறலாய் வெளிப்பட்டது.


வார முடிவில் வனபோஜனம்,
நண்பர்களின் நகைப்பு,
குளிர்ச்சி தரும் டீயைச்
சிறிது உறிஞ்சினால்,
அது உங்கள் கவலைகளை
எல்லாம் விரட்டி விடும்!
நான்தான் டீ
நான் உங்களுடைய நண்பனும், உங்கள்
நண்பருடைய நண்பனுமாவேன்
TEA BOARD
INDIA
PST 209

"ஏ உமா! என்ன காரியம் செஞ்சே? காந்தனை அவமானப்படுத்திப்புட்டு இங்கே வந்து வாழலாம்னு எண்ணி வந்தையா? அடி அசும்பாவம் புடிச்சவளே! காந்தனுடைய அறிவும், அன்பும் அழியாப் பொக்கிஷமாச்சே. அதைப் புறிஞ்சுக்க முடியலையே உன்னால்."

"அறிவையும், அன்பையும் கண்டு ஏமாந்து நிக்க நான் குருடியாப்பா. எனக்குத் தகுந்த அழகு..."

"அழகு! எதுடி அழகு? ஆணவம்புடிச்சவளே! சிகப்புத்தோல் அழகா, சீரிய குணம் அழகா? மதிகெட்டவளே! மரியாதையா வந்த வழியே திரும்பிப்போ. காந்தன் கடவுளுக்குச் சமமானவன்; போ அவனிடம்..."

அன்றிரவே பலாத்காரமாய் உமாவை சென்னை ரயிலில் ஏற்றிவிட்டார்.

ரயில் விழுப்புரம் வந்ததும் உமாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. தன் வாழ்க்கைதான் சூன்யமாகிவிட்டது, தங்கை சீதாவாவது அழகான புருஷனோடு சுகவாழ்வு நடத்துகிறாள். அதையாவது கண்டு ஆறுதலடையலாம் என்று தோன்றியது. வேலூருக்கு ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு வண்டி மாறி ஏறினாள்.

உமா சீதாவின் வீட்டைக் கண்டு பிடித்து, அங்கு வந்துசேருவதற்குள் காலை மணி பத்தாகிவிட்டது. மெதுவாக உள்ளே நுழைந்தாள். மாடியில் ரேடியோ ஒன்று மேல்நாட்டு கீதத்தை இசைத்துகொண்டிருந்தது. உமா 'சீதா' என்று கூப்பிட்டது யார் காதிலும் விழவில்லை.

கூடத்தில் ஒரு வீணை கவனிப்பாரற்று கிடந்தது. ஒரு வயலின் உடைந்து சிப்பட்டது.

சமையலறையில் சீதா அடுப்பூதிக்கொண்டிருந்தாள். உமாவைக் கண்டதும் சீதாவுக்கு அழுகை வந்துவிட்டது. உமா என்னென்னவோ கேட்டாள்.

"குளிச்சுட்டு சாப்பிடுக்கா, அவர் ஆபீசுக்குப் போனப்பறம் சாவகாசமாகப் பேசுவோம்." என்றாள் சீதா.

புது மோஸ்தரான இரண்டு பிளேட்களில் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றாள் சீதா. உமா குளிக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரத்தில் மாடியிலிருந்து ரகுவும், அவன்கூட சட்டைக்காரி ஒருத்தியும் இறங்கி வந்தார்கள். உமாவைக் கண்டதும் முகத்தை என்னமோ மாதிரி வைத்துக்கொண்டான் ரகு. "மை ஒய்ப்ஸ் சிஸ்டர்" என்றான் உமாவை சட்டைக்காரிக்குக் காட்டி.

இருவரும் 'லல்லல்லா' போட்டுக்கொண்டே வெளியே போய்விட்டார்கள்.

உமாவும் சீதாவும் வாய்பேசாமல் சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடிந்ததும் கூடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டார்கள்.

"சீதா, உன்பாட்டுக்கேட்டு ரொம்ப நாளாச்சு... கொஞ்சம் வாசிச்சுண்டே பாடேன் கேப்போம்" என்றாள் உமா.

சீதா நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"பாட்டா பாடச்சொல்லறேக்கா, என் பொழப்பே பாட்டாத்தான் ஆயிடுத்து. என் புருஷன் அழகானவர்னு உலகமே புகழ்ந்தது. நானும் கர்வங்கொண்டேன். பகவான் என் கர்வத்தைக் குலைத்து, என்னை மட்டந்தட்டிட்டாரக்கா. அவர் என்னோடு பேசறதேயில்லே. அவரோடே இறங்கிப்போனாளே அவள் மொதல்லே இந்த வீட்டுலே வேலை செஞ்சாளாம் பாக்கியம்னு பேராம். இப்போ அவளுக்கு கௌனைப் போட்டு 'குட்லக்'குன்னு பேர் வச்சிருக்கார். சதா மாடியிலே அவகூட கும்மாளம் அடிக்கிறார். நான் அவரைத் திருத்த என் அழகாலேயும் பாட்டாலேயும் எவ்வளவோ முயற்சி பண்ணினேன். ஒன்றும் பலிக்கல்லேக்கா. அவா ரெண்டுபேருக்கும் சமையல்காரியாயிருக்கேன்."

சொல்லிக்கொண்டே கேவிக்கேவி அழுதாள் சீதா. உமா பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தாள். அவள் உள்ளத்தில் புதிய பூகம்பம் ஆரம்பித்தது. காந்தன் தன்னிடம் காட்டிய அன்பையெல்லாம் எண்ணிப் பார்த்தாள். காந்தனுடைய உள்ளழகு அப்போதுதான் அவளுக்குப் புரியத் தொடங்கியது. காந்தனுடைய தூய்மையான அன்புக்கு எத்தகைய அழகும் ஈடில்லை என்பதை அவள் உணர்ந்தாள். சீதா இன்னும் கொஞ்சநாள் இருக்கச் சொன்னதையும் தடுத்துக் கொண்டு அடுத்த ரயிலில் ஓடினாள் சென்னைக்கு.

காந்தன் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். 'தடால்' என்று அவன் காலடியில் விழுந்த உமா அவன் பாதங்களைக் கண்ணீரால் நனைத்துவிட்டாள். காந்தனின் அன்பும் பண்பும் இன்றும் குறையவில்லை. அவன் கைகள் உமாவைத் தூக்கின. அவனுடைய கண்களில் உள்ளழகை அப்பொழுதுதான் முதன் முதலாகக் கண்டாள் உமா.

# விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

## புதுவகைப் போர்

பழங்காலத்திலிருந்து வழங்கி வந்திருக்கும் போர்க்கலங்கள் அனைத்தும் மனித உடலுக்கு ஏதோவொரு வகையில் தீங்கு விளைவித்துத் தம் வேலையைச் செய்கின்றன. நவீனப் படைக்கலங்களான அணுகுண்டும், ஹைடிரஜன் குண்டும்கூட இதே வகையில்தான் இயங்குகின்றன. ஆனால் விஞ்ஞான அறிவு முதிர்ந்துவிட்ட இந்நாளில் படைக்கலங்கள் இன்னும் சிறந்த வகையில் தம் வேலையைச் செய்யுமாறு அமையவேண்டும் என்று வல்லரசுகள் எண்ணுவதில் வியப்பில்லை. "உடலுக்குப் பதில் உள்ளத்துக்குத் தீங்கு விளைவிக்கும் சாதனங்களைக்கொண்டு போரிடும் நாள் வந்துவிட்டது" என்று அமெரிக்க விஞ்ஞானி யொருவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். ரசாயனப் பொருள்களின் உதவியாலோ, வேறு முறைகளாலோ மனித உள்ளத்தின் போக்கை மாற்றியமைக்க முடியும். இம்முறைகளால் நாட்டு மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான கருத்துக்களைக்கொண்டு அரசாங்கம் விரும்பும் வகையில் இயங்குமாறு செய்யலாம். எதிரி நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் பித்தர்களாகவோ, முட்டாள்களாகவோ ஆக்கும் பொருள்களும், விஞ்ஞான முறைகளும் தோன்றக்கூடும். இதே முறையில் சர்வ வல்லமை கொண்ட அரசாங்கத்திற்கு எதிர்ப்பே இல்லாமற் செய்து விடலாம். இதெல்லாம் வருங்காலத்தில் மனிதகுலம் சமாளிக்க வேண்டிய பயங்கரங்கள். மூளையின் இயக்கம், மின்சார அதிர்ச்சி முதலிய பௌதிக விளைவுகளாலும், ரசாயனப் பொருள்களாலும் அது எவ்வாறு மாறுபடும் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியில் ரஷ்யா இன்று உலகிலேயே முதன்மை பெற்றிருக்கிறது. இந்த ஆராய்ச்சி முடிவுகளை மேற்கூறியவாறு தீயவகையில் பயன்படுத்தலாம் என்பது அந்த அமெரிக்க விஞ்ஞானியின் கருத்து. எத்துறையிலும் அமெரிக்கா ரஷ்யாவுக்குப் பின் தங்கிவிடக் கூடாதல்லவா? அதனால் அமெரிக்காவும் 'உள்ளங்களைப் பாழாக்குவது எப்படி?' என்ற ஆராய்ச்சியில் முனைந்து ஈடுபட வேண்டும் என்று அவர் வற்புறுத்துகிறார்! நாமும், நமது சந்ததிகளும் இன்னும் என்னென்ன விஞ்ஞான பயங்கரங்களைக் காணப்போகிறோமோ!

## நோய் நீக்கும் நுண்ணுயிர்

பாக்டீரியா என்னும் நுண்ணுயிர்கள் பலவகை நோய்களுக்குக் காரணமாகின்றன. அவை உடலுக்குள் புகுந்து பல்கிப் பெருகி நோயை விளைவிக்கின்றன. இச் சிற்றுயிர்களைவிடப் பன்மடங்கு சிறிய வேறு உயிர்கள் உண்டு. அவற்றை 'நுண்மக் கொல்லிகள்' (Bacterio phages) என அழைக்கிறார்கள். இவை பாக்டீரியாவை அழிக்கும் திறன் வாய்ந்தவை. மிக நுணுக்கமான மைக்ராஸ்கோப்பின் உதவியால் இவற்றைப் பார்க்கமுடியும். தம்மைவிடப் பெரிய உயிர்களை இவை எவ்வாறு அழிக்கின்றன என்று ஆராய்ந்திருக்கிறார்கள். இவற்றின் இயக்கம் ஓரளவு தெரியும். க்ஷய நோய்க்கிருமிகளை அழிக்க வல்ல நுண்மக் கொல்லிகள் உள்ளன என்பது இப்போது தெளிவாயிருக்கிறது. இவை வால்போன்ற ஓர் உறுப்பின் உதவியால் கிருமியைப் பற்றிக்கொள்கின்றன. அதன் வழியே ஒரு ரசாயனப் பொருளைக் கிருமியின் உடலில் பீச்சுகின்றன. இதனால் கிருமி வலிவிழந்துவிடுகிறது. இப்போது கிருமியின் இனப்பெருக்க உறுப்புக்களை அச்சிற்றுயிர் தனது வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்கிறது. நுண்மக் கொல்லிகள் ஏராளமாகக் கிருமியின் உடலில் பெருகுகின்றன. கடைசியில் கிருமியின் உடல் வெடித்து அது மடிந்து போகிறது. கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களின் உலகத்தில் நிகழும் இந்த விளைவுகள் வியப்பை ஊட்டும் வகையில் அமைந்துள்ளன. நோய்க்கிருமிகள் அள

வுக்கு மிஞ்சி உலகிற் பெருகி மற்ற உயிர்களை அழிக்காது கட்டுப்படுத்தும்பொருட்டு, இயற்கை கிருமிகளைவிடச் சிறிய இவ்வுயிர்களை அவற்றிற்குப் பகையாக அமைத்திருக்கிறது. மனித உடலில் புகுந்துவிட்ட கிருமிகளை அழிக்கும் திறமை இவ்வுயிர்களுக்கு இல்லை. ரத்தத்தில் உள்ள சில பொருள்கள் நுண்மக் கொல்லிகள் நோய்க் கிருமிகளை அண்டவிடுவதில்லை.

## உணவும், சரும நோயும்

இரண்டாம் உலகப் போரின்போது நம் நாடெங்கும் சொறியின் தாண்டவம் நடைபெற்றது. சொறி சிரங்கு போன்ற சரும நோய்கள் இன்னும் நம் நாட்டில் மிகுதி. இதற்கெல்லாம் நமது உணவில் போதிய ஊட்டம் இல்லாமல் இருப்பதே காரணம் என்று பொதுவாக நம்புகிறோம். போர்க் காலச் சொறிக்கு ரேஷன் அரிசியைக் குறைகூறினோம். அமெரிக்கச் சரும மருத்துவர் கழகம் மிக விரிவான ஆராய்ச்சிகளுக்குப் பின் வெளியிட்டிருக்கும் முடிவுகளைப் பார்க்கும் போது இக்கருத்துக்கள் பெரிதும் தவறானவை என்று தெரிகிறது. உணவில் உள்ள குறைபாடுகளாலோ, அதில் போதிய ஊட்டம் இல்லாததாலோ பொதுவாகச் சரும நோய்கள் தோன்றுவதில்லை. என்று அக்கழகம் கூறுகிறது. அதற்கு மாறாக மிதமிஞ்சி. உண்ணுவதால் உடலில் கோளாறுகள் தோன்றி அதன் சமநிலை கெடுகிறது. இதனால் சரும நோய் தோன்றக் கூடும். சரும நோய்களுக்கு நாட்டு வைத்தியத்தில் கையாளும் சிகிச்சை பெரிதும் பயன்படுகிறது. ஆங்கில வைத்தியரிடம் போனால் அவர் வைடமின் 'ஏ' மருந்தை ஊசி போடுகிறார், அல்லது சாப்பிடச் சொல்கிறார். இது பெரும்பாலான சொறிவகைகளுக்குப் பயன்தராது என்றும் ஆராய்ச்சி முடிவுகள் தெளிவாக்குகின்றன. ஆகையால் சரும நோய்களைத் தடை செய்வதற்குச் சரியான உணவை அளவோடு உண்பதே சிறந்த முறை என்று அறியவேண்டும்.

## பயிர்களுக்கு ஒரு மருந்து

தோட்டத்து மரங்களுக்கும், வயலில் உள்ள பயிர்களுக்கும் திடீரென்று நேரும் இயற்கை விளைவுகளால் சேதம் நேராது தடை செய்வதற்கு ஒரு மருந்து வந்திருக்கிறது. அமெரிக்க ரப்பர்க் கம்பெனியொன்று இதைக் கண்டுபிடித்திருக்கிறது. இது டாலில்தாலமிக அமிலம் என்னும் ரசாயனப் பொருள். மிதமிஞ்சிய வெப்பம், அகால மழை, குளிர், வறட்சி போன்ற அதிர்ச்சிகளால் தாவரத்துக்கும் அதன் விளைச்சலுக்கும் தீங்கு நேராது இப்பொருள் தடை செய்கிறது. இது இரு வகையில் பயிர்களுக்கு நன்மை புரிகிறது. தாவரத்தில் பூப் பூக்கும் சமயத்தில் இதைத் தெளித்தால், வானிலை சரியாக இல்லாவிட்டாலும் பூக்கள் உதிர்ந்துபோகாமல் தடைசெய்கிறது. சில தாவரங்களில் பூக்களின் எண்ணிக்கையை இது பெருக்குகிறது. இம்மருந்தைத் தெளித்ததால் அவரைவகைப் பயிர்களின் விளைச்சல் இரு மடங்காகப் பெருகியது. பருத்தியின் கண்டுமுதல் சுமார் கால்மடங்கு அதிகமாகியது. சில பழவகைகளின் விளைச்சல் அரை மடங்கு கூடியது. தூள் வடிவில் உள்ள இதை நீரில் கரைத்துத் தெளிக்கிறார்கள். இது விற்பனைக்கு வந்திருக்கிறதா என்று தெரியவில்லை.

## நீரிழிவு இருவகை

அண்மைவரை நீரிழிவு நோய்க்கு மேனாட்டு மருத்துவத்தில் இன்ஸுலின் ஒன்றே மருந்தாக இருந்தது. இதை ஊசி மூலம் உடலிற் செலுத்த வேண்டும். இதில் உள்ள தொல்லையினால், வாய் மூலம் உட்கொள்ளத்தக்க மருந்தொன்றைக் கண்டு பிடிப்பதற்கு நெடுங்காலமாகவே முயன்று வந்தார்கள். 'ஓரினேஸ்' (Orinase) என்ற புது மருந்தொன்று இப்போது வழக்கத்துக்கு வந்திருக்கிறது. இதைச் சாப்பிட்டு நீரிழிவுக்குத் தாற்காலிக நிவாரணம் காணலாம். ஆனால் எல்லா நோயாளிகளுக்கும் இம்மருந்து பயன் தருவதில்லை. இது ஏன் என்று ஆராய்ந்ததில் நீரிழிவு நோயைப் பற்றிய அறிவு வளர்ந்திருக்கிறது. அது இருவகைப் பட்டது என்று இப்போது தெளிவாயிருக்கிறது. நமது உடலில் கணையம் என்ற ஜீரண உறுப்பு உள்ளது. அது வெளிவிடும் ரசாயனப் பொருள்களில் இன்ஸுலின் என்பதும் ஒன்று. நாம் உட்கொள்ளும் உணவைச் சக்தியாக மாற்றி உடலை இயக்குவதற்கு இந்த ரசாயனப் பொருள் இன்றியமையாதது. சிலரது உடலில் இப்பொருளின் இயக்கம் இருப்ப

# ஆரோக்கியத்தை விரும்புவோர் எப்பொழுதும்
# லைப்பாய் உபயோகித்தே நீராடுவார்

பாலர் முதல் வயோதிகர் வரை குடும்பத்திலுள்ளோர் யாவரும் உற்சாகத்துடன் இருக்கும் வீடு எதுவோ அதுவே உண்மையான இன்ப நிலையம். உற்சாகத்திற்கு ஆதாரம் ஆரோக்கியந்தான். ஆனால் ஆரோக்கியத்திற்கு நிரந்தரமாக ஆபத்து விளைவிப்பது அழுக்கு. நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் அழுக்கிலிருந்து தப்பமுடியாது—அழுக்குத்தான் நோய்க் கிருமிகளின் இருப்பிடம். அழுக்குடன் கிருமிகளைக் கழுவிக் களைந்து உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது லைப்பாய் சோப். அன்றாடம் லைப்பாய் சோப்பினால் குளித்து அழுக்கிலுள்ள கிருமிகளினின்று உங்கள் ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்ளுங்கள். புதுமலர்ச்சியூட்டும் அனுபவமும் அதுவே.




L. 273—X52 TM

தயாரிப்பாளர்கள்: ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்,

தில்லை அப்போது உணவு சரிவரச் சக்தியாக மாறுவதில்லை. அவர்களது ரத்தத்திலும் சிறுநீரிலும் சர்க்கரையின் விகிதம் அதிகமாய் விடுகிறது. இதுதான் நீரிழிவு நோய். புது மருந்தின் இயக்கத்திலிருந்து இக்கோளாறு இருவகையில் தோன்றக்கூடும் என்று தெரிகிறது. சிலரது கணையச் சுரப்பியில் போதிய அளவு இன்ஸுலின் உற்பத்தியாவதில்லை. இவர்களுக்கு இன்ஸுலின் ஒன்றே மருந்து. வேறு சிலருக்கு, உற்பத்தியாகும் இன்ஸுலின் கணையத்திலிருந்து இன்ஸுலின் போதிய அளவு வெளிவருவது தடைப்படுகிறது அல்லது வெளிவந்த இன்ஸுலின் சரிவரப் பயன் படுவதில்லை. இரண்டாம் வகை நோயாளிகளுக்கு மட்டும் புது மருந்து பயன்படும். இதிலிருந்து இனி இக்கோளாறுகளுக்கான காரணங்களை அறிய முற்படலாம். அடிப்படைக் காரணம் தெளிவானால் நீரிழிவுக்கு நிலையான சிகிச்சை முறை தோன்ற வழியேற்படும்.

## செயற்கை இருதயம்

பழுதான மோட்டார் எஞ்சினை எடுத்து விட்டுப் புதிய எஞ்சினைப் பொருத்தி மோட்டாரை ஓட்டுவதுபோல் பழுதடைந்த இருதயத்துக்குப் பதிலாக எந்திர இருதயத்தை வைத்து மனிதனுக்கு உயிர்பிச்சை அளிக்கும் காலம் வரலாம். ரத்த ஓட்டத்தை இருதயத்திலிருந்து மேற்கொண்டு நடத்தும் எந்திரம் ஒன்றை அமைத்து விலங்குகளின் உடலில் வெற்றிகரமாகச் சோதனைகளை நடத்தியிருக்கிறார்கள். இதில் மின்சார மோட்டார் ஒன்று சின்னஞ் சிறு 'பம்பு' ஒன்றை இயக்குகிறது. இந்த பம்பின் உதவியால் ரத்த ஓட்டம் சீராக நடைபெறும். இதன் வேகத்தையும் தேவையானவாறு கட்டுப்படுத்தலாம். இச்சாதனத்தின் நிறை மூன்றே ராத்தல். இது ஒரு கைப் புத்தகத்தைவிடச் சிறியது. இதை அடி வயிற்றில் பொருத்தி விடுகிறார்கள். மின்சாரத்தைக் கடத்துவதற்கு இரு கம்பிகள் உடலுக்கு வெளியே வரும். நாயின் உடலில் இதை அமைத்துப் பன்னிரண்டு மணி நேரம் அதை வெற்றியுடன் இயக்கினார்கள். எந்திர இருதயம் சீராக வேலை செய்தாலும் ஒரேவொரு குறை தென்பட்டது. ரத்தத்தில் சில மாறுதல்கள் நிகழ்ந்தன. இதனால் உடலுக்குத் தீமை விளையலாம். இக்குறையை நீக்க முயன்று வருகிறார்கள். இதுபற்றிய சோதனைகளும் தொடர்ந்து நடந்து வருகின்றன.

## மாதவிடாய்க் கட்டுப்பாடு

வாய்மூலம் உட்கொள்ளத்தக்க ரசாயனப்பொருள் ஒன்று பெண்களின் மாதவிடாயை ஏழு மாதங்கள் வரை கட்டுப்படுத்தவல்லது என்று கண்டிருக்கிறார்கள். சில சமயங்களில் பெண்களின் உடல்நிலை சரியாக இல்லாதபோது அவர்களுக்கு மாதவிடாய் ஏற்படுவது தீமை பயக்கலாம். அப்போது இம்மருந்து பயன்படும். மாதவிடாயின் போது ஏற்படும் வலி முதலிய கோளாறுகளிலிருந்தும் இம்மருந்தினால் நிவாரணம் பெறலாம். சிலருக்குத் திரும்பத் திரும்பக் கருச்சிதைவு ஏற்படுகிறது. அவர்களுக்கும் இம்மருந்து நல்ல பயன் தரும். இவற்றைத் தவிர இது மருத்துவ ஆராய்ச்சியிலும் பெரிதும் பயன்படும். இந்த ரசாயனப் பொருளின் பெயர் நோரேதிரின்டிரேன்.



# சுடச்சுட

திருமால்

பிரபல தமிழ் அறிஞர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பொதுக்கூட்டம் ஒன்றிலே பேசினர். "நான் எத்தனையோ கூட்டங்களிலே பேசியிருக்கிறேன். ஏறக்குறைய 500 பெண்கள் கூட்டத்திலே, நாலைந்து இளம்பெண்கள் தான் கட்டுமஸ்தாக உருளைக்கிழங்கு போல இருப்பார்கள். ஏனைய இளம் பெண்களோ மெலிந்து ஒல்லியாகக் காட்சிதருவார்கள். இப்படி இவர்கள் நோஞ்சலாக இருக்கும் காரணத்தை அறிதற்கு அரசினர் ஒரு விசாரணைச் சபையை அமைக்கவேண்டும். இக்காலப் பெண்களைப் பார்த்தால் கொஞ்ச காலத்திலே மனித சமூகமே அற்றுவிடும்போல இருக்கிறது.

எனது பாட்டியின் தாயார் உலக்கையைப் பிடித்து நெற்குத்திவந்தாள். என் பாட்டி ஆட்டுக் கல்லில் மா அரைப்பாள். என் தாயாருக்கோ அம்மியிலே கூட்டு அரைக்கும் அளவுக்கு பலம் இருக்கிறது. என் வாழ்க்கைத் துணைவி கையிற் கரண்டி பிடித்ததோடு சரி. என் மகளோ ஊசியும், நூலும் வைத்திருக்கிருள். என் பேத்தி என்ன வைத்திருப்பாளோ தெரியவில்லை!" என்ருர்! கூடியிருந்தமக்கள் எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள்.

* * *

மௌல்வி அப்துல்ஹமீது பாகவி அவர்களைப் பார்க்க வருபவர்கள் எல்லோரும் அவருடன் பொழுதுபோவது தெரியாமல் நீண்டநேரம் பேசிக்கொண்டிருப்பார்கள். ஒரு தடவை கர்ப்பத்தடைப் பிரசாரத்தை சரியென்று கருதிய நண்பர் ஒருவர் அவரிடம் வந்து "மௌலானு சாகேப்! பிள்ளை குட்டிகள் அதிகமாகப் பெருகித் தொல்லைகளுக்கு ஆளாகாமல் இருப்பதற்கு கர்ப்பத்தடை ஒரு சிறந்த சாதனந்தான் என்று நான் கருதுகிறேன்" என்ருர்.

மௌலானு இஸ்லாமியக் கொள்கைகளுக்கு கர்ப்பத்தடை புறம்பானது என்ற கருத்துடையவர். ஆகவே அவர் அந்த நண்பருக்கு "இந்த யோசனையை உங்கள் தகப்பனுருக்கு யாராவது சொல்லியிருந்தால், மிகவும் புண்ணியமாய் இருந்திருக்கும்" என்று சிரித்துக்கொண்டே சொன்னுர்.

* *

மருந்தையும், வைத்தியத்தையும் அரசாங்கத்தாரே மேற்கொண்டு தேசிய மயமாக்கிய ஏற்பாட்டை ஆதரித்து பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு சமயம் ஒரு தொழிற்கட்சி அங்கத்தினர் அபாரமாகப் பேசினர். அப்படிப் பேசுகையில் இடையிலே "இன்று பிரிட்டனிலே வேறு எப்போதையும்விட மிக அதிகமான குழந்தைகள் பிறந்திருக்கின்றன அல்லவா? அதற்குக் காரணம் என்ன?" என்று மேஜையை பலமாகத் தட்டிக் கர்ஜித்தார். அவரே இதற்கு பதில் சொல்வதற்கு முன்பாக திடீரென்று ஒரு டோரி எழுந்து "தனி நபர் முயற்சி" என்று கோஷித்தார். சபையிலெழுந்த சிரிப்பொலி அடங்க பத்து நிமிஷமாயிற்று?

* * *

சென்னை சட்டசபைக் கூட்டத்திலே ஒருவர் "சினிமாவுக்குப்போகும் பெண்கள் பாத்திரத்தில் சாப்பாடு கொண்டுபோய் கொட்டகையிலேயே சாப்பிட்டுவிட்டு 'கியூ' வரிசையிலே நிற்கிருர்கள் என்பது உண்மையா?" என்று கேட்டார்,

மற்றவர்:—இதில் ஆச்சரிமே இல்லை. சினிமாக் கொட்டகையில் பெண்கள் பிள்ளை பெற்று தாங்கள் அன்று பார்த்த சினிமா கதையின் பெயரையே குழந்தைக்கு வைக்கும்போது சாப்பாட்டுடன் சினிமாவுக்குப் போவது அவ்வளவு பிரமாதம் அல்லவே! என்ருர்.

* * *

சங்கீதபூபதி மகாராஜபுரம் விசுவநாதய்யர் அவர்களிடம் ரங்கராஜன் என்ற வாலிபர் வந்தார். "அண்ணு? சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. கொஞ்சம் சொல்லிக்கொடுக்கிறீர்களா? நீங்கள் என்ன செய்யச் சொன்னுலும் செய்ய சித்தமாக இருக்கிறேன்" என்று கூறி நமஸ்காரம் செய்தார்.

"அம்பி! நான் சங்கீதம் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறேன். அதைக் கற்றுக்கொள்கிறதுக்கு முன்னலே நீ இங்கிதம் கற்றுக்கொள்ளவேணுமப்பா!" என்ருர் சங்கீதபூபதி.

கூடியிருந்தவர்கள் சிரித்தார்கள். "அடாடா! என்ன சிரிக்கிறீர்களே! நான் சொன்னது தமாஷ் இல்லை! கச்சேரி மேடைமீது ஏறி உட்கார்ந்து கொண்டால் சபையோருக்குத் திருப்தி ஏற்படும் வகையில் என்னென்ன செய்யவேண்டும் என்று தெரிந்துகொள்வதே இங்கிதமாகும்" என்ருர் சங்கீதபூபதி.




நமது விசேஷ நிருபர்

பட விமர்சனம்

## திருமணம்

வலம்புரி பிக்சர்ஸாரின் 'திருமணம்' நடன இடங்களில் சிறந்து விளங்குகிறது. கோபி கிருஷ்ணவும், கமலா லக்ஷ்மணனும் ஆடும் இரு நடனங்கள் மனோரஞ்சகமான கேவாகலரில் எடுக்கப்பட்டுள்ளன. காட்சியில் ரசிகர்கள் பொறுமை இல்லாது எழுந்தோடிப் போய்விடப் போகிறார்களே என்று பயந்து, தங்கவேலு மூலமாக 10 நிமிஷம் இருந்து நடனத்தைப் பார்த்து விட்டு போகச் சொல்கிறார்கள் தயாரிப்பாளர்கள். இவ்வளவு வலுக்கட்டாயம் தேவைதான். அசாத்ய பொறுமை உள்ளவர்கள்தான் 'சாப' விமோசனம் எப்போது என்பதைக் காண படத்தின் கடைசிவரை இருக்கமுடியும்.

ஜெமினி கணேசன், சாவித்திரி இருவரும் சுமாராக நடிக்கிறார்கள். பெண்ணிடம் அபார வாஞ்சையுடைய 'வெரிகுட்' தகப்பனராக ரங்காராவ் வருகிறார். ராஜகோபால் நடிப்பில் குறை ஏதும் சொல்வதற்கில்லை.

தங்கவேலு, எம். என். ராஜம் ஜோடி சேர்ந்து 'ஓவராக' நடிக்கிறார்கள். "வை ராஜா வை, அதிலே வை, இதிலே வை, எதிலே வேணுமானாலும் வை" என்று எம். என். ராஜம் தன் காதலனுடன் கூடச் சேர்ந்துகொண்டு பாடுவது ஆபாசத்திலும் ஆபாசம். வீ. நாகையா, பேபி உமா முதலியோரும் வருகின்றனர்.

படத்தின் முன்பாதியில் ஒரே நடனங்கள். பின்பாதியிலோ ஒரே பாட்டுமயம்.

கதையில் சத்தே இல்லை. வசனங்கள் சிற்சில இடங்களில் தரமாக உள்ளன. வலம்புரி சோமநாதன் வசனங்கள் எழுதியுள்ளார்.

படக்கதை பல இடங்களில் திருவிழாத்தேர் போல நின்று, நின்று நகருகிறது. தேர் ஜோடனைக்கு ஏராள பொருட்செலவு செய்திருக்கிறார்கள். போய்ப் பாருங்களேன். என்ன யோசிக்கிறீர்கள்? போய்ப் பார்த்துவிட்டு வந்தவர்கள் சொன்னால் போதாதா என்கிறீர்களா? சரி, உங்கள் இஷ்டம்.

---

## செங்கோட்டை சிங்கம்

தேவர் பிலிம்ஸாரின் "செங்கோட்டை சிங்கம்" குழந்தைகள் ரசிக்கக்கூடிய படம். சிங்கம் அபூர்வமாக வந்தாலும் யானைகள் நல்ல பின்னணி இசைக்கேற்ப நடைபோட்டன. காண்டாமிருகத்துடன் கதாநாயகன் சண்டைபோடும் காட்சி வெகுலாகவமாக எடுக்கப்பட்டுள்ளது.

திரைக் கதை வசனத்தை எழுதியவர் புரட்சி தாசன். அதில் புரட்சிகரமான கதை அம்சம் ஏதும் மாதிரிக்குக்கூட இல்லை. இயற்கைக் காட்சிகள் நன்கு படமாக்கப்பட்டிருக்கின்றன. அக்காட்சிகளுக்கு நடுவே கதையும் மறைந்து மறைந்து அவ்வப்போது தலைகாட்டுகிறது.

சிங்கம், புலி, கரடி, காண்டாவுக்காக ஒரு முழு நீளப்படம் ஆடுவிழுங்கிய மலைப்பாம்பைப் போல் பெருமூச்சு விட்டுக்கொண்டு நகருவதால் படம் எப்படாப்பா முடியப் போகிறதென நாம் பெருமூச்சு விடவேண்டியிருக்கிறது.

நடிப்பில் டி. எஸ். பாலையா முன் நிற்கிறார், வில்லனை இல்லாமல் நல்லதனமாக ஒரு குடும்பஸ்தனை அவர் காட்சியளிக்கும்போதெல்லாம் நடிப்பில் அலாதி நயம் காட்டுகிறார். சமீப படங்களில் அவர் நல்லபிள்ளையாக மாறிவருவது வரவேற்கத்தக்கதே! எப்பாகத்தையும் தம்மால் சிறப்பாகச் செய்துகாட்டமுடியும் என்பதற்கு இத்தகைய மாறுதல் அவருக்கு உதவுகிறது.

ஹாஸ்ய நடிகர் ராஜகோபால் படத்துக்குப் படம் பிரமாதமாக நடித்துவருகிறார். இப்படத்தில் வசனங்கள் சுரத்தாக இல்லாவிட்டாலும், தம் நடிப்பால் அவர் எல்லாவற்றையும் சரிகட்டிவிடுகிறார். "லொடலொடா" மோட்டார் ஒன்றில் ஏறியவர் படத்தின் முக்கால் பகுதி

ஓடியும் இறங்கவில்லை. ஏறியதிலிருந்து அந்தக் காரைப்போல நடிப்பும் மெதுவாகிவிட்டது. வீரப்பா வழக்கப்படி நடித்துள்ளார். காட்டிலேயே சஞ்சரிப்பதால் அவருடைய உருமல், மிரட்டலுக்குக் கேட்பானேன்.

பி. சரோஜாதேவி கவர்ச்சிகரமாக பல கோணங்களில் 'போஸ்' கொடுக்கிறார். நடிப்பில் இன்னும் முன்னேறவேண்டும். அழகான முகத்தோற்றம். உழைத்து முன்னுக்கு வர முயற்சி செய்ய வேண்டும்.

பண்டரிபாய் உருக்கமாக நடித்துள்ளார். சோக நடிப்புக்குப் பெயர்பெற்றவர். அப்பெயரைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறார். காதல் ஸீன்களுக்குச் கொஞ்சமும் லாயக்கில்லை. இதை உணர்ந்து அவர் தக்க பாகங்களை இனி ஏற்றும் பொருத்தமாக நடித்தால், ரஸிகர்களின் ஹாஸ்ய சிரிப்புக்கு இடம் இல்லாமல் இருக்கும்.

உதயகுமார் வனவிலங்குகளுடன் வேகமாகச் சண்டையிட்டு, படத்துக்கு விறுவிறுப்பு ஊட்டுகிறார். நடிப்பு போதாது.

மைனாவதி. எஸ். வி. சகஸ்ரநாமம், ஈ. ஆர். சகாதேவன் ஆகியோர் சுமாராக நடிக்கின்றனர். சாண்டோ தேவர் தம் கைவரிசைகளை விமரிசையாகக் காட்டுகிறார்.

ரயில்வே பாயிண்டை குதிரை தூக்கி எறியும் இடத்தில் நல்ல 'சஸ்பென்ஸ்'.

ஒன்றிரண்டு பாட்டுகள் தேவலை ஆனால் கேட்டு அலுத்த மெட்டுகளிலேயே அமைக்கப்பட்டுள்ளன. பாட்டுகள் அனாவசியமாக திணிக்கப்பட்டுள்ளன.

கதையில் சத்து இல்லாதபோனாலும் கரடி, காண்டா, முதலை முதலியவற்றை வைத்துக் கொண்டு நல்ல வேடிக்கை காட்டுகிறார்கள், ஏதோ 'சர்க்கஸ்' போய் பார்த்துவிட்டு வந்த திருப்தியை நிச்சயம் அளிக்கும் இப்படம்.

---

## அன்னையின் ஆணை

சிவாஜி கணேசனின் சிறந்த நடிப்பைக்காண அன்னையின் ஆணையை அவசியம் பார்க்க வேண்டும். உணர்ச்சி மிகுந்த பல கட்டங்கள் அப்படத்தில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொன்றிலும் அவரது பேச்சும், நடிப்பும் ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் கூர் பார்த்துக் கொள்கின்றன. 'அசோகன்' நாடகம் ஒன்றும் அதில் வருகிறது. அசோகனாக சிவாஜி கணேசன் தோன்றி அற்புதமாக தமக்குள்ள நடிப்புத் திறமையை வெளிக்காட்டியுள்ளார்.

பண்டரிபாயின் நடிப்பை அடுத்தடடியாக குறிப்பிட வேண்டும். தாயும், மகனும் சம்பாஷிக்கும் இடங்களில் அவரது நடிப்பு பிரமாதம்.

எஸ் வி. ரங்கராவுக்கு ஏற்ற பாகம். அதைக் கச்சிதமாக செய்து முடித்திருக்கிறார். படத்தில் மூன்று வில்லன்களை நாம் சந்திக்கிறோம். ரங்கராவ் ஒருவர். எம். என். நம்பியார் மற்றொருவர். மூன்றாவது நபர் சிவாஜி கணேசன். ரங்கராவ் அமரிக்கையாக. அழகாகப் பேசுகிறார். நம்பியாருடையதோ ஒரே கூச்சல். அவ்வளவு உரக்கப் பேச பழகிக்கொள்வது சிரமம்தான். இருந்தாலும் கட்ட மாறுதல்களுக்கு ஏற்ப அவர் குரலை தாழ்த்திப் பேசியிருக்கலாம். அன்னையின் ஆணையை நிறைவேற்ற பண்பட்ட வில்லனாக சிவாஜி கணேசன் காட்சி அளிக்கிறார்.

சாவித்திரி சீராக நடித்துள்ளார். அதிகம் சிரமப்படவில்லை. எம். என். ராஜம் நடிப்பும் பாதகமில்லை. ராஜகோபாலுக்குக் கொஞ்சம் 'ஸீரியஸ்' பாகம். அதிலும் தம்மால் முடிந்த ஹாஸ்யச் சுவையை ஊட்டியுள்ளார்.

அழகாக தெளிவான நடையில் முரசொலி மாறன் வசனங்களை அமைத்துள்ளார்.

மருதகாசியின் "அன்னையைப் போலொரு தெய்வமில்லை" என்கிற பாடல் மிகவும் நன்றாக இருக்கிறது. எஸ். எம். சுப்பய்யாவின் வர்ண மெட்டுகள் இனிமையாக உள்ளன.

ஸி. எச். நாராயணமூர்த்தியின் டைரக்ஷன் தேவலை. தரமான படம், குடும்பப்படம். தயாரிப்பாளர் ஏ.எம்.எம். இஸ்மாயிலை பாராட்ட வேண்டியதுதான்.

---

## மாலையிட்ட மங்கை

தூய, தரமான ஹாஸ்யச் சுவையுடன்கூடிய கருத்தாழமுள்ள கண்ணதாசனின் வசனங்களும், அவரது அழகான பாடல்களும் ஏ. எல். எஸ். வெளியீடான 'மாலையிட்ட மங்கை'க்கு நல்ல புகழைத் தேடித் தரக்கூடியவை.

டி. ஆர். மகாலிங்கம் மீண்டும் திரையில் தோன்றி அழகாகப் பாடுகிறார். நடிப்பு சுமார்தான் பாடக்கூடிய நடிகர்கள் பஞ்சமாக இருக்கும் இக்காலத்தில் அவர் மீண்டும் வந்தது வரவேற்கத்தக்கதே.

பண்டரிபாய்க்கு காதல் கட்டங்கள் உதவாது. அவற்றில் அவர் எப்பாடுபட்டாலும் சோபிப்பது இயலாது. வழக்கப்படி உருக்கமான சோக காட்சிகளில்தான் அவர் சிறந்து விளங்குகிறார்.

மைனாவதி துடியாக நடிக்கிறார். கமலா லக்ஷ்மணின் பாரிமகள் நடனம் பரவாயில்லை. காகா ராதாகிருஷ்ணன், ஆழ்வார் குப்புசாமி முதலியோரும் பாதி மார்க்குக்குமேல் வாங்குகிறார்கள்.

எஸ். அய்யாப்பிள்ளையும் பங்கு போட்டுக்கொண்டு வசனம் எழுதியுள்ளார்.

இப்படத்தில் கேமிரா வேலைகள் 'ஏ ஒன்.' பலகோணங்களில் வெகு சாமர்த்தியமாக பார்ப்பவர்கள் வியக்கும்படி பல காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கெல்லாம் ஜி. ஆர். நாதனைப் பாராட்டவேண்டும். அவரே இப்படத்தைத் திறம்பட டைரக்ட் செய்துள்ளார்.

## வளருகின்றன

### தர்ம பத்தினி

பிலிம் செண்டரல் ஆர். எஸ். ஆர். மூவிடோன் தயாரிக்கும் படம் இது. ஜமுனா, சௌகார் ஜானகி, நாகய்யா, பாலையா, நம்பியார், எஸ். வி. சகஸ்ரநாமம், டி. பாலசுப்பிரமணியம், மனோஹர் முதலியோர் இதில் நடிக்கின்றனர். கதை வசனங்களை கலைமணி எழுதுகிறார்.

### பெரிய கோயில்

அருணாசலம் பிக்சர்ஸாரின் இத்தயாரிப்பில் கிழவராக கள்ளபார்ட் ஆர். நடராஜன் தோன்றுகிறார். ஏ. கே. வேலன் டைரக்ஷன் பொறுப்பேற்றுள்ளார்.

### சொல்லு தம்பி சொல்லு

பிரேம்நஸீர், ராஜசுலோசனா, ஜி. சகுந்தலா, நம்பியார், மதுரம், சாரங்கபாணி முதலியவர்கள் பங்குகொள்ளும் இப்படம் திருவனந்தபுரம் மெரிலாண்டு ஸ்டுடியோவில் வளர்ந்து வருகிறது. விந்தன் வசனம் அமைத்துள்ளார். கே. வி. மகாதேவன் இசை அமைத்துள்ளார். இதன் டைரக்டர் டி. வி. சுந்தரம்.

### பெரிய வீட்டு பெண்கள்

ஸ்ரீராம் புரொடக்ஷன்ஸாரின் இப்படத்திற்கு ஏ. பி. நாகராசன் வசனம் எழுதியுள்ளார். சவுகார் ஜானகி, எம். என். ராஜம், வி. கே. ராமசாமி முக்கிய பங்கு ஏற்கின்றனர். சோமு டைரக்ட் செய்கிறார்.

---

## சிறுவர் பகுதி

### "உங்களுக்கு தெரிகிறதா?"

கீழ்க்கண்ட பதங்களை சரியானபடி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் கிடைக்கும் விடை ஒரு பெரிய பிரபல ஆங்கில எழுத்தாளருடைய பெயராகும்!

உதாரணமாக :—

கிணறுகள்: இதற்கு ஆங்கிலப் பதம் வெல்ஸ் (WELLS) H. G. வெல்ஸ் என்பவர் இதுபோல்

1, முத்தான ஆண்மான்.
2. உயரத்தின் பொம்மை.
3. தட்டான் நகை அணிவிக்கிறான்— இவரோ அறிவென்னும் ஆபரணத்தை அணிவிக்கிறார்.
4. பரீட்சை தாள்களில் இதைப் —— போடும் பொழுது வாத்தியாரின் கை கருணைக் கிழங்காகப் போவது சகஜம். இந்த தாள்களை கட்டஉதவும்இது——
5. வார்த்தைகள் தகுதியானவை.

(விடை)

1. PEARL BUCK;
2. TOLS' TOY;
3. GOLD SMITH;
4. இவ்விரண்டு பதங்களையும் சேர்த்தால் வரும் பெயர் மார்க்–ட்வைன் MARK TWAIN;
5. WORDS WORTH;

Edited & Published by N. R. Ramanujam, B. A., & Printed by S. Rangaswami, B. A., at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# ஏன் நம்பிக்கையை



அது இயற்கை, நரை மயிர் உங்களுடைய தோற்றத் தைக்கெடுக்கிறது. ஆனுல் நீங்கள் நம்பிக்கையை விட வேண்டாம். ஆயிரக்கணக் கான ஜனங்களைப் போல் நீங்களும் லோமா உப யோகித்து அமைதியுட னும் தகுதிவாய்ந்த தோற் றத்துடனும் இருங்கள்.

## லோமா

கருமையையும்
வனப்பையும் தருபவை




ஸோல் ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாட்வாலா, அஹமதாபாத் l
ஏஜெண்டுகள் :
ஸி. நரோத்தம் அண்டு கோ பம்பாய் 2 Tel : 30575

MPS-TAM.

**மதராஸ் ஏஜண்டுகள்:**
மெஸர்ஸ் ஜே. பாலாபாய் & கோ., 260, எஸ்பிளனேட், மதராஸ்
**ஸிலோன் ஏஜண்டுகள்:**
மெஸர்ஸ் சிர்ருல் காதிர் & கோ., 41 & 43, 2-வது கிராஸ் தெரு, கொழும்பு-11.

ESTABLISHED 1909 PHONE NO. 57 TELEGRAM: GOKUL

# T.S.R. & Co.

MANUFACTURING PERFUMERS
KUMBAKONAM
(S. INDIA)

TRADE MARK




GOKUL SANTOL TOILET POWDER

The Cauveri Colour Press, Kumbakonam.